# நிலா காயும் நேரம்



ரமணிசந்திரன்

# நிலா காயும் நேரம்

# நிலா காயும் நேரம்

**1**

அன்றைக்குச் செய்ய வேண்டிய வேலைகள் என்று வரிசைப்படுத்தி முன்தினம் இரவே எழுதி வைத்திருந்த தைச் சந்தானம் ஒரு நோட்டமிட்டார்.

ஸ்டோருக்காக வாங்க வேண்டிய பொருட்களுக் கான 'இன்டென்ட்' பின் தேதியிட்டு செக்குக் கொடுத்து ஏற்கனவே வாங்கிய பொருட்களுக்காக, அன்று வசூ லுக்கு வரக் கூடியவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகை... சீட்டுத் தொகை... கடைசியாக எழுதப்பட்டி ருந்த வரியைப் படித்ததும் அவர் முகம் கனிந்தது. இதைத்தான் அன்றைய முதல் வேலையாகச் செய்ய வேண்டும். இன்றையப் பொழுதை எப்படிக் கரையேற் றப் போகிறோம் என்று அன்றாடம் அவர் பட்டு வந்த கவலையைத் தீர்த்ததற்கான கைமாறு அல்லவா, அது! எது முக்கியம் என்று யோசித்துப் பார்த்தால் அவர் மூச்சு விடுவது கூட அதற்கு அடுத்தபடியானதுதான். ஏனெ னில் அந்த அளவுக்கு அவர் நன்றிக்கடன் பட்டிருக்கிறார்.

கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு, படியிறங்கிச் சாப்பாட்டு அறைக்குச் சென்றவர், எதிரில் மூடப்பட்ட 'டிரே'யுடன் வந்த சிறுமியைப் பார்த்ததும் சற்று நின்று, ''என்னம்மா, மனோ, இங்கேயே உட்கார்ந்து சாப்பிட லாமே! தட்டில் ஏன் எடுத்துப் போகிறாய்? வா, நாம் இருவரும் சேர்ந்து உண்ணலாம்'' என்று அன்புடன் அழைத்தார்.

கண்களில் மிரட்சி பரவ, ''அய்யோ, வேண்டாம் அங்கிள்'' என்றாள் சிறுமி.

''ஏம்மா?''

''பா... பாட்டிக்குப் பிடிக்காது. நான் உங்களோ டெல்லாம் சேர்ந்து சாப்பாட்டு மேஜையில் சாப்பிடக் கூடாது என்று சொல்லியிருக்கிறாங்க'' என்றாள் அவள்.

''ஏனாம்?''

''வேலைக்காரர்கள் எல்லாம் சமையல் அறையில் தரையில் உட்கார்ந்துதான் சாப்பிடணுமாம்'' என்று மனோரஞ்சிதம் விளக்கவும் சந்தானத்தின் முகம் கன்றிக் கருத்தது.

இந்தச் சின்னப் பெண்ணிடம் போய் என்னவெல் லாம் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

ஆனால் சந்தானத்துடைய தாயார் எப்போதும் அப்படித்தான். ஆஸ்தி, அந்தஸ்து, ஜாதி, சம்பத்து என்று எல்லாம் நிறையப் பார்க்கிறவர். வீட்டுக்கு வருகிறவர்க ளுக்கு அவர் கொடுக்கச் சொல்லும் பானத்திலிருந்தே வந்தவர்களின் பொருளாதார நிலையைப் புரிந்து கொள் ளலாம். ஆப்பிள் சாறு என்றால் அவர்களிடம் குறைந்தது



ஐந்தாறு கார்களாவது இருக்கும். ஆட்டோ, டாக்சியில் வருகிற நிலை என்றால் ஒரு தம்ளர் தண்ணீர் கிடைக்கும். கால் நடையாக வந்தால் வீட்டில் ஒன்றுமே இராது. அந்த அளவு கணக்கு வைத்திருப்பார். முகத்தில் மலரும் சிரிப்பு கூட, வந்தோரின் வசதிக்கேற்ப மில்லி மீட்டர் அளவில் துல்லியமாகத்தான் இருக்கும்.

அதெல்லாம் பிறவிக் குணம் என்று சந்தானம் விட்டு விட்டதுதான். அத்தோடு, சொல்லித் திருத்த வயதில் சின்னவர்களா? பெற்ற தாயார்! மரியாதை கொடுத்தாக வேண்டிய நிலையில் இருப்பவர். அதுமட்டு மின்றி, லேசில் மாறக் கூடியவரும் அல்ல. ஏதாவது சொல்லப் போனால் வீட்டில் வீணே ரசாபாசமாகி விடும் எஷ்பதால் சந்தானம் எப்போதுமே தங்கம்மாளிடம் தக ராறு வைத்துக் கொள்வது இல்லை. தாயார் தவறே செய்தாலும் கூட ஒதுங்கித்தான் போவார்.

அவர் மட்டுமல்ல, அவருடைய மனைவி கருணாக ரியும் அப்படித்தான். மாமியாரிடம் மறுப்பாய் ஒரு குறிப்பு கூட அவள் காட்டியது இல்லை.

'அம்மாவுக்குக் கொஞ்சம் பிடிவாதம் அதிகம். சிறு வயதிலிருந்தே தாய் வீட்டிலும், பிறகு இங்கேயும் பொறுப்பேற்று நடத்த நேர்ந்ததால், மற்றவர்கள் பணிந்தே அவர்களுக்குப் பழக்கப்பட்டுப் போய் விட் டது... எதிர்ப்பைத் தாங்க முடியாது... சத்தம் இல்லாமல் குடும்பம் நடந்தால் எனக்குச் சந்தோஷமாக இருக்கும்' என்று சந்தானம் மனைவியிடம் திருமணத்தன்று இரவி லேயே கூறியது ஒரு காரணமாக இருக்கலாம். பூஞ்சை யான கருணாகரி அன்று வரை மாமியார் பேச்சுக்கு எதிர் வார்த்தை பேசியதே இல்லை.

கருணாகரியுடைய சொந்தத் தங்கை அருணா ஏதோ தப்புக் கணக்கிட்டுக் குடும்பத் தொழில் நசித்துப் போயிற்று. நொந்து வந்த பெண்ணைத் தங்கம்மாள் உட்கார் என்று ஒரு வார்த்தை சொல்லவில்லை. 'நாங்கள் எல்லோரும் வெளியே போகிறோம். நீ போய் விட்டு, பிறகு சாவகாசமாய் ஒரு நாள் வா! இப்போது கிளம்புகிறாயா?' என்று தயவு தாட்சண்யமின்றித் தங்கையை மாமியார் விரட்டியடித்த போது கூடக் கருணாகரி, தனிமையில் இருந்து கண்ணீர் விட்டாளே தவிர, கட்டிய கணவனிடம் கூட மாமியாரைப் பற்றி ஒரு வார்த்தை புகார் சொன்னதில்லை.

சந்தானமும், மனைவியை ஆறுதலாய்த் தட்டிக் கொடுத்தாரே தவிர, 'என்...னம்மா இது?' என்று பெற்றவளிடம் ஒரு பேச்சு சொல்லவில்லை. உள்ளூர வருத்தம் தான். வெளியே தெரியாமல் கொஞ்சம் பணம் அனுப்பி வைத்து விட்டு மனைவியிடம் அதுபற்றி ரகசியமாகச் சொன்னதோடு சரி. அதற்கு மேல் எதையும் செய்து, வீட்டினுள் பூகம்பத்தை வரவழைத்துக் கொள்ள அவர் தயாராக இல்லை; அவர் மனைவி அதை எதிர்பார்க்கவும் இல்லை.

ஆனால், அதெல்லாம் வேறு விஷயம். பெரியவர்கள்; சகித்துக் கொள்வார்கள். இவள்... இந்தச் சிறு பெண், இவளை இப்படி இந்த வீட்டில் நடத்தலாமா?

முகம் இறுக நின்ற சந்தானத்தை மனோரஞ்சிதம் தயக்கத்துடன் ஏறிட்டாள். ''இட்டிலி ஆறிப் போனால் பாட்டியம்மாவுக்குப், பிடிக்காது அங்கிள். நான் போகட்டுமா?'' என்று அவள் சின்னக் குரலில் அனுமதி கேட்கவும் அவர் இன்னமும் அதிர்ந்தார்.



தட்டிலிருக்கும் உணவு அவளுக்கு அல்ல என்பதோடு, இந்த மாதிரி வேலைகள் வேறு அவள் தலையில் சுமத்தப்பட்டு வருகின்றனவா?

பேச்சின்றி அவர் தலையாட்ட, சிறுமி விரைந்தாள்.

சில வினாடிகள் தாமதித்து, அவளைப் பின் தொடர்ந்து சென்றார் அவர். தாயாரின் அறையை எட்டு முன்பாகவே, தங்கம்மாளின் கோபக் குரல் அவரது செவிப் பறையில் மோதலாயிற்று. ''பலகாரம் கொண்டு வர இவ்வளவு நேரமாடி, குட்டி? வழியிலே மறைவாக நின்று ஒரு இட்டிலியை முழுங்கி விட்டு மீதியைக் கொண்டு வந்தாயா? திறந்து காட்டு?'' என்றது அவருடைய தாயாரின் கடுமையான குரல்.

''அய்யோ! இல்லை பாட்டிம்மா...''

''என்னது! பாட்டியா? இப்படி ஒரு பேத்தி எனக்குத் தேவையில்லை, பெண்ணே. மரியாதையாகப் பெரிய அம்மா என்று சொல்லு. இல்லாவிட்டால் தொலைத்துக் கட்டிவிடுவேன்!''

''சா...சாரி பெரியம்மா. வாய் தவறி விட்டது...'' என்று மனோரஞ்சிதத்தின் குரல் நடுங்க, சந்தானத்தின் கை முஷ்டி இறுகியது.

''வாய் தவறியதா? எல்லாம் வைக்கிற இடத்தில் வைத்தால் வாய் ஒழுங்காகப் பேசும்! சரி சரி... உடனே வடிக்கத் தொடங்காதே... குளியல் அறையில் அழுக்குத் துணி கிடக்கிறது. எடுத்துப் போய்த் துவைக்கப் போடு. சாயங்காலம் பள்ளியிலிருந்து வந்ததும் மடித்து எடுத்துக் கொண்டு வந்து வை. நன்றாக மடிக்க வேண்டும். சும்மா

கோணாமாணா என்று மடித்துக் கொண்டு வந்து வைத்தா யென்றால் வீட்டை விட்டு விரட்டி விடுவேன்''

''சரியாக மடிக்கிறேன், பெரியம்மா'' என்ற சிறுமி யின் குரலிலும் கண்ணீர் இருந்தது. தங்கம்மாள் களைந்து போட்டிருந்த துணிகளோடு வெளி வந்தவளின் கண்களி லும் கண்ணீர் இருந்தது.

ஓசையற்ற விசும்பலுடன் சென்ற பெண்ணைப் பார்க்கையில் சந்தானத்தின் நெஞ்சில் ரத்தம் கசிந்தது.

ஒரு முடிவுக்கு வந்தவர் போலத் தாயாரின் அறைக் கதவைத் தட்டி விட்டு உள்ளே சென்றார்.

மகனை முறுவலோடு வரவேற்றபடியே கடிகாரத் தைப் பார்த்தார் தங்கம்மாள். ''இன்னமும் கிளம்ப வில்லை நீ! சாப்பிட்டாயிற்றா, அதுவும் இல்லையா? நேரத்துக்கு உன் சாப்பாட்டைப் பாராமல் இந்த வீட்டில் உன் மனைவி என்னதான் வெட்டி முறிக்கிறாளோ?''

மனைவியைப் பற்றிய குற்றச்சாட்டை ஒதுக்கி, ''இன்னமும் நேரம் இருக்கிறது அம்மா. ஆனால், நான் பேசவந்தது மனோரஞ்சிதத்தைப் பற்றி...'' என்று சந்தா னம் தொடங்கினார்.

''ஏன், அவளுக்கென்ன?'' என்றார் தங்கம்மாள் அலட்சியமாக. ''வேளைக்குச் சோறு போட்டு, துணி மணி கொடுத்து நன்றாய்த்தானே வைத்திருக்கிறோம்? அதற்கும் மேலாக, நீ வேறு விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சலம் கட்டி வைக்கிற கதையாகக் 'கான்வென்டில்' வேற சேர்த்துப் படிக்க வைக்கிறாய். இதற்கு மேல் அந்த வேலைக்காரக் குட்டிக்கு என்ன வேண்டும்? என்னைக் கேட்டால், இதுவே மிகவும் அதிகப்படி என்பேன்!''



''அம்மா, அவள் வேலைக்காரக் குட்டி அல்ல. இந்த வீட்டுப் பெண்ணாக வளரத்தான் இங்கே வந்திருக் கிறாள்'' என்றார் சந்தானம் இழுத்துப் பிடித்த பொறுமை யோடு.

''விட்டால் தத்தே எடுத்துக் கொள்வாய் போல இருக்கிறதே! அந்த மாதிரி ஏதேனும் நினைப்பு வைத்தி ருந்தாயானால் அதை நான் செத்த பிறகு செய்து கொள்; அல்லது என்னைக் கொன்று விட்டு அந்த வேலை பண்ணு'' என்றாள் தங்கம்மா கோபமாக.

''அம்மா, என்னம்மா நீங்கள்! இப்போது என்ன சொல்லி விட்டேன் என்று இப்படியெல்லாம் பேசுகிறீர் கள்?'' என்று, குரலில் கசப்போ, கோபமோ எட்டிப் பார்த்து விடாதபடி சந்தானம் கவனத்துடன் பேசினார்.

''பின்னே என்னடா? ஒரு வேலைக்காரன் பெண் ணைக் கூட்டி வந்து வைத்துக் கொண்டு நீ அடிக்கிற கொட்டம் என்னால் தாங்க முடியவில்லை. அங்கிளாம்! ஆன்டியாம்! அந்தத் திமிரில்தானே, அது என்னைப் பாட்டி என்று உறவு கொண்டாடுகிறது. இன்னும் 'அத் தான்' முறை சொல்லி குணாவைக் கட்டி அணைத்துக் கொள்ளாததுதான் பாக்கி. புருஷன் பொண்டாட்டி இரண்டு பேரும் கொடுக்கிற இடத்துக்கு அந்தக் குட்டி அதுவும் செய்யும்.''

நாக்கில் நரம்பில்லாமல் என்ன பேச்சுப் பேசுகிறார் கள் என்று ஆத்திரம் வந்தது சந்தானத்திற்கு. அடக்கிக் கொண்டு, ''அம்மா, அவள் தகப்பன் செய்திருக்கும் தியாகம் என்னவென்பது உங்களுக்குத் தெரியும்...'' என்று நயமாகத் தொடங்கினார்.

ஆனால், ''என்னடா பெரிய தியாகம்! உனக்காகத் தூக்கிலே தொங்கி உயிரை விட்டானா, அல்லது பசியும் பட்டினியுமாகப் பாடுபடுகிறானா? வயிறு வாடாமல் மூன்று வேளைச் சாப்பாடு கிடைக்கிறது. இவர்களுக் கெல்லாம் இதுவே சொர்க்க போகம்! நீயானால் மறுகி உருகுகிறாயே பைத்தியம்! போ! போய்ச் சாப்பிட்டு விட்டுத் தொழிலைப் பார்க்கக் கிளம்பு. போ!'' என்று மகனை விரட்டினாள் தங்கம்மாள்.

இதற்கு மேல் இந்தப் பேச்சைத் தொடர்ந்தால் வீடு இரண்டாகி விடும். செல்லுபடியாகாத கோபம், வருத்தங் களை உள்ளூர விழுங்கிக் கொண்டு, ''அம்மா, உங்கள் காலில் வேண்டுமானாலும் விழுகிறேன். அந்தப் பெண் காது கேட்க இப்படிப் பேசாதீர்கள். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஓர் உதவி, தயவு பண்ணி எனக்குச் செய்யுங்கள்!'' என்றவர் அதற்கு மேல் அங்கே நில்லாமல் அந்த அறையை விட்டு வெளியேறினார்.

அறையை விட்டு வெளியேறியவருக்கு, அடுத்தி ருந்த 'சிட் அவுட்'டில் சடக்கென வெளிப்புறம் திரும்பி தோட்டத்தில் முழுக் கவனத்தையும் பதித்த தந்தையைப் பார்க்கையில் இன்னமும் எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது. இவர் மட்டும் ஒரு காலத்தில் அம்மாவிடம் கொஞ்சம் கண்டிப்பு காட்டியிருந்தால்?

ஆனால் எங்கே? இப்போது கூட 'போடுங்கள் தோப்புக் கரணம்' என்று அம்மா சொன்னால் 'எண்ணிக் கொள்' என்பாரே தவிர, இவராவது, மனைவியைக் கண்டிப்பதாவது? அப்படி அவர் கற்பனை கூடச் செய் வாரோ, என்னவோ?



ஆனால், இதற்கு ஏதேனும் ஒரு வழி செய்தே ஆகவேண்டும்!

சிற்றுண்டி அருந்தாமல் போனால், மனைவி வருந்து வாளே என்பதற்காக உணவு மேஜை முன் அமர்ந்தார் சந்தானம். ஆனால் உணவு உள்ளே இறங்க மறுத்தது. சற்று முயன்று பார்த்து விட்டு கையை உதறிக் கொண்டு எழுந்து விட்டார்.

''என்ன?'' என்று கவலையுடன் கேட்ட கருணாகரி யிடம் 'ஒன்றுமில்லை', நேற்று இரவு டின்னரில் கொஞ்சம் அதிகம் சாப்பிட்டு விட்டேன். அது கொஞ்சம் வயிற்றில் 'டொம்' என்று இருக்கிறது. இதற்குப் போய் என்ன கவலை?'' என்று மனைவியைச் சமாதானப்படுத்தி விட்டு 'ஸ்டோ'ருக்குக் கிளம்பினார்.

வாயில் வரை வந்து வழியனுப்பிய மனைவியிடம், ''இரவு நான் திரும்பி வந்ததும் எனக்கு நினைவு படுத்து. உன்னிடம் சில விஷயம் பேச வேண்டும்'' என்று கூறி விட்டுக் காரில் ஏறினார்.

இரவில் மாமியார், மாமனாருக்கு வேண்டியதைக் கவனித்து விட்டு, நண்பர்களோடு சினிமா பார்த்து விட்டு வந்த மகன் குணாவைக் கெஞ்சிக் கூத்தாடிச் சாப்பிட வைத்து, ஒரு தம்ளர் பாலையும் குடிக்க வைத்து உறங்க அனுப்பி விட்டு, வேலையாட்களின் உணவு வேலை முடித்து அறைக்கு வந்தபோது கருணாகரிக்குக் காலை யில் கணவன் சொன்னது சுத்தமாய் மறந்து விட்டிருந்தது.

ஆனால், நினைவுபடுத்தச் சொன்னவர், அதை மறக்கவே இல்லாததால் மனைவி நினைவுப்படுத்தத்

தேவையிராமல் அவரே விஷயத்தைத் தொடங்கினார். 'மனோரஞ்சிதத்தை வீட்டுக் குழந்தை போல உயர்வாக, நல்லபடியாக வளர்க்க வேண்டும் கருணா'' என்றார்.

''தெரிந்தவரை செய்கிறேன்'' என்று தயக்கமோ, மறுப்போ காட்டாமல் கருணாகரி ஒத்துக் கொள்ளவும், அவளைச் சற்று விசித்திரமாய் நோக்கி, ''எங்கிருந்தோ ஒரு பதினோரு வயதுப் பெண்ணைக் கூட்டி வந்து வீட்டுக் குழந்தையாக வளர்க்கச் சொல்லுகிறேன்; ஏன், என்னவென்று கேட்பதில்லையா, கருணா? என்று வினவினார்.

''நான் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் என்றால் - அது எனக்குப் புரியக் கூடியதும் என்றால் நீங்களாகவே சொல்வீர்கள் என்று நினைத்தேன்'' என்று லேசாக முறுவலித்தாள் மனைவி.

பதிலாக முறுவலித்தவரின் முகம் மெல்ல மாறியது. சிறு யோசனையின் பின், ''மனோவுடைய தந்தை எனக்காகச் செய்திருக்கும் தியாகத்துக்கு ஈடாகக் கூற உலகில் ஒன்றுமே கிடையாது, கருணா. இப்போது நான் இருக்க வேண்டிய இடத்தில் அவன் இருக்கிறான்... எங்கே தெரியுமா? தானே செய்யாத குற்றத்திற்காக ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டு அவன் இருக்குமிடம் வேலூர் சிறைச்சாலை!'' என்றார் இறுகிய குரலில்.

விழி அகலக் கவலையும் பயமுமாகக் கருணாகரி கணவரை நோக்கினாள்.



## 2

ஆயுள் தண்டனை! கொலைக் குற்றத்திற்காக மட்டும்தானே ஆயுள் தண்டனை தருவார்கள்?!

தியாகம், நான் இருக்க வேண்டிய இடத்தில் அவன் என்று கணவர் சொன்ன வார்த்தைகள் நெஞ்சைக் கலக்க, ''எ...என்ன நடந்தது?'' என்று பீதியை அடக்க முயன்றபடி கருணாகரி விசாரித்தாள்.

உதட்டால் மட்டுமாய் முறுவலித்து, ''நான் கொலைகாரன் என்று பயந்து விட்டாயா, கருணாகரி?'' என்று மெல்லிய குரலில் சந்தானம் வினவினார்.

''அவர் கையைப் பற்றி, ''ஊகூம்...'' என்று தலையசைத்து மறுத்தாள் மனைவி. ''ஆனால் அந்த மாதிரி ஒரு குற்றம் உங்கள் மேல் எப்படி விழுந்தது? அப்படிப் பொய்க் குற்றம் சாட்டும் அளவு உங்களுக்கு விரோதிகள் இருக்கிறார்களே என்று நினைத்ததும் கொஞ்சம் பயமாகிப் போய் விட்டது'' என்று தன் மன நிலையை எடுத்துச் சொன்னாள்.

ஆனால், ''ஒரு வகையில் நான் கொலைகாரனும் தான் கருணா! என்னால் ஓர் உயிர் போனது உண்மையே!'' என்று சந்தானம் கூறவும் திகைப்பும் பிரமிப்புமாய்க் கண்வனைப் பார்த்துப் பேந்த விழித்தாள்.

இவளிடம் மேலே என்ன சொல்வது என்று சந்தானத்துக்குச் சிறு தயக்கம் உண்டாயிற்று. இதுவரை சொன்னதே அதிகமோ என்கிற துணுக்கமும் கூடத்தான்.

கருணாகரி முழுக்க முழுக்க ஒரு வீட்டுப் பறவை. கணவன் முகம் பார்த்து. அவன் சிரித்தால் தான் சிரித்து, அவன் வாடினால் தானும் வாடி, வாழ்கிற வகை. கணவன் கையில் தருவது அதிகமோ, குறைவோ அதற் தள் வீட்டைக் கொண்டு செலுத்துகிற ரகம். அதற்குமேல், என்ன வருகிறது, எப்படி வருகிறது என்று அவள் எண்ணிப் பார்ப்பதுகூடக் கிடையாது.

கடுமையாகச் சொல்வது என்றால், 'கடல் என்ன இவ்வளவு பெரிதாக இருக்குமா?' என்று தாவிக் காட்டு கிற கிணற்றுத் தவளை மாதிரி. வீடுதான் உலகம். வீடு தாண்டி வெளி உலகம் ஒன்று இருப்பது பற்றிய எண் ணமே அவளுக்கு இருப்பது இல்லை!

இவளிடம் நடந்ததைச் சொன்னால் எந்த அளவுக் கு புரிந்து கொள்வாள்?

ஆனால், தொடங்கியபின் இடையில் விடுவது முடியாது என்பதோடு, அவளுக்குப் புரிய வைத்தாக வேண்டிய அவசியமும் அவருக்கு இருந்தது.

எனவே எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லத் தொடங்கினார்.

சந்தானத்தின் தொழில் வியாபாரம், அவருடைய அப்பனார் சிதம்பரம், ஊரில் தொடர்ந்து மழை பொய்த்த தால், நிலங்களை விற்று விட்டுச் சிறு அளவில் பாத்திரக் கடை ஒன்று தொடங்க, அப்போது 'ஸ்டீல்' பாத்திரங்கள் வந்த புதிது என்பதால் வியாபாரம் விரைவிலேயே சூடு பிடித்து விட, வியாபாரத்தோடு வாழ்க்கையும் செழிப்பா கவே நடந்தது.



அவர் விரைவிலேயே சுகவீனப்பட்டு விடவே, சிறுவயதிலேயே கடைப் பொறுப்பேற்ற சந்தானம், தொழிலைப் பலவகையிலும் விரிவுபடுத்தினார். வெறும் பாத்திரங்களை மட்டுமின்றி சமையல் செய்ய உதவும் மின் சாதனங்களைச் சேர்த்து விற்கத் தொடங்கினார். பிறகு மற்ற எலக்ட்ரானிக் பொருட்கள், பாக்கெட் போட்ட சமையல் பொருட்கள்... என்று ஒவ்வொன்றாகச் சேர்த்து விற்கத் தொடங்கி, பக்கத்துக் கடையையும் வாங்கி ஒரு டிப்பார்ட்மெண்டல் ஸ்டோர் ஆகவே கடையை மாற்றி விட்டார். புதுப்புது முயற்சிகளில் ஈடுபட்டு, வெற்றியும் கண்டார். வந்த லாபத்தில் பண் ணைக்காடு அருகே ஒரு சிறு காஃபி எஸ்டேட் கூட வாங்கிப் போட்டார்.

காஃபியும் அவருக்குப் புதிய தொழில்தான். ஆனால் அதைக் கவனிக்க ஒரு நல்ல ஆள் அவருக்குக் கிடைத்திருந்தான்.

சிதம்பரம் நிலங்களை விற்குமுன், அவருடைய பண்ணையாளாக இருந்த சிவத்தையனின் மகன்தான் அன்பரசு. சிறுவயதில் பள்ளியில் சேர்ந்து படித்ததால், சந்தானம், அன்பரசை நண்பனாகவே நடத்திய போதும், மூத்த தலைமுறையின் பழக்கமான பணிவும் அன்பரசின் நட்புணர்வோடு கலந்திருந்தது.

அவ்வப்போது பார்க்கும் போது பணிவும் பிரியமு மாய் ஒரு குசல விசாரிப்புடன் பிரிந்து போனவர்களை மிகவும் நெருங்க வைத்தது அன்பரசுடைய மனைவியின் உடல்நிலை.

அன்பரசுடைய மனைவி புவனி கொஞ்சம் பெரிய இடத்துப் பெண். காதல் என்று தந்தையை எதிர்த்து

மிகவும் சாதாரண நிலையில் இருந்த அன்பரசை அவள் மணந்து கொண்டாள். மகளின் பிடிவாதத்திற்காகத் திரும ணத்தை மட்டும் செய்து வைத்த புவனியுடைய தந்தை அத்தோடு அவளை வெட்டிக் கொண்டு விட்டார். புவனி யின் தாயார் இருந்திருந்தால் இந்த உறவு இப்படி அடியோடு வெட்டுப்பட்டிருக்குமோ என்னவோ? ஏற்க னவே அன்பற்றவளான சிற்றன்னைக்குக் கணவன் மனதி லிருந்து அவருடைய மூத்த மகளின் நினைவை ஒட்டத் துடைப்பது இப்போது எளிதாகிப் போயிற்று. ஏற்கனவே பேசி முடித்த மாப்பிள்ளை ஒருவன் மட்டும் கொஞ்சம் தகராறு செய்தான் என்று கேள்வி. ஆனால் புவனி - அன்பரசின் இன்ப வாழ்வுக்கு எந்தத் தடையும் இருக்க வில்லை.

அப்படியே காலம் போயிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும். ஆனால் புவனிக்கு மனோரஞ்சி தம் பிறந்த பிறகு அவளது உடல் நலம் கெடத் தொடங்கி யது...

''அப்படியானால் இந்த மனோதான், உங்கள் நண் பர் அன்பரசின் மகளா?'' என்று கருணாகரி வினவினாள்.

''ஆமாம்'' என்றார் சந்தானம். ''அன்பரசோடு, குடும்பத்தோடு குடும்பமாகப் பழக எனக்குக் கொஞ்சம் ஆசை உண்டுதான் கருணா. ஆனால், அம்மா எப்படி என்று உனக்குத் தெரியும். அவர்களை மீறியோ, அவர்க ளுக்குத் தெரியாமலோ உன்னை ஒரு காரியம் செய்ய வைக்க எனக்கு இஷ்டமில்லை. அத்தோடு அப்போது அவன் அவ்வளவு நெருங்கிய நண்பனும் இல்லை. எனவே, அங்கங்கே பார்க்கிறபோது 'ஹலோ' என்று



ஒரு காபி - டிபன் வாங்கிக் கொடுப்பதோடு அவனோ டான பழக்கத்தை நிறுத்திக் கொண்டேன்''.

ஒரு பெருமூச்சுடன், ''உங்கள் நண்பருடைய மனை விக்கு உடல் நலம் கெட்டதாகச் சொன்னீர்கள்...'' என்று எடுத்துக் கொடுத்தாள் மனைவி.

அவளுக்கு அந்த 'உயிர்' பற்றிய விபரத்தை விரை வாக அறிந்து கொள்ள ஆசை. ஆனால், பின்புலம் அறியாவிட்டால், அந்த விபத்தினைத் தொடர்ந்து நடந்த வற்றை மனைவியால் புரிந்து கொள்ள முடியாதுஎன்பது அவரது எண்ணம். எனவே அந்த விவரங்களை எல்லாம் அப்போதைய நினைவில் ஆழ்ந்து மீண்டும் அனுபவித்த படியே சந்தானம் தொடர்ந்து சொல்லலானார்.

உதவிக்கென்று அன்பரசு சந்தானத்தைத் தேடி வர வில்லை. அந்த அளவு நெருக்கம் அவர்களுக்கிடையே அப்போது இருக்கவும் இல்லை. அன்பரசு அந்த மாதிரி ஒட்டுண்ணி ரகமும் இல்லை. வழக்கம்போல, எப் போதோ ஒரு முறை வழியில் சந்தித்து ஓட்டலுக்கு அழைத்த போது, நண்பனின் முக வாட்டத்தைக் கவ னித்து சந்தானம் துருவிக் கேட்டபோதுதான் அன்பரசு டைய மனைவியின் உடல் நிலை பற்றிச் சந்தானத்துக்குத் தெரிய வந்தது.

புவனி எப்போதுமே சற்று பலவீனமான பெண் தான். குழந்தை உண்டாகியிருந்த போதும், பேறு காலத் தின் போதும் துணையிருந்து உதவி செய்ய யாருமில்லா மல் தனியே சமாளித்தது, அன்பரசின் வருமானத்தில் அவளுக்குத் தேவைப்பட்ட அதிகப்படி போஷாக்கிற்கு வழியில்லாமல் போனது எல்லாமாகச் சேர்ந்து கொண்டு அவளது உடல் நிலையை மிகவும் பாதித்து விட்டன.

அன்றைய நிலையில், சென்னையோ, அதன் சுற்று வட்டாரமோ கூட அவளுக்குச் சரிப்படாது என்றார் மருத்துவர். சுத்தமான காற்றும், சத்தான உணவும், ஓய்வும் அவளுக்கு மிகவும் தேவைப்பட்டன.

''ஏதாவது மலைப்பக்கமாகப் போய் விடுங்கள். ஆப்பிள், ஆரஞ்சு, பால் என்று கொடுங்கள். உங்கள் மனைவியின் உடல் நிலை ஓரளவு தேறக் கூடும். அப்போதும் முழு ஆரோக்கியம் பெறுவது சற்றுக் கடினம்தான். ஆனால் இப்படியே போனால், உங்கள் மனைவியின் வாழ்நாளை எண்ண வேண்டியதுதான் என்று டாக்டர் சொல்கிறார், சந்தானம். ஆனால் நான் இதற்கெல்லாம் எங்கே போவேன்? காதல் என்று அவளுடைய குடும்பத்திலிருந்து பிரித்து வந்து அவளுக்கே எமனாகிப் போனேனே'' என்று அன்பரசு அரற்றியபோது சந்தானத்திற்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

அன்றைய நிலையில் சந்தானத்தால் அன்பரசுக்குப் பண உதவி செய்ய முடியும். ஆனால் அவன் அதை ஏற்க மாட்டான். இலவச உதவியை ஏற்க அவனது தன்மானம் இடம் தராது. அய்யோ பாவம்! என்று தோளைக் குலுக்கி விட்டுப் போக அவராலும் முடியவில்லை!

என்ன செய்வது என்று யோசித்தபோதுதான் சந்தானத்துக்கு அந்த ஐடியா தோன்றியது.

''அன்றைக்கு அன்பரசுக்கு உதவி என்று எண்ணி செய்ததுதான், கருணா. நமக்கும் லாபம்தான் என்றாலும், அவனது நன்மையை முதல் குறிக்கோளாய் நினைத்துத்தான் நான் அன்று முடிவெடுத்ததே. ஆனால், அதுவே அவனுக்கு நான் செய்த பெரிய அநியாயமாகிப் போகும்



என்று அன்று நான் அறியவே இல்லை, கருணா!'' என்று வருத்தத்துடன் இயம்பினார் சந்தானம்.

அப்போது சந்தானம் தொழிலில் அதிக லாபம் கண்ட சமயம். நல்ல முதலீடு என்று யாரோ சொன்னார்கள் என்று பண்ணைக் காட்டுப் பகுதியில் உட்புறமாக சிறு காஃபித் தோட்டம் ஒன்று வாங்கியிருந்தார். ஆனால் காஃபி பற்றி எதுவும் அறியாதிருந்த நிலையோடு, அங்கே சென்று, இருந்து பார்க்கவும் முடியாததால் அந்த முதலீட்டில் அவருக்குத் தொடர்ந்து இழப்புதான் ஏற்பட்டுக் கொண்டு இருந்தது.

காஃபித் தோட்டத்துப் பொறுப்பை அன்பரசிடம் ஒப்படைத்து, அவன் குடும்பத்தை அங்கே அனுப்பி வைத்தால் அன்பரசுடைய மனைவிக்குத் தேவைப்பட்ட சுத்தமான காற்று கிடைக்கும். சத்தான உணவுக்கும், பழ வகைகளுக்கும் தேவையான பணத்தைச் சம்பளமாகக் கொடுக்க முடியும். கூடவே, சந்தானத்தின் சொத்துக்கு ஒரு நல்ல பராமரிப்பும் கிடைக்கும்.

தனக்கும் இதில் லாபம்தான் என்பதைச் சந்தானம் எடுத்துச் சொன்னபிறகு அன்பரசு அதை மகிழ்ச்சியுடனே ஏற்றுக் கொண்டான்.

அன்பரசுடைய குடும்பம் காஃபித் தோட்டத்துக்குக் குடி பெயர்ந்தது. அவன் மனைவி புவனியின் உடல் நிலை தேறத் தொடங்கியது. அவனது கண்காணிப்பின் கீழ் காஃபித் தோட்டத்தில் வருமானம் வரத் தொடங்கியது.

ஏழெட்டு ஆண்டுகள் சுகமாகவே கழிந்தன. புவனி மீண்டும் கருவுற்றாள். கணவன் - மனைவி இருவருக்கும்

மிகுந்த மகிழ்ச்சி. எச்சரிக்கை நிமித்தமாய் 'ஸ்கேன்' செய்ததில் ஆண் குழந்தை என்று அறியவும் மகிழ்ச்சி இரட்டிப்பாயிற்று.

அன்பரசு சந்தானத்தை தெய்வமாகவே கொண்டாடினான்.

சந்தானத்தைப் பொறுத்தவரை அன்பரசு அவருக்கும் ஒரு வரம்தான்.

மற்றவர் பேச்சை நம்பி அவர் வாங்கியிருந்த காஃபித் தோட்டம் மிகவும் மோசமான நிலையில் இருந்தது. ஆண்டுக் கணக்கில் பராமரிப்பின்றி அழியத் தொடங்கியிருந்த தோட்டம் அது. உரம், பூச்சிகொல்லி வாசனையே மறந்து விட்டிருந்த மரங்கள். இதற்கு மிஞ்சித் தலைநீட்டிய காஃபி பெரிகளைப் போவோர் வருவோர் பறித்துச் செல்வதும் அங்கே பழக்கமாகி விட்டிருந்தது. காப்பான் இல்லாத சொத்து கள்ளருக்கு வைத்த அழைப்பல்லவா?

இதையெல்லாம் சீர் செய்து, காஃபி தோட்டத்திலிருந்து வருமானம் கிடைக்குமளவு கொண்டு வந்தது அன்பரசுதான்.

எனவே இருவருக்குமிடையே நட்பும் மிகவும் கனிந்திருந்த காலம் அது. சந்தானம் தோட்டத்திற்கு அடிக்கடிச் சென்று பார்த்தார். இருவரும் நண்பர்களாக அளவளாவினர்கள் என்று இல்லை. அன்றாடம் கவனித்தாக வேண்டிய வியாபாரத்தை விட்டு விட்டு அப்படிச் செல்வது சந்தானத்தால் முடியாத காரியமும் கூட. ஆனால் அன்பரசு நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போடும் அளவுக்குச் சந்தானம் நண்பன் மீது நம்பிக்கை



வைத்திருந்தார். எனவே முதலில் நாலைந்து மாதங்களுக்கு ஒரு முறை காரில் சென்று திரும்பியது கூடப் பின்னாளில் நின்றே போயிற்று.

மனோரஞ்சிதம் அந்தத் தோட்டத்துக் குழந்தையாகவே வளர்ந்துவந்தாள். மூலை முடுக்கெல்லாம் கூடப் பயமற்று சுற்றுவாள்.

அப்போதுதான் ஒருநாள் ஒரு பெரிய முள்ளம் பன்றியை அவள் எதிர்கொள்ள நேர்ந்தது.

பொதுவாக முள்ளம் பன்றிகள் ஏலக்காய்த் தோட்டங்களில் சுற்றுவன என்பார்கள். அவற்றுள் ஒன்று வழிதவறி இந்தக் காஃபி எஸ்டேட்டுக்குள் நுழைந்திருந்ததோ என்னவோ?

காட்டு மலர்களைப் பறித்துச் சேகரித்தபடி உல்லாசமாகச் சுற்றிக் கொண்டிருந்த மனோரஞ்சிதம் திடுமென எதிரே முட்களைச் சிலிர்த்துக் கொண்டு நின்ற முள்ளம் பன்றியைக் காணவும் பயந்து அலறி விட்டாள்.

ஐந்து மாதத் தாய்மைப் பூரிப்புடன் உடலுக்குப் பயிற்சியாக அந்தப் பக்கமாக நடந்து கொண்டிருந்த புவனி மகளின் கூக்குரல் கேட்கவும் ஓடி வந்தாள்.

முட்களை வீசத் தயாராய் நின்ற முள்ளம் பன்றி பார்வையில் பட்டதும் அதன் முட்களிலிருந்து காப்பதற்காக மகளை ஒரு புறமாய் இழுத்தவள், நிலை தடுமாறிச் சரிவில் உருண்டு விட்டாள்.

அப்போது ஏற்பட்ட குறைப் பிரசவம் மீண்டும் புவனியின் உடலைப் பாதித்து விட்டது. மீண்டும் கருத்தரிப்பது நல்லதில்லை என்று வைத்தியர்கள் கூறினார்கள்.

மகள் மட்டுமே போதும் என்பதுதான் அன்பரசுக்கு. ஆனால் புவனிக்குத்தான் ஆண் குழந்தை ஆசை தீவிர மாய்ப் பிடித்துக் கொண்டு விட்டது. விளைவாக, கருத் தடை மாத்திரைகளை மனைவி எடுத்துக் கொண்டிருக்கி றாள் என்று அன்பரசு நினைத்துக் கொண்டிருக்க, புவனி மீண்டும் கருவுற்றாள். மூன்று மாதம் ஆகும் வரை அதை அவள் கணவனிடம் தெரிவிக்கவும் இல்லை.

விஷயம் தெரிந்து பதறிய அன்பரசு, மனைவியைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்த போதும் அவ னுக்கு உள்ளூரக் கலக்கம்தான்.

இங்கே, சந்தானத்தின் நிலையும் அவ்வளவாகச் சரியாக இல்லை. அவரது வியாபாரம் நன்றாக நடப்ப தைக் கண்டு பலரும் அதேபோல வியாபாரத்தைத் தொடங்கி நடத்தலாயினர். இது அவரை அவ்வளவாகப் பாதித்தது என்று சொல்ல முடியாது. ஏனெனில் 'செட்டி பெருத்தால் பட்டணம்' என்ற பழமொழிக்கிணங்க கடை கள் பெருகப் பெருக வியாபாரமும் பெருகத்தான் செய் யும்.

ஆனால், போட்டியாளர்களில் ஒருவன், பெரும் பணக்காரன். மிகவும் பெரிய அளவில் அவனது டிப் பார்ட்மெண்டல் ஸ்டோரைத் தொடங்கிய அவன் பெரிய சினிமா நட்சத்திரத்தைக் கொண்டு திறப்பு விழா நடத்தி னான். சந்தானம் நாலு வகை டி.வி. விற்பனைக்கு வைத்திருந்தால், அவன் அன்றுதான் உற்பத்தியைத் தொடங்கிய கம்பெனியிலிருந்து அத்தனை வகை டி.வி.க் களையும் கடையில் குவித்திருந்தான். டி.வி. மட்டுமல்ல. எல்லாப் பொருட்களுமே அப்படித்தான்.



சந்தானம் ஒரு பொருளைச் 'செக்கு' கொடுத்து நூறு ரூபாய்க்கு வாங்கி, நூற்றுப் பத்து ரூபாய்க்கு விற்றால், அவன் ரூபாயைக் கையில் கொடுத்து தொண்ணூறு ரூபாய்க்கு வாங்கி நூறு ரூபாய்க்கும் குறைவாகவே விற்றான்.

எல்லாக் கடைகளிலுமே வியாபாரம் மந்தமாகப் போயிற்று.

இதைச் சமாளிக்க ஒரே வழி, நிறையப் பணம் முதலீடு செய்வதோடு, 'ரெடி கேஷ்' முறையையும் பின்பற்றியாக வேண்டும் என்ற முடிவுக்குச் சந்தானம் வந்தார்.

காஃபித் தோட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாகச் சேர்ந்த பணம் ஒரு பதினைந்து லட்ச ரூபாய் இருப்பதாக அன்பரசு எழுதியிருந்தது நினைவில் வரவே, அந்தப் பணத்தை வாங்கி வந்து, சரிந்து வரும் வியாபாரத்தைத் தூக்கி நிறுத்தும் எண்ணத்தோடுதான் சந்தானம் அந்தப் பயணத்தை மேற்கொண்டது.

பொதுவாகக் கடை வியாபாரம் என்பது அன்றாடம் செய்தாக வேண்டிய தொழில். சட்டப்படியான வாரத் துக்கு ஒரு நாள் தவிர மற்ற ஆறுநாட்களும் கடை திறந்தாக வேண்டும். எனவே சந்தானம் எங்கேனும் வெளியூர் செல்ல நேர்ந்தால், காரை எடுத்துக் கொண்டு சென்று லீவு நாளில் வேலையை முடித்துக் கொண்டு, உடனேயே திரும்பி விடுவார்.

அந்தக் கொடிய நாளிலும் அப்படித்தான் சென்றி ருந்தார். இந்தப் பணத்தை எப்படி எப்படி முதலீடு செய்வது, எப்படியெப்படித் தொடர்ந்து தொழிலை வெற் றிகரமாக நடத்துவது என்று அவரது சிந்தனை அதி

லேயே சுழன்றதாலோ, மலைப் பகுதியில் பனி விழத் தொடங்கியிருந்ததால், காரை ஓட்டிய அவர் போலவே எதிரில் வந்த மனிதனுக்கும் சரியாகப் பார்க்க முடியவில் லையோ, தோட்டத்திற்கு பாதை செல்லும் திருப்பத்தில் ஒருவன் மேல் கார் மோதி விட்டது.

காரை நிறுத்தி விட்டு பதைப்புடன் சந்தானம் இறங்கி ஓடிச் சென்று பார்த்தபோது அடிபட்டவன் இறந்து விட்டிருந்தான்.

## 3

ஓர் உயிர்!

இறைவன் இவ்வுலகில் வாழவென்று படைத்த ஓர் அற்புதம் அவரால் அழிந்து போய் விட்டது என்ற அதிர்ச்சியிலிருந்து மீளமாட்டாமல் சந்தானம் வெகு நேரம் தவித்தார்.

மீண்டும் மீண்டும் மூச்சு வருகிறதா என்று கைவைத் துப் பார்ப்பதும், கையைப் பிடித்து நாடித் துடிப்பைத் தேடுவதும், மார்பில் காது வைத்து இதயத் துடிப்பு இருக்கிறதா என்று பார்ப்பதும், விழுந்து கிடந்தவனின் நெஞ்சில் கைவைத்து அழுத்தி அவனது இதயத்தை இயங்கச் செய்ய முயற்சிப்பதும், மீண்டும் 'பல்ஸ்' பார்ப் பதுமாகச் சற்று நேரம் பதைப்பிலும் தவிப்பிலுமாகக் கழிந்தது.

இனி, அடிபட்டு விழுந்தவன் பிழைப்பதற்கில்லை என்பது தெளிவாகவும் அதன் பின்னரே, இனி என்ன என்ற கேள்வி அவரைத் தாக்கியது பலமாக.



காரை அவர் வேகமாக ஓட்டி வந்தது உண்மையே. ஆனால் ஆள்நடமாட்டம் லேசில் இல்லாத இந்தச் சாலை யில் அது பெரிய குற்றமாகாது. அத்தோடு நடந்தது தற்செயலாக நேர்ந்த விபத்து என்பதால் அவருக்குச் சிறை, சிறை என்று பெரிதாக தண்டனை எதுவும் கிடைக்கவும் வாய்ப்பில்லை...

''பின்னே?'' என்றாள் கருணாகரி குழப்பத்துடன்.

''பின்னே, உங்களுக்குப் பதிலாக உங்கள் நண்பர் அன்பரசு சிறையில் இருப்பானேன்? ஏனென்றால்... வந்து... அவர் இந்தக் குற்றத்தைத் தானே உங்களுக்குப் பதிலாக ஏற்றிருக்க வேண்டும்?''

கோபமும் அருவருப்புமாக முகம் இறுகச் சற்று நேரம் சந்தானம் பேசாமல் இருந்தார். பிறகு, ''நான் சொல்லி முடிக்கும் போது, உனக்கு இதுவும் விளங்கும்'' என்று வரண்ட குரலில் உரைத்தார்.

அவர் மேலே பேசுமுன், ''அத்தோடு...'' என்று தொடங்கி விட்டுக் கருணாகரி, ''இல்லை நீங்கள் சொல் லுங்கள்...'' என்றாள்.

''என்னது அத்தோடு?''

தயக்கத்துடன், ''இல்லை... பெரிய தண்டனை ஒன் றும் கிடையாது என்றால் நீங்களே தவறை ஒத்துக் கொண்டிருக்கலாமே; உங்கள் அன்பரசை இதில் சம்பந் தப்படுத்தியிருக்கவே வேண்டாமே என்று நினைத்தேன். ஆனால் நீங்கள் இதையெல்லாம் யோசியாமலா செயல் பட்டிருப்பீர்கள்? அதனால்தான், நீங்களே சொல்லுங்கள் என்றேன்...'' என்று இயம்பினாள் மனைவி.

''யோசித்தேன்'' என்றார் அவர்.

ஆனால் அவரது யோசனை வேறு விதமாய் ஓடி யது. என்னதான், இது விபத்து என்றாலும், அதில் சந்தேகத்துக்கே இடமில்லை என்றாலும், போலீசில் இவர் போய்ச் சரணடைந்து, இதைச் சொல்லி அவர்கள் விசாரித்து குற்றமில்லை என்று அவரை அவர்கள் வெளியே விட வாரக் கணக்காகி விடும். அதுவரை சென்னையில் அவரது தொழில் என்ன ஆகும்?

அவருடைய தந்தை சிதம்பரம் பார்க்கலாம்தான். ஆனால், அவரே 'ஸ்ட்ரோக்' வந்து குணமானவர். ஏதோ மகன் சாப்பிடவோ, வேறு வேலையாகவோ வெளியில் சென்றால் சற்று நேரம் வந்து உட்காருவாரே தவிர, கடையைப் பொறுப்பேற்று நடத்துவது அப்போது அவ ருக்கு இயலாத காரியம். அதுவும், அந்தப் புதுக் கடைக் காரனைச் சமாளிப்பது அடியோடு முடியாது!

எனவே, இங்கிருந்து வழக்கைப் பார்த்துக் கொண்டு இருப்பது சந்தானத்தால் இயலாத காரியம். அதிகப்படி யாக அவர் இங்கே தங்கும் ஒவ்வொரு மணித் துகளும் அங்கே அவரது தொழிலுக்கு அடிக்கும் சாவு மணி!

என்ன செய்வது என்று அவர் கலங்கியபோதுதான் அவருக்கு இந்த ஐடியா - இந்தத் தவறை அவன் செய்ததாகப் போலீசில் ஒத்துக் கொள்ளுமாறு அன்பரசி டம் கேட்கும் யோசனை அவருக்கு வந்தது.

எத்தனை முறை, 'இந்த உயிர் கூட உங்களுக்குத் தான் சொந்தம், சந்தானம்' என்று கூறியிருக்கிறான்! காரை அன்பரசு ஓட்டியபோது விபத்து நடந்ததாகக் கூறுவதில் அவனுக்குப் பெரிய இழப்பு ஏதும் ஏற்படப் போவது இல்லை. அவன் இங்கேயே இருப்பதால் விசாரணையின் போது இங்கும் அங்குமாய் அலைவது



ஒன்றும் கடினமாயிராது. ஒரு வக்கீலைப் பிடித்து, அன்ப ரசின் மீது எந்தவிதக் குற்றமும் இல்லை என்று நிருபித்து அவனை வெளியே கொண்டு வருவது சந்தானத்தின் பொறுப்பு. ஆகக் கூடிய செலவும் அவரதே. அப்படியி ருக்க, இந்த உதவி அவன் செய்யமாட்டானா?

காரை அப்படியே விட்டு விட்டு, சந்தானம் அன்ப ரசு வசித்த வீட்டை நோக்கி விரைந்தார்.

வீட்டுக் கதவைத் தட்டியபோது கதவு உடனே திறக்கப்படவில்லை. தன் பெயர் சொல்லி சந்தானம் பலமுறை அழைத்த பிறகே கதவு திறக்கப்பட்டது. அப் போதும் அன்பரசின் சிவந்த விழிகளும், கலைந்த தோற றமும் சந்தானத்தின் கண்களில்படவே இல்லை.

அவசர அவசரமாய் தன் இக்கட்டான நிலையை எடுத்துச் சொல்லி, தன் தேவையையும் கூறி உன்னால் முடியுமா அன்பரசு? என்று கேட்டு, ''நிச்சயமாய்!'' என்ற நண்பனின் பதிலையும் கேட்டபிறகே சந்தானத்துக் குச் சுற்றுப்புறம் கவனத்துக்கு வந்தது.

''உன் மகள், மனைவி இருவரும் எங்கே அன்பு? ஓ, நேரமாகி விட்டதால் தூங்குகிறார்களோ?'' என்று அவர் கேட்டதற்கு முதலில் பதிலே வரவில்லை.

தன் கேள்வி நண்பனின் காதில் சரியாக விழவில் லையோ என்று எண்ணித் திரும்பவும் கேட்டு ''எதற்கும் உன் மனைவியிடமும் ஒரு வார்த்தை கேட்க வேண்டு மில்லையா?'' எனும் போதுதான் அன்பரசின் தோற்றம் அவர் கருத்தில் பட்டது.

''அன்பரசு...?''

மெல்லத் தலைநிமிர்ந்து, ''நேற்றிரவு புவனி செத்துப் போனாள். மீண்டும் ஐந்தாம் மாதத்தில்... போய்விட்டது... கூடவே அவளும்... மனோரஞ்சிதத்தை பக்கத்தில் அனாதை இல்லத்தில் சேர்த்து விட்டேன் நான்...'' என்று கம்மிய குரலில் கூறியபடி மேஜைமேல் இருந்த தம்ளரை எடுத்து, அதிலிருந்த திரவத்தை 'வாஷ் பேஸி'னில் கொட்டியபோது மீண்டும் சந்தானம் பலமாக அதிர்ந்தார்.

''அய்யோ, அன்பரசு...'' என்று நண்பனின் கைகளைப் பற்றிக் கொண்டு அவரும் பரிதவித்தார். ''இந்த நேரத்தில் போய் நான் வேறு என்னுடைய பிரச்சினைகளை உன் மேல் சுமத்த வந்தேனே! வேண்டாம் அன்பு. அதை நானே பார்த்துக் கொள்கிறேன். அந்தக் கவலை வேறு உனக்கு வேண்டாம். விட்டு விடு'' என்றார்.

''விட்டு விட்டு?'' என்றான் அன்பரசு ஒரு மாதிரிக் குரலில். காலியான தம்ளரை நோக்கி, ''நான் என்ன செய்ய இருந்தேன் என்று உங்களுக்குப் புரிகிறதில்லையா, சந்தானம்? நான் வாழவும் ஒரு காரணம் ஏற்பட்டிருக்கிறது என்று நினைத்துதான் அதைக் கொட்டினேன்... நீங்கள் எனக்குச் செய்திருப்பதையெல்லாம் எண்ணிப் பார்த்தால் நான் இதைக் கேட்பது நியாயமில்லை! ஆனால் ரஞ்சியை உங்களோடு அழைத்துப் போய் நல்லபடியாக வளர்க்க முடியுமா? அந்த இல்லத்தில் சாப்பாட்டுக்கே கஷ்டம் என்று கேள்வி...'' என்று அவன் தயக்கத்துடன் இழுக்கவும், நண்பனின் கரங்களை அழுத்தி, அவன் விருப்பத்தை நிறைவேற்றுவதாகச் சந்தானம் சத்தியம் செய்தார்.

''இப்போது புரிகிறதில்லையா, கருணா? மனோரஞ்சிதத்தை வீட்டுக் குழந்தையாக வளர்க்க வேண்டும் என்றதன் காரணம் தெரிகிறதில்லையா?''



''அது தெரிகிறது. தாயை இழந்து, தந்தையையும் உடனே பிரிந்து அந்தக் குழந்தை உள்ளூர என்ன வேதனைப் படுகிறாளோ, பாவம்!'' என்றாள் கருணாகரி இரக்கத்துடன்.

''ஆனால் அன்பரசு ஆயுள் தண்டனைக்கு ஆளானது ஏன் என்று விளங்கவில்லையே! காரை அவர் ஓட்டியதாக இருந்தாலும் அது விபத்துதானே? அது எப்படிக் கொலைக் குற்றமாக முடியும்?''

''சொல்லுகிறேன்,'' என்று பெருமூச்சு விட்டார் சந்தானம்.

''மனசாட்சியில்லாத மனிதர்களிடம் அதிகாரம் இருக்கையில் அவர்களால் முடியாதது தான் ஏது?''

தற்கொலை செய்வதாக முடிவெடுத்த போதும் அன்பரசு பொறுப்பற்று நடந்து கொள்ளவில்லை. தோட்டத்தில் தனக்கு உதவியாளாக வைத்திருந்த துடியனை அழைத்து, சாவியைக் கொடுத்து, அடுத்து எஸ்டேட்டை நிர்வகிக்கும் பொறுப்பையும் கொடுத்தான். மனோரஞ்சிதத்தை அனாதை இல்லத்தில் விட்டு வளர்க்குமாறு கூறியிருந்தான்.

பொறுப்புணர்ச்சியினால் அன்பரசு செய்த இந்தச் செயல்களே, பின்னர் அவனைப் பிணைத்துச் சிறையிடும் சங்கிலிகளாகவும் மாறிப் போயின.

ஆனால், இதில் எதுவும் வெளியே வந்திருக்கவே போவதில்லை. சில கோணல் புத்திக்காரர்கள் அன்பரசை அழித்து விடத் திட்டமிட்டு வேலை செய்திராவிட்டால், இந்த விவரங்களை யாரும் விசாரிக்கக் கூட முயன்றிருக்க மாட்டார்கள்.

சந்தானத்துக்குத் தன் தோட்டத்தில் தங்கியிருந்து அன்பரசுக்காக வேலை செய்ய அவகாசம் இல்லை. அவர் உடனே சென்னை திரும்ப வேண்டியிருந்தது. எனவே நண்பர்கள் இருவருமாக அனாதை இல்லத்துக் குச் சென்று மனோரஞ்சிதத்தை அழைத்து வந்தார்கள்.

சந்தானம் சொன்னபடி பணம் முழுவதையும் அன்ப ரசு தயாராக எடுத்து வைத்திருந்தான்.

அதில் கொஞ்சத்தை எடுத்துக் கொண்டு வக்கீலைப் பார்க்கப் போகலாம் என்று சந்தானம் கூறியபோது அதைத் தடுத்து நிறுத்தி, அந்த வேலையெல்லாம் தானே பார்த்துக் கொள்வதாகச் சொல்லி, ம்களையும் நண்பரை யும் கிளப்பி அனுப்பி வைத்தான் அன்பரசு.

போலீசார் தங்கள் முக்கியத்துவத்தைக் காட்டிக் கொள்ளச் சற்று அலட்டிக் கொள்ளக் கூடுமே தவிர வேறு பெரிதாக எந்தச் சிக்கலையும் சந்தானம் எதிர்பார்க்க வில்லை.

எனவே, எஸ்டேட் தொடர்பான தகராறுகளைக் கவனிக்கும் வக்கீலுடன் தொடர்பு கொண்டு 'விபத்து' விபரம் சொல்லி அன்பரசுக்கு வேண்டியதெல்லாம் செய் யுமாறு டெலிஃபோனில் சொன்னதோடு ஓரளவு நிம்மதி யான மனதுடனேயே அவரால் சென்னைக்குக் கிளம்ப முடிந்தது. சென்னை வந்து சேர்ந்ததும் பெற்றோரிடம் விஷயத்தைச் சொல்லி, மனோரஞ்சிதத்தை அன்னை வசம் ஒப்படைத்து விட்டு, முழு மூச்சுடன் தொழிலில் இறங்கவும் முடிந்தது.

சுமார் மூன்று மாதங்கள், சந்தானம் தனது டிப்பார்ட் மெண்டல் ஸ்டோர் தவிர வேறு எதையும் எண்ணிக் கூடப் பார்த்ததில்லை. கருணாகரி மட்டும் கட்டாயப்



படுத்திச் சாப்பாடு கொடுத்திரா விட்டால், வயிறு என்று ஒன்று இருப்பதையே அவர் மறந்து போயிருப்பார். 'பசிநோக்கார், கண்துஞ்சார்... என்று கருமமே கண்ணா யினார்' பாட்டில் வருவதுபோல இரவு பகல் அதே சிந்தனையும் வேலையுமாக இருந்து, இந்த மூன்று மாதங்களில் வியாபாரத்தை நல்லபடியாக லாபகரமாக நடத்திக் காட்டினார்.

ஆனால், சந்தானம் தொழிலில் முழு மூச்சாக இறங்கியதன் விளைவாக இரண்டு பாதகங்கள் நேர்ந்தன.

ஒன்று அவரது வீட்டிலேயே மனோரஞ்சிதத்திற்கு நேர்ந்தது.

தாயார் தங்கம்மாளின் குணம் மகன் சந்தானம் அறிந்ததுதான். ஆனால் 'காலத்தினாற் செய்த உதவி ஞாலத்தின் மாணப் பெரிது' என்பது போல, உற்ற சமயத்தில் அன்பரசு செய்த உதவியை எண்ணிப் பார்த்து, அதற்கு உரிய நன்றிக் கடன் செலுத்துவதற்காக வேனும் மனோரஞ்சிதத்தைத் தாயார் நல்லபடியாக நடத் துவார் என்று அவர் நிச்சயமாக நம்பினார்.

ஆனால், அந்தப் பதினோரு வயதுப் பெதும்பைப் பெண், தாயை இழந்த துக்கத்தையும் தந்தையைப் பிரிந்த வேதனையையும் உள்ளே விழுங்கியபடி, அவரது வீட் டில் வேலைக்காரியாக உழைக்க நேரிடும் என்று அவர் சர்வ நிச்சயமாக நினைக்கவேயில்லை.

சந்தானம் செய்த ஒரு சிறு புண்ணியம், மனோரஞ்சி தத்தை நல்ல பள்ளியில் சேர்த்து விட்டிருந்ததால், அவ ளது படிப்பேனும் ஒழுங்காக நடந்து கொண்டிருந்தது.

மகளை விட அதிக அநியாயம் அவளுடைய தகப்பனுக்கு நேர்ந்து விட்டிருந்தது.

ஒன்றுமே இல்லாத கேஸ். வெகு தற்செயலாக நடந்துவிட்ட விபத்து. ஆனால், அதை விசாரித்து, கேசை முடிக்க வேண்டிய காவலரின் வீட்டுக்கு அவருடைய சகலை அந்தச் சமயம் பார்த்து விருந்தாட வந்திருந்தான்.

அந்த சகலை வேறு யாருமல்ல. புவனியுடைய முறை மாப்பிள்ளைதான். பேச்சுவாக்கில் விபத்தில் சம்பந்தப்பட்டிருந்தவரின் விபரம் அறியவும், காவலரை நன்றாக உசுப்பி விட்டுவிட்டான்.

அவனது தூண்டுதலினால், தற்செயலாக நேர்ந்த அந்த விபத்து திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட கொலையாயிற்று.

அடிபட்டுச் செத்தவன் வேறு, முன்னாளில் அன்பரசால் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒருவன். அடிக்கடி தொழிலாளர்களைத் தூண்டி விட்டுக் கொண்டிருந்ததால், 'இனி இந்த எல்லையுள் காலை வைத்தால் உருப்படியாக வீடு போய் சேரமாட்டாய்' என்று அன்பரசு அவனை அதட்டியதும் உண்டு.

சும்மா, வாய் வார்த்தையால் மிரட்டியதுதான். ஆனால் கேசை ஜோடிக்க வலுவான அடித்தளத்தை அது கொடுத்து விட்டது! முன் விரோதம் காரணமாக, ஆள் நடமாட்டம் இல்லாத சாலையில், எதிரே வந்தவனை அன்பரசு விரட்டி அடித்துக் கொன்று விட்டதாக வழக்கு ஜோடிக்கப்பட்டது.

எதிர்வழக்காட முயன்ற வக்கீலை, அன்பரசு தடுத்து விடவே, வழக்கு விரைவாக முடிந்து அன்பரசுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

மறுத்து வழக்காட விடாதது போலவே தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யவும் அன்பரசு விடவில்லை.



சந்தானம் விஷயமறிந்து ஓடி வந்து வக்கீலைத் திட்டினார்.

''அவர் மேல் தப்பில்லை சந்தானம்'' என்று அன்பரசு நண்பனை அமைதிப்படுத்தினான். ''நான்தான், வக்கீலை எதுவும் செய்யவும் விடவில்லை; அப்பீல் செய்யவும் கூடாது என்று விட்டேன்'' என்றான்.

தவிப்புடன் 'ஏன்? ஏன் அன்பு?' என்று சந்தானம் படபடத்தபோது ஒரு பெருமூச்சுடன் அன்பரசு விளக்கம் உரைத்தான்.

''பல காரணங்கள், சந்தானம்'' என்று தொடங்கிச் சொன்னான்: ''முதலாவது காரணம் இந்த மாதிரி வழக்கு என்றால் மரண தண்டனை தரமாட்டார்களா என்று ஓர் ஆசை....

''அன்பரசு!''

''ஆமாம் சந்தானம். என் புவனி இல்லாத உலகத்தில் இருந்து வாழ எனக்குக் கொஞ்சம் கூட விருப்பம் இல்லாதிருந்தது. இப்போதும் இல்லைதான். ஆனால் அது நீதிபதிக்குப் புரியவில்லையே!'' என்றவனை இடைமறித்து, ''உனக்கு ஒரு மகள் இருக்கிறாள் என்பதை மறந்து விட்டாயா?'' என்று ஆத்திரமாகச் சந்தானம் வினவினார்.

''மறக்கவில்லை. ஆனால், வாழ்வில் பிடிப்பற்று, நடைப் பிணமாகி விட்ட இந்தத் தகப்பனிடம் வளர்வது அவளுக்கும் நல்லதில்லைதான், சந்தானம். உங்கள் வீட்டில் அவளுக்கு ஒரு நல்ல குடும்பத்தின் அங்கமாக இருக்கும் வாய்ப்பு கிடைக்கும். தன்னம்பிக்கையும் தைரியமும் உடையவளாக அவளை வளர்த்து அவளது

பிற்காலத்தை நீங்கள் நல்லபடியாக அமைத்துக் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது''.

''அதை நான் நிச்சயம் செய்வேன் அன்பரசு!'' என்று சந்தானம் உணர்ச்சி பொங்கக் கூறினார்.

லேசாக முறுவலித்து விட்டு, ''இந்தப் பஞ்சைப் பராரித் தகப்பனால் அவளுக்கு வயிறு நிரம்பச் சோறு கூடப் போட முடியுமோ என்னவோ?'' என்று அன்பரசு கூறவும், ''என்னை அவ்வளவு நன்றி கெட்டவனாகவா எண்ணி விட்டாய், அன்பரசு? உன் வேலை என்றைக்கும் உனக்கே உரியதாகக் காத்திருக்கும் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று வருத்தமும் கோபமுமாகச் சந்தானம் வினவினார்.

''தெரியும்'' என்றான் அன்பரசு அமைதியாகவே. ''எனக்கு நன்றாகவே தெரியும், சந்தானம். ஆனால் என்னால்தான் முடியாது. என் புவனி அலைந்து திரிந்த இடங்களில் அவள் இல்லாமல் வாழ்வது... ஊகூம்... சாத்தியப்படாது, சந்தானம்''.

''அதற்காகக் கொலைக் குற்றத்தையா ஏற்பது? இந்த ஆயுள் தண்டனைக்குப் பதிலாக, விடுதலையாகி வெளியே வந்து, தேசாந்திரமேனும் போயிருக்கலாமே! என்றார் சந்தானம் மனம் ஆறாமல்.

''இது ஒரு வகையில் என் பிராயச் சித்தமும் கூட சந்தானம். நல்லதொரு வாழ்விலிருந்து புவனியைப் பிரித்து வந்து கஷ்டப்பட வைத்து விட்டேன். அவளுக்குப் பழக்கமான வளங்கள் மட்டுமின்றி, அவளுக்கு அவசியப்பட்ட நலன்களைக் கூட என்னால் கொடுக்க முடியாததால்தானே அவள் உடல்நலம் கெட்டது? அந்தப் பாவத்துக்குரிய பரிகாரமாகவும்தான் நான் இந்தத் தண்டனையை எதிர்ப்பின்றி ஏற்றிருக்கிறேன்....



''அதற்காகக் குற்றவாளி என்று முத்திரை குத்தப்பட வேண்டியது அவசியமில்லை, அன்பரசு. எத்தனையோ சேவை நிறுவனங்கள் இருக்கின்றன. ராமகிருஷ்ணா மடம், உதவும் கரங்கள், எதிலேனும் ஊதியம் பெறாமல் சிரமதானம் செய்து உன் பிராயச்சித்தத்தை செய்யலாமே!''

''.... எதிர் வழக்காடி விஷயத்தைப் பெரிது படுத்துவது மனோரஞ்சிதத்தைப் பாதிக்கக் கூடும். விஷயம் விளம்பரப்படுத்தப்பட்டு விடும். விடுதலையே ஆனாலும் கொலைகாரன் மகள் என்று பேசுவார்கள். அது அவளுக்கு நல்லதல்ல. மேலும் வழக்கு என்று தூண்டித் துருவும் போது உங்கள் பெயர் வெளிவந்து விடக் கூடும். நீங்கள் சென்னையில் இருப்பது அவசியம் அல்லவா? உங்களுக்காக நான் செய்த தியாகம் என்று எண்ண வேண்டாம் சந்தானம். என் மகளுக்கும்... அதுதான் நல்லது என்பது, நான் யோசித்துக் கண்ட முடிவு...''

அதற்கு மேல் சந்தானம் அதிகமாக எதுவும் பேசவில்லை. மனோரஞ்சிதத்தை நன்கு பார்த்துக் கொள்வதாக வாக்குக் கொடுத்து விட்டுச் சென்னைக்குத் திரும்பி வந்தார்.

வந்தபின் பார்த்தால், மனோரஞ்சிதத்தை அவருடைய தாயார், வீட்டு வேலைக்காரக் குட்டியாக மாற்றி வைத்திருந்தது தெரிய வந்து அவர் தவித்துப் போனார். நல்லபடியாக எடுத்துச் சொன்னால் தாயார் அதை ஒத்துக் கொள்வதாக இல்லை! ''நீயே சொல் கருணா. இந்த அநியாயத்தை நாம் அனுமதிக்கலாமா? அது பெரிய பாவம் அல்லவா?'' என்று மனைவியிடம் கேட்டார் அவர்.

''பாவம்தான்'' என்று கருணாகரி ஒத்துப் பாடவும், ''இதை எப்படியாவது தடுத்தாக வேண்டும் கருணா. மனோரஞ்சிதத்தை நம் குடும்பத்துப் பெண்ணாக வளர்க்க வேண்டும். நான் வீட்டில் உட்கார்ந்திருந்து இதைக் கவனித்துக் கொண்டிருக்க முடியாது. அதனால் நீதான் இந்தப் பொறுப்பை ஏற்றுச் செய்ய வேண்டும்'' என்றார் கணவர்.

சற்று யோசித்து விட்டு, ''இயன்றவரை செய் கிறேன்'' என்றாள் மனைவி. ''உங்கள் அம்மாவை எதிர்ப்பது முடியாது. எனக்குக் கை, கால் நடுங்கி விடும். ஆனால் அதற்காகச் சும்மா இருந்து விடமாட்டேன்; நம்புங்கள்'' என்று உறுதியளித்தாள்.

## 4

அன்றிலிருந்து மனோரஞ்சிதத்தின் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. நல்லவிதமாய்த்தான்.

அவளுக்கு மகிழ்ச்சியளித்த முக்கியமான மாற்றம், அந்த வீட்டுப் பாட்டி தங்கம்மாளுக்கு உணவுத் தட்டைக் கொண்டு போய்க் கொடுப்பதிலிருந்து கிடைத்த விடு தலைதான்!

சமையல்காரம்மாள் வழக்கம் போலத் தட்டில் சிற் றுண்டியை எடுத்து வைத்து, மனோரஞ்சிதத்தை அழைத்து அவள் கையில் அதைக் கொடுக்கத்தான் செய்தாள். ஆனால் 'விதியே' என்று மனோரஞ்சிதம் அதை எடுத்துப் போகும் போது பாதியிலேயே தட்டு கைமாறிவிடும்.



''இன்று வகுப்பில் சின்ன 'டெஸ்ட்' ஒன்று இருப்ப தாகச் சொன்னாயே; கடைசித் தடவை சரிபார்த்து முடித்து விட்டாயா? எதற்கும் மீண்டும் ஒரு தரம் முக்கியக் குறிப்புகளைப் பார்த்துக் கொண்டு விடு. போ'' என்று கருணாகரி தட்டைத் தன் கையில் எடுத்துக் கொண்டு போய் விடுவாள். அல்லது, ''பள்ளிச் சீருடை சற்றுக் கசங்கியிருக்கிறது. வேறு மாற்றிக் கொண்டு கிளம்பு'' என்று அனுப்புவாள். ஒன்றுமே இல்லாவிட்டா லும், ''என் அறையில் சாக்லேட் பார் இருக்கிறது. அதை எடுத்துச் சாப்பிடு போ'' என்பாள்.

எப்படியாவது இந்தத் தட்டுத் தூக்குகிற வேலை, சிறுமிக்கு 'இல்லாமல் பார்த்துக் கொண்டாள்.

தட்டு கொண்டு போகிற வேலை இல்லாததோடு, அதைத் தொடர்ந்து குளியலறையில் அழுக்குத் துணி எடுக்கிற வேலை, திட்டு வாங்குகிற துன்பம் எல்லாமே மனோரஞ்சிதத்திற்கு இல்லாமல் போயிற்று.

மற்ற சமயங்களிலும் மனோரஞ்சிதத்தைக் கருணா கரி தன் அறையிலேயே நிறுத்தி வைத்துக் கொண்டாள். தங்கம்மாள் சிறுமியை அழைத்தால், அவளை ஏதாவது படிக்கும்படி பணித்து விட்டு, அவளுக்குப் பதிலாக மாமியாரிடம் சென்று நின்றாள். ''படிப்புச் செலவு நிறைய ஆகிறது. ஆனால் வாக்குக் கொடுத்து விட்டதால் படிக்க வைத்துத்தான் ஆகவேண்டும். பதிலாக உபகாரச் சம்பளம் வாங்குகிற அளவு மனோரஞ்சிதத்தை நன்றாகப் படிக்க வைக்கும்படி உங்கள் மகன் சொல்லியிருக்கிறார், அத்தை. சும்மா வீட்டு வேலை, அது இது என்று செய்யச் சொல்லி படிப்பைக் கெடுத்து விடக் கூடாது என்று உங்கள் பிள்ளை சொல்லியிருக்கிறார் அத்தை. அதனால் அறையில் உட்கார்ந்து படிக்கச் சொல்லியிருக்கிறேன்.

என்ன வேண்டும் சொல்லுங்கள் நானே செய்கிறேன்'' என்று வேலையைத் தான் ஏற்று செய்வாள்.

அசையாத பார்வையுடன், உங்கள் மகன் சொன்னார் என்றதற்கு மேலாக, மனோரஞ்சிதத்தை வேலை வாங்குவதில் தங்கம்மாள் அதிகப்படி ஆர்வம் காட்டவில்லை.

ஆனால், அந்த அம்மாள் இதைப் பெருந்தன்மையாக விட்டு விடவில்லை என்பது விரைவிலேயே புரிந்தது.

மருமகளின் அறைக்கு விஜயம் செய்து ஏதோ ஊர்க்கதை பேசிக் கொண்டு இருந்தவள், புத்தகத்துடன் அமர்ந்திருந்த மனோரஞ்சிதத்தைத் திடுமெனக் கவனித்து, ''படிக்கிறாயா? நல்லது. நன்றாகப்படி. ஒன்றுமில்லாத அனாதை; நடுத்தெருவில் நாயோடு நாயாக அலைந்து, திரிந்து பிச்சையெடுத்து உண்ண வேண்டியவள், ஏதோ பரிதாபப்பட்டு உன்னைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்திருக்கிறார்கள். இதுதான் சாக்கென்று உட்கார்ந்து தின்னாமல், கொஞ்சம் உபயோகமாகவும் இருக்கப் பார். சும்மாவே உன் படிப்பால் வேறு அதிகமாகச் செலவாகிறதாமே!'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

மனோரஞ்சிதம் மீண்டும் அடிபட்டுப் போனாள்.

அவள் சிறு பெண்தான் என்றாலும், சூட்டிகையான பெண். எனவே, தங்கம்மாளின் பேச்சில் வெளிப்பட்ட கருத்தை அவளால் நன்றாகவே உணர முடிந்தது. இன்னமும் ஆறாதரணமாக தாயின் இழப்பை எண்ணி உள்ளே ரத்தம் கசிந்த போதும், ''சரி பெரியம்மா'' என்று பணிவாகப் பதிலுரைக்கவும் முடிந்தது. கடந்த சில மாதங்களாக, அந்த வீட்டில் அவள் அடைந்திருந்த பயிற்சி அதற்கு உதவியாகவும் இருந்தது.



ஆனால் வெளியே காட்டிக் கொள்ள அஞ்சி மறைத்த போதும், அந்தப் பிஞ்சு மனம் படாதபாடு பட்டது. சில மாதங்களாகப் பட்ட அதேபாடுதான்.

தாயின் மறைவையும், தந்தையின் பிரிவையும் பற்றி ஒரு வார்த்தை பேசக் கூட முடியாமல் - பேசத் தைரியமின்றி முற்றிலும் புதியவர்களே இருந்த இந்த வீட்டில் அவள் தவித்த தவிப்பை என்ன வார்த்தையால் விவரிப்பது?

அம்மா கடவுளிடம் போய் விட்டாள். அம்மா அம்மா என்று ஏங்கினாலும் அவள் திரும்பி வரமாட்டாள் என்பது புரிகிற வயதுதான். ஆனால் இந்த அப்பா? இந்தப் பாட்டியம்மாள் அவளை அனாதை, பழுதை என்று குத்திப் பேசும்படி விட்டு விட்டு அவர் எங்கே போய் விட்டார்? இதை யாரிடம் கேட்டு அறிவது?

அந்த அனாதை இல்லத்தில் இரவு உணவே தருவதில்லை. பசியும், அரைத் தூக்கமுமாக இருந்தவளை அழைத்து வந்து, இனி இந்த அங்கிள் வீட்டில்தான் இருக்கப் போகிறாய். நல்ல பெண்ணாக நடந்து கொள்ள வேண்டும்'' என்று சொல்லி அனுப்பிய பின் அவரை அவள் பார்க்கவே இல்லை!

நல்ல பெண்ணாக நடப்பது என்றால் என்ன? இது வேண்டும்; அது வேண்டும் என்று கேளாமல் வீட்டினர் இட்ட வேலையைச் செய்து, தருகிற உணவை உண்டு விட்டு சொன்ன இடத்தில் முடங்கிக் கொள்வதா?

ஆனால், 'அம்மா, அப்பா' என்று ஓயாமல் உருப்போடும் மனதை என்ன செய்வது? இரவின் தனிமை கிட்டும்போது கண்ணீர் வடிப்பது தவிர, தந்தையைப் பற்றி யாரிடம் கேட்கவும் அவளுக்குத் தைரியம் இருக்கவில்லை!

தங்கம்மாள் செய்யச் சொன்ன வேலைகளைச் செய் வது அவளுக்குக் கடினமாக இருக்கவில்லை. அவை அவள் செய்தறியாத பணிகளும் அல்ல. எப்போதும் சற்றுப் பலவீனமாகவே இருந்த தாயாருக்கு அவள் செய்து கொடுத்தவைதான். அதிலும், கடைசி நாலு ஆண்டுகளாக அவளுடைய தாயாருக்கு அவள் செய்த பணிவிடைகள் அவளது வயதுக்கு மிக அதிகமே என்றா லும், ஓர் அன்பான அடைமொழியுடன் புவனி செய்யச் சொன்ன எதையும் மனோரஞ்சிதம் மறுத்ததே கிடையாது.

இப்போதும் வேலைக்ளை விடத் தங்கம்மாளின் வார்த்தைக் கொட்டுதலை தாங்குவதுதான் அவளுக்குக் கடினமாகப்பட்டது. பாட்டியின் பேச்சில் பலது அவளுக் குப் புரியாதபோதும், 'ஆன்ட்டி, அங்கிளின் நல்ல மனதைப் பயன்படுத்திக் கொண்டு மனோரஞ்சிதம் தண் டச் சோறு தின்பது போலக் கூறியது நன்றாகப் புரிபட்டு அவளை மிகவும் பாதித்தது.

மனோரஞ்சிதம் ரோஷம் மிகுந்தவள். எனவே, கருணாகரியின் இடையீட்டால் இடையில் விட்டிருந்த வேலைகளை மீண்டும் செய்யத் தொடங்கினாள்.

கூடவே, படிப்புக்கான உபகாரச் சம்பளத்தைப் பெறுவதற்காக, முனைந்து தீவிரமாகப் படித்து, அதில் வெற்றியும் பெற்றாள்.

மாமியாரை நேரடியாக எதிர்க்கும் திராணி கருணா கரிக்குக் கிடையாது. எனவே, தன்னால் ஆன ஒன்றாக மனோரஞ்சிதத்திடம் மிகுந்த அன்பு காட்டினாள். உயர் ரகமான ஆடைகளை வாங்கிக் கொடுத்தாள். நல்ல உணவளித்து, தலைவாரி விட்டுப் பெற்ற மகவு போல நடத்தினாள். பரிவும் பிரியமுமாகப் பேசினாள். கருணா



கரியின் உருவில் மனோரஞ்சிதம், தன் தாயைக் காணத் தொடங்கினாள் என்றால் அது மிகையல்ல.

இதுவும் தங்கம்மாளுக்குப் பிடிக்கவில்லைதான். அவர்கள் முதலாளி வர்க்கம். அவர்களிடம் வேலை செய்கிற இனம் மனோரஞ்சிதம். அவளைப் போய் மடியில் வைத்துத் தாலாட்டுகிறாளே இந்த மூளை கெட்ட மருமகள்.

ஆனால், இதை மகன் சொல்லித்தான் மருமகள் செய்கிறாள் என்றானபின், இதற்காகக் கருணாகரியைத் தனியே கோபித்துத் திட்ட அவளால் முடியவில்லை.

புருஷன், பொண்டாட்டி இரண்டு பேருக்குமே புத்தியில்லை என்று அவள் சொல்லும் அத்தனைக்கும் தலையாட்டும் கணவரிடம் அங்கலாய்த்தவள், விரைவி லேயே இந்தச் சிக்கலுக்கு ஒரு வழி கண்டுபிடித்தாள்.

அந்த வீட்டில் இன்னுமொரு முக்கியமான அங்கத்தி னர் உண்டு. குடும்பத்தின் இளைய தலைமுறை; சந்தா னம் - கருணாகரியின் ஒரே, ஒப்பற்ற பிள்ளை!

சந்தானத்துக்கும் கருணாகரிக்கும் திருமணமாகி இரண்டாம் ஆண்டே குணாளன் பிறந்தான்.

ஆண் குழந்தை பிறந்தது என்று எல்லோரும் அகம கிழ்ந்து ஆரவாரித்துக் கொண்டிருந்த போது, சந்தானம் மட்டும் மனைவியிடம், 'இவன் ஒருவன்தான் நமக்கு. அவ்வளவுதான் பிள்ளைப்பேறு' என்று கூறிவிட்டார்.

பெண் மகவு வேண்டாம் என்பதல்ல அவருக்கு. சொல்லப் போனால் கணவன் - மனைவி இருவருக்குமே பெண் குழந்தை ஆசைதான் அதிகம். அடுத்துப் பிறப்பது ஆண் குழந்தையாக இருந்து விடக் கூடாதே என்ற பயத்தில்தான் சந்தானம் அடுத்துப் பிள்ளையே வேண்

டாம் என்றது. நட்பில், உறவில் நாலைந்து குடும்பங்க ளில் சொத்துக்காகச் சகோதரர்கள் அடித்துக் கொண்ட தைப் பார்த்து அருவருத்து அவர் இந்த முடிவுக்கு வந்திருந்தார்.

கணவன் சொல்லை அப்படியே ஏற்றுப் பழகியி ருந்த கருணாகரியும் அவரது விருப்பத்துக்கு இப்போதும் மாறு சொல்லவில்லை. எனவே குணாளன் ஒருவனா கவே நின்று போனான்.

ஏதோ பெரிய ராஜ பரம்பரை போல, எங்கள் இளவரசன் குலவிளக்கு, குடும்ப வாரிசு, அது இது என்று தங்கம்மாள் அடிக்கடி பீற்றிக் கொள்வாள். மற்றபடி, ஓர் ஒற்றைக் குழந்தைக்குரிய குண நலன்களுடன் குணாளன் நலமே வளர்ந்து வந்தான்.

வீட்டில் புதிதாக வந்து சேர்ந்த சிறுமியை முதலில் அவன் சற்று சுவாரசியத்துடன்தான் கவனித்தான். ஆனால், எந்நேரமும் அவளது கண்களில் அப்பியிருந்த சோகம் அவனுக்கு எரிச்சலூட்டியது. 'எங்கள் வீடு எப்பேர்ப்பட்ட வீடு! இங்கே இருக்க இவளுக்குக் கசக்கி றதாக்கும்?' என்று ஆத்திரப்படுவான்.

பிறகு, தங்கம்மாள் அவளை நடத்திய விதத்தில் வீட்டில் இருக்கும் நாலைந்து வேலையாட்கள் போல இவளும் என்று சிரத்தையற்றுப் போனான்.

அப்புறமாய்த் தாயார் அந்தப் பெண்ணைச் சீராட்டு வதைக் காணவும் மீண்டும் அவளிடம் அவனுக்கு சுவார சியம் ஏற்பட்டது. போகிற வருகிற வழியில் எதிர்ப்பட் டால், நின்று மனோரஞ்சிதத்திடம் ஓரோர் வார்த்தை பேசுவான் 'என்ன விளையாட்டு விளையாடுவாய்?', 'என்ன சினிமா பிடிக்கும்?' என்பன போல சின்னச் சின்னக் கேள்விகள்.



புரியாத பாடங்களைத் தன் மகன் குணாளனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு கருணாகரி மனோரஞ்சி தத்திடம் கூறுவதுண்டு.

நாலைந்து வயது சின்னவளான ஒரு பெண், தன் னைப் பெரிதாக மதித்துப் பாடம் கற்றுத் தரும்படி கேட்பது குணாளனுக்கும் பெருமைதான்.

தன்னைவிடப் பெரியவன் என்பதால் 'குணா அண் ணா' என்று அழைத்தவளிடம், ''இந்த அண்ணா கிண் ணாவெல்லாம் கூடாது. நம் முருகன் சுவாமி தெரியுமா? அவருடைய அப்பாவுக்கே பாடம் கற்பித்தவர். அப்படி அப்பாவுக்குக் கற்றுக் கொடுக்கும்போது, தன்னை ஒரு ஆசிரியராக மதித்து ஒரு மாணவன் போல மரியாதை யோடு பாடம் கேட்டால்தான் சொல்லித் தருவேன் என்று அவர் அப்பாவிடமே சொல்லி, அதன்படி அவர் அப்பா மரியாதை தந்த பிறகுதான் பாடத்தைக் கற்றே கொடுத்தா ராம். நீயும் என்னை உன் பள்ளி ஆசிரியரைக் கூப்பிடு வது போல 'சார்' என்று அழைத்துப் பணிவோடு பேசினால்தான் சொல்லித் தருவேன்'' என்று பெரிதாக அலட்டி பிகு பண்ணவும், பயந்து போய் அவளும் 'குணா சார்' இந்தப் பாடம் சார், சொல்லித் தாருங்கள் சார்!' என்று அகப்பட்ட இடத்திலெல்லாம் சார் போட்டுக் கேட்கவும் பெருமையால் உச்சி குளிர மனோரஞ்சிதத்துக் குப் பாடம் கற்றுக் கொடுப்பான்.

மகன் விரட்டுவதையும், மனோரஞ்சிதம் அதற் கேற்ப ஆடுவதையும் காணக் கருணாகரிக்கு மிகவும் வேடிக்கையாக இருக்கும். காணாதது போல இதைக் கண்டு ரசிப்பாள்.

அப்படிப் பார்த்துக் கொண்டு இருக்கும் போது, அந்தத் தாய் மனதில் பலவிதக் கற்பனைகள் தோன்றுவ துண்டு.

ஒரு விடுமுறை நாளில், சந்தானம் லகுவாய் ஓய் வெடுத்துக் கொண்டிருந்தபோது, பேச்சுவாக்கில் தான் நினைத்தது பற்றிக் கருணாகரி அவரிடம் கூறவும் சந்தா னத்துக்கு ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று.

கணவரின் வியந்த பார்வையில் முகம் கன்றி, ''ஏதாவது தப்பாகச் சொல்லிவிட்... நான் தப்பாக ஏதா வது சொல்லியிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்... சா...ரி...'' என்று வருத்தம் தெரிவித்தாள் மனைவி.

விரிந்த முறுவலுடன், மனைவியின் கையைப் பற்றி சந்தானம் அவளைத் தன் அருகே அமர வைத்துக் கொண்டார். ''சாரியா? எதற்கு? எவ்வளவு முன்நோக்கு உனக்கு என்று நான் அதிசயப்பட்டுக் கொண்டு இருக்கி றேன்... பைத்தியம்போல் மன்னிப்புக் கேட்கிறாயே! வருங்காலத்தைப் பற்றி இப்பொழுதே, இவ்வளவு சிறப் பாகத் திட்டமிடுகிறாய்! உன்னைப் போய் ஒன்றும் தெரியாதவள் என்று எப்படி நினைத்தேனோ என்றிருக்கி றது!'' என்று கணவர் பாராட்டவும் வெட்கத்தில் கருணா கரியின் முகம் செக்கச் சிவந்து போயிற்று.

ஆனால், இந்த மகிழ்ச்சியெல்லாம் கொஞ்ச நாளி லேயே மறைந்து விட நேர்ந்தது.

வேலைக்கார வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணு டன் அவளும் சிறுமி; அவனும் சிறுவனே என்றபோதும், தன் பேரன் சகஜமாகப் பேசிப் பழகுவதை தங்கம்மா ளால் சகிக்க முடியவில்லை.



கணவன் சொல்படி நடக்கிறேன் என்று சொல்லும் மருமகளிடமோ, நன்றிக் கடன் செலுத்துவதாகக் கூறும் மகனிடமோ எதுவும் சொல்ல முடியாமல் போகவே, தன்னுடைய பெருந்தவப் பேரனிடம் தன் வேலையை அவள் தொடங்கினாள்.

நம் ரத்தத்தை உறிஞ்சி வாழும் பேன் கொசுக்க ளைப் போல, மனோரஞ்சிதம் ஓர் ஒட்டுண்ணி என்றும், அப்பாவிகளான சந்தானம் - கருணாகரியை ஏமாற்றி மனோரஞ்சிதத்தின் தகப்பன் அவளை இவர்கள் தலை யில் கட்டி விட்டான் என்றும் பேரன் மனதில் உருவேற்றி னாள். ''இந்தப் பெண்ணும் லேசுப்பட்டதில்லை, ராஜாக் குட்டி. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்' என்கிற பழமொழிக்கே இவள்தான் சரியான எடுத்துக் காட்டு! 'அங்கிள்', 'ஆன்ட்டி' என்று உன் அப்பனையும், அம்மாவையும் நைஸ் பண்ணி, 'கான்வென்ட்' படிப்பு, கார் சவாரிக்கு ஏற்பாடு பண்ணிக் கொண்டாள் பார்! ஏழை பாழை என்று இரக்கத்தில் செய்வதற்குக் 'கார்ப்ப ரேஷன்' பள்ளியில் படிக்க வைத்தால் போதாதா? புத்த கச் செலவோடு போகும். இப்போது 'கான்வென்ட்டுக்கு ஃபீஸ், பணமே எவ்வளவு? அதையெல்லாம் சேர்த்து வைத்தால், விடுமுறை நாளில் உன் பள்ளியில் வெளி நாடு சுற்றுலா போவதாகச் சொன்னாயே, அந்தக் கட்ட ணத்துக்குச் சரியாக இருக்குமே!'' என்று பெருமூச்சு விட்டாள்.

சற்று யோசித்து விட்டு, ''நீங்கள் சொல்வது சரி யில்லை, பாட்டி. அந்தப் பணம் சுற்றுலாப் பயணத்துக் குப் போதாது!'' என்றான் அருந்தவப் பேரன்.

''இதுவரை ஆனதை மட்டும் கணக்குப் போடா தேடா. இன்னமும் இவள் எத்தனை ஆண்டு படிப்பாள்?

அதையெல்லாம் மொத்தமாகக் கூட்டிப் பார்! நீ உலகப் பயணமே போகலாம்!'' என்று மேலும் ஏற்றி விட்டாள் பாட்டியம்மாள்.

வேகமாக மனதில் கூட்டிப் பார்த்து விட்டு, ''அய்யோ! ஆமாம் பாட்டி. நீங்கள் உடனே அப்பாவைக் கூப்பிட்டு, இந்தப் பெண்ணை அவள் வீட்டுக்கே அனுப்பி விடச் சொல்லுங்கள்!'' என்று பேரன் பரபரத்தான்.

''அவ்வளவுதான்! உன் அப்பா பேயாட்டம் ஆடத் தொடங்கி விடுவான்! அவனுடைய சினேகிதன் மகளாமே! மற்றதை விடு. அவள் போட்டுக் கொண்டு வந்த துணி நினைவிருக்கிறதா?'' என்று கேட்டு, பேரன் சற்று யோசித்து, இல்லை என்று உதட்டைப் பிதுக்கும்வரை காத்திருந்து சொன்னாள், ''வெறும் சீட்டித் துணியில்... மகா மலிவு விலைத் துணியில் தைத்த சட்டையடா. இப்போது பார், கார்டனும், பிசிலிஸியுமாக அவள் மினுக்குவதை! உன் அம்மா வெளியே செல்லும்போதெல்லாம் கூடவே போய், 'ஆன்ட்டி ஆன்ட்டி' என்று அவளை ஏமாற்றி இப்படி விலை உயர்ந்த துணிகளாகப் பார்த்து வாங்கிக் கொள்கிறாளடா! உன் அப்பா காலையில் எட்டு மணிக்குக் கடை திறக்கக் கிளம்பிச் சென்றால், கணக்கு முடித்து வீடு வர மணி இரவு பத்தாகிறது. ஒரு நாளைக்கு பதினாலு மணிநேரம் உன் அப்பா உழைக்கிற காசு எப்படியெல்லாம் வீணாகிறது, பார்த்தாயா? உனக்கு அந்த ஜெர்க்கினோ பர்க்கினோ என்னமோ வாங்க வேண்டும் என்று நீ கேட்டபோது, 'வளருகிற பிள்ளை, விரைவிலேயே சின்னதாகி விடும். இப்போது இவ்வளவு விலை கொடுத்து வாங்க வேண்டாம்' என்றானே உன் அப்பன். இவள் மட்டும் வளராமல் அப்படியேவா இருக்கப் போகிறாள்?!''



கோபத்தால் முகம் சிவக்கக் குதித்தெழுந்து, ''பாட்டி! இப்போது அப்பாகிட்டே நீங்கள் பேசப் போகிறீர்களா, அல்லது நான் பேசட்டுமா?'' என்று கீச்சிட்டான் குணாளன்.

பேரனை அதிகப்படியாக உசுப்பி விட்டுவிட்டோமோ என்று தங்கம்மாளுக்குத் தோன்றியது. மெல்ல அவன் கையைப் பிடித்து, உட்காரவைத்து, ''இதற்குத்தான் - நீ வருத்தப்படுவாய், கோபப்படுவாய் என்றுதான் உன்னிடம் சொல்லாமலே வைத்திருந்தேன். உள்ளே எனக்கு எவ்வளவு வேதனையாக இருந்தாலும் ஒரு மூச்சுக்கூட விடாமல் இருந்தேன்.... என்றவளைக் குறிக்கிட்டு, ''பின்னே எவ்வளவுதான் இதைப் பொறுப்பது?'' என்றான் அவன் ஆத்திரம் அடங்காமலே.

''வேறு என்னம்மா, செய்வது? நான் கேட்டால் என்னைத் திட்டுவார்கள். நீ போய் கேட்டாலும் உன்னை நான்தான் தூண்டிவிட்டதாக என்னைத்தான் திட்டப் போகிறார்கள். தலையெல்லாம் நரைத்துக் கிழவியாகி விட்ட எனக்கு, இந்த வயதில் இந்த மாதிரித் திட்டெல்லாம் அவசியம்தானா?'' என்று சேலைத் தலைப்பால் முகத்தை மூடிக் கொண்டு தங்கம்மாள் கண்ணைக் கசக்கினாள்.

உருகிப் போய், ''இல்லை பாட்டி. நான் கேட்கவில்லை!'' என்று குணாளன் உறுதி கூறினான். ''இப்போது வேற என்னதான் செய்வது பாட்டி?'' என்று பாட்டியிடமே ஆலோசனை கேட்டான்.

இதற்குத்தானே தங்கம்மாளும் காத்திருந்தது!

பேரன் தலையை அருகே இழுத்து, ரகசியம் பேசுவது போலத் தணிந்த குரலில், ''உன் அம்மா அப்பாவி

ட்ம் சமயம் பார்த்துப் பேசுகிற வேலையை என்னிடம் விட்டுவிடு. நீ மட்டும், அந்த வேலைக்காரக் குட்டியை அருகில் சேர்க்காதே. அதுவே தானாக வரும். அதெல் லாம் பெரிய "திட்டம் வைத்திருக்கிற பிசாசு ஆயிற்றே! அப்படி அந்தக் கழுதை பாடம் படிக்கிற சாக்கில் வந்தால் விரட்டியடித்துத் துரத்தி விடு. அது போதும். மற்றதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்று ஏதோ பெரிதா கக் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகத் திட்டம் தீட்டுகிற பாவனையில் பேசவும் பேரன் சற்று சமாதானமாகி விட்டான்.

அதன் விளைவாக, மனோரஞ்சிதத்திற்கு அந்த வீட்டில் கிடைத்த நண்பன் இல்லாமல் போனான். ஒரேய டியாக மனோரஞ்சிதத்தை வெறுத்துப் பேசினான் என்று சொல்ல முடியாது. 'குணா சார், ப்ளீஸ் சார்... இந்த ஒரு பாடம் மட்டும் சார்' என்று அவள் கெஞ்சும் போது மனம் இளகிக் கற்றுக் கொடுப்பான். ஆனால் உடனேயே விழித்துக் கொள்வதும் உண்டு.

அவ்வப்போது உள்ளூரக் குறுகுறுப்புடன், ''மனோ ரஞ்சிதம் ஏதோ பெரிய திட்டம் வைத்திருப்பதாகச் சொன்னீர்களே, அது என்ன திட்டம் பாட்டி?'' என்று விசாரிப்பான்.

''நீ சின்னக் குழந்தையடா, கண்ணு. நீ இன்னும் கொஞ்சம் பெரியவனானதும் அதைப் பற்றிச் சொல்கி றேன்'' என்பாள் பாட்டியம்மாள்.

''ஊகூம். அவள் என்னை விட ஐந்து வயது சின்னவள். அவளால் திட்டம் போட முடியும்; ஆனால் அதைப் புரிந்து கொள்ள எனக்கு வயதாகவில்லை என்றால் எப்படி?'' என்று பேரன் ஆட்சேபிப்பான்.



''நீ நல்ல பையன். அவள் பிசாசு ஆயிற்றே!'' என்று மனோரஞ்சிதத்தை மட்டம் தட்டி, குணாளனைத் தட்டிக் கொடுத்து, தங்கம்மாள் சமாளித்து விடுவாள்.

பலவகைக் கெட்ட தன்மைகள் இருந்த போதும் தங்கம்மாளுக்குப் பேரனிடம் மிகுந்த அன்பு உண்டு.

மகனின் நன்மை கருதி சந்தானமும் - கருணாகரி யும் மறுத்தவற்றை எல்லாம் பேரன் பாசத்தால் அவனுக் குக் கிடைக்கும்படி தங்கம்மாள் செய்து விடுவாள்.

எனவே குணாளனுக்கு தன்னுடைய பாட்டிதான் பெற்றோரைவிடக் கெட்டிக்காரி என்கிற எண்ணம் உண்டு. தங்கம்மாளின் அன்பில் மட்டுமின்றி அறிவிலும் அவனுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

அந்த நம்பிக்கையே, அந்த வீட்டில் ஒரு பெரும் புயல் அடிக்கக் காரணம் ஆயிற்று; புயலின் விளைவான அழிவுக்கும் வழி வகுத்தது.

## 5

மகன், மருமகளிடம் தன்னை நியாயப்படுத்த முடியாததால், பேசாமல் ஒதுங்கி விட்டதாகக் காட்டிக் கொண்டாலும், இளைய தலைமுறையைத் தங்கம்மாள் தன் விருப்பம்போல ஆட்டி வைத்தாள்.

'தண்டச் சோறு தின்னுகிறாள், ஓசித் துணி உடுத்துகி றாள் என்று மனோரஞ்சிதத்தின் காது கேட்கச் சொல்லிச் சொல்லியே, அவளது ரோஷத்தைச் சீண்டி விட்டாள். தன் உணவுக்கும், உடைக்கும், உறைவிடத்தோடு தான்

பெற்ற கல்விக்காகவும் மனோரஞ்சிதம் தன் வயதுக்கு அதிகமாகவே உழைத்தாள்.

இந்தப் பெண் ஒரு ஏமாற்றுக்காரி, உள்ளிருக்கும் விஷத்தை உதட்டில் தேன் தடவி மறைத்துத் தன் பெற்றோரை ஏமாற்றி இந்த வீட்டில் மனோரஞ்சிதம் அவளது தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறாள் என்ற எண்ணம் குணாளனுக்குத் தோன்றி, உறுதியாகவே வேரூன்றி விட்டது. தேவைகளை மட்டுமல்ல; அதிகப் படியான வசதிகளையும் சம்பாதித்துக் கொள்கிறாள் என்ற கருத்தும் பாட்டியின் புண்ணியத்தில் அவ்வப் போது அவனுக்குத் தோன்றிக் கொண்டு இருந்தது.

அவனது இந்த எண்ணங்களை மாற்றுவோர் என் றும் அந்த வீட்டில் யாரும் இல்லை.

வீட்டின் முதிர்ந்த அங்கத்தினர் சிதம்பரம் பெரும்பா லும் மனைவியின் பின்னே மறைந்து நிற்கிறவர். அவளை மீறி எதுவும் செய்வது அவரால் முடியாத காரியம்.

சந்தானம் காலையில் சென்று இரவில் திரும்புகிற வர். அவர் தன் மகனைச் சரியாகச் சந்தித்துப் பேசுவதே கடையின் விடுமுறை நாட்களில்தான். அவையும், அவ னுக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமைகளாகவே இருந்ததால் பெரும்பாலும் அவன் நண்பர்களோடு விளையாடப் போய் விடுவான். எனவே மகனுக்கு இப்படி ஓர் எண்ணம் ஊட்டப்படுவதை அவர் உணரவே இல்லை எனலாம்.

கருணாகரி அதிகம் பேசாதவள். படிப்பும் வெகு சுமார்; கிராமத்திலிருந்து வந்தவள் என்பதால் தன்னைக் கொண்டே ஒரு தாழ்வுணர்ச்சி வேறு. பொதுவாக வாதா



டல், போராடல் என்றாலே அப்படியே பின்னடித்து விடுவாள்.

பெற்ற மகனிடம் கூட அவளுக்குப் பிரமிப்புதான். நான் பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளையா இப்படி நெடுநெடுவென்று தலைக்கு மேல் உயரமாய் வளர்ந்து நிற்கிறான் என்று ஆச்சரியம். இவ்...வளவு புத்தகம் படிக்கிறான்! படித்து நல்ல மார்க்குகள் வாங்கிப் பாஸ் செய்கிறான் என்று பெரும் அதிசயம். எனவே மகனுக் குப் புத்தி சொல்லும் தகுதி தனக்கு இருப்பதாக அவள் நினைத்ததில்லை.

அவ்வப்போது மனோரஞ்சிதத்திடம் குணாளன் சுடு முகம் காட்டுவதும், சுள்ளென்று பேசுவதும் கருணாக ரிக்கு வேதனையாகத்தான் இருக்கும். ஆனால், மாமி யார் பேச்சை மறுத்து மகனிடம் அவளால் எப்படிப் பேசமுடியும்? அத்தோடு அவளுடைய கெட்டிக்கார னான மகன் விரைவிலேயே தானாகவே புரிந்து கொள்ள மாட்டானா, என்ன?

வாரத்தில் ஆறு நாட்கள் கடுமையாக உழைத்து விட்டு, ஓய்வாக வீட்டில் இருக்கும் ஒரு நாளில் - அதிலும் பாதிநாள் அடுத்த வாரத்துக்காகத் தொழில் விவகாரங்களைத் திட்டமிடுவதில் கழிந்து விடும். மீதியி ருக்கும் பாதி நாளிலும் வீட்டுத் தொல்லைகளைக் கண வன் காதுக்கு எடுத்துச் செல்லவும் கருணாகரிக்கு மனம் இருப்பதில்லை.

சின்னப் பிள்ளைகள். வளர வளர எல்லாம் சரியாகி விடும் என்ற நம்பிக்கையோடு, தன்னால் இயன்ற மட் டும் மனோரஞ்சிதத்திற்கு வேண்டியதைப் பார்த்துப் பார்த்துச் செய்தாள் அவள்.

இதை விடவும் கணவரைப் பற்றி அவளுக்கு ஒரு கவலை பெருகிக் கொண்டே வந்தது.

சந்தானம் எப்போதுமே சாப்பாட்டுக்காக மட்டும் வாழ்கிறவர் இல்லை. எவ்வளவு சுவையாக இருந்தாலும் ஓர் அளவுக்கு மேல் அவர் உண்பதில்லை. இப்போது அதையும் அவர் குறைத்துக் கொண்டே வருவது போல அவளுக்குத் தோன்றியது.

அதிலும் அவருக்குப் பிடித்தமான உண்டி வகை களை இப்போதெல்லாம் அவர் தொடுவதே இல்லை எனலாம்.

''சரியாக அமையவில்லையா?'' என்று மிகுந்த வருத்தத்துடன், விழிகளில் லேசான நீர்த்திரையுடன் ஒருநாள் கணவரைக் கேட்டபோது, ஒரு பெருமூச்சுடன், ''எனக்காக அங்கே ஒருவன் களி தின்று கொண்டு இருக்கும் போது இதையெல்லாம் நான் எப்படியம்மா சாப்பிடுவது? மனம் இடம் தரவில்லையே!'' என்று அவரும் சேர்ந்து வருத்தப்படவும் கருணாகரிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

இதற்கே இப்படி வருந்துகிறவர், அந்த நண்பரு டைய மகள் இந்த வீட்டில் வேலை செய்துதான் உண்கி றாள் என்பது தெரிந்தால் என்ன ஆகும்? பாதிப் பட்டி னியே கிடக்கத் தொடங்கி விடுவார்!

எல்லாவற்றையும் மனதுள்ளேயே புதைத்து வைத் துக் கொண்டு, அவளும் கணவரைப் போல வாழ்வதற் காக மட்டுமாக உணவு உட்கொள்ளத் தொடங்கினாள்.

கூடவே கணவர் மனம் அறிந்திருந்ததோடு, இயல் பாய் அவளுக்காக பொங்கிய பிரியமும் சேர்ந்து கொள்ள மனோரஞ்சிதத்திடம் மிகுந்த அன்பு காட்டி



னாள். யோசித்து யோசித்து அந்த சிறுமிக்காக ஏதேதோ செய்தாள். நல்ல விலை உயர்ந்த அழகான ஆடை அணிகள் வாங்கிக் கொடுத்தாள். அழகு நிலையத்துக்கு அனுப்பி அழகாகக் கூந்தலை வெட்டி அழகு படுத்தி வரச் செய்தாள்; உட்கார்ந்து படிக்க வசதியாக மேஜை நாற்காலி செய்து கொடுத்தாள்; படுப்பதற்கு நல்ல இல வம் பஞ்சு மெத்தையுடன் கூடிய கட்டில் கொடுத்தாள். அவளுக்குப் பிடித்தது கேட்டு சமைக்கச் செய்தாள்.

கருணாகரியின் தாய் மனம் உணர்ந்து அவ்வளவை யும் ஏற்றுக் கொண்டபோதும் மனோரஞ்சிதம் தான் ஏற்றுச் செய்த வேலைகளை மட்டும் சற்றும் குறைப்பதாக இல்லை.

அந்த ரோஷக்காரப் பெண்ணுக்குத் தான் ஒன்றும் உழைக்காமல் உட்கார்ந்திருந்து தின்னும் ஒட்டுண் ணியோ சாறுண்ணியோ அல்ல என்று ஜாடை மாடை யாக அப்படிப் பேசும் பாட்டிக்கு நிரூபித்து விடவேண் டும் என்கிற வேகம்!

அவ்வப்போது பேரனிடம் அவள் மூட்டிக் கொடுப் பதை இல்லை என்று காட்டி விடும் ஆசை!

தங்கம்மாள் இட்ட வேலைகளோடு இன்னமும் முடிந்தவரை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள்.

சமையல் அறையில் காய் வெட்டிக் கொடுப்பாள். பள்ளி செல்லுமுன், வந்தபின், காபி, பலகாரம் பட்டு வாடா அவரவர் இருக்குமிடம் தேடி நடக்கும். வீட்டில் அங்கே இங்கே என்று வைக்கப்பட்டிருந்த அலங்காரப் பொருட்கள், மாட்டப்பட்டிருந்த படங்களை எல்லாம் துடைத்து வைப்பாள். பூச்சட்டிகளைத் துலக்கி பூப்பறித்து அழகாக அடுக்கி வைத்தாள். எங்கேனும் தூசு, ஒட்டடை கண்டால் வேலையாளை அழையாமல் தானே சுத்தம்

செய்வாள். அவளது அழுக்குத் துணிகள், சாப்பிட்ட கலம் எதையும் அடுத்தவரிடம் கொடாமல் அவளே சுத்தம் செய்வாள்.

இதற்குமேல் தங்கம்மாள் ஏவும் வேலைகள் வேறு.

பதினோரு வயதில் உதவியென்று கொஞ்சம் கொஞ்சமாக அவள் முயன்று செய்யத் தொடங்கிய வேலைகள் அவளது பதினாலாவது வயதில் பருவமெய்தியபோது, அவளது வேலைகளாகவே திறம்பட அவளால் செய்யப்பட்டன.

"இதெல்லாம் நீ செய்யத் தேவையில்லை, ரஞ்சிம்மா. அதற்கெல்லாம்தான் ஆட்கள் இருக்கிறார்களே!" என்று கருணாகரி கூறுவதை அவள் காதிலேயே போட்டுக் கொள்ளமாட்டாள். பிடிவாதமாகச் செய்து கொண்டே இருப்பாள்.

பலமுறை சொல்லிப் பார்த்து விட்டுக் கருணாகரி ஒருவாறு சொல்வதை நிறுத்தி விட்டாள்.

ஆனால், யாருடைய கருத்தில் பதிய வைக்க வேண்டுமென்று மனோரஞ்சிதம் இவ்வளவு வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்தாளோ, அந்தப் பாட்டியம்மாள் அவளைப் பாராட்டி ஒரு வார்த்தைகூடக் கூறியதில்லை. ஏன், அவள் வேலை செய்ததைக் கண்டு கொண்டதாகக் கூட இல்லை. அவளே கண்டு கொள்ள மறுப்பதைப் பேரனிடம் எங்கே சொல்லப் போகிறாள்?

படவேண்டிய கண்களில் படாத மனோரஞ்சிதத்தின் உழைப்பு, படவேண்டாத கண்களில் நன்றாகவே பட்டது.

அப்படிப் பட்டதன் விளைவாக சந்தானம், மனோரஞ்சிதத்தை அழைத்து, "நீ ஏனம்மா இதையெல்லாம் செய்கிறாய்?" என்று கேட்குமாறு நேர்ந்தது.



அன்றையப் பதினாலு வயதுக்கு மனோரஞ்சிதத்திற்கு அனுபவ அறிவு நிறையவே இருந்தது. "விலையில்லாதது என்று ஒன்றுமே கிடையாது. அங்கிள், இல்லாத ஏழை என்று இரக்கப்பட்டு, நீங்களும் ஆன்டியும் செய்வதற்கு விலைபோடவே முடியாது அங்கிள். ஆனால், ஆரோக்கியமான இந்த உடலை வைத்துக் கொண்டு நான் சும்மா இருந்து சாப்பிடலாமா? தின்னுகிற சோற்றுக்கும், அணிகிற ஆடைக்கும் முடிகிற வகையில் நானும் சம்பாதிப்பதுதானே சரி?" என்று அவள் முறுவலிக்கவும் சந்தானத்துக்கு மனம் நொந்து போயிற்று.

"நீ இல்லாத ஏழையும் அல்ல. உணவுக்கும் உடைக்குமாக நீ இந்த வயதில் இப்படியெல்லாம் உழைக்கத் தேவையும் இல்லை. என்னோடு வா" என்று அவளை அவரது அலுவலக அறைக்குள் அழைத்துச் சென்றார்.

ஒரு 'பாங்க்' பாஸ் புத்தகத்தை எடுத்துப் பிரித்துக் காட்டினார். "பார்த்தாயம்மா, உன் கணக்கில் எவ்வளவு பணம் இருக்கிறது, மாதா மாதம் எவ்வளவு சேர்ந்து கொண்டிருக்கிறது, பார்!"

வியப்பும், மகிழ்ச்சியுமாகப் புத்தகத்தில் பார்வையை ஓட்டியவளின் முகத்தில் சிந்தனை படர்ந்தது. "இந்தப் பணம் யார் அங்கிள் கட்டுவது?" என்று விசாரித்தாள்.

தனக்குச் சொந்தமாகப் பணம் இருப்பது தெரிந்தாலே திருப்தியடைந்து விடுவாள் என்று எண்ணிப் பாஸ் புக்கைக் காட்டிய சந்தானத்துக்கு லேசாகத் தூக்கி வாரிப் போட்டது. சமாளித்துக் கொண்டு, "அ...அது உன் அப்பா மொத்தமாய் முதலீடு செய்து வைத்திருக்கும் பணத்திலிருந்து வரும் வட்டி மனோ! உன்னை என்னோடு அனுப்பும் போது எல்லாம் விவரமாகச் சொல்லி

என்னிடம் கூறினான். நீ இன்னும் கொஞ்சம் பெரிய பெண்ணான பிறகு இதையெல்லாம் சொல்லலாம் என்று நினைத்தேன். நீயானால் ஏதேதோ நினைத்து என்னென்னவோ செய்கிறாயே! என்றார் குறைப்படும் குரலில்.

''இது பெரியம்மாவுக்குத் தெரியுமா?''

இந்தக் குழந்தை மனதை நோகடித்த தாயை உள்ளூர நொந்தபடி, ''ம்...'' என்றார் சந்தானம் அரைகுறையாக.

தெரிந்தும் பாட்டியம்மா இப்படிப் பேசுவது என்றால் வேறு ஏதோ விஷயம் இருக்கிறது என்று மனோரஞ்சிதத்துக்குத் தோன்றியது. ஒவ்வோர் மாதமும் குறிப்பிட்ட தொகையே கட்டப்பட்டு வருகிறது. இதில் அவளுக்கு ஆகிற செலவுக்கு என்று பணம் எடுத்திருந்தால் ஒரு சில மாதங்களில் ''டெர்ம்'' தொடங்கும் போது, உடம்பு சரியில்லை என்று டாக்டரிடம் போனபோது, தங்க ஜரி போட்ட சுரிதார் செட் வாங்கியபோது எல்லாம் கட்டப்பட்ட தொகை குறைந்திருக்க வேண்டுமே. ஆனால், முழுத் தொகையாக கொஞ்சமும் குறையாமல் அதே அளவுப் பணம்தானே கட்டப்பட்டு வருகிறது. இதன் பொருள்? மனோரஞ்சிதத்திற்காக அவளது செலவுக்காக என்று அவளுடைய தந்தை ஏற்பாடு செய்து விட்டிருக்கும் வருமானத்திலிருந்து இவர்கள் ஒரு காசு எடுப்பதில்லை. அவளுக்கான செலவை 'அங்கிள்' தன் கையிலிருந்தே கொடுக்கிறார். அதனால்தான் பாட்டியம்மாவுக்கு அவ்வளவு ஆத்திரம் வருகிறது!

அது நியாயமில்லை என்றும் சொல்ல முடியாது!

எப்படியோ, இந்த விவகாரம் தெரிய வந்ததில் ஒரு பெரிய நிம்மதி. அவளுடைய தந்தை மகளை எக்கேடும் கெடட்டும் என்று இவர்கள் கழுத்தில் கட்டி விட்டு சும்மா



போய்விடவில்லை. அவளது செலவுக்கு வேண்டியது பார்த்துச் செய்திருக்கிறார்! இனி....

சந்தானத்தைப் பார்த்துப் புன்னகை செய்து, ''இந்த விவரம் சொன்னதற்கு ரொம்ப நன்றி அங்கிள். உங்களிடம் இன்னமும் ஒன்றே ஒன்று கேட்கலாமா? என்... என் அப்பா அங்கே இருக்கிறார் அங்கிள்? மூன்று ஆண்டுகளாக அவர் ஏன் எங்கே வரவே இல்லை? டெலிபோனில் கூட பேசவே இல்லையே, ஏன்?'' என்று தந்தையைப் பற்றி விசாரிக்கவும் சந்தானம் திணறிப் போனார்.

மாட்டிக் கொண்டு விட்ட உணர்வு அவருக்கு. இப்போது இவளிடம் என்ன சொல்வது? உண்மையை எந்த வகையில் சொன்னாலும் ஏற்பது இவளுக்குக் கஷ்டம்தான்.

அவர் தயங்கவும், ''வேறு ஒன்றும் இல்லை, அங்கிள். ஒரு சிறு தொடர்பு கூட இல்லாமல், நான் இருக்கிறேனா இல்லையா என்பது கூட இல்லாமல் இருக்கிறாரே, என் மேல் ஏதேனும் கோபமோ, நான் ஏதாவது தப்பு செய்தேனோ என்று அடிக்கடி மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது...'' என்று அவள் கலங்கினாள்.

ஒரு முடிவுக்கு வந்தவராய், ''மனோ, நீ உன் அம்மாவின் ஜாடை என்பது படத்தில் பார்த்திருக்கிறாய் அல்லவா? உன் அப்பாவுக்கு உன் அம்மாவிடம் அளவு கடந்த அன்பு. அம்மா இறந்த பிறகு, உன்னைப் பார்க்கும் போதெல்லாம் அம்மா நினைவில் மிகவும் வேதனையாக இருக்கிறது என்றுதான் அவன் விலகி இருப்பது... ஆனால் உன்மேல் அன்பில்லையென்று நினையாதே. ஒரு பத்துப் பன்னிரண்டு ஆண்டு காலம் வேலை செய்து, மொத்தமாய் நிறையப் பணம் சேர்த்துக் கொண்டு உன்னைப் பணக்கார இடத்தில் கல்யாணம் செய்து கொ...

கப் போவதாகச் சொல்லியிருக்கிறான். சாதாரணமான இடத்தில் திருமணமாகி உன் அம்மா பட்ட சிரமம் நீ படக்கூடாதாம். அவனுக்கும் மேலாக உன்னை நாங்கள் பார்த்துக் கொள்வோம் என்ற நம்பிக்கை அவனுக்கு. ஆனால் உன் அப்பாவுக்கு இருந்த நம்பிக்கை உனக்கு இல்லை போலத் தெரிகிறதே! இல்லையானால் 'அப்பா' வைத் தேடுவாயா?'' என்று மீண்டும் குறையோடு பேசினார் சந்தானம்.

அதற்கு மேல் கேட்க மனமற்று மனோரஞ்சிதம் வாயை மூடிக் கொண்டாள்.

ஆனால், அவளது செலவுக்காக அவளுடைய தந்தை அனுப்புகிற பணத்தைச் சந்தானம் தம்பதிகள் தொடுவதில்லை என்று உள்ளூர நிச்சயமாக உணர்ந்த தால் தன் வேலைகள் எதையும் விட்டு விடாமல் தொடர்ந்து செய்தாள்.

மறுநாள், 'சேல்ஸ் டாக்ஸ்' ஆபீசில் வேலையை முடித்துக் கொண்டு ஸ்டோருக்குச் செல்லும் வழியில் வீட்டில் காபிக்காக வந்தவர், மேஜையை இழுத்துப் போட்டு அதில் ஏறி நின்று மின் விசிறியை மனோரஞ்சி தம் துடைத்துக் கொண்டிருந்ததைக் கண்டு மிகவும் வருத்தமுற்றார்.

''இப்போதும் என்னம்மா? என் மகள் உன் வீட்டில் இந்த வேலையெல்லாம் செய்வதற்குத்தானா நான் பணம் அனுப்புகிறேன் என்று உன் அப்பா கேட்கமாட்டானா?'' என்று கேட்டார்.

'வந்து பார்த்தால்தானே' என்று உள்ளூரத் தோன் றிய தவிப்பை அடக்கிக் கொண்டு, ''வீட்டில் ஆன்ட்டி



எவ்வளவு வேலை செய்கிறார்கள்? நீங்கள் பணம் சம்பாதித்துக் கொண்டு வரவில்லை என்றா, அங்கிள்? ம்?'' என்றாள் அவள்.

''அவள் குடும்பத் தலைவி. இந்தக் குடும்பத்தை நல்லபடியாக நடத்துவதற்காக அவள் அதையெல்லாம் செய்துதானே ஆகவேண்டும்?''

தலையை லேசாகச் சரித்து நோக்கி, ''நான் இந்தக் குடும்பத்தின் ஓர் அங்கம் அல்லவா அங்கிள்?'' என்று கண்ணில் குறும்புடன் வினவினாள் மனோரஞ்சிதம்.

சற்றுத் திகைத்து விட்டு, ''எப்போதும் நீ இந்த வீட்டில் ஒரு முக்கியமான அங்கமேதான், மனோ ரஞ்சிதம்'' என்றார் பெரியவர் உறுதியான குரலில் ''ஆனால்...''

அவரது சிறு தயக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ''நீங்கள் நிறையத்தான் சம்பாதிக்கிறீர்கள் அங்கிள். ஆனால்,. குணா சார் சும்மா இருந்து சாப்பிடுவது என்றால் நீங்கள் விடுவீர்களா?'' என்று வாதாடினாள்.

''அது வேறு, அம்மா. அவரவர் செய்கிற வேலை என்று இல்லையா?'' என்றார் அவர் விடாமல்.

''பிச்சை எடுக்கக் கூடாது. பொய், திருட்டு வேலை கூடாது. மற்றபடி எந்த வேலையும் இழிவானதல்ல என்று பள்ளியில் சொல்லித் தந்திருக்கிறார்கள் அங்கிள்'' என் றாள் அவளும் விடாமல்.

வியப்புடன் நோக்கியவரிடம், ''ஆமாம் அங்கிள். அன்றைக்குப் பாருங்கள், குணா சாரின் 'பைக்' 'ஸ்டார்ட் டேட்' ஆகவில்லை. மெக்கானிக்தான் வந்து சரி பண்ண வேண்டும் என்று குணா சார் சும்மாவா இருந்தார்? அவரே பிரித்துப் போட்டு ரிப்பேர் செய்து வண்டியை

ஓட்டவில்லையா? அதுமாதிரிதான் இதுவும்'' என்று முடித்தாள் மனோரஞ்சிதம்.

தலையை லேசாக அசைத்து, ''உன் அத்... ஆன்ட்டி சொல்வது போல நீ மிக அழகாகத்தான் பேசுகிறாய்! பேச்சில் உன்னை வெல்லவே முடியாது போலத்தான் தெரிகிறது'' என்று சந்தானம் வியந்து கூறவும் மனோரஞ் சிதத்துக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

''நான் அதிகப்படியாகப் பேசியிருந்தால் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள், அங்கிள்'' என் றாள் பணிவுடன்.

கைநீட்டி, அவள் தலையை வருடி, ''சேச்சே... என்னம்மா நீ! உன்னை மெச்சிப் பேசினால் புரிந்து கொள்ளமாட்டேன் என்கிறாயே! ஆனால்... அதென் னம்மா குணா சார்... குணா மோர் எல்லாம்?'' என்று விசாரித்தார் சந்தானம்.

மனோரஞ்சிதத்தின் முகத்தில் ஒரு திரை விழுந்தது. ''குணா அய்யா என்று கூப்பிட வேண்டும் என்று பெரியம்மா சொன்னார்கள். ஆனால், அப்படிக் கூப்பிட் டால் பட்டிக்காடு மாதிரி இருக்கிறதாம். பாடம் சொல்லிக் கொடுப்பதால், ஆசிரியரை அழைப்பது போலக் குணா சார் தான் இப்படிக் கூப்பிடச் சொல்லியிருக்கிறார்'' என்று விளக்கம் கொடுத்தாள் மனோ!

இப்போது திரை விழுந்தது சந்தானத்தின் முகத்தில். அவர்கள் இருவரையும் பெரிய அய்யா, பெரியம்மா என்று அழைக்கச் செய்தாகி விட்டது. இப்போது 'குணா அய்யா'வாமா? இதெல்லாம் ஊரில் பண்ணையாட்கள் பண்ணையாரை அழைக்கிற விதம். அந்தப் பரம்பரை



நீ என்று சொல்லாமல் சொல்லி உருவேற்றியாகிறதாக் கும்? அதுவும் இந்தக் காலத்தில்? இவர்களுக்கு என்றே னும் புத்தி வருமா?

பெற்றவளைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்த சந்தானம், அந்தப் பெற்றவளின் குரலே ஒலிக்கவும் சற்றே திடுக்கிட்டார். ''யார்? சதாவா? எப்போது வந் தாய்? ஏதாவது சாப்பிட்டாயா? இல்லையா? வந்த புருஷனுக்குத் தொண்டையை நனைக்கக் கொஞ்சம் காபி கூடக் கொடுக்காமல் உன் பொண்டாட்டி அங்கே என்ன தான் வெட்டி முறிக்கிறாளோ? இந்தாடி குட்டி, சமையல றைக்குப் போய் ஒரு கப் காபி வாங்கிக் கொண்டு ஓடிவா, ஜல்தி'' என்று மனோரஞ்சிதத்தை விரட்டினாள்.

ஒரு காஃபி அருந்தலாம் என்று வந்தவர்தான் சந்தானம். ஆனால், இப்போது அந்த எண்ணமே கசந்து விட மனோரஞ்சிதத்தை நிறுத்தி, காபியை மறுத்து விட்டு, ''ஒரு ஃபைல் எடுக்க வந்தேன். அவ்வளவுதான். கிளம்புகிறேன்'' என்று வெறும் வயிற்றோடேயே கிளம் பிச் சென்றார்.

## 6

தாயார் திருந்தக் கூடுமா என்று சந்தானம் நினைத்த தற்கு நேர்மாறாகத் தங்கம்மாளின் போக்கு முற்றிலும் மோசமாகத்தான் ஆயிற்று.

அதற்குச் சரியாக, மனோரஞ்சிதமும் பருவமெய்தி விடவே, அந்த வேலைககாரப் பெண், தன் பேரனை மயக்கி, மணந்து கொள்ளத்தான் இங்கே வந்து உட் கார்ந்து கொண்டு இருக்கிறாள். அதுவேதான் அவளது

பிறவி லட்சியம் என்று உறுதியாக எண்ணினாள். அதைத் தடுப்பதையே தன் பிறவி லட்சியமாகக் கருதிச் செயல் பட்டாள்.

மனோரஞ்சிதத்தின் குறிக்கோள் என்று தான் கருதி யதைப் பற்றி மகனிடமோ மருமகளிடமோ தங்கம்மாள் மூச்சுக்கூட விடவில்லை. இந்த அறிவுகெட்ட பிறவிகள் இரண்டும் நன்றிக் கடன் தீர்க்க நல்ல வாய்ப்புக் கிடைத் தது என்று, உடனே மகனுக்கும் அந்த வேலைக்கார நாய்க்கும் முடிச்சுப் போட்டு வைத்தாலும் வைக்கக் கூடும்... கூடும் என்று என்ன சந்தேகமாய்ச் சொல்வது? அதைத்தான் இருவரும் முனைந்து நின்று செய்து வைப் பார்கள்.

பெரிய நன்றிக் கடன்!

அந்த வார்த்தையைக் கேட்டாலே தங்கம்மாளுக்கு இப்போதெல்லாம் பற்றிக் கொண்டு வந்தது. யார் யாரி டம் நன்றிக் கடன் படுவது? தன் முதலாளிக்காக உயி ரைக் கொடுப்பது கூட அன்பரசின் கடமை. கடமையை ஓரளவு செய்தான் என்பதற்காக என்ன ஆட்டம் ஆடுகி றார்கள்.

அடங்கி ஒடுங்கி சொன்ன பேச்சு கேட்டுக் காலடி யில் கிடப்பாள் என்றுதான் கருணாகரியைத் தேடிப் பிடித்து மகனுக்குத் தங்கம்மாள் திருமணம் செய்து வைத்ததே. அவளும் இப்போது புருஷன் கூடச் சேர்ந்து கொண்டு இந்த ஆட்டம் ஆடுகிறாளே! ஏதாவது சொன் னால், 'உங்கள் மகன் சொல்லியிருக்கிறார்!' என்பவள் அதற்குமேல் நில்லாமல் நழுவி விடுகிறாள். நிற்க வைத்து நாலு வார்த்தை பேசலாம் என்றால் மகனிடம் போய் ஏதாவது ஏடாகூடமாய்ச் சொல்லி விட்டால் அது பெரிய ஆபத்து. பிள்ளையே ஆனாலும் வீட்டுக்குச்



சம்பாதிக்கிறவன் சந்தானம்தான். அவன் வெளிப்படை யாக ஒன்று சொல்லி விட்டால் எதிரிட முடியாது!

எனவே தங்கம்மாள் வேறு மாதிரித் திட்டம் போட் டாள்.

விடலைப் பருவத்தில் ஓர் ஆணையும், ஒரு பெண் ணையும் அருகருகே இருக்கச் செய்தால் அந்தப் பெண் குரூபியாக இருந்தால் கூட அவனுக்கு உலக அழகியா கவே தோன்றுவாளாம்!

தன் பேரனைப் போல ஆணழகன் உலகத்திலேயே கிடையாது என்பது தங்கம்மாளின் கருத்து. தொழில் இருக்கிறது. வீடு, வாசல், கார்... அவனைக் கொத்திக் கொண்டு போய்விட உலகத்து மகாராஜாக்கள் எல்லா ருமே ஓடிவருவார்கள்.

அப்படியிருக்க இந்த வேலைக்காரச் சிறுக்கிக்கு அந்த எண்ணம் இல்லாமல் இருக்குமா என்ன?

இவளைப் பார்க்கப் பார்க்க உலக நியதிப்படி குணாளனுக்கும் இந்த மனோரஞ்சிதமே உலகப் பேரழகி யாகத் தோன்றிவிட்டால்? நினைக்கவே அருவருப்பாக இருந்தது அவளுக்கு.

எந்தத் தலைமுறையிலோ பால் மாறி வந்திருக்க வேண்டும். கழுதைக்குத் தோல் வேறு நல்ல தங்க நிறம். மூக்கு முழி வேறு பளிச்சென்று இருக்கிறது. ச்சு... பன்றியின் குட்டியும் பருவத்துக்கு அழகுதானே? இந்த வயது தாண்டினால் பார்க்கச் சகிக்கமாட்டாள்!

ஆனால் அது பையனுக்குப் புரியுமா? அவளையே பார்த்துக் கொண்டிருப்பதால் காதல் கீதல் என்று கிளம்பி விடக்கூடாதே!

எனவே மனோரஞ்சிதத்தை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலைமையை மாற்றிவிடத் தங்கம்மாள் முடிவு செய்தாள்.

தங்கம்மாளுடைய அண்ணனுக்கு மகன் வயிற்றுப் பேத்தி ஒரு பெண் இருந்தாள். பிரமாத அழகி என்று சொல்ல முடியாது. ஆனால் அந்தப் பதினாறு வயதில் நாளில் பாதி நேரம் கண்ணாடி முன்தான் நிற்பாள். பார்த்துப் பார்த்து அழகுபடுத்திக் கொள்வாள். பார்ப்ப தற்கு கொஞ்சம் தன் ஜாடையாகத் தெரிகிறாள் என்று தங்கம்மாளுக்கு அந்தப் பெண்ணிடம் சற்றுப் பிரியம் உண்டு.

குணாளனுடைய கவனத்தை மனோரஞ்சிதத்திடமி ருந்து திருப்புவதற்காக அந்தப் பெண்ணை வீட்டுக்கு அடிக்கடி வரவழைக்க முடிவு செய்தாள்.

அந்தப் பெண் ப்ரீதாவின் வீடு ஒரு பெருங்காய டப்பா. அங்கே சென்று தங்கம்மாள் தன் எண்ணத்தை லேசாகக் கோடி காட்டவும் அவர்கள் அதை அப்படியே கப்பென்று பிடித்துக் கொண்டனர்.

சொந்த வீடுதான். அவ்வப்போது வந்து தங்கிப் போகும் இடம்போல, பெரும்பாலும் தங்கம்மாளின் வீட்டிலேயே ப்ரீதா டேரா போடலானாள்.

அப்படி வந்திருக்கும் நேரங்களில் தங்கம்மாளைப் பின்பற்றி, மனோரஞ்சிதத்தைப் ப்ரீதா சற்று உதாசீனமா கவே நடத்துவாள்.

இரண்டு வயது சின்னவளான மனோரஞ்சிதத்தின் இயற்கை எழிலில் பொறாமையும் சேர்ந்து கொள்ள, ஏதாவது நோகப் பேசுவாள்.



"அதென்ன மனோரஞ்சிதம் என்று பெயர்? சரி யான பட்டிக்காடு போல இருக்கிறது. ஆனால் உங்கள் வேலைக்காரக் குடும்பங்களில் இப்படித்தானே ரஞ்சிதம், சண்பகம் என்று முழநீளம் பெயர் வைப்பார்களாம்? பாட்டி சொன்னார்களே!" என்பாள்.

சும்மாவேனும் அவளை ஏவி, ஒரு தம்ளர் தண்ணீ ராவது கொண்டுவரச் சொல்லிக் குடிப்பாள்.

மனோரஞ்சிதம் வேலைக்காரப் பரம்பரை என்று நிரூபிக்கிறாளாம்!

இரண்டு மூன்று தரம் பார்த்து விட்டு அவள் வந்தாலே மனோரஞ்சிதத்தைத் தன் அறையிலேயே பிடித்து வைத்துக் கொள்வாள் கருணாகரி.

முன்புறம் மிகவும் கழுத்து இறங்கிய அல்லது தொப்புள் தொடை காட்டுகிற மாதிரியும் உள்ளாடை தெரிகிற மாதிரி மெல்லியதாகவும், நவநாகரீகம் என்ற பெயரில் ப்ரீதா உடையணிந்து வரும்போது தங்கம்மா ளுக்குக் கண்கூசும்.

ஆனால் இப்போது இதுவும்தானே தேவைப்படுகி றது? எப்படியோ எல்லாம் நல்லபடியாக நடந்து இவர் கள் இருவருக்கும் திருமணம் முடிந்து விட்டால், பிறகு ப்ரீதா அவனது கைப்பொருள். இதுமாதிரி ஆடைகள் வேண்டாம்; நல்லபடியாக சேலை கட்டு என்றால் கட்டி விட்டுப் போகிறாள் என்று ப்ரீதாவின் அதிநாகரீக அலங் காரங்களைத் தங்கம்மாள் ஒரு வார்த்தை பேசாமல் பொறுத்துக் கொண்டாள்.

ஆனால், திருமணம் நடக்கட்டும் அப்புறம் இந்தக் கட்டுப்பெட்டி கிழங்களை எல்லாம் மூட்டை கட்டி கிராமத்துப் பக்கம் எங்காவது அனுப்பி விட்டு ஜாலியா

கக் குதியாட்டம் போடவேண்டும் என்று ப்ரீதா திட்ட மிட்டு வைத்திருப்பது பாவம், அவளுக்குத் தெரியாது!

''படுகவர்ச்சியான உடையும், நடையுமாகப் ப்ரீதா கண்முன்னே திரியும் போது, பேரனின் பார்வை மனோ ரஞ்சிதத்திடம் போகாது என்ற திட்டத்துடன் மனோரஞ்சி தத்தின் விருப்பம் பற்றி - அவளது விருப்பம் என்று தான் நினைத்தது பற்றி தங்கம்மாள் மெல்லப் பேரனிடம் மூட்டத் தொடங்கினாள்.

''அடப் போங்கள் பாட்டி. எனக்கு என்ன வயது? பத்தொன்பது முடியவில்லை. இருபத்தைந்து வயது வரை என் திருமணப் பேச்சையே யாரும் எடுக்கக் கூடாது, தெரியுமா?'' என்று தன் நினைப்பைச் சொன் னான் குணாளன்.

''அதற்கில்லை கண்ணா, அந்தப் பெண் மனோரஞ் சிதத்துக்கு உன்னைக் கட்டிக் கொண்டால் இலகுவாகப் பணக்காரியாகிவிடலாம் என்கிற பேராசை. அதற்காகத் தான் ஓடி ஓடி உன் முன்னால் வந்து நிற்கிறாள். காபி கொண்டு வருகிறாள். பலகாரம் கொண்டு வருகிறாள். இதையெல்லாம் நீ சாப்பாட்டு அறைக்கு வந்து எடுத்துக் கொள்ள மாட்டாயா? இவள் எதற்கு முந்திக் கொண்டு வந்து தருகிறாள்? ம்....?''

அவள் ஒரு வேலைக்காரி என்று உறுதிப்படுத்துவ தற்காகவே, இந்தக் காபி, பலகாரத்தை அவரவர் அறைக ளுக்குக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும் என்ற வழக்கத்தைக் கொண்டு வந்ததே தான்தான் என்கிற உண்மையை வசதியாக ஒதுக்கி விட்டு தங்கம்மாள் அதையே ஒரு குற்றமாகச் சித்தரித்தாள்.

''அதற்காக? இந்த அம்மாள் ஓடி ஓடி வந்தால் அதற்காக நான் மயங்கி விடுவேனாக்கும்?! அடப்



போங்கள் பாட்டி, இந்த ஒட்டகச் சிவிங்கிக்காகத்தான் நான் காத்துக் கிடக்கிறேனாக்கும்? பாருங்களேன், நெடு நெடு என்று ஒல்லியாய்... விட்டால் எனக்கு மேல் வளர்ந்து விடுவாளோ என்று எனக்கு ஒரே கவலையாக இருக்கிறது, பாட்டி!'' என்றான் குணாளன் அருவை யுடன்.

பெண்கள் வெகு வேகமாக வளருகிற பருவம் அது. குணாளனும் நல்ல உயரம்தான். என்றாலும், 'இத்தனூண் டு' கிடந்த மனோரஞ்சிதம் அப்போது வளர்ந்த வேகம் அவனுள் பிரமிப்பையும், கூடவே சஞ்சலத்தையும் உண்டு பண்ணியிருந்தது.

அப்போதைக்குப் பேரன் மனதில் வேறு விதமான எண்ணங்கள் ஏதும் இல்லை என்பதில் திருப்தியடைந்த போதும், தங்கம்மாள் அவ்வப்போது மனோரஞ்சிதத்தின் பேராசைத் திட்டம் பற்றிக் குணாளனிடம் எச்சரிக்கை விடுத்தபடியேதான் இருந்தாள்.

உட்கார்ந்திருந்தால் திமிர் என்றும், எழுந்து நின் றால் நடிப்பு என்றும் கூறுவது போல, ஒன்றை இப்படித் தான் என்று எண்ணத் தொடங்கி விட்டால் எல்லாமே அதற்குச் சாதகமாகவே கண்ணில் படுவது இயல்பு.

எனவே, நாளாக ஆக மனோரஞ்சிதம் உழைத்துத் தான் உண்ண வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு, பிடிவாதமாகச் செய்து வந்த வேலைகளை எல்லாம் வீட்டில் இளவரசனான தன்னைக் கவர்வதற்காகவே அவள் செய்து வருவதாக குணாளன் நினைக்கத் தொடங்கி விட்டான்.

தனக்காக ஒருத்தி, இப்படியெல்லாம் தவமியற்றுகி றாள் என்பதில் அவனுக்கு ஒருவிதக் கர்வமும், கூடவே இதனாலெல்லாம் அய்யாவை - தன்னைப் பிடித்து விட

முடியுமா என்று ஓர் இளக்காரமும் சேர்ந்து அவனுக்கு உண்டாகியிருந்தன.

ப்ரீதாவின் அலுக்கல் குலுக்கல்களும் இதற்கு உர மூட்டி வளர்த்து வந்தன.

இந்த நிலையில் மனோரஞ்சிதத்தின் பதினேழாவது பிறந்த நாள் வந்தது.

அன்றே அவளது 'ப்ளஸ்டூ' மதிப்பெண்களும் வந் தன.

அந்த நாள் அவளது வாழ்வையே திசை திருப்பும் நாளாக அமைந்தது.

சந்தானத்துடன் சென்னை வரும் வரை மனோரஞ்சி தத்தின் பிறந்த நாட்கள் ஒன்று ஓகோ என்று கொண்டா டப்படும். அதாவது புவனியின் உடல்நிலை ஆரோக்கிய மாக இருந்தால் காலையில் கோயில், பலகாரங்கள், மாலையில் சினிமா என்று அமர்க்களப்படும். புவனி நன்றாக இல்லை என்றால் எல்லாமே அழுது வடியும். பெற்றோருடன் அவள் இருந்த கடைசி நான்கு ஆண்டு கள் அப்படி அழுது வடிந்தவைதான்.

இங்கே வந்த பின்னும் முதல் பிறந்த நாள் அப்படித் தான் கழிந்தது. அதன்பிறகு வந்தவை வேறு விதம்.

வெளிப்படையாக எதையும் செய்து மாமியாரின் கோபத்தை வாங்கிக் கட்டிக் கொள்ளவோ, அவரது ஆத்திரத்துக்கு மனோரஞ்சிதத்தை ஆளாக்கவோ மன மின்றி, மனோரஞ்சிதத்தின் பிறந்த நாட்களை அவர்கள் இருவருக்குள்ளாகவே கருணாகரி கொண்டாடுவாள்.

மனோரஞ்சிதம் புத்தாடை உடுத்துவாள். சர்க்கரைப் பொங்கல் சாப்பிடுவாள். ஆனால் அது அவளது பிறந்த நாளைக்காக என்பது பெண்கள் இருவருக்கும் மட்டு



மான ரகசியமாக இருக்கும். அடுத்து அதை அறிந்தவர் சந்தானம்தான்.

தொழில் காரணமாகப் பகலில் சந்தானம் வீடு வருவதில்லை. எனவே ஏதாவது அலங்காரப் பொருட் களோ நாகரீகமான 'காஸ்மடிக்' நகைகளோ கடையிலி ருந்து கொண்டு வந்து ஓசையின்றிக் கொடுப்பார்.

விசித்திரமாய்க் கடைசி சில ஆண்டுகளாக புத்தா டையும், சர்க்கரைப் பொங்கலும் இணைந்து காணப்படும் நாட்களில், மற்றவர் அறியாமல் சிதம்பரம் ஒரு ஃபைவ் ஸ்டார் வாங்கி வந்து மனோரஞ்சிதத்தின் கைகளில் வைத்து விட்டுப் போனார்.

சந்தானத்துடைய குடும்பத்தோடு மனோரஞ்சிதம் வசிக்கத் தொடங்கியதிலிருந்து இந்த ஆறு ஆண்டுகளில், கருணாகரிக்கும் மனோரஞ்சிதத்துக்கும் இடையே தாய் - மகள் போல ஒரு நெருங்கிய பாசப் பிணைப்பு வளர்ந்திருந்தது.

அதுவரையில் அந்த வீட்டில் இருந்த எத்தனையோ இயந்திரங்களைப் போலத்தான் கருணாகரியும் இருந்து வந்தாள். ஸ்விட்ச் போட்டால் ஓடி, வேலை முடிந்ததும் நிறுத்தப்பட்டு... அதுபோல அவளுக்கு உரிய வேலை செய்து வளைய வருவாளே தவிர, அந்தரங்கங் களையோ, எதிர்காலத் திட்டமிடல்களையோ அவ ளோடு அங்கே யாரும் பகிர்ந்து கொண்டதில்லை, சந்தானம் உட்பட.

நிறைய விஷயங்கள் மனைவிக்குப் புரியாது என் பது அவரது கருத்து. அன்பரசு பற்றியே மிகவும் யோசித்து, தயங்கியவர், கடைசியாக வேறு வழியில்லா மல்தான் சொன்னார். தொழில் விவகாரம் மெய்யாகவே அவளுக்குப் புரியாதவைதான்.

குணாளனுக்குப் படிக்காத தாயை விட, அந்தக் காலத்து எட்டாங்கிளாஸ் படித்த பாட்டியிடம் பள்ளி விஷயங்கள் சொல்வது எளிதாயிருந்தது. மேலும், மரும கள் வீட்டு வேலையில் ஆழ்ந்திருக்க, பேரனின் பொறுப்பை அவனது சிறு வயதிலிருந்தே தங்கம்மாள் தனதாக்கிக் கொண்டிருந்ததால் வந்த நெருக்கமும் இருந் தது.

வந்த புதிதில் தொட்டாற்சுருங்கியாக, ஒரு நத்தை போலத் தனக்குள்ளேயே சுருட்டிக் கொண்டிருந்தவள் தான் மனோரஞ்சிதம்.

ஆனால் கருணாகரியின் உண்மையான அன்பு புரியப் புரிய, மனோரஞ்சித மலர்போல அவளும் அன்பு மணம் பரப்பி, கருணாகரியை மகிழ வைத்தாள்.

பள்ளியில் நடந்தவை பற்றிச் சுவைபடச் சொல்லிச் சிரிக்க வைப்பாள். சந்தானத்தோடு சேர்த்துப் பேசி ஜோக்கடிப்பாள். ''நிஜம்ம்...மாய்ச் சொல்லுங்கள் ஆன்ட்டி. 'ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் நம் வீட்டுக்கு வந்து போகும் இந்த மாமா யாரும்மா?' என்று குணாசார் உங்களிடம் கேட்டதே இல்லையா?' என்று கேட்பதுதான் அவளது பெரிய ஜோக். இதைப் படிப்பேன்; இந்த வேலை பார்ப்பேன். முதல் சம்பளத்தில் ஆன்ட்டிக்கு என்னென்ன வாங்கித் தருவேன் என்று தன் எதிர்கால திட்டங்களையும் அவளோடு பகிர்ந்து கொள்வாள்.

தன்னை ஒரு மனுஷியாக - அதிலும் புத்தியுள்ள மனுஷியாக மதித்து மனோரஞ்சிதம் நடத்துவதே கருணா கரிக்கு மகிழ்ச்சி அளிக்க, இருவருமே ஒருவரோடொரு வர் ஒட்டிக் கொண்டனர்.

வழக்கத்தை விட அதிக ஆனந்தமாய், அன்று மனோரஞ்சிதத்தின் மார்க்குகள் வந்துவிட, அதிலும்



அவள் நல்ல - மிக அதிகமாக மதிப்பெண்கள் பெற்றிருக் கவே, ஈன்ற போதினும் பெரிதுவக்கும் தாய் போலக் கருணாகரி மிகவும் பூரித்துப் போனாள்.

அந்தப் பூரிப்பில், அன்று வரை செய்தறியாத விதமாக, அங்கு வந்த மகனிடம் மனோரஞ்சிதத்தின் மதிப்பெண்களைக் காட்டி, ''பார் குணா, படித்தால் இந்த மாதிரி மதிப்பெண் பெறவேண்டும். நீயும் இப்படிப் படித்திருக்கலாமில்லையா?'' என்று ஒப்பு நோக்கிப் பேசிவிட்டாள்.

மகனை மட்டம் தட்டவென்று நினைத்து அவள் சொல்லவில்லைதான்.

ஆனால், ஒன்றும் தெரியாத அம்மாவை இவள் உசுப்பி விட்டிருக்கிறாள் என்று எண்ணிக் குணாளனுக்கு மனோரஞ்சிதத்தின் மேல் மிகவும் ஆத்திரம் வந்து விட்டது.

அந்த நேரம் அதைக் காட்டாமல் மறைத்தான். ''மார்க் குறைந்து போனால் மாணவிகள் விடுகிற கண்ணீ ரில் ஊரே முழுகி விடும் என்று அவர்களுக்கு மட்டும் நிறைய மதிப்பெண் போட்டு விடுவார்களாம். என் சினேகிதனுடைய அப்பா சொன்னார்'' என்று வேடிக்கை போலக் கூறிவிட்டுப் போய் விட்டான்.

அன்று கருணாகரியும் மனோரஞ்சிதமும் கோவி லுக்குக் கிளம்பிய போது, கூடவே வந்து பிறந்தநாள் பெண்ணின் கையில் சாக்லட்டை வைத்து விட்டு, ஏதோ வேறு வேலையிருப்பதாகக் கிளம்பிச் சென்றார் சிதம்ப ரம்.

அவர் கண்ணுக்கு மறையும் மட்டும் குறுகுறுப்புடன் பார்த்திருந்து விட்டு, ''இவருக்கு இன்று என் பிறந்த

நாள் என்பது தெரியும் என்று தோன்றுகிறது, ஆன்ட்டி'' என்றாள் மனோரஞ்சிதம். ''ஆனால், வீட்டில் என்னைப் பார்ப்பதே பாவம் என்பது போல விலகி ஓடுகிறவர், இப்படிச் சாக்லேட் தருவதுதான் விசித்திரமாக இருக்கி றது!'' என்றாள் தொடர்ந்து.

''இயல்பில் மாமா எவ்வளவோ நல்லவர்தான், மனும்மா. ஆனால் அத்தையிடம் பயம் உண்டு. அவர்க ளிடம் மாட்டிக் கொள்ளாதபடி நடந்து கொள்வார்... நாமும் அப்படித்தானே?'' என்று முறுவலித்தாள் கருணா - கரி.

நல்ல மார்க் வாங்கியிருக்கிறாள். இனி கல்லூரிக்குப் போகவேண்டிய பெரிய பெண் என்று, சந்தானம் அனும தியும் பணமும் கொடுத்ததால், சரங்கள் தொங்குவது போல 'பென்டன்ட்'டுடன் கூடிய தங்கச் சங்கிலியும், பென்டன்ட் போலவே காதணிகளும் கூடிய 'செட்' ஒன்று வாங்கி கருணாகரி மனோரஞ்சிதத்திற்குப் பரிச ளித்தாள்.

சிறு நகைதான். அதுவே பெருமதிப்பு என்பதற்கு அது வைரமும் அல்ல. நவமணிகளில் வேறு எந்த வகை ரத்தினமும் கூட இல்லை. வெறும் தங்க நகைதான். மொத்தம் ஒன்றரை சவரனுள் அடக்கம்.

வயதுக்கேற்ற பெருமிதத்தில், மனோரஞ்சிதம் அதை அணிந்து கொண்டே வந்துவிட, தங்கம்மாளின் கழுகுக் கண்கள் அதை உடனேயே கண்டுபிடித்து விட் டன.

மாலையில் மனோரஞ்சிதம் காஃபி டிஃபன் கொண்டு வந்தபோது, அவளைப் பிடித்து வைத்து நன்றாகத் திட்டி விட்டாள்.



மனோரஞ்சிதம் ஒரு பாம்புக் குட்டி என்று அந்த அம்மாளுக்கு முதலில் இருந்தே தெரியுமாம். நல்லவள் போல வேடமிட்டு, அந்த முட்டாள் கருணாகரியையும், அப்பாவி சந்தானத்தையும் இவள் எளிதில் ஏமாற்ற இயலுமாம். ஆனால், தங்கம்மாள் அப்படியல்லவாம். ஆன்ட்டி, அங்கிள் என்று அவள் கொஞ்சிக் குலாவுவது எல்லாம் அந்தக் குடும்பத்தை 'போண்டி'யாக்கத்தான் என்பதைத் தங்கம்மாள் நன்றாக அறிவாளாம்.

இந்த அங்கிள் மட்டும் மனோரஞ்சிதத்துடைய தந்தை அனுப்பிய பணத்தைப் பயன்படுத்தி அவளை ஏதாவது ஹாஸ்டலில் சேர்த்திருந்தால், இந்தப் பேச்சு கேட்க நேர்ந்திராதே என்று மனோரஞ்சிதத்துக்கு வேத னையாக இருந்தது. ஆனால், அப்படி ஹாஸ்டலில் தங்கும்படி நேர்ந்திருந்தால், ஆன்ட்டியின் வடிவில் இன் னோர் அன்னையை அவள் அறியவும் வாய்ப்பில்லாம லேயே போயிருக்கும்!

கருணாகரியோடு ஒட்டிப் பழகும் வாய்ப்பு கிட்டிய தற்காக எதையும் தாங்கலாம் என்று உள்ளூர அவள் எண்ணும்போதே, தங்கம்மாள் மேலும் நெருப்பை வாரிக் கொட்டினாள்.

''ஏண்டி, உன் மர்மமெல்லாம் எனக்குத் தெரியா தென்றா நினைத்துக் கொண்டு இருக்கிறாய்? கருணா கரியை நைஸ் பண்ணி நகையும் துணியுமாக வாங்குவது; பிறகு அதையெல்லாம் அணிந்து எங்கள் குணாக்குட்டி முன்னே அலுக்கிப் பிலுக்கி அவனை மயக்கிப் பிடிப்பது!''

தன்னை மீறிப் 'பெரியம்மா!' என்று கத்தி விட்டாள் மனோரஞ்சிதம். என்ன மாதிரி அடாத பழி சுமத்து கிறார்கள்.

''என்னடி அலறுகிறாய்? உள்ளதைச் சொன்னால் சுள்ளென்று உறைக்கிறதாக்கும்? உன் கள்ளத்தனம் கண்டு கொண்டது, நான் மட்டும் அல்லடி, என் ராஜாக் குட்டியும்தான். அவன், அவனுடைய அப்பா அம்மா மாதிரி இல்லையடி. புத்திசாலி. அதி புத்திசாலி!''

என்ன புத்திசாலி? இவன் என்னத்தைக் கண்டுபிடித் தான்? இப்படி ஓர் எண்ணம் அவளுக்குத் தோன்றியதே இல்லையே. அவளுக்குத் தோன்றக் கூட இல்லாததை, அவளது மனதிலிருந்து இந்த மகா புத்திசாலி எப்படிக் கண்டுபிடித்து விட்டானாம்?

ஆனாலும், மனோரஞ்சிதத்தைப் பற்றிக் குணாளன் இவ்வளவு மட்டமாகவா மதிப்பிட்டிருக்கிறான்? என்ன கேவலம்!

முகம் கன்றிச் சிவந்தபோதும், பதில் பேசாமல் மனோரஞ்சிதம் வாயை இறுக மூடிக் கொண்டு நின்றாள். வீட்டின் அமைதி காப்பதற்காகக் கருணாகரியே மாமியார் என்ன சொன்னாலும் திருப்பி ஒரு வார்த்தை சொல்லாமல் ஒதுங்கிப் போய் விடுவாள். அப்படி ஆன்ட்டி கட்டிக் காக்கும் அமைதி இவளால் கலைய லாமா?

ஆனால் தொடர்ந்து தங்கம்மாள் பேசிய பேச்சில், மனோரஞ்சிதம் மிகவும் கலங்கிப் போனாள்.

ஏனெனில், ''எல் லாம் அந்தக் கருணாகரி கொடுக் கிற இடம்! முதலில் அவள் வாலை நறுக்க வேண்டும்'' என்று தொடங்கி அதை ஏன் எப்படி நறுக்கப் போகிறாள் என்று விவரித்துக் கொண்டிருந்தாள் அவள்.



# 7

எப்போதுமே, தங்கம்மாளுக்குப் பணிந்து விடுவது மனோரஞ்சிதத்தின் வழக்கம்.

முதலில் தான் அனாதை, தனக்கென்று யாரும் எதுவும் இல்லை, எல்லோருக்கும் அடங்கித்தான் போக வேண்டும் என்ற தாழ்வுணர்ச்சி அவளது வாயைக் கட்டிப் போட்டிருந்தது.

பிறகும், அவளுக்கும் பணம் என்கிற அடிப்படை இருப்பதாக சந்தானத்தின் வாய்மொழி மூலம் வந்ததை நம்பியபோதும், கருணாகரிக்கு வசவு வாங்கி வைக்கக் கூடாது என்றுதான் எதையும் வாய்மூடி, அவள் பொறுத் துப் போவது. இப்போது அந்தக் கருணாகரிக்கே கஷ்டம் வரும் என்றால் அது மனோரஞ்சிதத்தைக் கதிகலங்கச் செய்தது.

''... கையில் நாலு காசு புழங்குகிற திமிர்தானே இப்படி வேலைக்காரக் கூட்டத்துக் கெல்லாம் பட்டும் பவுனுமாக வாங்கிக் கொடுக்கச் செய்கிறது. ஒரு பைசா எடுக்க இடமில்லாமல் செய்கிறேன் பார். பல் தேய்க்கிற பசைக்கு என்னிடம் கையேந்திப் பிச்சை கேட்க வைக்கி றேன் பார்! யாருடையது இந்தக் கடை? என் புருஷன் தொடங்கியது; இவன் புருஷன் நிர்வாகம் செய்தால் எல்லாம் இவளது ஆகிவிடுமா? மருமகள் எடுக்கிற வயதாயிற்றே என்று கொஞ்சம் இடம் கொடுத்தால், இவள் இல்லாததுகளுக்கு இறைத்தே எங்களை ஓட்டாண் டியாக்கி விடுவாள் போலிருக்கிறதே! அவள்தான் அறிவு கெட்டுப் போய்க் கொடுத்தாள் என்றால், நீயும் ஈ என்று

இளித்துக் கொண்டு வாங்கி மாட்டிக் கொண்டாயாக்கும்? இதெல்லாம் எத்தனை நாளைக்கு என்று பார்க்கிறேன்....!''

நல்ல வேளையாக அந்த நேரம் பார்த்து யாரோ உறவினர் திருமணத்துக்காக அழைக்கவென்று வந்து சேரவே ஒருவாறு மனோரஞ்சிதத்திற்கு விடுதலை கிடைத்தது.

கல்யாணப் பத்திரிகை கொண்டு வந்தவர்களுக்கு ஜூஸ் அனுப்புவதாகச் சொல்லி விட்டு, விழுந்தடித்துக் கொண்டு அங்கிருந்து விரைந்தோடிச் சென்றாள்.

ஞாபகமாக வந்திருந்தவர்களுக்குப் பழச் சாறு அனுப்பச் சொல்லி விட்டுத் தன் தனியறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள். அந்த வினாடியில் அவளுக்கு யார் முகத்திலும் விழிக்க விருப்பம் இல்லை.

பிறந்த நாள், நல்ல மதிப்பெண்கள் அடைந்தது, கோயிலுக்குச் சென்றது, அழகான பரிசு கிடைத்தது என்று மேலும் மேலும் மகிழ்ச்சி பெருகியது . மாறி இப்போது அவளுக்கு எல்லாம் இருட்டடித்துப் போயிற்று.

கருணாகரியால் தனக்கு இனிப் பெரிதாக எதுவும் வாங்கித் தரமுடியுமோ, முடியாதோ என்பது பற்றி அவளது எண்ணம் ஓடவில்லை.

ஆனால், கவிதா அம்மா இப்படி டிசைன் போட்ட சேலை கட்டியிருந்தார்கள்; அர்ச்சனாவின் அத்தை இந்த நிறத்தில் அணிந்திருந்தாள் என்று வகுப்புத் தோழிகளுடைய உறவினரின் உடைகளை விமர்சித்து, அதில் இது உங்களுக்கு நன்றாயிருக்கும், அது உங்களுக்கு எடுப்பாயிருக்கும் என்று மனோரஞ்சிதம் சொல்லிச் சொல்லி,



கருணாகரி இப்போதுதான் வித்தியாசமாய்ச் சேலைகள் வாங்கிக் கட்டிக் கொள்ளத் தொடங்கியிருந்தாள்.

வீட்டில் சுங்கிடிச் சேலை, வெளியே போனால் சாதாரணப் பட்டு, திருமணம் போன்ற விழாக்களுக்கு என்றால் அகலமான ஜரிகைக் கரைப்பட்டு என்று இருந்தவள் அவள். வீட்டில் சுங்கிடியோடு, அழகிய வண்ணங்களும் டிசைன்களுமாக இதமாக வாயல் சேலைகளையும் கட்டினாள். பெங்கால், காட்டன், காஞ்சி காட்டன், பிரிண்டட் சில்க் என்று இலகுவாக வெளியே கட்டினாள்.

பத்து வயது இளமையாகத் தோன்றியதோடு, எவ்வளவு சுகமாயிருக்கிறது?' என்று மனோரஞ்சிதத்திடம் கூறவும் செய்தாள்.

இதெற்கெல்லாம் இனி முற்றுப்புள்ளி விழுந்துவிடுமோ என்பதுதான் மனோரஞ்சிதத்தின் பெரும் கவலையாக இருந்தது.

இதைத் தடுக்க என்ன செய்வது என்று அவள் யோசித்தபோதுதான், முதன் முதலாக அவளுக்கு அந்த எண்ணம் தோன்றியது. இந்த வீட்டிலிருந்து மனோரஞ்சிதம் வெளியேறிவிட்டால் கருணாகரியை வறுத்தெடுக்கப் பாட்டியம்மாளுக்குக் காரணம் இல்லாது போகும். எனவே கருணாகரிக்கு அதற்கு மேல் துன்பம் நேராது!

இப்படி ஓர் வழி இருக்கிறதே என்று உற்சாகத்துடன் நிமிரும்போதே, உள்ளூரத் திக்கென்றது அவளுக்கு.

வீட்டை விட்டு வெளியேறுவது என்றால் கருணாகரியைப் பிரிய வேண்டும். நோயின் விளைவாக இயலாமை காரணமாகப் பெற்ற தாயால் மனோரஞ்சிதத்துக்கு முழுமையாகக் கொடுக்க முடியாமல் போன

அன்பையும் சேர்த்துத் தருகிறவள்! இவளைப் பிரிந்து எப்படிப் போவது? எப்படி வாழ்வது?

கருணாகரியைப் பிரிந்து வாழ்வது முடியாத காரியம் என்று தோன்றவும், இங்கிருந்தபடியே பாட்டியைச் சமாளிப்பது எப்படி என்று மனோரஞ்சிதம் ஆலோசிக்கலானாள்.

இந்த நகை செட் தானே பாட்டிக்கு இவ்வளவு ஆத்திரத்தை ஏற்படுத்தியது? அதைத் திருப்பிக் கொடுத்து விடலாம். நல்ல துணிமணிகள் ஏதும் வாங்க விடாமல் கருணாகரியைத் தடுக்கலாம். இப்போதும், மனோரஞ்சிதம் கேட்டுக் கருணாகரி வாங்கிக் கொடுத்தாள் என்று கிடையாது. மற்ற பெண்கள் அணிந்திருப்பதைப் பார்த்து, பத்திரிகைப் படங்களில் பார்த்து அவளாகவே வாங்கி வந்து மனோரஞ்சிதத்திடம் கொடுத்து ஆச்சரியப்பட வைப்பாள். வியப்பும் மகிழ்ச்சியுமாக அந்த ஆடைகளைச் சின்னவள் திருப்பித் திருப்பிப் பார்ப்பதைக் காண்பதில் கருணாகரிக்கு ஓர் அலாதி மகிழ்ச்சி.

அவள் சந்தோஷப்படுகிறாள் என்று, அவ்வளவாக நன்றாக இல்லாததைக் கருணாகரி வாங்கி வந்தால் கூட மனோரஞ்சிதம் அதை 'ஓகோ' என்று பாராட்டுவாள்.

அதை இனி நிறுத்த வேண்டும். கருணாகரி இப்படி வாங்குவதையும் நிறுத்தும்படி செய்ய வேண்டும்.

இப்படியெல்லாம் செய்து விட்டால், ஒருவேளை இந்தப் பாட்டியம்மாளின் மனது சாந்தப்படக் கூடுமா?

சாந்தப்படும். ஆன்ட்டியுடன் ஏதோ உறவுக்காரப் பெண் போல, உடன் செல்வதையும் வருவதையும் கூட நிறுத்தி விட்டு, 'வேலைக்கார இனம்' என்று தங்கம்மாள் அடிக்கடி சொல்வது போல, ஒரு வேலைக்காரியாகவே வாழ்ந்து காட்டினால், நிச்சயமாக அந்த அம்மாள் அமைதியாகி விடுவாள். அத்தோடு விஷயம் முடிந்தது.



பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்ட காரணத்தால் மனோரஞ்சிதம் நிம்மதியுற்றிருக்க வேண்டும்; ஆனால் முடியவில்லை. உள்ளூர மனம் வெகுவாக உளைந்தது.

அவளைப் பற்றிய குணாளனின் அபிப்பிராயம் என்று தங்கம்மாள் கூறியதை அவளால் அலட்சியப் படுத்த முடியவில்லை. மெய்யாகவே மனோரஞ்சிதத்தைப் பற்றி அவன் அப்படித்தான் எண்ணிக் கொண்டு இருக்கிறானா?

என்னென்னவோ குற்றம் குறைகளைத் தங்கம்மாள் அவள் மேல் ஏற்றிப் பேசுவதை மனோரஞ்சிதத்தால் அலட்சியப்படுத்த முடியும். ஆனால் குணாளன்?

தங்கம்மாளுக்கு என்னவோ, தன் பேரன் தன்னிகரில்லாத உலகமகா மன்மதக் குஞ்சு என்றும், பணத்தில் புருனே சுல்தான் கூடப் பேரனுக்கு அடுத்தபடிதான் என்றும் அபிப்பிராயம். எனவே, அவனுக்கு மாலையிட ஐம்பத்தாறு தேசத்து அரசகுமாரிகளும் கையில் மாலையுடன் குணாளனின் கண்ணசைவுக்காகக் காத்திருப்பது போல எண்ணமும் உண்டு.

ஆனால் குணா சார்? அவனுக்குமா அந்த மாதிரி நினைப்பிருக்கும்? கல்லூரியில் படிக்கிறவன்! நாலுபேருடன் பழகுகிறவன். அவனுமா இதுபோல எண்ணக் கூடும்?

''இராது... இராது...'' என்று மனோரஞ்சிதம் பல முறை உரக்கவே கூறிக் கொண்டாள்.

குணாளன் மட்டும் மனோரஞ்சிதத்தைப் பற்றி அப்படியெல்லாம் நினைத்தான் என்றால், அதன் பிறகு அவன் முகத்தில் விழிப்பதே கூடாது! விழிக்கும்படியான நிலைமையில் இருக்கக் கூடாது!

மனோரஞ்சிதம் நிலையற்றுத் தவித்துக் கொண்டிருந்தபோதே அறைக் கதவு தட்டப்பட்டது. சமையல்காரம்மா அழைப்பதாக பையன் வந்து சொல்லி விட்டுப் போனான்.

ஸ்டோரில் வேலை செய்யும் ஒருவருடைய மகன் அந்தப் பையன். இரண்டு ஆண்டுகள் இப்படி வீட்டில் கூப்பிட்ட குரலுக்கு ஓடி எடுபிடி வேலைகள் செய்வான். பிறகு ஸ்டோரில் விற்ற சாமான் கட்டிக் கொடுக்கப் போவான். அப்புறம் 'சேல்ஸ்மேன்' ஆகிவிடுவான்.

ஓரளவு, தானும் எடுபிடிதான் என்று மனோரஞ்சிதம் நினைத்தாள். இப்போது சமையல்காரம்மாள் கூப்பிட்டாள் என்று போய்க் கொண்டு இருக்கிறாள். ஆறு ஆண்டுகளாக ஒரே மாதிரி இதே வேலை? எதிலோ சிக்கிக் கொண்ட மாதிரி மனோரஞ்சிதம் உணர்ந்தாள்.

சமையல் அறையில் ஐந்து கப்புகளில் காபியுடன் 'ட்ரே' காத்திருந்தது.

''சின்னவர் சிநேகிதர்களோடு எங்கேயோ சுற்... எங்கேயோ போய்விட்டு வந்திருக்கிறாராம். ஐந்து பேராம். இந்தக் காபியைக் கொண்டு கொடுத்து விடம்மா. இல்லாவிட்டால் எரிச்சல்படுவார்'' என்று கூறித் தட்டை அவளிடம் சமையல்காரம்மாள் கொடுத்தாள்.

குணாளனின் அறைக் கதவைத் தட்டி, அவனது அனுமதியுடன் உள்ளே சென்று காஃபியை வைத்து விட்டு வெளியே வந்து மனோரஞ்சிதம் வராண்டாவுக்குச் சென்று காத்து நின்றாள்.



குணாளனின் அறைக்கு உணவுப் பொருட்கள் போனால், அவை காலியாகிற நேரம் கணக்கிட்டு, காலிப் பாத்திரங்களையும் எடுத்து வந்து விடவேண்டும். இல்லாவிட்டால் அவனுக்குக் கோபம் வரும்.

பத்து நிமிடங்கள் தோட்டத்தை நோக்கி, அதை ரசியாமலே நின்று விட்டு, மீண்டும் குணாளனின் அறைக்குப் போய்க் காலிக் கப்புகளை எடுத்துச் சென்று சமையல் அறையில் வைத்து விட்டுத் திரும்பினால், மீண்டும் சமையல்காரம்மாள் அழைத்தாள்.

''ராத்திரிச் சாப்பாடு பற்றிச் சின்னவர் ஏதாச்சும் சொன்னாரம்மா? அந்த சிநேகிதப் பசங்களுக்கும் சேர்த்துச் செய்யணுமானால் இப்போதே தெரிந்தால் தானே முடியும்? தயவு பண்ணிக் கொஞ்சம் கேட்டு வந்து சொல்லிவிடேன்... மனோம்மா, இன்றைக்கு ராத்திரி சப்பாத்திக்கு உனக்குப் பிடித்த பட்டாணிக் குருமாவும், தக்காளிச் சட்டினியும் மெனுகண்ணு. அந்தப் பசங்கள் சாப்பிடுவார்கள் என்றால் நிறையப் பண்ணவேணும். இல்லாவிட்டால் உனக்கும், சின்னம்மாவுக்கும் ஒன்றும் மிச்சம் இராது...''

லேசாக முறுவலித்து விட்டு மனோரஞ்சிதம் மீண்டும் குணாளனை நாடிப்போனாள். 'உனக்குப் பிடித்த' என்று சமையல்காரம்மாள் சொன்னது சும்மா தாஜாப் பண்ண அல்ல. மெய்யாகவே, மனோரஞ்சிதத்துக்குப் பிடித்த அயிட்டங்களைத்தான் இப்போது அந்த அம்மாள் அடிக்கடி சமைப்பது. இங்கு அவள் வந்த புதிதில் தங்கம்மாளோடு சேர்ந்து கொண்டு இதே சமையல்காரம்மாள் தன்னை விரட்டியதும், இப்போது மனோம்மா,

கண்ணு என்று அன்பு காட்டுவதும்... எப்படி மாறிவிட்டாள் சமையல்காரம்மா!

சமையல்காரம்மா மட்டுமல்ல... வீட்டின் எல்லா வேலையாட்களுமே மனோரஞ்சிதத்திடம் இப்போது அன்பாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் தங்கம்மாள் பாட்டிக்கு மட்டும் ஏன் இந்த வெறுப்பு? அதுவும், அவளுக்காகவும் மனோரஞ்சிதம் எத்தனையோ வேலைகள் செய்தபோதும் ஏன் இப்படி?

காரணம் புரியாமல் வேதனைப்பட்டபடி சென்ற மனோரஞ்சிதம், குணாளனின் அறையை நெருங்கிய போது, அவளது பெயர் காதில் விழவும் தன்னை அறியாமல் நின்றாள்.

''அவள் பெயர் மனோரஞ்சிதம்...'' என்று குணாளன் சொல்லிக் கொண்டு இருந்தான்.

உடனே 'ஓ' என்ற சிரிப்பும் கைதட்டும் கேட்கவும் மனோரஞ்சிதத்துக்குத் திகைப்பாயிருந்தது. இப்படிக் கேலியாகச் சிரித்துக் கைதட்டும் அளவுக்கு அவளது பெயரில் என்ன பிழை இருக்கிறது? மனதுக்கு இன்பத்தைத் தருகிறவள் என்ற அர்த்தத்தில் அவளுடைய பெற்றோர் வைத்த பெயர் அது. இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?

என்ன இருக்கிறது என்பதை அந்த நண்பர்களே சொன்னார்கள்.

''மனதுக்கு இன்பத்தைத் தருபவள் மனோரஞ்சிதம். மனதுக்கு மட்டும்தானா, குணா?'' என்ற கிண்டல் குரலை அடுத்து இன்னொரு சிரிப்பு!



''என்ன உளறுகிறாய்?'' என்ற குணாளனின் குரலில் இருந்த அதட்டல் மனோரஞ்சிதத்தின் மனதுக்கு எவ்வளவோ இதமாக இருந்தது.

''ஆனால், அவன் கேட்டதில் என்ன மச்சி தப்பு? வந்து உட்கார்ந்து ஐந்து நிமிடங்கள் ஆகவில்லை. குறிப்பறிந்து கா∴பி வருகிறது. அதுவும் பளீரென்று அப்படி ஓர் அழகான சுரிதாரில் அலங்கார தேவதை மாதிரி வருகிறாள். அத்தோடு நின்றாளா? அடுத்துப் பத்து நிமிடம் ஆகவில்லை. காலிக் கப்புகளை எடுத்துப் போகிற சாக்கில் இன்னுமொரு தரிசனம்! நாங்கள் இருந்து கெடுத்து விட்டோம். இல்லாவிட்டால் காபி கப் எடுக்க வந்தவள் இன்னமும் என்ன என்ன பணிவிடைகள் எல்லாம் இவனுக்கு அவள் செய்திருப்பாளோ?'' என்று இன்னொருவன் கேட்க, மீண்டும் ஒரே இரைச்சல்.

'என்ன பணிவிடை', 'உடம்பு பிடித்து விடுவாளா', என்ற கேள்விகளுடே 'இச்' என்று சத்தம் கேட்க மனோர்ரஞ்சிதத்தின் முகம் ரத்தமெனக் கன்றிப் போயிற்று.

தீயின் மேல் நிற்பது போல உடல் காந்தியபோதும், இதையெல்லாம் உறுதியோடு குணாளன் மறுப்பதைக் கேளாமல் அங்கிருந்து செல்ல மனமற்று அவள் அப்படியே நின்றாள்.

ஆனால், ''நான் ஒத்துழைத்தால், நீங்கள் சொன்ன அத்தனையும் செய்யக் கூடியவள்தான் மனோரஞ்சிதம்!'' என்று கூறி அவள் மீது நெருப்பை வாரிக் கொட்டினான் குணாளன். ''நான் சுண்டு விரலை அசைத்துக் காட்டினால் போதும். ஓடி வந்து காலில் விழுந்து விடுவாள். அந்த அளவுக்கு அவளுக்கு என்மேல் மயக்கம் உண்டு தான்... ஆனால்....''

''ஆனால் என்ன மாமா, இவ்வளவு அழகான ஒருத்தி சும்மா வருகிறாள் என்றால் விட்டுவைக்க நீ என்ன விசுவாமித்திரனா?''

''இல்லை. விவேகம் உள்ளவன்'' என்றான் குணா ளன். ''புரியவில்லையா? சொல்கிறேன். மனோரஞ்சிதத் தின் மயக்கம் என் மீது மட்டுமில்லை, மச்சான்களா. எங்கள் ஸ்டோர் தெரியுமல்லவா? பெரிய டிப்பார்ட் மெண்டல் ஸ்டோர். அது, இந்த வீடு, இரண்டு கார்கள் எல்லாவற்றுக்கும் ஏகபோக வாரிசு நான் என்பதிலும் சேர்த்துதான் அவளுக்கு மயக்கம். அவளுக்கென்று ஒரு நயா பைசா சொந்தம் இல்லை. ஆதரிக்க உறவும் இல்லை. என் அம்மா அப்பாவின் இரக்கத்தில் வாழும் ஒட்டுண்ணி அவள். உணவு, உடை, படிப்பு எல்லாமே எங்கள் பிச்சைதான். இது நிலைக்க வேண்டுமே! அத னால் எதைச் செய்தேனும் எப்படியாவது என்னைக் கைக்குள் போட்டுக் கொள்ளத் துடிக்கிறாள். ஆனால் இந்த மாதிரி ஈனங்களிடம் மயங்க நான் என்ன முட் டாளா? ஒன்று தெரியுமா? இந்த அறையை நான் எப்போதும் பூட்டியேதான் வைத்திருப்பது. இல்லாவிட் டால், படுக்கையிலேயே வந்து பூந்து கொள்வாளோ என்று எனக்கு ஒரே பயம்! அதனால், இரவு தூங்கும் போது கூட உள்ளே தாளிட்டுக் கொண்டுதான் நான் படுப்பது!

''உனக்கு வேண்டாம் என்றால் நான் முயற்சி பண்ணட்டுமா, பிரதர்? இவ்வளவு அழகைச் சும்மாவிட எனக்கு மனம் வரவில்லையே!'' என்று எவனோ ஒரு வன் புலம்பியது அரைகுறையாகக் காதில் விழுந்து தேய, எப்படி வந்தாள் என்பதே தெரியாமல் அவளுக்



குக் கொடுக்கப்பட்டிருந்த அறைக்கு மனோரஞ்சிதம் மீண்டும் வந்து சேர்ந்தாள்.

குணாளன் அவளை இவ்வளவு மட்டமாகவா எடை போட்டிருக்கிறான்?

ஆக, பாட்டியம்மாள் சொன்னது உண்மைதான். இவன் முகத்தைப் பார்த்து இனி எப்படிப் பேசுவது?

ஒட்டுண்ணியா? பிச்சையா? இது நிலைக்க இவனை மயக்கப் பார்க்கிறாளாமா? அதுவும் எப்படி?

இதுபோலெல்லாம் அவள் நினைத்துப் பார்த்தது கூட இல்லையே! அவளைப் போய்ப் படுக்கை அது இது என்று எவ்வளவு அசிங்கமாகப் பேசிவிட்டான்.

'நிறையப் படிக்க வேண்டும்; பெரிய வேலை பார்த்து நிறையச் சம்பாதிக்க வேண்டும்; 'இன்னா செய் தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்து விடல்' என்கிற குறளின் பாணியில் சம்பாதிக்கும் பணத்தில் பெரியம்மாவுக்கு நிறையப் பொருட்கள் வாங்கிக் கொடுத்து, அவர்கள் வாயாலேயே நல்லவள் என்று பெயர் பெற வேண்டும்...' என்று இப்படித்தானே அவ ளது எண்ணங்கள் இதுவரை ஓடியிருந்தன.

அவளைப் போய் என்னவெல்லாம் சொல்லி விட் டான்.

பதினேழு வயது என்பது இதுபோன்ற விஷயங்கள் எல்லாம் அடியோடு தெரிய வந்திராத, புரியாத சிறிய வயது அல்ல. அதேசமயம் குணாளனின் பேச்சை, விடலைப் பையனின் வெற்று வார்த்தை என்று அலட்சி யப்படுத்தக் கூடிய அளவு மனப்பக்குவம் அடைந்து விட்ட வயதும் அல்ல.

பள்ளியில் கவுரவமாகக் கற்றுக் கொடுத்த செக்ஸ் கல்வி தவிர, உடன் பயின்ற தோழிகள், ஆண் சினேகி தன், அது இது என்று பேசுவது அவ்வப்போது மனோ ரஞ்சிதத்தின் காதுகளில் விழுந்தனதான்.

ஆனால், அவளது குறிக்கோள் வேறாக இருந்த தால், இதிலெல்லாம் அவளது மனசு சென்றதில்லை. இதே பேச்சாக இருக்கும் சிலரிடம் அவளுக்கு லேசான அருவருப்பு கூடத் தோன்றியதுண்டு.

இதில், எதையும் அறியாமல், எதையும் யோசியா மல் இந்தக் குணாளன் என்ன பேச்சுப் பேசி விட்டான்?!

யோசியாமல் என்ன? நன்றாக யோசித்துத்தான் இப்படி முடிவு கட்டியிருக்கிறான். தன்னையே பெரிதாக எண்ணித் தன் பணத்துக்காகவே எல்லோரும் ஏங்குவது போல நினைத்து... என்ன பெரிய பணம்? இவனை விடப் பெரிய பணக்காரர்கள் உலகில் எத்தனை பேர் இல்லை?

இதில்கூட, ஒரு காசு இவனாக உழைத்துச் சம்பாதித் தது இல்லை. பாவம்! ஒரு நாளைக்குப் பதினாலு மணி நேரம் ஓய்வின்றி உழைத்து, இவன் கண்டபடி ஊர் சுற்றுவதற்குப் பணம் கொடுப்பவர் 'அங்கிள்'தான்.

உழைப்பில் ஒரு சிறு பங்கு ஏற்றுச் செய்தது இல்லை; உரிமை காட்டுவதில் மட்டும் 'எங்கள் ஸ்டோ ராம்!'

கை நிறையச் சம்பாதித்து, குணாளனிடம் காட்டி, ''என்னை ஒட்டுண்ணி என்றாயே, இதுவரை உன் உழைப்பில் நீ என்ன சம்பாதித்தாய்'' என்று நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரிக் கேட்க வேண்டும்!



அப்படிக் கேட்க வரும்போது கூடத் தேவைக்கு அதிகமாக ஒரு வினாடி நேரம் கூட இந்த வீட்டில் தங்கக் கூடாது; ஒரு பிடி சோறு உண்ணக் கூடாது!

குணாளனோடு அவனுடைய பாட்டியையும் சேர்த்து வெட்கித் தலைகுனியச் செய்து விட்டு, ஜாம் ஜாம் என்று ராஜநடைபோட்டு இங்கிருந்து மீண்டும் கிளம்பிச் சென்று விடவேண்டும்.

மனதில் உறுதி இருந்தால் மலையையும் புரட்ட லாம். எண்ணத்தில் தீவிரம் இருந்தால் எதையும் நடத்திக் காட்டலாம்.

மனோரஞ்சிதத்தின் மனதில் வலிமை மிகுந்து இருந் ததால், அவள் எதையெல்லாம் வேண்டினாளோ, அவை அனைத்தும் அவளுக்குக் கிட்டவே செய்தன. உயர் கல்வி, பெரிய வேலை, நிறையச் சம்பளம்.... அந்த வீட்டை விட்டு வெளியேறி, தன் முயற்சியாலேயே அவள் விரும்பிய அத்தனையும் சாதித்து முடித்தாள்.

ஆனால் அந்த நாள் வந்தபோது, யார் யார் முன் பெருமை காட்டுவேன் என்று அவள் தனக்குத் தானே சூள் உரைத்துக் கொண்டாளோ, அவர்களிடம் பெருமை யாக அவளால் ஒரு வார்த்தை கூடப் பேசமுடியவில்லை. மாறாக, முன்னிலும் கேவலமாகவும் வெறுப்பாகவும் அவர்கள் பேசியதையும் சகித்துக் கொண்டு அந்த வீட் டில் ஒரு முழுநேரப் பணியாளாக அவள் மாறிப் போனாள்.

# 8

அன்று, தனக்குத் தானே எடுத்துக் கொண்ட சபதத்தை நிறைவேற்றுவது, மனோரஞ்சிதத்திற்கு அப்படி ஒன்றும் மிகவும் கடினமாக இருக்கவில்லை.

வீட்டை விட்டுக் கிளம்புவது சிரமமாகத்தான் இருந்தது. அதிலும், இரண்டாவது அன்னையாகக் கிடைத்த கருணாகரியைப் பிரிந்து செல்வது, உடம்பின் ஓர் உறுப்பையே வெட்டி விட்டுச் செல்வது போல மிகுந்த வேதனையாகக் கூட இருந்தது. ஆனால், குணாளனிடம் அவனது அபிப்பிராயம் முழுக்க முழுக்கத் தவறானது என்று நிருபித்தே ஆகவேண்டும் என்ற பிடிவாதமே வென்றுவிட, கருணாகரிக்கு அதுபற்றி ஒரு சிறு கடிதம் ஒரு முக்கியமான பணி நிமித்தம் வீட்டை விட்டு வெளியேறுவதாகவும், காரியம் நிறைவேறியதும் தானாகவே அவளை வந்து பார்ப்பதாகவும் எழுதி வைத்து விட்டுக் கிளம்பியே விட்டாள்.

'பிளஸ் டூ'வில் மனோரஞ்சிதத்துடைய வகுப்பு ஆசிரியையாக இருந்த சாரதா ஒரு முதிர் கன்னி. தன் பெரிய குடும்பம் கரையேறுவதற்காக உழைத்ததில் தன் சுகம் மறந்தவள். ஆனால், உலக இயல்பு உணர்ந்திருந்ததால், தம்பி தங்கைகளுக்குக் குடும்பம் அமைத்துக் கொடுத்ததோடு தனியே ஒதுங்கிக் கொண்டு விட்டாள். அப்படி ஒதுங்கிக் கொண்டு விட்டதினாலேயே எந்த விதத்திலும் தனக்குக் கடன்பட்டவர்களாக உடன் பிறந்தோரை அவள் நடத்தாததினாலேயே, அவர்களோடு



நல்ல உறவை நிலைக்கச் செய்து கொண்டவள். பொதுப் பணிகளில் மன அமைதியையும் தேடிக் கொண்டவள்.

நன்றாகப் படிக்கிறாள் என்று மனோரஞ்சிதத்திடம் சாரதாவுக்கு மிகுந்த அன்பு உண்டு. அந்த அன்பின் விளைவாகக் கல்விக் கற்றுக் கொடுப்பது தவிர, மற்றபடியும் அக்கறையும் பிரியமுமாகப் பேசுவதும் உண்டு. அத்துடன் கூட, சாரதாவின் சேவை மனப்பான்மையையும் அறிந்திருந்ததால் மனோரஞ்சிதம் அந்த சாரதா டீச்சரையே மலைபோல நம்பிச் சென்றாள்.

"நல்ல மார்க் வாங்கியிருக்கிறாய் போல் இருக்கிறதே!" என்று பிரியமாக வரவேற்றவளிடம் ஒப்புக்குச் சிரித்து விட்டுச் சற்று நேரம் மவுனம் சாதித்தாள்.

ஏனெனில் ஒரு முடிவுடன் வந்துவிட்ட போதும், மனோரஞ்சிதத்திற்கு உள்ளூர ஓர் உதைப்பும் இருந்தது. பதினேழே வயதான, மேஜர் ஆகாத ஒரு பெண்ணுக்கு யார் துணிந்து உதவி செய்வார்கள்? சந்தானம் போலீசுக்குப் போனால் உதவி செய்பவர் அல்லவா மாட்டிக் கொள்வார்?

ஆனால் அதற்காக இன்னும் ஓர் ஆண்டுகாலம் தங்கம்மாளுக்கும் குணாளனுக்கும் இடையே அல்லாடுவதும் நிச்சயமாக முடியாதுதான்.

மெல்ல நிமிர்ந்து, 'டீச்சர் எனக்கு... உங்களால் எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?' என்று கேள்வியோடு தொடங்கினாள்.

அவள் பொய்யான எதையும் சொல்லவில்லை. ஆனால், முழு உண்மையையும் சொன்னாளில்லை. எண்ணி எண்ணிக் கனன்றபோதும், குணாளனின் பேச்சைப் பற்றி ஒரு வார்த்தை கூறவில்லை. ஆனால், தன்

மேல் அன்பு வைத்த பிழைக்காகக் கருணாகரி வாங்கிக் கட்டிக் கொண்ட வசவுகளைப் பற்றி விவரித்தாள். 'எனக்காக அவர்கள் எல்லாம் பொறுத்துக் கொள்கிறார் கள், டீச்சர். ஆனால் எனக்குத்தான் அவர்கள் படும் துன்பம் சகிக்கக் கூடவில்லை. நாம் உயிரோடு இருப்ப தால்தானே, ஆன்டிக்கு இவ்வளவு வேதனை? பேசாமல் ரயிலில் தலையைக் கொடுத்துச் செத்து விடலாமா என்றி ருக்கிறது'' என்றாள்.

அதிர்ச்சியும் ஆராய்ச்சியுமாக நோக்கியவளிடம், ''மெய்யாகத்தான் சொல்கிறேன் டீச்சர், என்னால் இனி மேல் அந்த வீட்டில் இருக்க முடியாது. நிச்சயமாகச் சொல்கிறேன். இனி ஒரு நாள் கூட அங்கே நான் தங்கமாட்டேன்'' என்றாள் பிடிவாதமான குரலில்.

''அவ்வளவு அன்பானவர்கள் என்கிறாய், நீ பிரிந்து போனால் அதை எப்படித் தாங்குவார்களாம்?'' என்று ஆசிரியை சரியான இடத்தைப் பிடித்தாள்.

''அதுவும் வேதனைதான் டீச்சர். ஆனால் அவர் களுக்கு நான் இடையில் வந்த உறவுதான். கணவர், பிள்ளை, குடும்பம் என்று எல்லாமே, நான் வருமுன்பே அவர்களுக்கு இருக்கிறார்கள். என் பிரிவினால் முதலில் வேதனைப் பட்டாலும், கொஞ்ச நாளில் பழைய வாழ் வில் ஆன்ட்டி ஒன்றிப் போய் விடுவார்கள், டீச்சர்'' என்றாள் மனோரஞ்சிதம். ''ஆனால், நான் இனி அங்கே இருந்தேன் என்றால், பாட்டி சொன்னதுதான் உண்மை என்று தோன்றி விடும். அதை விடக் கடலில் விழுந்து சாவது மேல்''.

''வீட்டில் இருந்தால்தானே வம்பு? அவர்கள் அனு மதியுடனேயே ஏதாவது ஹாஸ்டலில்...''



''சரிப்பட்டு வராது டீச்சர். அடிக்கடி ஆன்ட்டி பார்க்க வருவார்கள். இன்று இந்த விசேஷம், நாளை அந்தப் பண்டிகை என்று வீட்டுக்கு அழைப்பார்கள். 'க்ளீன் பிரேக்' என்பார்களே, அதுபோல அடியோடு பிரிவதுதான் நல்லது. சில ஆண்டுகள்தானே? நானே, என் காலில் நிற்கிற தகுதி வந்ததும், நானாகவே அவர்க ளைத் தேடிப் போய்ச் சந்திப்பேன்! ஆனால் அதற்கு வழியில்லை என்றால் உயிரோடு வாழ்வது முடியாது.

அவளது பிடிவாதத்தைச் சாரதாவால் உணர முடிந் தது. கடலோ, தண்டவாளமோ என்பவளிடம் மேலே விவாதம் புரிய விருப்பமின்றி, ''இப்போது என்ன செய்யலாம் என்று இருக்கிறாய்?'' என்று கேட்டாள்.

''படிப்புக்கு எனக்கு உபகாரச் சம்பளம் இருக்கிறது. மற்ற செலவுக்கும் சேர்த்து உதவித் தொகை பெற வழி இருப்பதாக ஒரு நாள் சொன்னீர்கள். அது விவரம் சொன்னீர்களானால் என்னபாடு பட்டும் அதைப் பெற்று மேலே படிப்பை முடித்து விடுவேன். நல்லதாய் ஒரு வேலை தேடிக் கொண்டு, அதன் பிறகு அங்கே போய் ஒட்டுண்ணியாக வாழவோ, வேறு எந்தக் கீழ்த்தரமான வழியில் வளம் பெறவோ எனக்குச் சிறு சபலம் கூட இருந்தது இல்லை என்று அந்தப் பாட்டியம்மாளிடம் போய்ச் சொல்ல வேண்டும்'' என்றாள் மனோரஞ்சிதம் ஒரு வேகத்துடன்.

''பிறகு?''

''பி...பிறகு என்ன?'' என்று விழித்தவளைப் பார்க் கையில் சாரதாவுக்கு ஒரு புறம் சிரிப்பாகவும் இருந்தது. இன்னொரு பக்கம் பரிதாபமாகவும் இருந்தது. எந்த அளவு வேதனைப் பட்டிருந்தால் இந்தத் தீவிரம் தோன்

றும். குறிக்கோளை எட்டியபின் என்ன என்று தன் வாழ்வு பற்றி அவள் எண்ணிக்கூடப் பார்க்கவில்லையே!

மனோரஞ்சிதத்தின் உறுதி புரியவும் சாரதா தன் மாணவிக்கு உதவி செய்வதாக முடிவு செய்தாள்.

இதிலுள்ள சட்டப் பிரச்சினைகளும், சிக்கல்களும் அவள் அறியாதவை அல்ல. ஏன், விபசாரம் செய்வதற்காகச் சின்னப் பெண்ணைக் கடத்தி வந்தாள் என்று கூட அவள் மீது குற்றம் சுமத்த முடியும்தான். ஆனால், மனோரஞ்சிதத்தின் பேச்சிலிருந்தும், கடந்த ஆண்டு பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பின் போது சந்தானம் - தம்பதியைப் பார்த்ததை வைத்தும் யோசித்ததில் எந்த வித அனாவசியச் சிக்கல்களும் நேராது என்ற முடிவுக்கு வந்து, சாரதா மனோரஞ்சிதத்திற்கு தன் வீட்டிலேயே அடைக்கலம் கொடுத்தாள்.

மனோரஞ்சிதத்தின் விருப்பப்படியே மேற்கொண்டு கல்விக்கும், உதவித் தொகைகளுக்கும் ஏற்பாடு செய்து விட்டுக் காத்திருந்தாள்.

சாரதா எதிர்பாத்துக் காத்திருந்தது வீண் போகாமல், நாலு நாட்களிலேயே சந்தானம் அவளைச் சந்தித்தார்.

வீட்டில் வந்து சந்தித்து, மனோரஞ்சிதத்தின் முன்னிலையில் தடபுடல் அடிக்காமல், சாரதா வெளியே செல்லும் போது பார்த்து வந்து தனிமையில் சந்தித்ததே அவளுக்கு அவர் மீது ஒரு மரியாதையை ஏற்படுத்தியது.

விவரம் அறிந்த பிறகும், ''மனோ உங்களிடம் சொன்னதை விட அதிகமாகவும், ஏதோ நடத்திருக்கும் என்று தோன்றுகிறது. ...இருக்கட்டும் அவள் விருப்பம் போல எல்லாம் நடக்கட்டும். பண விஷயம் எவ்வளவு



தேவைப்படுகிறதோ, சொல்லுங்கள். மனோ அறியாமல் ரகசியமாகவே தருகிறேன். உதவித் தொகை கிடைத்ததாகவே அவளிடம் சொல்லி விடுங்கள்'' என்று சந்தானம் கூறவும் அவர் மீது சாரதாவுக்கு மதிப்பு அதிகரித்தது.

''பணம் பிரச்சினையில்லை, மிஸ்டர் சந்தானம். மெய்யாகவே அவளது செலவுக்குத் தேவையான பணம் அவ்வளவும் அவளது புத்திசாலித் தனத்தினாலேயே அவளுக்குக் கிடைத்து விடும். ஆனால் குடும்ப வாழ்வு....''

''என் வீட்டில் கிடைத்த குடும்ப வாழ்வு பிடிக்காமல் தானே டீச்சர், மனோ இந்த முடிவு எடுத்திருக்கிறாள்?'' என்றார் சந்தானம் கசப்பும் வருத்தமுமாக. ''அங்கேயிருந்து நசுங்குவதை விட, நசுங்கித் திடமிழப்பதை விட, அவள் சுதந்திரமாக, தைரியசாலியாக வளரட்டும். தன் தேவை உணர்ந்து, தானே முடிவெடுத்து, எடுத்த முடிவைச் செயல்படுத்தித் தன்னம்பிக்கையோடு உயரட்டும். நான் அவளைத் தேடி வந்தது, உங்களைப் பார்த்தது எதுவும் மனோவுக்குத் தெரியவேண்டாம் டீச்சர். தேவைப்பட்டபோது சாய்ந்து கொள்ளப் பின்புலம் ஒன்று இருப்பது தெரிந்தால், இந்தத் திடம் குறையக் கூடும். சிறு வயது காரணமாக ஏதாவது பெருந்தவறு நேரும் போலத் தோன்றினால், அப்போது நான் என்னை வெளிப்படுத்திக் கொள்கிறேன். ஆனால்... நீங்கள் கொஞ்சம் அவ்வப்போது மனோரஞ்சிதத்தைக் கவனித்துக் கொள்ள முடியுமல்லவா? ப்ளீஸ்...?'' என்று வேண்டினார்.

''நிச்சயமாய்...'' என்று சாரதா உறுதியளிக்கவே ஒருவாறு முகம் தெளிந்து திரும்பிச் சென்றார் சந்தானம்.

தொல்லை விட்டது எனத் தங்கம்மாள் திருப்தியுற, இந்த மனோரஞ்சிதம் எங்கே போய்த்தொலைந்திருக்கக் கூடும்! என்று இரண்டு நாள் யோசித்து விட்டு, தன் நண்பர் கூட்டத்திலும், விளையாட்டு, ஊர் சுற்றலிலுமாகக் குணாளனும் அவளைப் பற்றிய நினைவை விடுத்தான்.

மிகவும் துன்புற்றவள் கருணாகரிதான். வழக்கம் போல உள்ளேயே வைத்துக் குமைந்து விட்டு, ஒரு நாள் தாங்கமாட்டாமல் கணவரிடம் கண்ணீர் விட்டாள். ''இந்த ஊரைப் பற்றி என்னென்னவோ சொல்கிறார்களே! எங்கே போய், எப்படி மாட்டிக் கொண்டாளோ தெரியவில்லையே! என்று அரற்றி அழுதாள்.

''என்னம்மா நீ!'' என்றார் சந்தானம். ''போயிருப்பவள் நீ வளர்த்த பெண். தைரியசாலி! முட்டாளும் அல்ல. அப்படி ஒன்றும் தகாத இடங்களுக்குச் சென்று அசடு போல மாட்டிக் கொள்ள மாட்டாள். உண்மையில் அவள் சென்றிருக்கும் இடம்...'' என்று தொடங்கி, அன்று மாலை தான் அறிந்து வந்ததை உரைத்தார்.

பிரிவுத் துயர் தாளாமல், உடனே போய் அவளை அழைத்து வந்து விடுமாறு கருணாகரி வேண்டவும் இவளிடம் சொன்னது பிசகோ என்று அவருக்குத் தோன்றியது.

மனோரஞ்சிதத்தின் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்து அவளை அணுகாமல் தான் ஒதுங்கி வந்த காரணத்தைப் பொறுமையோடு மனைவியிடம் விளக்கினார். ''இங்கே இருந்தால் எப்படியும் அம்மா அவளை உடைத்து விடுவார்கள். அழுத்தமாக ஓர் அடி எடுத்து வைக்கத் தொடை நடுங்கும் உன்னைப் போல அல்லாமல், அவள் சற்றுத் தைரியத்துடன்தானே வளரட்டும்''



என்று அழுத்தமான குரலில் அவர் கூறவும் அதற்குமேல் கருணாகரி வாயை மூடிக் கொண்டாள்.

கணவனிடம் கூடத் தன் விருப்பத்தைக் குரல் உயர்த்திச் சொல்ல அஞ்சி நடுங்கும் அவளைப்போல அவளுடைய 'ரஞ்சிம்மா' வளரவேண்டாம்தான்!

இந்தப் பிரிவின் வேதனை கருணாகரியைப் போலவே மனோரஞ்சிதத்திற்கும் இருக்கத்தான் செய்தது. அப்படி மனம் ஏங்கும் வேளைகளில் 'அங்கிள் என்னைத் தேடினாரா இல்லையா? தேடாமல் அவரால் எப்படி இருக்க முடியும்? ஒருவேளை... என்ன இருந்தாலும் தங்கம்மாள் பாட்டி, அவருடைய தாய், நிம்மதியாக இருந்தால் போதும் என்று சும்மா இருந்து விட்டாரோ என்று அவள் மனம் பேதலிக்கும். சந்தானம் சாரதாவிடம் பேசிப் போனது தெரியாததால், அவர் தன்னை விட்டு விட்டதாகவே எண்ணித் துடிப்பாள். கூடவே, நல்ல வேளை அவர் தன்னைக் கண்டு கொள்ளவில்லை என்று நிம்மதியும் பெறுவாள். அத்தோடு வயதான தாயின் அமைதியைப் பேணுவது மகனின் கடமைதானே என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொள்வாள்.

பதினேழு வயதுக்கு, மனோரஞ்சிதத்திற்கு அனுபவ முதிர்ச்சி சற்று அதிகம்தான் என்றபோதும், அந்த இள வயதுக்குரிய பேதலிப்புகளும் இருந்தன. எனவே, தானாகவே அந்த வீட்டை விட்டு வெளியேறி வந்திருந்த போதும், ஒரே ஊரில் இருந்து கொண்டு, கருணாகரி, சந்தானத்தைப் பாராமல் இருக்கப் பெரும்பாடுபட்டுப் போனாள்.

அந்தச் சிறு பெண்ணின் துன்பத்தைச் சாரதாவால் உணர முடிந்தது. எனவே, அவளது மேல்படிப்புக்கு அவளே வெளியூர்களிலேயே முயன்று கொண்டிருந்

தாள். மனோரஞ்சிதம் வாங்கியிருந்த மதிப்பெண்கள் னால், அவளுக்குக் கோவை, திருச்சி, மதுரை என்ற பல ஊர்களில் உள்ள கல்லூரிகளில் இடமும் கிடைத்தது

எந்தக் கல்லூரி என்று யோசித்துக் கொண்டிருந் போது, அந்தக் குழப்பமும் தானாகவே தீர்ந்தது.

சாரதாவுக்குக் கோவையில் ஓர் உயர்நிலைப்பள்ள யில் தலைமை ஆசிரியையாகப் பொறுப்பேற்கும்ப அழைப்பு வந்தது.

சாரதா இருக்கும் இடத்தில்தான் மனோரஞ்சிதமு இருந்தாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்ற லும், தெரிந்த ஒருவராவது இருக்கும் ஊரில் தங்கிப படிப்பது மேல் என்று மனோரஞ்சிதம், சாரதா இருவரு குமே தோன்றியது. ரகசியத்தில், சந்தானமும் அவ்வாறே அபிப்பிராயப்பட்டார்.

கோவைத் தங்கலும் படிப்பும் மனோரஞ்சிதத்தி குப் பலவிதங்களிலும் நன்மையாக இருந்தது.

கோவை அருகே பொள்ளாச்சியில் சாரதாவுடைய பெரிய தங்கை இருந்தாள். விடுமுறை நாட்களில் அவளு டைய பிள்ளைகள் பெரியம்மா வீட்டுக்கு வருவார்கள் அப்போதெல்லாம் மனோரஞ்சிதத்தையும் சாரதா வீட் டுக்கு அழைத்துக் கொள்ள, சம வயதுப் பிள்ளைகளோடு கொட்டமடிக்கும் வாய்ப்பு மனோரஞ்சிதத்திற்குக் கிடைத் தது.

கல்லூரிப் படிப்போடு, மாலையில் கம்ப்யூட்டர் பயிற்சிக்கும் வசதியிருந்தது.

ஐந்து ஆண்டுகள் பறந்து சென்றன.



முதுநிலைப் பட்டப்படிப்புடன் அவள் கம்ப்யூட்டர் கல்வியிலும் சிறப்புத் தகுதி பெறவே, கல்லூரி வளாகத் தேர்விலேயே எடுத்த எடுப்பில் மாதம் பத்தாயிரம் ரூபாய் வருமானத்தில் பெரிய வேலை ஒன்றும் அவளுக் குக் கிடைத்தது.

மனோரஞ்சிதம் எண்ணிவந்த காரியம் சற்றும் குறைவு படாமல் நடந்தேறிவிட்டது. ஐந்து ஆண்டுக் கடும் உழைப்பு, அவள் கோரிய பலனை முழுமையாகத் தந்து விட்டது.

இனி, சென்னை சென்று பாட்டியம்மாளிடமும், குணாளனிடமும் 'தன்னிலை' உணர்த்தி விட்டுத் திரும்ப வேண்டியதுதான்.

திரும்பிவிட வேண்டும் என்பதில் மனோரஞ்சி தத்தை விடவும், தீவிரமாக இருந்தவன் மோகன் - சாரதாவுடைய தங்கையுடைய மூத்த மகன். கொஞ்ச காலமாக, அவன் மனோரஞ்சிதத்தைப் பார்க்கும் பார் வையில் வேறுபாடு இருந்தது.

மோகனுக்கும் வேலை கோவையில்தான். அவனுக் கும் நல்ல சம்பளம். இருவரும் சேர்ந்து பணக்கார வாழ்வே வாழமுடியும்.

எனவே, சென்னைக்குச் சென்று, தங்கம்மாளிடமும் குணாளனிடமும் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டு, கருணாகரி - சந்தானத்திடம் ஆசி பெற்றுக் கொண்டு கோவைக்கே திரும்பி வரவேண்டியதுதான். மகளின் திருமணத்துக்காகப் பணத்தை மட்டும் சேர்த்துக் கொண்டிருக்கும் அவளுடைய தந்தை வந்திருந்தால்... பணத்தோடு அவரையும் அழைத்துக் கொண்டு கோவைக்குத் திரும்பவேண்டும். அவர் வரவில்லை

என்றால், அவரது பணம் மட்டும்தான் அவளுக்கு என்றால், அந்தப் பணம் அவளுக்குத் தேவையில்லை.

ரொம்பவும் அதிகமாக ரோஷப்படுகிறோமோ என்ற எண்ணம் அவ்வப்போது மனோரஞ்சிதத்திற்கு உண்டாவதுண்டு.

ஆனால், சுமார் பதினேழு ஆண்டுகளாக - கடைசி ஐந்து ஆண்டுகளை விட்டு விட்டாலும் ஆறு ஆண்டு காலம், 'எப்படியம்மா இருக்கிறாய்?' என்று ஒரு வரி எழுதி நலம் விசாரிக்கக் கூட மனம் இல்லாதவரின் பணத்தை மட்டும் எப்படி வாங்கிக் கொள்வது?

சரி. அம்மாவின் பிரதி பிம்பம் போல இருப்பதால் பார்த்தாலே வேதனை என்று அவளைச் சந்திக்க வர வில்லை; விட்டு விடலாம். ஒரு கடிதம் எழுதினால், அதில் கூடவா அம்மாவின் நினைவு பொத்துக் கொண்டு வந்து விடும்? பாசம் இருந்தால் இப்படி அடியோடு பிரிந்து இருக்க முடியுமா? பெற்ற கடனுக்காக மட்டும் அவர் அனுப்புகிற பணத்தை, ஈ என்று இளித்துக் கொண்டு பெற்றுக் கொள்ள, அவள் ஒன்றும் தன்மானம் இல்லாதவள் அல்ல!

தன் சபத நிறைவேற்றத்துக்காக மனோரஞ்சிதம் சென்னைக்குக் கிளம்பியபோது, மோகனும் உடன் கிளம் பினான்.

''எனக்கு ஒன்றும் துணை அவசியமில்லை. தனியா கவே போய்வர என்னால் முடியும்'' என்று அவள் ஆட்சேபித்தபோது, ''துணை உனக்கல்ல'' என்றான் அவன்.

''பின்னே?''



''அவர்களுக்குக் காட்டுவதற்கு. முன்போலத் திக் கற்றவள் என்று எண்ணிக் கண்டபடி பேசும் தைரியம் அந்த வீட்டில் யாருக்கும் வரக்கூடாது என்பதற்காகத் தான் இந்த ஏற்பாடு!''

மனோரஞ்சிதத்துக்குச் சிரிப்பு வந்தது. ஏற்பாடு அவனுடைய பெரியம்மா சாரதாவினது என்பது நன்றா கப் புரிந்தது. ஏனெனில் மோகனுக்கு கோபமாகப் பேசவே வராது. இவன் அழுத்தமும் அதட்டலும் காட்டு வது நிலா நெருப்புக் கதிர் வீசுவது போலத்தான்!

ஆயினும் அவன் அதைச் சொன்ன விதம், மனதைத் தொட்டுவிட, அவனும் கூட வர மனோரஞ்சிதம் சம்மதித் தாள்.

படிப்பு, பட்டங்களின் சான்றிதழ்கள், வேலைக்கான உத்திரவு எல்லாவற்றையும் குணாளனுக்கும், பாட்டிக் கும் காட்டுவதற்காக எடுத்து வைத்தாள். என்னென்ன பேசுவது என்று உருப் போட்டாள்.

இத்தனை முஸ்தீபுகளுடனும், சென்னை சென்று 'வெயிட்டிங்' ரூமிலேயே குளித்து சுத்தம் செய்து கொண்டு, புத்துணர்ச்சியும், பளிச்சென்ற தோற்றமுமாகச் சென்றால், மனோரஞ்சிதம் பேச வாய் திறக்குமுன்பா கவே தங்கம்மாள் அவளை ஆத்திரமாக நோக்கி, ''கடன் காரி நினைத்தது போல கரெக்டாக வந்து விட்டாயே!'' என்றாள் வெறுப்புடன்.

உள்ளே திரும்பிப் பேரனை அழைத்தாள். ''ரா ஜாம்மா, இங்கே வந்து பார்! பிணந்தின்னிக் கழுகுக்குச் சரியாக மூக்கிலே வியர்த்து, காசுக்குப் பறந்து கொண்டு வந்து விட்டது, பாரேன்! நான் சொன்னது சரியாகி விட்டதில்லையா?'' என்றாள் எகத்தாளமாக.

பாட்டியின் அழைப்புக்கிணங்க உள்ளிருந்து வந்து, மனோரஞ்சிதத்தை ஏற இறங்கப் பார்த்த குணாளனின் முகம், அவனுடைய பாட்டியின் உணர்ச்சிகளை அப்ப டியே பிரதிபலித்தது.

## 9

மனோரஞ்சிதம் அந்த வீட்டை விட்டு வெளியேறிய போதே குணாளன் நெடு நெடுவென்று நல்ல உயரமாகத் தான் இருந்தான். ஆனால் ஒல்லி ஒடிந்து விழுகிற மாதிரி ஒல்லி.

இப்போது அந்த மெலிவு மாறி உயரத்துக்கேற்ற உடல் கட்டுடன் நிதானமாக வந்து, மார்பின் குறுக்கே ஓர் அழுத்தத்துடன் கை கட்டியபடி நின்ற குணாளனைக் கண்டதும் அவளுக்கு ஒரு திகைப்பு உண்டாயிற்று.

அவனது உதட்டோரத்து ஏளனப் பிதுக்கலைக் கண்டு உள்ளூர மனோரஞ்சித்ததிற்கு ஓர் வலியும் ண்டா யிற்று.

இவனுக்கு இன்னமும் பழைய அபிப்பிராயம் தானா?

வந்தவளின் நிலைமை பற்றி ஒருவிதக் கவனமும் இல்லாமல், ''கடவுளே, கடவுளே! எல்லா அநியாயங் களையும் பார்த்துக் கொண்டு சும்...மா இருக்கிறாயே! ஏண்டி, சும்மாவே நாங்கள் படுகிற வேதனை போதாதா? தாயாதி மாதிரி நீ வேறு பங்குக்கு வந்து நிற்க வேண்டு மா?'' என்று தங்கம்மாள் ஒரு தரம் தலையில் அடித்துக் கொண்டாள்.



பொறுக்கமாட்டாமல், ''ஏன் பாட்டி, உங்களுக்கு ஏன், என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை? எதற்காக உங்களுக்கு என்மேல் இந்த வெறுப்பு?'' என்று ஆத்திர மாகக் கேட்டாள் மனோரஞ்சிதம்.

வரட்டும்; எல்லாம் இவர்கள் வாயில் இருந்தே வரட்டும். அத்தனையும் தப்பு என்று ஐயம் திரிபற நிரூபித்து விட்டுப் போகலாம்...

ஏதோ சொல்ல வாயெடுத்த பாட்டியைத் தலைய சைத்துத் தடுத்து விட்டு, குணாளன் பேசினான். ''ஏன் வெறுப்புன்னா கேட்டாய்? தைரியம்தான் உனக்கு. வெறுக்காமல் பிரியமாயிருக்கும்படியாகவா நீ நடந்து கொண்டிருக்கிறாய்? நான் கூட, பாட்டி சொன்னதை அவ்வளவாக ஒத்துக் கொள்ளாமல்தான் இருந்தேன். ஆனால் பாட்டியின் பேச்சு நூற்றுக்கு நூறு சரி என்றுதான் நன்றாக நிரூபித்து விட்டாயே!'' என்றான் கசப்பும் வெறுப்புமான குரலில்.

முன்பிருந்த அவசரமும், அலட்சியமும் மாறி, குணாளனின் குரலில் அழுத்தமும் தெளிவும் இருந்தன. முன்போலக் கோபத்தைக் காட்ட அவன் குரல் உயர்ந்து உச்சத்துக்குப் போகவில்லை. ஆனால் அவனது அமர்ந்த குரல், அவனது உணர்ச்சிகளை இருமடங்காக்கிக் காட்டு வது போல மனோரஞ்சிதம் உணர்ந்தாள்.

குணாளனின் தோற்றத்தில், குரலில் இவ்வளவு மாற்றங்களை அவள் கண்டு கொண்டாளே; அவளிடம் ஏற்பட்டிருக்கும் மாறுதல்கள் அவன் மனதில் பட்டிருக் குமா?

எங்கே? அப்படி ஏதாவது உணர்ந்திருந்தால் இப்ப டிப் பேசுவானா? என்று நிராசையுடன் நினைத்தவளின்

தோளைத் தொட்டு, மோகன் அழைத்தான். ''மனோ, இங்கே நிலவரம் எதுவும் சரியாக இருப்பதாகத் தெரிய வில்லை. வாயேன்; போய்விடலாம். இவர்கள் என்ன நினைத்து எப்படிப் போனால் உனக்கு என்ன?'' என்று சின்னக் குரலில் வினவினான்.

மறுப்பாய் தலையசைத்து நகர்ந்து நின்றாள் மனோ ரஞ்சிதம். ''நிரூபித்து விட்டேன்; நிரூபித்து விட்டேன் என்று கீறல் விழுந்த ரிக்கார்டு மாதிரி இருவரும் சொல் லிக் கொண்டே இருக்கிறீர்களே தவிர, அப்படி என் னத்தை நிரூபித்தேன் என்பதை மட்டும் சொல்லவே மாட்டேன் என்கிறீர்களே! ஒருவேளை என்னதான் தூண் டித் துருவினாலும் என்மேல் ஒரு குற்றத்தையும் கண்டு பிடிக்க முடியவில்லையோ!'' என்று மிடுக்காகக் கேட் டாள்.

ஒரு கணம் குணாளனின் கண்களில் கடும் சீற்றம் தென்பட்டது.

இவன் தன்னை அடித்தே விடப் போகிறானோ என்று மனோரஞ்சிதம் துணுக்குற்றபோது, ''திமிரா?'' என்று சீறியதோடு குணாளன் தன்னை அடக்கிக் கொண் டான். அவளை நேராக நோக்கி, ''பாம்பு சட்டையை உரிக்கிற மாதிரி; பழைய அப்பாவித் தோற்றத்தைக் களைந்து விட்டு வந்திருக்கிறாய் என்று தெரிகிறது. நீ குற்றமற்றவள் என்றால் என் அம்மா - அப்பாவிடம் உண்மையான அன்பு உனக்கு இருந்திருந்தால், இந்த ஐந்து ஆண்டுகளில் அவ்வப்போது அவர்களைக் காண வந்திருப்பாயே! அப்படி ஒரு தரம் கூட வராதவள், சரியாக இப்போது வந்திருக்கிறாய் என்றால், இதிலி ருந்தே தெரியவில்லையா?'' என்றான் அவன் பழைய அமர்ந்த குரலிலேயே



''தெரியாமல்தானே - என்னுடைய முட்டாள் மூளைக்கு எதுவுமே புரியாமல்தானே திரும்பத் திரும்ப உங்களிடம் கேட்டுக் கொண்டு இருக்கிறேன்? நீங்களும் உங்கள் பாட்டியும் அதிபுத்திசாலித்தனமாகக் கண்டு பிடித்த - அதிலும், சரியாக இப்போது வந்ததாலேயே நிரூபிக்கப்பட்டு விட்ட என் குற்றம் என்ன என்பதை - அப்படி ஒன்று இருந்தால் அதை முதலில் சொல்லுங் கள்! பார்க்கலாம்!'' என்றாள் மனோரஞ்சிதம் ஏளனமும் கோபமுமாக.

''நல்...ல நடிப்பு!'' என்று குணாளன் தொடங்கிய போது, ''ரஞ்சிம்மா!'' என்ற மெலிந்த குரல் ஒன்று இடையிடவும், குரல் வந்த திக்கை ஏறிட்டாள் மனோரஞ் சிதம். மீண்டும் திகைத்துப் போனாள்.

அந்த அறையின் ஒருபுறமாய் அமைந்திருந்த மாடிப் படியில் பாதியளவில் இருந்த வளைவான திருப் பத்தில் மாடிப்படி 'கிரில்'லின் கைப்பிடியின் தாங்கல் இல்லாவிட்டால் கீழே விழுந்து விடுவாள் போல அதைப் பிடித்துக் கொண்டு நின்ற மெலிந்த கறுத்த உருவம், மெய்யாகவே அவளுடைய அழகிய கருணாகரி ஆன்ட் டிதானா?

''நீங்கள் ஏனம்மா இறங்கி வந்தீர்கள்?'' என்றபடி தாயை நோக்கிக் குணாளன் இரண்டு எட்டு எடுத்து வைக்குமுன், ''ஆன்ட்டீ!'' என்ற கூவலுடன் மனோரஞ்சி தம் பாய்ந்தோடிப் போய்க் கருணாகரியை அணைத்துக் கொண்டாள்.

''ஜாக்கிரதை! இரண்டு பேருமாகப் படியில் உருண்டு விடாதீர்கள்!'' என்று சிறு எரிச்சலுடன் எச்ச ரித்த படி குணாளன் மாடிப் படியை அணுகினான். அதற்குள்ளாகவே திருப்பத்தில் நெருக்கமாயிருந்த படி

களை விட்டு சற்று விசாலமாயிருந்த பகுதிக்குக் கருணாக ரியை அணைத்தவாறே விலகிச் சென்றிருந்தாள் மனோ ரஞ்சிதம்.

''ரஞ்சிம்மா...'' என்று விசாரித்தபடி, அவளது தோளில் ஒண்டிக் கொண்ட கருணாகரியை கண்களில் கசிவுடன் ஆறுதலாக வருடிக் கொடுத்த சின்னவளுக்குத் திடுமெனச் சுரீரென்றது.

கருணாகரியின் மெல்லிய கழுத்தில், விரல் பரும னில் கிடக்கும் கனமான பதினைந்து பவுன் தாலிச் சங்கிலி எங்கே?!

நெஞ்சுக்குள் சில்லிட, ''ஆன்...ட்...டீ?'' என்று சற்றே தலையைப் பின்னே தள்ளிக் கருணாகரியின் முகத்தை ஆராய்ந்த மனோரஞ்சிதம், அங்கே இருக்க வேண்டியதைக் காணாமல், கலங்கி, ''ஆன்ட்டீ...!'' என்று வீரிட்டாள்.

அப்போதும் நம்பமாட்டாமல், குணாளனைக் கேள் வியாய் ஏறிட்டாள்.

தன் பயங்கரமான ஊகம் தவறு என்று அவன் சொல்லி விடமாட்டானா என்ற தவிப்பு அவளுக்கு... ஆனால், தங்கம்மாள், 'சும்மாவே படுகிற வேதனை' என்று என்னவோ சொன்னாளே!

அவளது தவித்த பார்வைக்கு, எந்த விதப் பதிலும் சொல்லாமல், குணாளன் தன் வரண்ட முகத்தைத் திருப் பிக் கொள்ளவும் அவளுக்கு இடி விழுந்தாற்போல் ஆயிற்று.

அதற்குள், அவளுக்குக் கொஞ்சம் நஞ்சம் மிச்ச மிருந்த நம்பிக்கையும் அழிந்து விடும்படி, ''ரஞ்சிம்மா,



உன் மாமா... உன் மாமா... என்னைத் தனியே தவிக்க விட்டு விட்டுப் போ...போய் விட்டாரே...'' என்று கதறத் தொடங்கிய கருணாகரி, இரண்டு கேவல்களுக்குள் அப் படியே தொய்ந்தாள்.

உடலில் கனத்தை உணர்ந்து மனோரஞ்சிதம் அவ ளைக் கீழே விழுந்து விடாமல் இறுகப் பற்றினாள்.

அதற்குள்ளாக, இதுவே வழக்கம் என்பது போல, குணாளன் வேகமாக, இரண்டுபடிக்கு ஒரு காலாக வைத்து, அவர்களை நெருங்கித் தாயாரைக் கைகளில் ஏந்தினான்.

பெற்றவளைத் தூக்கிக் கொண்டு அவன் படியேற முயன்றபோது, அந்த அரை உணர்விலும் கருணாகரி, மனோரஞ்சிதத்தின் கையை இறுகப் பற்றியிருப்பது தெரிந்தது.

தயங்கி நின்றவளிடம், ''கூட வருவதுதானே?'' என்று எரிந்து விழுந்து விட்டுக் குணாளன் படியேறவும், மனோரஞ்சிதமும் மறுபேச்சின்றி உடன் சென்றாள்.

அன்னையின் அறையை அடைந்ததும், அவளைக் கட்டிலில் கிடத்தி விட்டு, மின் விசிறியை ஓட விட்டு விட்டு பெரும்பாலும் சாத்தியிருந்த ஜன்னல்கள் அத்த னையையும் திறந்து வைத்தான்.

அருகில் கிடந்த மேஜை ஒன்றின் மீதிருந்த பிளாஸ்க்கை எடுத்து அதிலிருந்த பழச்சாற்றைத் தம்ள ரில் ஊற்றி எடுத்து வந்து, ''அம்மா அம்மா!'' என்று தாயின் கன்னங்களைத் தட்டி எழுப்பிக் குடிக்க வைத் தான்.

விழிகள் களைப்புடன் அலைபாய, ''மனோ...'' என்று அவள் பலவீனமாய் முனகவும், ''எல்லாம் இங்கே தான் இருக்கிறாள்; உங்களை விட்டு அவள் எங்கேயும் போய்விடமாட்டாள், கவலைப்படாமல், சற்று நேரம் கண்களை மூடிக் கொண்டு படுத்திருங்கள்'' என்று குணாளன் சற்று அதட்டலாகக் கூறவும், தாயார் அந்தக் குரலுக்குப் பணிந்து, பேசாமல் கண்களை மூடிக் கொண் டாள்.

ஆனால், பற்றிய கரத்தை விடவும் இல்லை.

ஒரு நிமிடம் நின்று பார்த்து விட்டு, குணாளன் அறையை விட்டு வெளியே சென்றான்.

தன்னை இறுகப் பற்றியிருந்த கருணாகரியின் கையைத் தன் மறு கையால் மெல்ல வருடிக் கொடுத்தபடி மனோரஞ்சிதம் கட்டில் அருகே கிடந்த நாற்காலியில் அப்படியே அமர்ந்திருந்தாள்.

சந்தானம், இந்த உலகத்தில் இல்லை என்றால் அதை அவளால் நம்பக்கூட முடியவில்லை.

சந்தானத்தை அவள் கடைசியாகப் பார்த்தது நினைவு வந்தது. அப்போதே அவர் மெலிந்து தோன்றிய தும் நினைவு வந்தது.

அப்போதும் இப்படியாகும் என்று மனோரஞ்சிதம் எண்ணவில்லையே! காய்ச்சலில் கிடந்து எழுந்திருந்தி ருப்பார் என்றல்லவோ நினைத்தாள். இப்படியாகும் என்று அவளுக்குச் சற்றேனும் தெரிந்திருக்கவில்லையே!

தெரிந்திருந்தால் எது எப்படியும் ஆகட்டும் என்று துணிந்து அவரிடம் போய்ப் பேசியிருப்பாளே!



ஒருநாள் கூட, அவளைக் கடிந்தொரு வார்த்தை சொல்லி அறியாதவர்!

நல்ல கல்வி நல்கி, பெற்ற தந்தையைக் காட்டிலும் அவளுக்கு அதிக நன்மை புரிந்தவர்.

சினேகிதர் என்றாரே... அங்கிள், மனோரஞ்சிதத்து டைய தந்தைக்கு இந்த அரிய நண்பரின் மறைவு பற்றித் தெரியுமா?

ச்சு! பெற்ற மகளைப் பற்றியே அக்கறை இல்லாத வர், இரத்தத் தொடர்பற்ற நண்பரைப் பற்றித்தானா கவலைப்பட்டுவிடப் போகிறார்?

தந்தையின் நினைவு ஒதுங்கிப் போய்விட சந்தானத் தின் நினைவில் அவளுக்குக் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

பெரியதாகத் திரண்ட நீர் மணிகள் கன்னங்களின் வழியே உருண்டு மடியில் விழுந்து சிதறித் தெறிக்கவும் மனோரஞ்சிதம் திடுக்கிட்டாள். இப்படித் தெறிக்கும் கண்ணீர் கருணாகரி மேலும் பட்டு விட்டால்?

அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தால், அவளையே பார்த்தபடி படுத்திருந்த கருணா கரியின் கண்களிலிருந்தும் நீர் வடிந்து கொண்டிருந்தது.

''ஆன்ட்டீ!'' என்று அவசரமாக எழுந்து, கட்டில ருகே மண்டியிட்டு, கருணாகரியை மென்மையாக வரு டிக் கொடுத்தாள் மனோரஞ்சிதம்.

சின்னவளின் கையைப் பற்றி முகத்தின் மேல் வைத்துக் கொண்டு அழுகையில் கருணாகரி குலுங்கி னாள்.

சற்றுமுன், அழுகை வேகத்தில் அவள் சோர்ந்தது நினைவு வர, அவளைத் தேற்ற முயன்றாள் மனோரஞ்சிதம்.

தேற்றும் முகமாக அவள் சொன்னவற்றுள், ''வேண்டாம், ஆன்ட்டி, நீங்கள் அழுவதை 'அங்கிள்' தாங்கமாட்டார். எங்கோ இருந்து பார்த்துக் கொண்டுதானே இருப்பார். உங்களைத் தேற்றவும் முடியாமல் அவர் மனம் என்ன பாடுபடும்?'' என்றது கருணாகரியின் மனதில் பட, அவளது கண்ணீர் மெல்லக் குறைந்தது. ''என்னால் தாங்க முடியவில்லை, ரஞ்சி இந்தத் தனிமை... வேதனையை மனம் விட்டு, வாய் விட்டுச் சொல்ல ஒரு ஜீவன் கூட இல்லாத இந்த நிலைமை... அய்யோ...! அவர் என்னையும் கூட்டிப் போயிருக்கலாம், மனும்மா...'' என்று அவள் அரற்றியபோது, பாதி வார்த்தைகள் வெறும் காற்றாய்த்தான் வெளிவந்தன.

மாடிப் படியில் காலடிச் சத்தங்கள் கேட்கவும், கருணாகரி அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொள்ள, மனோரஞ்சிதமும் முகத்தைத் துடைத்துக் கொண்டு, பழையபடி நாற்காலியில் அமர்ந்தாள்.

ஒரு பையனும், சமையல்கார அன்னம்மாளும் தொடர, கையில் தண்ணீர் பாட்டிலுடன் வந்தவன் குணாளன்தான்.

சற்றுத் தொலைவில் கிடந்த சிறு மேஜையைக் குணாளன் இழுத்துப் போடும்போது அவசரமாகவும் ஆவலாகவும் நோக்கிய அன்னம்மாளுக்குப் பதிலாக லேசாக முறுவலிக்க முயன்றாள் மனோரஞ்சிதம்.

அதற்குள் குணாளன் மேஜையை இழுத்துப் போட்டு விட, எடுத்து வந்திருந்த இரு தட்டுகளையும்,



மற்ற உணவுப் பொருட்களையும் மேஜை மேல் வைத்து விட்டு, அன்னம்மாளும் பையனும் அகன்றனர்.

''கை கழுவத் தண்ணீரும் கிண்ணத்திலேயே இருக்கிறது. இருவரும் சாப்பிடுங்கள்'' என்றவன் தாயின் தலைப்பக்கமாய் நின்று மனோரஞ்சிதத்தைப் பார்த்தபடி, ''அம்மா, நீங்கள் காலையில் ஒன்றுமே சாப்பிடவில்லை. இப்போதாவது நல்லபடியாகச் சாப்பிடுங்கள்'' என்றான். ''நீயும் இங்கேயே சாப்பிடு, மனோரஞ்சிதம்'' என்றான் தொடர்ந்து.

அவனுடைய தாயாரைச் சாப்பிட வைக்கும்படி தனக்குக் கட்டளையாக்கும் என்று உள்ளூரப் புகைந்த போதும், கருணாகரி காலையில் பட்டினி என்றதும் மனோரஞ்சிதத்தின் மனம் உருகிப் போயிற்று.

ஆயினும் குணாளன் முன்னிலையில் உடனே பணிந்து காட்ட விருப்பமின்றி, அவனை வெறித்து நோக்கினாள். இவனுக்கு மட்டும்தான் குறிப்பு காட்டத் தெரியுமா, என்ன?

அவளது பார்வையைச் சரியாகவே படித்து, குணாளன் அங்கிருந்து விலகி அடுத்த அறைக்குள் சென்று விட்டான்.

முன்னொரு காலத்தில் அவளது அறையாக இருந்த இடம்! இப்போது அதை யார், எப்படிப் பயன்படுத்துகிறார்களோ என்று ஓடிய மனதைக் கட்டுப்படுத்தி, கருணாகரியைச் சாப்பிட வைப்பதில் முனைந்தாள் அவள்.

''நீங்கள் பட்டினி கிடந்தால் மாமாவுக்குப் பிடிக்குமா?'' என்ற பழைய தந்திரம் பயனற்றுப் போனது.

''அவர் பல ஆண்டுகளாகவே சரியாகச் சாப்பிடவே இல்லை, மனோ. முதலில் உன்னை இங்கே சரியாகச் சாப்பிட விடவில்லை என்று. அப்புறம் தன் சினே... சி...னேகிதர்கள் சிலரை நினைத்து, அவர்களுக்குச் சரியான சாப்பாடு இல்லை, நான் மட்டும் எப்படிச் சாப்பிடுவது?'' என்று பட்டினி கிடந்தார். ஆனால், உயிரே ஒடுங்கும் அளவுக்குப் போயிருக்கிறார்; நான் கவனியாமலே இருந்து விட்டேனே, பாவி! எனக்கெல்லாம் சாப்பாடு ஒரு கேடா?'' என்று மருகினாள் கருணாகரி.

சற்றுத் தயங்கி விட்டு, ''இல்லையே! எனக்கு நன்றாக நினைவிருக்கிறதே! நீங்கள் எப்போதும் அங்கிளை இதைச் சாப்பிடுங்கள், அதைச் சாப்பிடுங்கள் என்று கெஞ்சிக் கொண்டேதானே இருப்பீர்கள்? அதற்கு மேல் உங்களையே ஏன் குற்றம் சொல்லிக் கொள்கிறீர்கள்? ஆன்ட்டீ, குதிரையைத் தண்ணீர் அருகில் கொண்டு நிறுத்துவது மட்டும்தான் நம்மால் ஆன காரியம். அதற்கு மேல், தண்ணீரைக் குடித்துத் தாகம் தீர்த்துக் கொள்வது, அதன் வேலையல்லவா?'' என்று மனோரஞ்சிதம் வாதாடினாள்.

ஆனால், ''அதேமாதிரி நினைத்து, என்னையும் விட்டு விடேம்மா'' என்று கருணாகரி மெலிந்த குரலில் கூறவும் அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

சற்று நேரம் விழித்து விட்டு, ''பெரிய ஆள்தான், 'ஆன்ட்டீ' நீங்கள்! நான் சொன்னதை வைத்தே என்னை மடக்குகிறீர்களா? ஊகூம் நான் ஒன்றும் உங்களை விடப் போவது இல்லை!'' என்றவள், மூடித் தட்டைத் தூக்கிப் பார்த்து விட்டு, ''அப்பா! அன்னம்மா சமையல் ஆளைத் தூக்குகிறது. ஐந்து ஆண்டுகள் இந்தச் சாப்பாடு



இல்லாமல் எப்படித்தான் இருந்தேனோ, தெரியவில்லை! இங்கே வருகிற பரபரப்பில் காலையில் கூடச் சரியாக உண்ணவில்லை!... என்று இழுத்தாள்.

''நீ சாப்பிடு, கண்ணு...''

''அதெப்படி? உங்களைப் பார்த்தால் மாதக் கணக்கில் பட்டினி கிடந்தது போல் தெரிகிறது! உங்களை விட்டு விட்டு நான் மட்டும் சாப்பிடுவேனா? நான் என்ன அவ்வளவு சுயநலவாதியா? ஊகூம். நீங்கள் சாப்பிடாமல் நான் ஒரு பருக்கைகூடத் தொடப் போவதில்லை; நீங்கள் உண்ணும் அளவுக்கு மேல் எதையும் தின்னப் போவதும் இல்லை. காட் பிராமிஸ்!'' என்று சத்தியம் செய்தாள் மனோரஞ்சிதம்.

''ஐயோ! என்ன பெண்ணம்மா நீ? இதற்கெல்லாம் சத்தியமா? விட்டேன் என்று சொல்லு'' என்று விரட்டி விட்டு, ஒரு பெருமூச்சு விட்டாள் கருணாகரி. பிறகு, மெல்லிய குரலில், ''வா, சாப்பிடலாம்'' என்றாள்.

மனமற்ற செயல் என்பதால், உணவைச் சுவைப்பதும், விழுங்குவதும் கூடக் கருணாகரிக்குச் சிரமமாகவே இருந்தன. அவளது துன்பத்தை மனோரஞ்சிதத்தால் புரிந்து கொள்ளவும் முடிந்தது. ஏனெனில், அன்னம்மாள் தன் வழக்கம்போல உணவை நேர்த்தியாகவே தயாரித்திருந்த போதும், மனோரஞ்சிதத்திற்கும் மரத்தூளை விழுங்குவது போல உண்பது அன்று சிரமமாகவே இருந்தது

ஒருவாறு இருவரும் சாப்பிட்டு முடித்த சிறிது நேரத்திற்கெல்லாம் குணாளன் உள்ளே வந்தான். சில மாத்திரைகளைப் பிரித்து தாயிடம் கொடுத்தான்.

''டிராங்குவலைசரா? நான் கொஞ்சம் மனோரஞ்சிதத்திடம் பேசிக் கொண்டு இருக்கிறேனே?'' என்று சற்றுக் கெஞ்சுதலாகவே கருணாகரி மகனிடம் கேட்டாள்.

''அவள் எங்கே போய்விடப் போகிறாள். நீங்கள் முதலில் தூங்குங்கள். பிறகு அவளிடம் பேசலாம்'' என்று மாத்திரை விழுங்கத் தாயாருக்குத் தண்ணீர் கொடுத்தான் மகன்.

மாத்திரையை விழுங்கி விட்டுத் தம்ளரை மேஜை மேல் வைத்த கருணாகரி, எட்டி மனோரஞ்சிதத்தின் கரத்தைப் பற்றினாள்.

''மெய்யாகவே, நீ என்னை விட்டுப் போகமாட்டாயில்லையா?'' என்று கெஞ்சும் குரலில் அவள் யாசிக்கவும் தன்னை மீறி, ''போகமாட்டேன் ஆன்ட்டி!'' என்று உறுதியளித்தாள் மனோரஞ்சிதம்.

உறுதி கொடுத்த மறுவினாடியே நாக்கையும் கடித்துக் கொண்டாள். கண்கள் தானாகக் குணாளனை நோக்கின. முன்பு போலவே இப்போதும் அவன் முகத்திலிருந்து எதையும் கண்டுகொள்ள அவளால் முடியவில்லை.

இவன் இப்போது என்ன எண்ணிக் கொண்டிருப்பான்? கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் இந்த வீட்டினுள் புகுந்து கொள்ள முயற்சிப்பதாக நினைப்பானோ? முதலில் அந்த நினைப்பைப் போக்க வேண்டும்!

குணாளன் மீண்டும் வெளியே சென்று சற்று நேரத்தில் திரும்பி வந்தபோது, அவனுடைய தாயார் தூங்கியிருந்தாள்.



அறைவாயிலில் நின்றபடி, வெளியே வரும்படி அவன் சைகை செய்யவும், மனோரஞ்சிதம் கருணாகரியின் விரல்களை மெல்லப் பிரித்துக் கையைக் கட்டிலில் வசதியாக எடுத்துவைத்து விட்டு ஓசையின்றி எழுந்து வந்தாள்.

அவன் பேச வாயெடுக்குமுன்பாக, ''உங்கள் அம்மா அமைதியாகத் தூங்குவதற்காக அப்போதைக்கு சமாதானம் சொன்னேன். மற்றபடி நான் இங்கே தங்குவதாக இல்லை'' என்று அவசரமாகச் சொன்னாள்.

ஓர் ஆழப் பார்வையோடு, ''அப்படியானால் உன் ஆன்ட்டியின் உடல்நிலை பற்றி உனக்கு அக்கறையே இல்லையா?'' என்று குணாளன் கேட்கவும், என்ன பதில் சொல்வது என்று புரியாமல் மனோரஞ்சிதம் விழித்தாள்.

அக்கறை இருக்கிறது என்றால், இங்கே தங்கி விட முயற்சிப்பதாகக் கருதுவான். அக்கறை இல்லை என்றால், இவ்வளவு நாள் பாசமாக இருந்ததெல்லாம் வேஷம் என்று முடியும்.

இரண்டு பதில்களுமே அவளைக் கெட்டவளாகக் காட்டும்போது அவள் எந்த பதிலைச் சொல்ல முடியும்?

## 10

**எ**ந்த ஒரு பதிலைச் சொல்லியும் குணாளனிடம் மாட்டிக் கொள்ள விரும்பாமல் மனோரஞ்சிதம் மவுனமாகவே அவன் முகத்தை ஏறிட்டாள்.

தணிந்த குரலில், ''கவனி மனோரஞ்சிதம், இந்த முப்பது நாட்களாக, அம்மா சரியாகச் சாப்பிடவே

இல்லை. இப்படியே போனால், இவர்களின் வாழ்நாளையும், விரல் விட்டு எண்ண வேண்டியதுதான். என்னவோ, உன்னைக் கண்டதும், சற்றுப் பசியாறி இருக்கிறார்கள். கொஞ்ச நாட்கள் அவர்கள் கூட இருந்து, வேளைக்கு உண்ணுகிற பழக்கத்தை அவர்களுக்கு ஏற்படுத்தி விட்டுப் போனாயானால், கூடக் கொஞ்ச காலம் வாழுவார்கள். ஆனால்... அது பற்றிய அக்கறை உனக்கு இல்லையென்றால், உன்னைத் தடுத்து நிறுத்தும் உரிமை இங்கு யாருக்கும் கிடையாதுதான்... என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான் அவன்.

இவன், அன்று எவ்வளவு அசிங்கமாக அவளைப் பற்றிப் பேசினான்? இவளுக்குப் பயந்து இரவில் கதவைப் பூட்டி வைப்பதாகச் சொன்னானே! இப்போது பெற்றவளுக்காக அவளை இங்கே தங்கச் சொல்கிறானே, முன்பு அவன் நினைத்தது போல செய்யமாட்டான் என்று இப்போது மட்டும் என்ன நம்பிக்கை?

''என்ன?'' என்றான் குணாளன்.

''ஆன்ட்டி'' மேல் எனக்கு நிறைய அக்கறை இருக்கிறது. ஆனால் பாட்டிக்கு...'' என்று தொடங்கியவள், நீ மட்டும் எப்படியாம் என்று உள்ளூர நினைத்து, லேசாகத் தொண்டையைச் செருமி, ''இங்கே யாருக்குமே என்னைப் பிடிக்காதே என்று அதுதான் யோசனையாக இருக்கிறது'' என்றாள் அவள்.

கூடவே, குணாளனின் முகம் லேசாகக் கன்றுவதைக் கண்டு, திருப்தியும் அடைந்தாள்.

ஆனால், அவன் உடனே சமாளித்து, ''உன்னை இங்கே யாரும் கடித்துத் தின்றுவிடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ வந்து மிஸ்டர் மோகனை அனுப்பி



வை!'' என்றதும் மனோரஞ்சிதத்திற்குத் தூக்கி வாரிப் போட்டது.

அவ்வளவு நேரம் மோகனை அவள் மறந்து போனாளே! அவன் அங்கே பசியோடு இருக்க இவள் சாப்பிட்டும் முடித்தாயிற்று! இவ்வளவு மோசமாக அவளால் எப்படி நடக்க முடிந்தது. அவளுக்கு இங்கே என்ன துன்பம் நேருமோ என்று துணை வந்தவன் வேறு!

முகம் கன்றிச் சிவக்க, ''அய்யோ, மோகனை மறந்தே போனேனே!'' என்று குணாளனைச் சுற்றிக் கொண்டு படியிறங்கி ஓடினாள். ஓடிச் சென்று மோகன் முன் நின்று, ''வா... வாருங்கள் மோகன், எங்காவது போய்ச் சாப்பிட்டு விட்டு வரலாம்...'' என்று மூச்சு வாங்க அழைத்தாள்.

மனோரஞ்சிதம் ஓடி வருவதைக் கண்டு திகைப்புற்று சோபாவிலிருந்து எழுந்திருந்த மோகன் புன்னகையுடன் கையிலிருந்த பத்திரிகையை அருகில் இருந்த டீப்பாய் மேல் வைத்தான். ''இதற்காகவா இப்படி ஓடி வந்தாய்? நான் மிஸ்டர் குணாளனோடு சேர்ந்து அப்போதே சாப்பிட்டு விட்டேனே!''

இப்போதும் மனோரஞ்சிதத்திற்குத் தூக்கி வாரிப் போட்டது. மயக்கம் வராத குறைதான்! வெறும் ஆட்டோவில் வந்த ஒருவனுக்கு இந்த வீட்டில் சாப்பாடா? அதுவும் வீட்டு இளவரசனோடு?! உலகம் தலை மாற்றிச் சுற்றத் தொடங்கி விட்டதா?

விழி விரியத் திரும்பி நோக்கியவளுக்கு, நிதான நடையுடன் அவளைத் தொடர்ந்து வந்த குணாளன் பதில் சொன்னான். ''என் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வீட்டில், எந்த விருந்தாளியும் பசியோடு இருக்க முடியாது!''

என்று அழுத்தமான குரலில் கூறியவன், அவள் அருகே நின்று திரும்பி, குரலைத் தணித்து அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில், ''அழையா விருந்தாளியாக இருந்தாலும் கூட!'' என்று சேர்த்துச் சொன்னான்.

அவனது சீண்டலில் அவள் சிலிர்த்து எழுமுன், மோகனை நோக்கிச் சென்று, ''நீங்கள் உட்காருங்கள், மிஸ்டர் மோகன். உங்களுக்கு ரயிலுக்கு இன்னமும் நிறைய நேரம் இருக்கிறதே! ஆனால், மனோரஞ்சிதத்தின் டிக்கட்டை மட்டும் என்னிடம் கொடுங்கள், ரத்து செய்ய வேண்டும்'' என்றுரைத்து அவனுக்கும் தூக்கி வாரிப் போடச் செய்தான்.

மனோரஞ்சிதத்தைப் பொறுத்த வரையில், குணாளன் இதைவிட அதிகமாகச் சீண்டியிருந்தால் கூட அது அவள் மனதில் பட்டிராது. குணாளனின் 'என் நிர்வாகத்தின்' என்ற வார்த்தையில் நெஞ்சு கசங்கி நின்றாள் அவள். சந்தானம் அங்கிள் உயிரோடு இருந்திருந்தால் இந்த வார்த்தை அவன் கூறியிருக்க முடியுமா? அவரது மரணத்தை மீண்டும் குணாளன் அறிவிப்பது போல இருந்தது அவளுக்கு.

யாரையும் நோகடிக்கவென்று அவன் இதைச் சொல்லியிருப்பான் என்று கூற ஏதுமில்லை. ஆனால், இப்படி இயல்பாக கூறப்பட்ட எத்தனை எத்தனை வார்த்தைகளில், எப்படியெப்படி கருணாகரி காயப்பட்டாளோ? பாவம்!

அவள் விழித்துத் தேடுமுன் மீண்டும் அவளிடம் சென்று விட எண்ணியவள் மோகனிடம், ''ஆமாம் மோகன், இங்கே ஆண்டியை விட்டு விட்டு இப்போது நான் வருவதற்கில்லை. டீச்சரிடம் சொல்லு... அப்புறம்...



சாரி மோகன்...'' என்றாள் மெய்யான வருத்தத்துடனேயே...

''இப்போது வருவதற்கில்லை என்றால்?''

''ஆன்ட்டி தேறியதும் வந்து விடுவேன். ஒரு பதுப் பதினைந்து நாட்களில் வந்து விடலாம் என்று நினைக்கிறேன்...'' என்றவளின் பேச்சில் குறுக்கிட்டு, ''அவ்வளவு சீக்கிரமாகக் கணக்கு வழக்குகள் முடியாது. இன்னும் அதிக நாட்கள் ஆகும் மிஸ்டர் மோகன். சில மாதங்கள் கூட ஆகக் கூடும்'' என்று குணாளன் கூறவும் மனோரஞ்சிதத்துக்கு ஆத்திரம் வந்தது.

அவனுடைய தாயாரின் உதவிக்காக என்றால் கவுரவம் குறைந்து விடுமா?

கணக்காம் வழக்காம்! இவர்களுக்கும் அவளுக்கும் என்ன கணக்கு வழக்கு இருக்க முடியும்? ஓகோ! அவளுடைய தந்தை அனுப்பிய பணம்! அதை முழுவதாகக் கொடுக்கக் கூட இவனுக்கு மனமில்லைபோலும். பாட்டியின் ரத்தம்தானே இவன் உடம்பிலும் ஓடும்! பேராசைக்காரப் பிறவிகள்!

அவளது முறைப்பை அவன் லட்சியமே செய்தானில்லை. மாறாகக், கண்களில் ஒரு கடுமை பரவ, அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான்.

பெருந்தன்மையாக முறுவலித்தான் மோகன். ''பரவாயில்லை. மிஞ்சி மிஞ்சிச் சில மாதங்கள் காத்திருக்க வேண்டும். அவ்வளவுதானே? ஆனால், உன் வேலை, மனோ? அங்கே போய்ச் சில மாதங்கள் கழித்து வருவாள் என்று சொல்ல முடியாதே?''

''சொல்லத் தேவையிராது. அந்த வேலையும் தேவையிராது. அங்கே கொடுக்கும் சம்பளத்தை இங்கே நான் கொடுத்து விடுகிறேன்'' என்றான் குணாளன் அலட்சியமாகவே.

கண்கள் விரிய, ''ஆனால்...'' என்று தொடங்கிய மோகனை, மனோரஞ்சிதம் பார்வையால் அடக்கினாள்.

பத்தாயிரம் ரூபாய் சம்பளம் என்றால் இவன் நம்பமாட்டான். அவன் தருவதாகச் சொன்னதால் பணம் பிடுங்க என்று அதிகத் தொகை சொல்வதாகத்தான் நினைப்பான். 'தான் திருடன் பிறரை நம்பான்' மற்றவர்கள் மெய்யுரைப்பவர்கள் என்று நம்புவதற்கு, அவர்களும் பொய் சொல்லாதவர்களாக இருக்க வேண்டும் அல்லவா?

வேலைக்கான உத்திரவைக் காட்டலாம்தான். ஆனால், இப்போது அதைக் காட்டினால், 'அதே சம்பளம் தருவதாகச் ஜம்பமாகச் சொல்லிவிட்ட ஒரு காரணத்திற்காகக் குணாளன் அந்தத் தொகையை அவளுக்குக் கொடுக்க முன் வருவான். அவனிடம் பணம் பெற மனோரஞ்சிதத்திற்குக் கொஞ்சமும் விருப்பமில்லை.

அத்தோடு, பெறாத தாயாக அவள் கருதிய கருணாகரிக்குச் செய்யும் உதவிக்குச் சம்பளம் வாங்கி, அதைக் கேவலப்படுத்தவும் அவளுக்குப் பிடிக்காததால், வேலை உத்திரவை மறைத்தே விட்டாள்.

இழப்பு மாதம் பத்தாயிரம் ரூபாய் என்பதால் அவளுக்குக் கொஞ்சம் ஏக்கமாகத்தான் இருந்தது. அவளது தகுதிக்கு இன்னொரு வேலையை இலகுவாகவே பெறமுடியும். வேலை கிடைக்கச் சற்றுத் தாமதம் ஆனாலும், மோகன் அதற்காக அவளை நிராகரிக்க மாட்டான்!



மோகனை ஆர்வமாக நோக்கி, ''முடிந்த அளவு விரைவில் நான் வந்து விடுவேன்,. மோகன். வந்த பின் வேறு வேலையும் தேடிக் கொள்ளலாம். என்னால் முடியும்'' என்றுரைத்தாள்.

குணாவின் பக்கமாய் ஒரு பார்வையைச் செலுத்தி விட்டு, ''அந்தப் பாட்டியம்மாவைப் பார்த்தால் எனக்குக் கொஞ்சம் பயமாய் இருக்கிறது மனோ! உனக்கு ஒழுங்காக உணவு கிடைக்குமோ, என்னவோ? எப்படி விட்டு விட்டுப் போவது?'' என்று குழம்பினான் அவன்.

அவன் கூறியது, அவள் காதிலே மட்டுமாக விழும் படியான மெல்லிய குரலில்தான். ஆனால், குணாளனின் கூர் செவிகள் அதை வாங்கி, ''கவலைப்படாமல் போங்கள், மிஸ்டர் மோகன். இனி மனோரஞ்சிதம் பசியாறு முன், நான் உணவருந்துவது இல்லை. போதுமா?'' என்று வினவினான்.

அசடுவழிய மோகன் தலையாட்ட, மனோரஞ்சிதம் மட்டும், ''என்னைப் பார்த்துக் கொள்ள எனக்கே தெரியும், மோகன். படித்தபோது 'ப்ராஜக்ட்' செய்ததில் வந்த பணமும் இருக்கிறது. தைரியமாகப் போங்கள் என்று கூறி அவனை அனுப்பி வைத்தாள்.

கையாட்டி விட்டு, மோகன் சென்றதும் கருணாகரியிடம் செல்ல முயன்றவளைக் குணாளன், தடுத்து நிறுத்தினான்.

''உனக்கு மெய்யாகவே அப்பா இறந்தது தெரியாதா?''

''தெரியாது!'' என்றாள் அவள் சுருக்கமாக.

''இந்த ஐந்து ஆண்டுகளில் நீ அப்பாவைப் பார்த் ததே இல்லையா?''

மனோரஞ்சிதத்திற்கு ஏப்ரல் ஒன்றாம் தேதி நினைவு வந்தது. ஆனால் அதை ஒரு சந்திப்பு என்கிற அளவு சொல்ல முடியாது என்றாலும், கண்களை நேரா கப் பார்த்துக் கேட்பவனிடம் மறைப்பதும் முடியாமல், ''ஆண்டுக்கு ஒரு தரம் பார்த்திருக்கிறேன்'' என்றாள் அவள்.

மீண்டும் அவன் முகம் கடினமாயிற்று. ''சற்றுப் பொறு'' என்றவன், ஹாலின் ஒருபுறமாக இருந்த அலு வல் அறைக்குள் சென்று திரும்பினான். அவளிடம் ஒரு காகிதத்தைக் கொடுத்தான். ''இது அப்பா எழுதிய உயிலின் நகல். எல்லாம் சரியாயிருக்கிறதா என்று நேரம் கிடைக்கும் போது படித்துப் பார்'' என்றவன், அவளது சிறு தோள் பையைப் பார்த்து விட்டு, ''இன்று ஞாயிற்றுக் கிழமை. எப்படியாவது சமாளித்துக் கொள். நாளை ஸ்டோரிலிருந்து உனக்கு வேண்டிய துணிமணிகளை எடுத்துக் கொள்ளலாம். என் அம்மாவுக்காக நீ இங்கே தங்க நேர்ந்திருப்பதால், இந்தச் செலவு என்னுடையது'' என்று முடித்து விட்டு, மேலே பேச இடம் கொடாமல் அங்கிருந்து சென்று விட்டான்.

மாடிக்கு வந்து பார்த்தாள். கருணாகரி இன்னமும் தூங்கிக் கொண்டுதான் இருந்தாள்.

இதை ஏன் குணாளன் தன்னிடம் கொடுத்தான் என்று யோசித்தபடியே, தோள் பையை ஓர் ஓரமாக வைத்துவிட்டு, உட்கார்ந்து சந்தானத்தின் உயிலின் நக லைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள்.



படித்து முடிக்கையில் அவளுக்குத் தலை சுற்றிப் போயிற்று.

பெற்றோரும் மனைவியும் செலவுக்குச் சிரமப்படா மல் இருப்பதற்காகப் பல ஏற்பாடுகள் செய்துவைத்தி ருந்த சந்தானம், 'தங்கம் ஸ்டோரி'ன் - பெரியவர்களின் பெயரைச் சொல்லக் கூடாது என்பதற்கிணங்க வெறு மனே 'ஸ்டோர்' என்று வீட்டில் குறிப்பிடப்படும் அவர்க ளது 'டிப்பார்ட்மென்டல் ஸ்டோ'ரின் உரிமையில் பாதியை மனோரஞ்சிதத்திற்கு அளித்திருந்தார். மறுபாதி மகனுக்கு!

ஐந்து ஆண்டு காலம் கழித்துப் பார்த்த ஒருத்தியிடம் அவன் அவ்வளவு வெறுப்பு காட்டியதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

சில கோடிகள் பெறுமானமுள்ள நிறுவனம். இது மொத்தம் பேரனுக்கு என்று தங்கம்மாளும், தனதென்று குணாளனும் எண்ணியிருக்கையில் அதில் பாதி யாரோ ஒருத்திக்கு என்றால் ஆத்திரம் வராமல் என்ன செய்யும்?

ஆனால், 'அங்கிள்' ஏன் இப்படிச் செய்தார்?

அதிலும், அவரது ஆசையை அடிக்கோடிட்டுக் காட்டிய அந்தக் கடைசிப் பகுதி!

பெரியவர்கள் தங்கள் விருப்பங்களைப் பிள்ளை கள் மீது திணிப்பதில் அவருக்குச் சம்மதம் கிடையாது என்றாலும், குணாளனும் மனோரஞ்சிதமும் மணம் புரிந்து வாழ்ந்தால் அதைவிட அவருக்கு மகிழ்ச்சி அளிப்பது வேறு எதுவும் கிடையாது என்றும் எழுதியி ருந்தார் அவர்!

குணாளனின் அன்றையப் பேச்சு - ஐந்தாண்டுகளுக்கு முந்தையப் பேச்சு மனோரஞ்சிதத்திற்கு நினைவு வந்தது.

அவன் அவ்வளவு மட்டமாக நினைத்த ஒருத்தியை மணந்து கொள்ளும்படி தந்தையின் ஆலோசனை! அப்படி எழுதி வைத்து விட்டு அவர் மறைந்து முப்பதே நாட்களில் - அனேகமாக முப்பதாவது நாளே அந்தப் பெண்ணே வந்து நின்றால்... அவன், அவளை அடித்து விரட்டாமல் விட்டது அதிசயம்தான்.

ஏற்கனவே, இவர்களின் உதவியின்றியே தான் உயர்ந்து விட்டதை எடுத்துக் கூறிவிட்டு, பச்சைத் தண்ணீர் கூடப் பல்லில் படாமல் திரும்பிச் சென்று விடவேண்டும் என்று வந்தவள் அவள். தங்குவதற்கு இசைந்ததும் தயக்கத்துடன்தான். இப்போது சந்தானத்தின் உயிலைப் படித்ததும் எழுந்து ஓடிவிடலாம் போல இருந்தது அவளுக்கு.

போய் விடலாம். அவளைத் தடுக்கும் உரிமை யாருக்கும் கிடையாதுதான். ஆனால், கிழிந்த நார்போல இதோ கட்டிலில் கிடக்கும் இந்தக் கருணாகரி? நன்றாயிருக்கும் காலத்தில் பிரிவது பெரிதல்ல. ஆனால், கஷ்டத்தில் கைவிடுவது எப்படி?

சந்தானத்தின் உயில் பல பிரச்சினைகளை ஏற்படுத்தி விட்டது போல மனோரஞ்சிதம் உணர்ந்தாள்.

எண்ணிவந்த நோக்கம் மாறி, கருணாகரிக்காக இந்த வீட்டில் தங்க நேர்ந்ததை - அது அவ்வளவாகப் பிடிக்காவிட்டாலும் கூட, மனோரஞ்சிதம் அதைப் பெரிதாக நினைக்கவில்லை. ஏதோ சில பல நாட்கள் கருணாக



ரியைத் தேற்றி ஒழுங்காக உண்டு உறங்கி நடமாட வைத்து விட்டுச் சென்று விடுவது என்று நினைத்திருந்தாள். கருணாகரி சாதாரணமாக ஆகிவிட்டால், அவ்வப்போது வந்து அவளைப் பார்த்து விட்டுப் போகலாம் என்றும் எண்ணம்தான. உணவு, உறைவிடச் செலவு பற்றி அவள் பெரிதாக எண்ணிப் பார்க்கவே இல்லை.

இப்போது அதெல்லாம் கூடத் தொண்டையில் சிக்கிய முள் மாதிரி அவளை சங்கடப்படுத்தின.

உணவு, உறைவிடத்திற்காக குணாளனிடம் பணம் கொடுத்தாலும், திமிரைப் பார் என்று இருக்கும். கொடுக்காவிட்டாலோ, உரிமை கொண்டாடுவது போல ஆகிவிடும். அத்தோடு, பணம் சம்பாதிக்கும் திறமையை அவள் வளர்த்துக் கொண்டிருந்தாலும், பணமாக அவளிடம் அதிகம் கிடையாதுதான். ஆனாலும் குறைந்தபட்சம் ஒன்றரைக் கோடி ரூபாய் மதிப்புள்ளதாக இருந்த போதும் உழைப்பு, உறவு என்று எந்தவிதத்திலும் உரிமை கொண்டாட முடியாத ஒன்றின்மேல் அவளுக்குப் பற்றில்லை என்றால் அதை யார் நம்பப் போகிறார்கள்?

அதிலும் சும்மாவே அவளை மிக மட்டமாக நினைக்கும் இந்த வீட்டினர்? நின்றால், அமர்ந்தால், ஏன் மூச்சு விடுவதுகூடக் குற்றமாகத்தான் கருதப்படப் போகிறது!

கருணாகரி தேறுவதற்காக, ஆகக் கூடிய காலம் முழுவதும் தனக்கு நரகமாயிருக்கப் போகிறது என்று நிச்சயமாக உணர்ந்தாள் மனோரஞ்சிதம்!

# 11

அன்றைய மாலைக் காபியும் மாடிக்கே - கருணாக ரியின் அறைக்கே வந்தது.

கொண்டு வந்தது சமையல்கார அன்னம்மாளே. கருணாகரி முகம் கழுவக் குளியலறைக்குச் சென்றிருந் தாள்.

வேறு யாரும் இல்லாத நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, மனோரஞ்சிதத்திடம் குசலம் விசாரித்தாள். "நீ தப்புப் பண்ணமாட்டேயின்னு தெரிந்தாலும் அறியாப் பொண்ணு, எங்கேயேனும் போய் மாட்டிக் கொண் டாயோ என்று கவலைப்பட்டேம்மா. பிறகு, சின்னம்மா தான் சொன்னாங்க, நீ நல்ல இடத்திலேதான் இருக் கேன்னு. படிச்சு பெரிய ஆளா வருவேன்னாங்க. அதே மாதிரி வந்து விட்டியேம்மா!" என்று நெட்டி முறித்து, திருஷ்டி கழித்து விட்டுப் போனாள்.

மனோரஞ்சிதத்திற்கு உள்ளூரக் கூச்சமாக இருந்தது. அவள் பாட்டில் ரோஷமாய்க் கிளம்பிப் போய் விட் டாள். கருணாகரி எத்தனை பேருக்கு இப்படிச் சமாதா னம் சொல்ல நேரிட்டிருக்கும்? அவளது கடிதத்தில் எழுதியிருந்ததை வைத்து, அதற்குச் சரியாகக் கதை கட்டியிருக்கிறாள். ஆனால் அதுவே உண்மையாக அமைந்தது கடவுள் அருள்.

காபி அருந்தி முடித்ததும் மெல்லிய குரலில் கருணா கரி, மனோரஞ்சிதத்தை அழைத்துச் சொன்னாள். "ரஞ் சிம்மா, கீழே பூஜையறையில் மாமா படம் பெரிதாக்கி



வைத்திருக்கிறார்கள்... அதைப் பார்த்தால்... பார்த்தால் எனக்குத் தாங்க முடியவில்லை... பூக்காரியிடம் சரம் வாங்கிப் போடுகிறார்கள் என்று நினைக்கிறேன். நம், தோட்டத்துப் பூ என்றால் அவருக்கு மிகவும் பிடிக்கும். நீ போய், நாலைந்து பூப்பறித்து, மாமா படத்.... மாமா காலடியில் வைத்து அவரைக் கும்பிட்டு விட்டு வா..." என்றாள் கருணாகரி.

மறுப்பின்றி எழுந்தவளிடம், "இந்த அறைக்கு நேரே கீழே இருக்கும் அறைப்பக்கமாக இருவாட்சி இருக்கும். அந்தப் பூ வாசம் அவருக்கு ரொம்பப் பிடிக்கும். அதில் பூ இருந்தால் பார் அம்மா. கொஞ்சம் காற்றாடத் தோட்டத்தில் இருப்பதானாலும் இருந்து விட்டு வா. வந்ததிலிருந்து இந்த அறைக்குள்ளேயே அடைந்து கிடக்கிறாயே! போகும் போது அன்னம் மாளை வரச் சொல்லி விட்டுப் போ. உனக்குப் பிடித்த தாக எதையாவது இரவுக்குச் செய்யச் சொல்லலாம் என்று பார்க்கிறேன்" என்றாள் தொடர்ந்து.

விரைந்து திரும்பி வந்து விடவேண்டும் என்றுதான் மனோரஞ்சிதம் முதலில் நினைத்தது. ஆனால், சமையல் காரியிடம் மெனு பேசுகிறது என்றால் அதுவும் நல்லது தானே. கொஞ்சம் மற்றதையும் மனம் நினைக்கத் தொடங்குவது முன்னேற்றம்தானே என்று எண்ணியபடி படியிறங்கி, பின்புறமாய்ச் சமையல் கட்டுக்குச் சென் றாள்.

"என்ன வேண்டும் கண்ணு?" என்று வந்தவளிடம், விஷயத்தைச் சொல்லி மாடிக்கு அனுப்பி விட்டு, பின்புற மாகவே தோட்டத்துக்குச் சென்றாள்.

கருணாகரியின் அறைக்கு நேர் கீழே இருந்தது அலுவல் அறை. அங்கிருந்துதான் குணாளன் உயிலின் நகலை எடுத்து வந்தான்.

ஆனால் அதற்கு அடுத்திருந்தது தங்கம்மாளின் அறையாக இருந்தது.

அறையின் பக்கவாட்டில், அப்படியே தோட்டத் திற்கு இறங்கிச் சென்றுவிட வசதியாக சிட் அவுட்டை மனோரஞ்சிதம் நெருங்கும்போதே அறையின் உள்ளி ருந்து குணாளனின் குரல் கேட்கலாயிற்று.

''...அங்கே நீங்கள் வேலை என்று எதையும் செய் யத் தேவையில்லை, தாத்தா. சும்மா நீங்கள் அங்கே இருக்கிறீர்கள் என்றாலே, ஆட்கள் ஒழுங்காக வேலை செய்வார்கள். ஏதேனும் பிரச்சினை என்றால் உங்களிடம் என் 'செல்' நம்பர் இருக்கிறது. என்னைக் கூப்பிட்டு விடுங்கள். அவ்வளவுதானே?

''நீங்களும் தாத்தாவோடு ஸ்டோருக்குப் போங்கள் பாட்டி. அந்தக் காலத்திலேயே எட்டாங்கிளாஸ் படித்து விட்டு சும்மா வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடப்பதா? படி ஏறவேண்டாம், இறங்க வேண்டாம். ஸ்டோரில் லிஃப்ட் எதற்காக வைத்திருக்கிறோம்? ம்? மூன்று தளத்துக்கும் லிஃப்டில் ஏறி இறங்கி, அவ்வப்போது ஏதாவது ஒரு தளத்தில் ஒரு சுற்று நடந்து விட்டு வாருங்கள். உங்களுக்கும் இலகுவாய் ஒரு தேகப் பயிற்சி கடைக்கும், நல்லது. 'உடையவன் பாராவிட் டால் ஒரு முழம் கட்டை' என்று என்னிடம் எத்தனை முறை சொல்லியிருப்பீர்கள்?

''ஓர் இரண்டு மணி நேரம் நீங்கள் கடையில் இருந்தால், நான் தைரியமாகக் கொள்முதலைப் பார்க்கப் போவேன். அப்படியே அம்மாவையும் ஒருதரம் பார்த்து விட்டு வந்து விடுவேன்...''



பேரன் பேச்சில் மற்றதை விடுத்து, ''ஏன்? உன் அருமை அம்மாவை நாங்கள் பார்த்துக் கொள்ளமாட் டோமாக்கும். அதற்கு என்று அந்த அனாதைச் சிறுக் கியை வேறு உட்கார வைத்து இருக்கிறாய், வீதியிலே போகிற சனியனை வீட்டுக்குள்ளே கூட்டி வந்து வைத்த கதையாக!'' என்று குறைப்பட்டாள் தங்கம்மாள்.

சிட் அவுட்டை அடுத்திருந்த கொடியில் பூத்திருந்த சில மனோரஞ்சித மலர்களைப் பறித்துக் கொண்டு மனோரஞ்சிதம் மேலே இருவாட்சிப் புதரை நாடிச் சென்று கொண்டுதான் இருந்தாள். ஆனால் தங்கம்மாள் அவளைக் குறிப்பிட்டுப் பேசவும் அவளது கால்கள் தாமாக நின்று விட்டன.

இதற்குக் குணாளன் என்ன சொல்லப் போகிறான்? அவனுக்கும் அவளைப் பிடிக்காதுதானே? பிடிக்காது தானா... அல்லது...

வெளியே மனோரஞ்சிதம் சங்கடத்துடன் காத்தி ருக்க, குணாளன் சற்றுத் தயங்கி விட்டுச் சொல்லலா னான். ''பாட்டி, உங்களிடம் எனக்கு, அம்மாவுக்குச் சரியான பாசம் உண்டு என்பதை மனதில் வைத்துக் கொண்டு இதைக் கேட்கவேண்டும். அம்மாவுக்கும் உங்க ளுக்கும் எப்போதுமே நீங்கள் இருவரும் ஒரு நாளுமே ஒருவரை ஒருவர் உணர்ந்து நடந்தது இல்லை. அதிலும், இப்போது இருவருமே மனம் மிகவும் நொந்திருக்கும் நேரம். ஏன், வீண் வேதனை பாட்டி? மனோரஞ்சிதம் என்றால், மற்றது எப்படியிருந்தாலும் அம்மாவிடம் அவளுக்கு உள்ளூரப் பிரியம் உண்டு...''

நல்லவேளை! அதையும் வேஷம் என்று விடவில்லையே! ஆனால், மற்றது எப்படியிருந்தாலும் என்றானே, அது என்ன மற்றது என்று மனோரஞ்சிதம் யோசித்தாள்.

உண்மை சொன்ன பேரனை மறுக்கமாட்டாமல், முகத்துக்கு நேரே அதைச் சொன்ன அவனை சும்மாவிடவும் மனமின்றி, ''உன் அப்பன் தனியாக எல்லா வேலையும் பார்த்தான். நீயானால், எழுபதுக்கு மேல் ஆகிவிட்ட எங்களைத் துணைக்குக் கூப்பிடுகிறாயே!'' என்றாள் தங்கம்மாள்.

''ஒருவராக நின்று செய்ததன் விளைவு என்ன ஆயிற்று, பாட்டி?'' என்று உடனடியாகப் பதில் கொடுத்தான் பேரன். ''ஐம்பத்து மூன்று வயதும் ஒரு வயதா? இந்தக் காலத்தில் இந்த வயதில் மலையேறிச் செல்லுகிறார்கள். அப்பா என்னடா என்றால்...'' என்றவன் தலையசைத்து விட்டு, இதமான குரலில், ''நான் உங்களை அழைப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு, பாட்டி. வீட்டில் சும்மா மொட்டு மொட்டென்று உட்கார்ந்திருந்தால், உங்களுக்கும் அது நல்லதல்ல, பாட்டி... வெளிப்படையாகச் சொல்லுகிறேனே, அப்பா நினைவில் மறுகி உருகிப் போவீர்கள். ஸ்டோரிலும் அப்பா நினைவு வரத்தான் செய்யும் என்றாலும், நாலு வேற்று முகம் பார்த்தால் மனது மாறும்... பாட்டி, நான் சொல்வது எதுவாவது இதுவரை தப்பாகிப் போயிருக்கிறதா? பாருங்கள், வசதி குறைவானவர்களுக்கு ஒரு வாய்த் தண்ணீர் கூடக் கொடுக்கக் கூடாது என்பீர்கள்... 'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்று காபி கொடுத்தேன், நான். ரிசர்வ் பாங்கில் வேலை செய்வோரின் மைத்துன



னாம் அவன். இப்போது பாருங்கள், நமக்குச் சில்லரைக்குத் தட்டுப்பாடே கிடையாது. எப்போது போனாலும் பாங்கில் கேட்ட தொகைக்குச் சில்லறை தந்து விடுகிறார்கள்!'' எடுத்துச் சொன்னான் குணாளன்.

''சரிடாம்மா... உன் இஷ்டப்படி வருகிறோம். ஆனால் என் கவலை... அந்தச் சிறுக்கியை வீட்டில் உட்கார்ர வைத்திருக்கிறாயே என்பதுதான். உன் அப்பன் வேறு வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று இல்லாமல் கண்டதைக் கிறுக்கி வைத்து விட்டுப் போயிருக்கிறான். அவன் வார்த்தைக்காக அவளையே கட்டிக் கொள்ளவும் செய்வாயா?'' என்று நேராகக் கேட்டாள் பாட்டியம்மாள்.

இருவாட்சியைப் பறித்துக் கொண்டிருந்த மனோரஞ்சிதம் அப்படியே அசையாமல் நின்று விட்டாள். ஏனோ, நெஞ்சு படபடத்தது.

ஆனால், இந்த முறை, அவன் அதிகம் காத்திருக்க நேரவில்லை. ''சேச்சே! நானா? அவளையா? மணப்பதா? முதலில் சூரியன் மேற்கே உதிக்கட்டும். அதன் பிறகு அதுபற்றி யோசிக்கலாம்'' என்று உடனடியாகப் பதில் உரைத்தான் குணாளன். ''மனோரஞ்சிதம் எப்படிப்பட்டவள் என்று எனக்குக் காட்டிக் கொடுத்ததே நீங்கள் தானே? பிறகு, நீங்களே இப்படிக் கேட்கலாமா?'' என்று அவன் தொடர்ந்து கூறவும் தங்கம்மாளுக்கு உச்சி குளிர்ந்து விட்டது.

''அதுதானே பார்த்தேன். என் ராஜாக்குட்டி எங்கே பாதை மாறி விடுவானோ என்று பதைத்துக் கொண்டே இருந்தது. ...ஊம். அந்தப் ப்ரீதா குட்டியை அன்றைக்கே கல்யாணம் செய்திருந்தால், உன் தகப்பனுக்கு இப்படி

ஒரு கிறுக்குத்தனமான எண்ணம் தோன்றக் கூட வழியி ருந்திராது''

''அந்தப் ப்ரீதா பேச்சு எடுக்கக் கூடாது என்று சொன்னேனில்லையா, பாட்டி. கல்யாணம் ஆனதும் உங்களை எல்லாம் கிராமத்துக்கு மூட்டை கட்டி அனுப்பி விடுவாளாம். என்னிடமே சொல்கிறாள்! என்ன திமிர் அவளுக்கு! நானும், சரி, அவள் என்னதான் திட்டம் வைத்திருக்கிறாள் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று தலையை ஆட்டி ஆட்டி கேட்கிறேன், கழுதை உங்களை, அம்மாவை எல்லாம் என்ன சொன்னாள் தெரியுமா? நீங்கள் கிழட்டுக் கூனியாம். அம்மா பட்டிக் காட்டுப் பைத்தியமாம். தாத்தா அரைக் கிறுக்காம். இவர்கள் நடுவில் எப்படித்தான் வளர்ந்தீர்களோ, நான் உங்களுக்கு வாழ்க்கையைக் கற்றுக் கொடுக்கிறேன்'' என்று எங்கே கூப்பிட்டாள் தெரியுமா? சென்னையில் அப்படி ஓர் இடம் இருப்பது கூட உங்களுக்கெல்லாம் தெரிந்திராது... அவளைப் போய்க் கல்யாணம் செய்வ தாம்! இன்னொரு தரம் அவள் பேச்சை எடுத்து எனக்கு வெறுப்பு மூட்டாதீர்கள், பாட்டி. அவள் மாதிரி இன் னொரு பெண்ணை நீங்கள் எனக்குத் தேடவும் வேண் டாம். உங்களை, அம்மாவை அரவணைத்து, இந்தக் குடும்பத்தை நல்லபடியாக நடத்தக் கூடிய பெண்ணை நானே தேடிக் கொண்டு வருவேன். அதுவரை என் திருமணம் பற்றி யாரும் ஒரு வார்த்தை பேசக் கூடாது'' என்றான் குணாளன் கண்டிப்பான குரலில்.

கையில் பற்றியிருந்த இருவாட்சி மலரைக் கொய்து கொண்டு முன்புறம் சென்று வாயில் வழியே வீட்டினுள் வந்து பூஜையறையை நாடி நடந்தாள் மனோரஞ்சிதம். ...னது பாட்டில் குமுறியது.



தங்கம்மாளை அரவணைத்துப் போகிற மாதிரிப் பெண்ணைத் தேடித் திருமணம் செய்து கொள்ளப் போகி றானாமா? தாராளமாகச் செய்யலாம். பிள்ளையாருக்குத் திருணம் நடக்கிற அன்று இவனுக்கும் நிச்சயமாகத் திருமணம் நடந்து விடும்!

ஆகப் ப்ரீதாவின் சாயம் இப்படி வெளுத்து விட் டதா? பரவாயில்லை. அவனே கண்டுபிடித்திருக்கி றானே! கெட்டிக்காரன்தான்!

ஆனால், இந்தக் கெட்டிக்காரத்தனம் மனோரஞ்சி தத்தின் விஷயத்தில் மட்டும் சூனியமாகி விடவேண் டுமா? அப்போதே மனோரஞ்சிதம் எப்படிப்பட்டவள் என்று பாட்டியம்மாள் காட்டிக்கொடுத்தாளாமே! இதே பாட்டியம்மாள் தானே ப்ரீதாவை அவனுக்காகத் தேர்ந் தெடுத்ததும்? ஒன்றில் தப்பு செய்தவள் அடுத்ததிலும் பிழை செய்திருக்கலாமோ என்று எண்ணிப் பார்க்கக் கூடாதா?

எண்ணிப்பார்த்து, அவளை அவன் மணந்து கொள்ள முன்வரவேண்டும் என்று ஒன்றும் அவள் ஆசைப்பட்டு விடவில்லை... அவளுக்குத்தான் மோகன் அமைதியே உருவான மோகன்தாஸ் இருக்கிறானே.

ஆனால், ஒருவர் நம்மை மட்டமாக எடை போட் டால் வருத்தமாகத்தானே இருக்கிறது. உள்ளே இந்த விஷத்தை வைத்துக் கொண்டு, சாதாரணம்போலப் பேசு கிறானே!

அது தாயாருக்காகவா? அல்லது உயில்படியான அவளது பங்கை விட்டுத்தரும்படி கேட்கப் பேசுகி றானா? ஆனால், உயிலில் சந்தானம் எழுதியிருந்தபடி

பார்த்தால், அவர்களில் இருவருமே யாரும் யாருக்காக வும் விட்டுத்தர முடியாது என்பதோடு வேறு யாருக்கும் விற்கவும் முடியாது என்பது போலல்லவா தோன்றியது?

முட்டிக் கொள்வது போல எதிரே வந்துவிட்டிருந்த சிதம்பரத்தைக் கண்டதும், சட்டென நின்றாள் மனோரஞ் சிதம்

தலைநிமிர்ந்து கூடப் பாராமல் விலகி நடந்தார் அவர். பாட்டியின் அறையிலிருந்து யாரும் பார்த்தால் ஹாலில் இந்த இடம் கண்ணில் படும். இந்த வயதிலும் மனைவிக்குப் பயந்து இந்த ஓட்டம் ஓடவேண்டுமா? இவ்வளவு காலம் கழித்துச் சந்திக்கிறாள், ஒரு முறுவலுக் குக் கூடவா பஞ்சம்?

தோளைக் குலுக்கி விட்டுப் பூஜையறைக்குச் சென் றாள் மனோரஞ்சிதம்.

சந்தானத்துடைய படத்தின் அடியில், பறித்து வந்த பூக்களை வைத்து விட்டு நிமிர்ந்து பார்த்தவளுக்குக் கண்ணீர் துருத்திக் கொண்டு வந்தது.

இந்தப் படத்தைப் பார்த்தால், 'அங்கிளை' அறிந்த வர்கள் எல்லோருக்கும்தான் கண்ணீர் வரும் என்று தனக்குத்தானே அவள் சொல்லிக் கொண்டபோதும், 'தன் நெஞ்சறிய பொய்யற்க' என்ற குறளுக்கிணங்க, இந்தக் கண்ணீரை அவளது கண்களில் வருவித்தது குணாளனு டைய வார்த்தைகளே என்பதை அவள் உணர்ந்தே இருந்தாள்! தன் அருமை அங்கிளிடம், 'இந்தக் குணா சார் என்னைப் பற்றித் தப்பாகவே நினைக்கிறாரே' என்று அவள் மனம் விட்டு முறையிட்டபோது வடிந்த கண்ணீர் என்பதையும் தான்.



அடுத்த நாள் கடை திறக்கச் சென்றபோது குணா ளன், மனோரஞ்சிதத்தையும் உடன் அழைத்துச் சென் றான். 'ரெடிமேடு' பகுதியில், அவளுக்கு நல்லதாக நாலு செட் உடைகளை எடுத்துக் கொள்ளுமாறு கூறி, விற்ப னையில் இருந்தவர்களை எடுத்துக் காட்டும்படியும் பணித்தவன், பில் தன் பெயரில் இருக்கட்டும் என்றது தான் தவறாகப் போயிற்று.

கிட்டத்தட்ட எல்லோருமே புதியவர்கள். கண்களில் குறுகுறுப்புடன், சற்று விலை உயர்ந்தவற்றை அவர்கள் எடுத்துக் காட்டவும் மனோரஞ்சிதத்தின் முகம் சிவந்தது.

ஒன்றும் வேண்டாம் என்று வெளியேறி விடவும் வழியில்லாமல், அவளிடம் உடுமாற்றுக்குத் துணியும் இல்லை; உறைக்க ஒரு வார்த்தை கேட்டு விட்டு, உடனேயே திரும்பி விடவேண்டும் என்று வந்தவள் தானே? கொண்டு வந்தது ஒரே செட்!

அத்தோடு, இப்போது வேண்டாம், என்று போனால், காரணத்தை இவனிடம் விளக்குவது இன்ன மும் அசிங்கமாக இருக்கும்.

எனவே முக பாவனையைச் சிரமப்பட்டு சமாளித் துக் கொண்டு, மிகவும் சாதாரணமான விலையில் இரண்டு சுரிதார் செட்டுகளை வாங்கிக் கொண்டாள் அவள்.

விற்பனைப் பெண்களின் கண்களில் இருந்த ஏள னம் சற்றுக் குறைந்தாற்போல ஓர் உணர்வு அவளுக்கு.

யார் என்ன நினைத்தால் எனக்கென்ன என்று என்னால் ஏன் இருக்க முடியவில்லை என்று உள்ளூர வருந்தியவளுக்கு ஒரு மிக மிகச் சங்கடமான நிலைமை.

அவளுக்கு உள்ளாடைகளும் வேண்டும். அவைகளைக் குணாளன் செலவில் வாங்க மனமில்லாதது மட்டுமின்றி, அவன் முன்னிலையில் வாங்க அவளுக்குப் பிரியமுமில்லை.

குணாளனின் முகத்தில் கடுப்பைக் காணவும் இனித் தயங்குவது சரியில்லை என்று அவள் கிளம்பும்போது, அவளது பிரச்சினை தானாகத் தீர்ந்தது.

அந்த ரெடிமேட் துணிப் பகுதியின் பொறுப்பாளர், கிட்டத்தட்ட ஐம்பது வயதான சுகந்தா அம்மாள், வியர்க்க விறுவிறுக்க தளத்தினுள் வேகமாக வந்தாள்.

குணாளனைக் கண்டதும் திகைப்புற்று, கைக்கடிகாரத்தைப் பார்த்தபடியே 'வணக்கம்' சொன்னவள், ''ஒரு ட்ராஃபிக் ஜாம்' ... சார்!'' என்றாள் சமாதானமாக.

''பரவாயில்லை. பத்து நிமிடங்கள்தானே! வாடிக்கையாளருக்கு விற்பனை தொடங்க இன்னமும் நேரம் இருக்கிறது. 'மெயின் கேட் திறக்க...'' என்று குணாளன் கூறும்போதே, ஒரு மணியடிக்கும் சத்தம் கேட்டது.

இந்த மணியடிக்கும் சத்தம் 'தங்கம் ஸ்டோரின்' எல்லாப் பிரிவுகளும் வாடிக்கையாளர்களை வரவேற்கத் தயார் என்பதன் அறிகுறி. இந்த மணிச் சத்தத்தோடு, ஸ்டோரின் பெரிய வெளிக் கதவும் விரியத் திறந்து வைக்கப்படும்.

நிம்மதியுற்றுத் திரும்பிய சுகந்தா, ''ஹல்லோ'' சுகந்தா ஆன்ட்டி'' என்று முறுவலோடு முன்னே வந்த மனோரஞ்சிதத்தின் கைகளை வியப்பும் மகிழ்ச்சியுமாகப் பற்றிக் கொண்டாள்.



''மனோரஞ்சிதமா? என்னடாம்மா, எப்போது வந்தாய்? மேல் படிப்பு படிக்கப் போனால் எங்களை எல்லாம் அடியோடு மறந்து விடுவதா? சார் விஷயத்துக்குக் கூட வரவில்லையேம்மா!'' என்று குறைப்பட்டாள்.

மனோரஞ்சிதமும், தன் வகுப்புத் தோழியான சுகந்தாவுடைய மகள், மற்றும் அவளுடைய குடும்பம் பற்றி, ஓரக் கண்ணால் குணாளனைப் பார்த்தபடியே நிதானமாகக் குசலம் விசாரிக்கலானாள்.

சில வினாடிகளுக்குள்ளாகவே, அவள் எதிர்பார்த்தபடியே, ''பேசி முடித்து விட்டு வா. நீ வீடு செல்ல ஏற்பாடு செய்கிறேன். அப்பாவின் அறைதான் என்னதும்'' என்றுரைத்து அறையில் இருந்த பெரிய சுவர்க் கடிகாரத்தை ஒரு தரம் குறிப்பாய் நோக்கி விட்டுக் குணாளன் கிளம்பிச் சென்றான்.

பிரச்சினை தீர்ந்த மகிழ்ச்சியோடு, மேலும் சில நிமிடங்கள் அந்த சுகந்தாவுடன் பேசிவிட்டு, தேவையான உள்ளாடைகளையும் வாங்கிக் கொண்டு மனோரஞ்சிதம் கிளம்பினாள்.

சுகந்தா, அறிமுகம் செய்து வைத்ததின் பயனாக, விற்பனைப் பெண்களின் முகத்தில் மரியாதையைக் கண்டதும் மனோரஞ்சிதத்திற்குத் திருப்தியாக இருந்தது.

''அம்மாவோடு வரும்போது மட்டும் கார்டனும், பிசிலிசியுமாக வாங்குவாய்; இப்போ மட்டும் இவ்வளவு விலை குறைவாக ஏன் வாங்க வேண்டும்? அம்மாவிடம், நான் கஞ்சத்தனம் செய்ததாகக் குறை கூறுவதற்காகவா?'' என்று குணாளன் எரிச்சல் பட்டதுகூட அவளை அவ்வளவாகப் பாதிக்கவில்லை.

''ஆன்ட்டியிடம் நான் உங்களைப் பற்றிப் பேசுவது இல்லை'' என்பதோடு அவள் பேச்சை நிறுத்திக் கொண் டாள்.

சந்தானத்தின் உயில் பற்றிய பேச்சை இருவருமே எடுக்கவில்லை. அவளாகத் தொடங்கட்டும் என்று குணா ளன் நினைத்திருக்கக் கூடும். ஆனால், அவர் என்னதான் அன்போடு எழுதி வைத்திருந்தாலும், அது தனக்கு உரிமையற்ற சொத்து என்ற எண்ணம் இருந்ததால் மனோரஞ்சிதத்திற்கும் அந்தப் பேச்சை எடுக்கத் தோன்ற வில்லை.

அன்று தன் தாத்தா பாட்டியை ஸ்டோருக்கு அழைத்து வரச் செய்த குணாளன், தானும் அவர்களு டனே அங்கேயே இருந்து விட்டதை அறிய நேர்ந்த போது மனோரஞ்சிதத்திற்கு அவனை மெச்சவே தோன்றி யது. தொழில் வசதிக்காக இரு முதியவர்களையும் தொழில் வளாகத்துக்குப் பிடிவாதமாக அழைத்துச் சென்ற போதும், அவர்களுக்கு அது பழகும் வரை இதமாக உடன் இருக்கிறானே, பரவாயில்லை என்று எண்ணினாள்.

ஆனால், இடையில் அன்னையை வந்து பார்ப்பதா கச் சொன்னவன் வராதது சற்று ஏமாற்றமாகவும் இருந் தது. எப்போதுமே பாட்டிதானே அவனுக்கு உயர்வு; தாயார் இரண்டாம் பட்சம்தானே என்று குறையாக எண்ணி விட்டு, உடனேயே அதற்காகத் தன்னையே கடிந்து கொண்டாள்.

தாயாரை மனோரஞ்சிதம் பார்த்துக் கொள்வாள் என்ற நம்பிக்கையால், அவன் தன் தாத்தா, பாட்டிக்குத்



துணையிருந்திருக்கலாம் அல்லவா? அவர்களும் ஒரே மகனை இழந்து வாடுபவர்கள்தானே?

அத்தோடு, மற்றவர்களைப் பற்றிய யோசனை - அவர்கள் யார் எப்படிப் போனாலும் அவளுக்கு எதற்கு? கருணாகரியைத் தேற்றும் பணிக்காக இங்கே தங்கியிருப்பவள். பணி முடிந்ததும் இங்கிருந்து வெளி யேறி விடப் போகிறவளும் கூட. தன் பணியில் மட்டும் கருத்தைச் செலுத்துவது அவளுக்கும் கூட நல்லது.

அதே கவனமாகக் கருணாகரிக்கு தேவைப்பட்ட உதவிகள் செய்வதும், பேச்சுக் கொடுப்பதும், அவளிடம் பேச்சைத் தூண்டுவதும், வேளைக்கு உண்ண உறங்க வைப்பதுமாகக் கருமமே கண்ணாக இருக்கலானாள், அவள்.

தானாக வந்து பேசிய பழைய வேலையாட்களைத் தவிர மற்றவர்களை முடிந்த அளவு தவிர்த்தாள்.

அன்று மாலையும் மனோரஞ்சிதம் சந்தானத்தின் படத்துக்கு மலர் வைத்தாள். மறுநாள் காலையில், அவள் குளித்து விட்டு வந்ததும், கருணாகரி அவளை அழைத் தாள். ''மனும்மா, இப்போதுதான் தோன்றியது. மாலை நேரங்களில் மட்டும் மாமா படத்துக்குப் பூ போடுவது என்றால் பகல் முழுவதும் நேற்றைய வாடிய மலர்கள் அல்லவா அவர் முன் கிடக்கும். அதை அகற்றி விட்டு, காலைப் பூக்களும் சிலது பறித்து வைத்து விட்டு வாம்மா. அடுக்கு நந்தியாவட்டையும், பாதி விரிந்த ரோஜாவும் கூட மாமாவுக்குப் பிடிக்கும்'' என்று கூறி அனுப்பினாள்.

''சரி ஆன்ட்டி'' என்று காலையில் காபி அருந்திய பாத்திரங்களை எடுத்துக் கொண்டு மனோரஞ்சிதம் கிளம்பினாள்.

படியிறங்கும் போது கூட வந்து சேர்ந்து கொண்ட குணாளன், ''ஆக, அப்பாவை, உன் மாமா என்று அம்மா குறிப்பிடும்படி பழக்கி விட்டாய் போல!'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

கருணாகரி பொதுவாக சந்தானத்தை 'உன் மாமா' என்றுதான் மனோரஞ்சிதத்திடம் சொல்வது. முடிந்த அளவு அவள் ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்துவதும் கிடையாது. 'அங்கிள்', 'மாமா' இரண்டிற்கும் இது வரை மனோரஞ்சிதம் பெரிதாக வேறுபாடு கண்டதும் கிடையாது.

ஆனால், குணாளனின் குரலில் ஏதோ மாறாய் உணர்ந்து திரும்பி, நேராக அவன் முகத்தைப் பார்த்து, ''புரியவில்லை?'' என்றாள்.

அவனும் பார்வை தளராமல், ''மருமகளாக எண்ணிக் கொள்ளத் தொடங்கி விட்டாயோ என நினைத்தேன்'' என்றான் அவன் உதட்டோரம் ஏளனமாய் வளைய.

அவன் சொல்ல வருவது புரிந்துவிட, மனோரஞ்சிதத்தின் முகம் ஜிவ்வென்று சிவந்து போயிற்று. ''ஏன், மருமகளாகவே எண்ணிக் கொண்டாலும் அதில் என்ன தப்பு? உங்கள் மட்ட புத்தி என்ன நினைத்தாலும், மருமகள் என்றால், அவள், அந்த அம்மாவுடைய மகனுடைய மனைவியாகத்தான் இருந்தாக வேண்டும் என்று ஒரு கட்டாயமும் இல்லை. அவர்களுடைய



அண்ணன் தம்பி மகளாகவும் இருக்கலாம். அந்த அம்மாவுடைய கணவருடைய அக்கா தங்கை மகளாகவும் கூட இருக்கலாம்...'' என்று படபடத்தாள்.

புருவம் உயர்த்தி, ''ஓகோ! அப்படியா? ஆனால், என் அம்மா அப்படித் தன்னுடைய எந்த அண்ணன், தம்பி அல்லது அப்பாவுடைய எந்த அக்கா தங்கை மகளை மருமகள் என்றார்களாம்?'' என்றான் குணாளன் பழைய குரலிலேயே.

சந்தானம் அவருடைய பெற்றோருக்கு, அவருடைய மகனைப் போலவே ஒற்றைப் பிள்ளை. கருணாகரிக்கும் அக்கா, தங்கை உண்டே தவிர சகோதரர்கள் கிடையாது. இதை இவன் அடிக்கோடிட்டு அழுத்தமாக எடுத்துச் சொல்கிறானாம்!

இன்னமும் சினம் அதிகரிக்க, ''கூடப் பிறந்தால் மட்டும்தான் அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளா? மனதாலும் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். என் அப்பாவை, ஆன்ட்டி தன் அண்ணனாக ஏற்றிருக்கலாம்; அல்லது என் அம்மாவிடம் 'அங்கிள்' தங்கைப் பாசம் வைத்திருக்கலாம். ஆனால், இந்த மாதிரி பண்பான பாசங்களைப் பற்றி உங்களுக்கு எங்கே தெரியப் போகிறது?'' என்று நன்றாகக் கொடுத்தாள் அவள்.

அன்று எவ்வளவு மட்டமாகப் பேசினான்? வாங்கிக் கட்டிக் கொள்ளவும் வேண்டும் அல்லவா?

ஆனால் சற்றும் குன்றாமல், ''ம்ம்...? எப்படி? அந்த மோகனை நீ ஏற்ற மாதிரியா? வழித் துணையாக வீடு வரை வந்தானே, அவன் உனக்கு என்னம்மா உறவு? இப்போது நீ சொன்ன மாதிரிப் பண்பான பாசம்

நிறைந்த அண்ணனா? அல்லது....'' அவன் இழுக்கவும் மனோரஞ்சிதம் திகைத்தாள்.

எங்கேயிருந்து எங்கே பாய்கிறான்?

''அதைப்பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை!'' என்று வெடுக்கென மொழிந்து விட்டு, மேலே நில்லாமல் மடமடவென்று படியிறங்கிச் சென்று விட்டாள்.

இன்னமும் தன்னை இவ்வளவு மட்டமாகவே எண்ணுகிறானே என்று மனம் உளைந்தவளுக்கு, மோகன் தன்னை மணக்கப் போகிறவன் என்பது நினைவு வர, அதை அப்போதே குணாளனிடம் சொல்லியிருந்தால், அவனது அந்தத் தவறான அபிப்பிராயம் மறைந்திருக்குமே என்ற எண்ணம் காலம் கடந்து தோன்றியது.

ஆனால், இவ்வளவு முக்கியமான விஷயம் கூட அவளுக்கு ஏன் மறந்தது?

மறந்ததா, அல்லது அதைக் குணாளனிடம் சொல்ல அவளுக்குப் பிடிக்கவில்லையா?

## 12

மகன் எழுதி வைத்திருந்த உயில் தங்கம்மாளுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது.

அவர்களுடைய குடும்பச் சொத்தை விற்றுத் தொடங்கிய தொழில்.



அவளுடைய கணவரும் மகனும் இப்போது பேரனுமாக மூன்று தலைமுறையாக அவளுடைய குடும்பத்தினர் பாடாய்ப்பட்டுக் கட்டிக் காத்த தொழில்.

அதில் முதல் போடவில்லை; ஒரு துரும்பு எடுத்துப் போட்டு உழைத்து வேலை செய்யவில்லை. பரம்பரையைப் பார்த்தாலும் வேலைக்கார இனம்!

அப்படிப்பட்ட ஒருத்திக்குப் பாதிப் பங்கு என்றால் தங்கம்மாளுக்குத் தாங்கவே முடியவில்லை.

மகனது இழப்பிலிருந்து ஒருவாறு மீண்டு வந்தவளுக்கு இந்தக் குடைச்சலில் இருந்து மீளமுடியவில்லை.

தகப்பன்தான் மடத்தனமாக எழுதி வைத்தான் என்றால், வந்தவளை அடித்துத் துரத்தாமல் மகனும் அவளை உள்ளே உட்கார வைத்துச் சோறுபோட்டுக் கொண்டு இருக்கிறானே!

மனோரஞ்சிதத்தை வீட்டில் தங்கும்படி குணாளன் சொன்ன பிறகு, நேரடியாக அவளை விரட்டத் தங்கம்மாளுக்குத் தைரியம் வரவில்லை. மகனைப் போலப் பேரன் சாது அல்ல. முரடு. ஒன்றைப் பிடித்தால் லேசில் விட மாட்டான்.

எனவே, மனோரஞ்சிதத்தின் காதுகளில் விழும்படி ஜாடைமாடையாகப் பேசினாள்.

மனோரஞ்சிதம் சொத்துக்காகத்தான் உட்கார்ந்திருக்கிறாள் என்பதில் அவளுக்குச் சந்தேகமே கிடையாது. எனவே, சொத்து கிடைக்காது என்றால் ஓடிவிடுவாள் என்ற நிச்சயத்தில், ''அவன்பாட்டில் எழுதி வைத்தால் நாங்கள் சும்மா விட்டு விடுவோமா? ஏமாற்றிக் கையெ

முத்து வாங்கினாள் என்று சுப்ரீம் கோர்ட் வரை போய் விடமாட்டோமா? எத்தனை லட்சம் செலவானாலும் குடும்பத் தொழிலைப் போய்க் கண்ட அனாதை, பனாதைக்கெல்லாம் விட்டுக் கொடுப்போமா? கோர்ட் செலவுக்குக் கதியிருந்தால் தாராளமாக இவளும் வழக்காடட்டும்'' என்று அடிக்கடி மனோரஞ்சிதத்தின் காதுகேட்க உரக்கச் சொல்லுவாள்.

எந்தவித வீண் சச்சரவும், கருணாகரியைப் பாதித்து விடக் கூடாது என்ற எண்ணத்தில், மனோரஞ்சிதம் காதே கேளாதது போல் விலகிச் சென்று விடுவாள்.

விலகிச் சென்றாளே தவிர, வீட்டை விட்டுச் செல்லவில்லையே!

அந்தச் சின்னப் பெண்ணிடம் செல்லாத சினத்தை எல்லாம், தங்கம்மாள் தன் கணவரிடம் காட்டினாள். ''எல்லாம் உங்களால் வந்தது. நீங்கள் தொடங்கியது தானே? ஒரு சின்ன 'ஸ்ட்ரோக்' வந்தாலும் வந்தது; அதுதான் சாக்கென்று முழு உரிமையையும் சந்தானத்துக்கு எழுதிக் கொடுத்து விட வேண்டுமா?'' என்று பாய்ந்தாள்.

பரிதாபமாக விழித்தார், சிதம்பரம். ''நான் என்னடி பண்ணட்டும்? நீதானே, ''உங்களுக்குத் துப்பே கிடையாது. என் மகன் நன்றாகச் செய்வான். எல்லா உரிமையையும் அவனுக்கே கொடுத்து விடுங்கள்' என்று காதைப் பிடித்து முறுக்காத குறையாக விரட்டினாய்? உன் வார்த்தையை நான் என்றேனும் மீறியது உண்டா?'' என்று அவளிடமே கேட்டார் அவர்.



''ஆமாம்... சொன்னேன். சுரைக் காய்க்கு உப்பில்லை என்று நான்தான் ஏதோ எரிச்சலில் சொன்னேன் என்றால், நீங்களும் அப்படியே செய்து விட்டு வந்து நிற்கிறீர்களே!'' என்று அதற்கும் எரிந்து விழுந்தாள் மனைவி.

கருணாகரி இன்னமும் அறையை விட்டு வெளியே வர விரும்பாததால் அவளது உணவை அறைக்கே கொண்டு வரச் செய்து உண்ணச் செய்தபோதும், தனக்கும் அதேபோலக் கொண்டு வரும்படி ஏவப் பிடிக்காமல், மனோரஞ்சிதம் கீழே வந்து சாப்பிடுவாள்.

அவள் சாப்பாட்டு மேஜையில் உண்பதே தங்கம்மாளுக்கு வெறுப்பாயிருக்கும். அத்தோடு, வீட்டினர் சாப்பிடும் உணவே அவளுக்கும் வைக்கப்படுவதைக் கண்டு கொதித்துப் போவாள்.

''பெரிய மகாராணி, மீன், முட்டை இல்லாமல் சாப்பிட்டது உண்டா?'' ''காணாததைக் கண்ட மூளி, காய்ந்த மாடு கம்பங் கொல்லையில் புகுந்த மாதிரி எல்லாவற்றையும் காலி செய்து விடப் போகிறாள். மற்றவர்களுக்கு எடுத்து வைத்து விட்டு மிச்சத்தை வையேன்! அல்லி ராணி. இவள் தின்ன மிச்சம்தானே மற்றவர்களுக்கு...'' என்று இப்படி ஏதாவது மனோரஞ்சிதத்தின் காதில் விழும்படி சொல்லிக் கொண்டே இருப்பாள்.

விலகிப் போனாலும் கூட இந்தப் பேச்சுகள் மனோரஞ்சிதத்தின் மனதை மிகவும் வருத்தின. நான் என்ன செய்தேன்? இந்தப் பாட்டி என்னை இப்படி வெறுக்கிறார்களே என்று உள்ளூர நோவாள். ரோஷமும் உடையவள் என்பதால், உயர்தர உணவு வகைகளை அடியோடு

ஒதுக்கலானாள். கருணாகரிக்கு அவள் தேவைப்படாத நேரங்களில், முன்பு போல வேலைகளையும் செய்யலானாள்.

ஒரு தரம் அவள் சாப்பிடும்போது தற்செயலாக வீடு வந்த குணாளன், அவளது தட்டைப் பார்த்து விட்டு, அன்னம்மாளை அழைத்து, ''ஏன் பதார்த்தங்கள் எதுவும் வைக்கவில்லை?'' என்று வினவினான்.

மனோரஞ்சிதத்தின் சொல்படி என்றானதும், அவளையே அழைத்து விசாரித்தான்.

''ஓசிச் சாப்பாடு சாப்பிடும் போது உயிர்வாழ மட்டும்தான் சாப்பிட வேண்டும்'' என்றாள் மனோரஞ்சிதம் அமர்த்தலாக.

புருவம் உயர்த்தி, ''புது ஞானோதயமா? இதனால் உன் மீது மதிப்பும் மரியாதையும் பொங்கி விடும் என்று நினைத்தாயா?'' என்றான் அவன் ஏளனமாக.

''உங்கள் மதிப்பும் மரியாதைக்காகத்தான் மற்றவர்கள் மூச்சுக்கூட விடுகிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா?'' என்றாள் அவள் பதிலுக்குத் துடுக்காக.

முகம் லேசாகக் கன்றியபோதும், ''என் விஷயம் இருக்கட்டும். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இதையெல்லாம் உள்ளே தள்ளிக் கொண்டுதானே இருந்தாய்? நீ வீட்டை விட்டுப் போனாயே, அன்று கூடக் காலையில் சர்க்கரைப் பொங்கல் இரண்டு தரம் வாங்கித் தின்றாயே! அப்போது இந்த ஓசி ஞானோதயம் உதிக்கவில்லையா? கோவையில் எங்கேனும் போதி மரம் இருக்கிறதா?'' என்று மடக்கினான் குணாளன்.



''அப்போது எனக்கு உரிமை இருந்தது''

''என்ன உரிமை! என் பெற்றோரின் இரக்கம் தவிர வெறும் மண்ணாங்கட்டிதான் இருந்தது''.

''இல்லை. என் அப்பா மாதா மாதம் பணம் அனுப்பி...''

''இது நல்ல ஜோக். உன் அப்பா பணம் அனுப்பி, அதை வாங்கி என் அப்பா உனக்குச் செலவிட்டாராமா?'' என்று ஏளனமாக முறுவலித்தான் குணாளன்.

இந்த அங்கிள் அதைச் செலவழித்திருக்கலாமே என்று உள்ளூர நொந்தபடி, ''இல்லை. அங்கிள் அதை அப்படியே பாங்கில் சேர்த்துக் கொண்டுதான் வந்தார். ஆனால் அப்பா பணம் அனுப்பியது என் செலவுக்கு என்பதால்...'' என்றவளைப் பொறுமை இழந்தாற்போல், குணாளன் இடைமறித்தான்.

''விட்டால் சொல்லிக் கொண்டே போகிறாயே! அப்படி உன் தந்தை பணம் அனுப்பி, பாங்கிலும் போடப்பட்டிருந்தது என்றால் எந்த பாங்கில் போட்டார்கள்? கணக்கின் எண் என்ன? சொல்லேன் பார்ப்போம்!''

இந்தக் கேள்வியில் மனோரஞ்சிதத்தின் முகம் வாடியது. அந்தப் பதினாலு வயதில் அதையெல்லாம் பார்க்கத் தோன்றவில்லையே! மாதா மாதம் பண வரவு குறிக்கப்பட்டிருந்தது. வரிசையாக வரவு மட்டும். இப்போது யோசிக்கையில், அது ஏதோ 'டெப்பாசிட்' கணக்குப் பதிவான புத்தகமாக இருக்கக் கூடும் என்று கூட அவளுக்குத் தோன்றியது. ஆனால், அன்று அதொன்றும் பாங்கின் பெயர், வைப்பு நிதியா? சேமிப்புக் கணக்கா? ஒன்றுமே தெரியவில்லையே!

''அங்கிள் 'பாஸ்புக்' மாதிரி காட்டினார். மற்றபடி என்னது என்று பார்க்க அப்போது - அந்தப் பதினாலு வயதில் தோன்றவில்லை'' என்றாள் மனோரஞ்சிதம் உணர்ச்சியற்ற குரலில்.

''பதினாலு வயதிலா?'' என்றவன், தந்தை அந்தப் 'பாஸ் புத்தகம்' காட்டிய சூழ்நிலையை விசாரித்து அறிந்து கொண்டு, ''அந்தக் கணக்குப் புத்தகம் உன்னதாக இல்லாமலும் கூட இருக்கலாம், மனோரஞ்சிதம்'' என்றான் சற்றுத் தணிவான குரலில்.

அவளது பார்வையில் மறுப்பை உணர்ந்து, ''பார், அப்பா இறந்த பின் ஸ்டோர், வீடு சம்பந்தப்பட்ட அவ்வளவு கணக்கு வழக்குகளையும் நான் பார்த்தாக வேண்டியிருந்தது. நீ சொன்ன மாதிரி எந்த ஒரு கணக்கும், நாம் கணக்கு வைத்திருக்கும் எந்த பாங்கிலும் இல்லை'' என்று குணாளன் விளக்கவும் மனோரஞ்சிதம் வாயடைத்துப் போனாள்.

இது எப்படி சாத்தியம்? அங்கிள் பொய் சொல்லக் கூடுமா? ஆனால், வரிசையாகப் பணவரவு பதியப்பட்டிருந்ததைப் பார்த்தது அவளுக்கு நன்றாக நினைவு வந்ததே தவிர, அதில் அவளது பெயரைப் பார்த்த ஞாபகம் அவளுக்கு இல்லை. ஆனால், சந்தானம் வேறு ஒரு பாங்க் கணக்கை, அவளது என்று கூறி ஏமாற்றக் கூடும் என்று அவளால் சற்றும் நம்பமுடியவில்லை.

ஆனால் அவள் பெயரில் எந்த பாங்கிலும் கணக்கே இல்லை என்று சொல்லும் இவனும் பொய்யுரைப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை.



கருணாகரி நன்றானதும் இதுபற்றி விசாரித்து அறிய வேண்டும் என்று மனோரஞ்சிதம் தன் மனதுள் குறித்துக் கொண்டாள்.

ஒரு பெருமூச்சுடன் அவள் கிளம்பவும், ''இன்னமும் நாம் பேசிமுடிக்கவில்லை'' என்றான் குணாளன் சற்று அழுத்தமான குரலில்.

''என்ன பேசவேண்டும்?'' என்றாள் அவள் சற்று அலுப்புற்ற குரலில்.

''நாம் முதலில் பேசிக் கொண்டிருந்ததைத்தான். இப்போது ஸ்டோரில் பாதிப் பங்கு இருக்கும்போது உரிமையோடு உண்ணாமல் ஏன் இந்த அரைப்பட்டினி? லாபத்தில் பங்கிருக்கிறது. நிர்வாகத்தில், கட்டிடத்தில், அதில் இருக்கும் சாமான்களில்... எல்லாவற்றிலுமே பாதி இருக்கிறதே!''

''அது என்னதில்லை'', என்றாள் அவள் சுருக்கமாக.

''உன்னுடையது என்று என் அப்பா சொல்கிறார்'' என்றான் அவன் ஒரு மரத்த குரலில்.

''நீங்களே சொன்னது போல இரக்கத்தில் எழுதி வைத்திருக்கலாம். அதில், எப்படி உரிமை கொண்டாடுவது? அத்தோடு, இது எனக்குத் தேவையற்றதும் கூட'' என்றாள் மனோரஞ்சிதம் விட்டேற்றியாக...

ஓர் ஏளனப் பார்வையுடன், ''தேவைப்படாத ஒன்றுக்காக, சிரமப்பட்டு இப்படி ஓர் உயில் எழுதச் செய்திருக்க வேண்டாம்!'' என்றான் குணாளன்.

''என்னது?! நான் சிரமப்பட்டு இந்த உயிலை எழுத வைத்தேனா! நல்ல கதை!'' என்றாள் அவள் ஏளனமாக.

''கதையாவானேன்? அப்பாவை இப்படி எழுதத் தூண்டியது நீயாக மட்டும்தானே இருக்க முடியும்?''

''நான் தூண்டவில்லை!'' என்றாள் அவள் கறாராக.

''காதில் பூ சுற்றிய எவனாவது தெருவில் அலைந்து கொண்டு இருப்பான். அவனிடம் போய் இந்தக் கதையைச் சொல்லு. நம்பினாலும் நம்புவான்!''

''ஸ்டோரில் எனக்கு எதுவும் வேண்டாம் என்கிறேன். இதற்கு மேல் வேறு என்ன சொல்வது?''

''வேண்டாம் வேண்டாம் என்று ரொம்பவும் அதிகப்படியாக பிகு பண்ணாதே. உண்மை என்று எடுத்துக் கொண்டுவிடப் போகிறேன்!'' என்று ஏளனக் குரலில் மிரட்டினான் குணாளன்.

''எடுத்துக் கொள்ளுங்கள் என்றுதானே நானும் சொல்கிறேன்'' என்று அவள் அழுத்திக் கூறவும், அவன் முகம் கடுத்தது.

''அப்படி எடுத்துக் கொள்ள முடியாதபடி எழுத வைத்துவிட்ட தைரியம்தானே இப்படித் துணிச்சலாகப் பேசச் சொல்கிறது?'' என்றான் குணாளன் உள்ளடக்கிய சீற்றத்துடன். ''எதையும் கொடுக்க, எடுக்க முடியாதபடி பக்காவாக எழுதி வைத்து விட்டு...?''

ஓர் ஆத்திரமான ''ஊம்...'' உடன் தன் வழியே சென்றாள் மனோரஞ்சிதம்.



''செய்வதையும் செய்து விட்டுப் பிகுவைப் பார்'' என்று முணுமுணுத்தபடியே வெளியேறினான் குணாளன்.

கருணாகரியைப் பொறுத்தவரை, மனோரஞ்சிதத்தின் வேலை, சாண்ஏற முழம் சறுக்குவதாக இருந்தது.

இன்று காலையிலிருந்து 'ஆன்ட்டி' அழவில்லை; காலையில் ஒழுங்காகச் சாப்பிட்டாள்; வேலையாட்களிடம் அவரவர் அன்று செய்ய வேண்டியது பற்றிச் சொன்னாள்; இனி மெல்லக் கீழ்த் தளத்துக்கு அழைத்துச் சென்று, சந்தானத்தின் படத்தை அ வருக்குப் பழக்கப்படுத்தி விட்டால் தன் வேலை முடிந்தது என்று நம்பிக்கையோடு மனோரஞ்சிதம் நினைக்கும்போதே, ஏதாவது ஒரு சின்னப் பொருளோ, தோற்றமோ, பேச்சோ கருணாகரிக்குக் கணவரை நினைவுபடுத்தி விடும். அப்புறம் கண்களில் அருவி கொட்டத் தொடங்கி விடும்.

அன்றும் அப்படித்தான், கருணாகரி குளித்து விட்டுக் கட்டுவதற்கு உள்ளிருந்து மனோரஞ்சிதம் எடுத்துக் கொடுத்த சேலையைப் பார்த்ததும் அவளுக்குப் பழைய ஞாபகம் வந்து விட்டது.

எப்படி, எதற்காக, அவள் அந்தச் சேலையை வாங்கினாள்! அதைக் கட்டியிருந்த போது சந்தானம் என்ன சொன்னார் என்பதெல்லாம் அடுக்கடுக்காய் நினைவுவர, சேலையை மேலே சுற்றிக் கொண்டு வேகமாக ஓடிவந்து கட்டிலில் குப்புற விழுந்தாள்.

கட்டில் விரிப்பை சுருக்கமின்றி இழுத்து, மெத்தையின் கீழ்ச் சொருகிக் கொண்டு இருந்த மனோரஞ்சிதம், அவசர அவசரமாக ஓடிவந்து, கருணாகரியைத் தன்

தோளோடு சாய்த்துக் கொண்டு தட்டிக் கொடுத்து, "என்ன இது" என்று மெல்லப் பேச்சுக் கொடுத்தாள். வாய் விட்டு ஒரு தரம் சொல்லி விட்டால் எந்தப் பாரமும் சற்றேனும் குறையும் அல்லவா?

பேச முடியாமல் கேவி அழுத கருணாகரி, மெல்ல மெல்ல அமைதியடைந்து சொல்லத் தொடங்கினாள்.

"இந்தச் சேலை என் பிறந்த நாளைக்காக நான் வாங்கி வைத்தது. அவருக்குப் பிடித்த நிறம் என்று வாங்கினேன்!

"அவர் இல்லாமல் என்னவோ பிடிப்பில்லாமல் அந்தரத்தில் தொங்குவது போல இருக்கிறது, ரஞ்சி. இன்றைக்கு என்ன சமைக்கட்டும் என்று அன்னம்மா கேட்கும் போது, நெஞ்சை அறுப்பது போல இருக்கிறது. மெனு போடும் போது உன் மாமாவுக்கு என்ன பிடிக்கும் என்றுதானே திட்டம் போடுவேன்? மாமாவுக்குப் பிடிக்கும் பிடிக்காததுதானே என் எல்லாவற்றுக்குமே - காலையில் எழுந்து குளித்து விட்டு அவரை எழுப்புவது, ஒரு ஸ்பூன் திட்டமாய் சர்க்கரை சேர்த்து காஃபி கொடுப்பது, அத்தையைப் பொறுத்துப் போவது, யார் வீட்டுக்குப் போவது, பேசாதிருப்பது... எல்லாவற்றுக்கும் அடிப்படை அதுதானம்மா! எதற்காவது மெச்சி ஒரு 'பலே' சொன்னால் நினைத்து நினைத்து சந்தோஷப் படுவேன். இப்போது... இப்போது அந்த அடிப்படை இல்லாத போது மூச்சுவிடுவது கூட தேவையற்றுச் செய்கிற வேலை போலத் தோன்றுகிறதே. நான் என்ன செய்யட்டும்?

உதடுகளை மடித்து அழுத்தி, நடுக்கத்தை நிறுத்த முயன்றாள்; இமைகளை அகல விரித்து, மூடிக் கண்க



ளில் பொங்கிய கண்ணீரை நிறுத்த முயன்றாள், ஆனால் எல்லாம் மனோரஞ்சிதத்தின் முயற்சி மட்டும்தான். பலனற்ற வெறும் முயற்சி.

திடுமென, ஒரு வெண்ணிறக் கைக்குட்டை முன்னே நீட்டப்படவும், திடுக்கிட்டுத் தலை திருப்பிப் பார்த்தால் அங்கே குணாளன் நின்று கொண்டிருந்தான்.

மனோரஞ்சிதத்தின் கைகள் கருணாகரியின் பிடியில் இருப்பதைப் பார்த்தவன், தானே கை நீட்டி, மனோரஞ்சிதத்தின் கண்களையும், கண்ணீர் படிந்த கன்னங்களையும் மென்மையாகத் துடைத்து விடவும், அவள் மேலும் பிரமித்தாள்.

துடைத்து விட்டு விட்டுக் கட்டிலைச் சுற்றிக் கொண்டு குணாளன் தாயாரின் கால் பக்கம் அமர்ந்து, மெல்ல அவளது கால்களை வருடி விட்டான்.

மனோரஞ்சிதத்தின் கைகளைப் பற்றித் தன் முகத்தின் மீது வைத்து அழுத்திக் கொண்டிருந்த கருணாகரி, மகன் கால் வருடுவதைக் கண்டதும் திகைத்துக் கால்களை இழுத்துக் கொள்ள முயன்றாள்.

பிடிவாதமாய்க் கால்களை வருடியபடியே, "என்னம்மா? நான் உங்கள் மகன் அல்லவா? பெற்றோருக்குப் பணிவிடை செய்வது பெரிய புண்ணியமாமே! அந்தப் புண்ணியம் எனக்குச் சேர்வதை நீங்கள் தடுக்கலாமா?" என்று கேட்டான் குணாளன்.

இந்த நேரத்தில் கிண்டலா என்று மனோரஞ்சிதம் கோபமாக அவன் முகத்தைப் பார்த்தபோது, அது சீரியசாகவே இருந்தது.

பொதுவாக வீட்டில் எல்லோருக்கும் பணிந்தே பழக்கப்பட்டு விட்ட கருணாகரிக்கு அதற்கு மேல் காலை இழுத்துக் கொள்ளத் துணிவில்லாது போய்விடவே பேசாதிருந்தாள்.

ஏதோ மிக முக்கியமான காரியம்போலத் தாயின் கால் விரல்களை நீவிவிட்டபடி குணாளன் கூறினான். ''மெச்சிக் கொள்ள அப்பா இல்லாததாலேயே அந்தரத்தில் தொங்குவது போல உணர்வதாகச் சொன்னீர்கள், அம்மா. எனக்கு ஒரு நாளைக்கு எத்தனை விஷயங்கள் அப்பாவிடம் கேட்க வேண்டியிருக்கிறது, தெரியுமாம்மா? ஒரு குண்டூசி முதல் பெரிய கேபினட் வரை கொள் முதலில், விற்பனையில், வேலை பார்ப்போரை அவரவருக்குத் தகுந்த விதத்தில் நடத்தும் முறையில்... ஒரு நாளைக்கு ஆ...யிரம் தடவைகள் தவிக்கிறேன், அம்மா. அப்பா சம்பாதித்துப் போடுகிறார் என்று இவ்வளவு காலம் விளையாட்டுப் பிள்ளையாகவே சுற்றிக் கொண்டு இருந்து விட்டேன். இப்போது அப்பாவுக்கு ஸ்ட்ரோக் வந்து இந்த ஐந்து மாதங்களாக... எத்தனை தடவை தோன்றியிருக்கிறது தெரியுமா, கொஞ்ச காலம் முன்பாக - குறைந்தது எம்.ஏ. முடித்த இந்த இருபத்தி இரண்டு வயதுக்குப் பிறகேனும் ஸ்டோர் நிர்வாகத்தில் பங்கேற்றுக் கொண்டிருந்தால் அப்பாவின் வாழ்வு இவ்வளவு சீக்கிரம் முடிந்திராதோ என்று நினைக்கும் போதெல்லாம், அப்படியே இருதயத்தைப் பிடித்துக் கசக்குகிற மாதிரி இருக்கிறது. அதைப் பற்றி எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கக் கூட நேரம் இல்லாமல் அடுத்தது என்ன், என்ன என்று ஓட வேண்டிய நிலை.



''அனுபவம் இல்லாதவன் என்று ஒரு டிப்பார்ட்மென்ட் நிர்வாகியே பெரிய மோசடி செய்யப் பார்த்தார் அம்மா. கண்டுபிடித்து விட்டேன் என்றானதும், ஆள் அப்படியே ஊரைவிட்டே ஓடிவிட்டார்.

''அவர் இடத்துக்கு ஆள் போடவேண்டும். ஸ்டோரில் அடுத்த நிலையில் இருக்கும் நாலு பேரில் ஒருவரை உயர்த்தினால் மற்று மூன்று பேருக்கும் அதிருப்தி ஏற்படும். வெளியில் இருந்து கொண்டு வந்தால், நம்பிக்கையாக இருப்பாரா என்ன என்று சந்தேகம். பல ஆண்டு பழகியவரே திருடி விட்டாரே!''

தன்னந்தனியாக, இவ்வளவு சுமக்கிறானே என்று உருகிப் போனாள் மனோரஞ்சிதம். கருணாகரிக்கும் - தாய்மனம் வேறு - அப்படித்தான் இருந்ததோ. ''அப்புறம் என்னடாம்மா செய்தாய்?'' என்று கவலையோடு கேட்டாள்.

''சமாளித்து விட்டேன், அம்மா. ஸ்டோரில் வேலை செய்கிற எல்லோரையுமே அழைத்து, ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கச் சொன்னேன். இப்போது யாருக்கும் யார் மேலும் முக்கியமாக நிர்வாகத்திடம் கோபம் இராது பாருங்கள்! வேலை அமைதியாக நடக்கிறது.

''ஆனால், இந்த வழி கண்டுபிடிக்குமுன் என்ன பாடு? இதுபோல நூறு நூறு தொல்லைகள்! அப்பாவுக்கு ஏன் ஸ்ட்ரோக் வந்தது தெரி... எல்லாம் இதுபோல ஆயிரம் பிரச்சினைகளினால்தான். பேசாமல், போட்டிக் கடைக்காரனிடம் விற்றுத் தொலைத்து விட்டு ஓடிவிடலாமா என்று கூட நினைத்தேன்...''

''ஐயோ! அப்பா வளர்த்த தொழில்!''

''ஆமாம்மா... அந்தப் போட்டிக் கடைக்காரன் தந்த தொல்லை வேறு முதலில் என்னை அப்படி நினைக்கத் தூண்டி விட்டது. ஆனால், அது அப்பாவுக்குப் பிடிக் காது. இத்தனை ஆண்டுகள் அவனைத் தாக்குப்பிடித்துத் தொழில் நடத்திய அப்பாவுக்குச் செய்யும் துரோகமும் ஆகும் என்றுதான் அந்த எண்ணத்தை கைவிட்டேன். தாத்தாவும் உதவினார். எப்படியோ சமாளிக்க முடிந் தது''.

காலடியிலிருந்து எழுந்து வந்து, நாற்காலியை அருகே இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்து, தாயின் கைகளில் ஒன்றைப் பற்றிக் கொண்டு அவன் மேலே பேசினான். ''அப்பா இருந்தால்தான், அப்பாவுக்குப் பிடித்தது, பிடிக்காததை அடிப்படையாக வைத்துச் செயல்பட வேண்டுமா, அம்மா? இப்படி நீங்கள் அழுது அழுது உடல் கரைவது அப்பாவுக்குப் பிடிக்குமா? நீங்கள் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்பது, அவரது குறிக்கோள் அல்லவா?'' என்று கனிவோடு வினவினான்.

''மனோரஞ்சிதமும் இதேதான் சொல்கிறாள். இரு வர் சொல்வதும் சரிதான். ஆனால், அப்பாவைப் பாரா மல் அவரோடு பேச முடியாமல்... அது தாங்க முடியவில் லையம்மா?'' என்று மீண்டும் கருணாகரி வேதனைப்பட் டாள்.

சிறு அமைதியின் பின், ''அம்மா, நாம் கடவுளை எப்படிப் பார்க்கிறோம்? சிலை உருவில், அல்லது சித்திர வடிவில்தானே? அந்தச் சிலையோ, சித்திரமோ நம்மிடம் பேசுகிறதா? ஆனாலும், அந்தச் சிலை, சித்திரங்களிடம் தானே நம் குறைகளை முறையிடுகிறோம். இது வேண்



டும், அது வேண்டும் என்று கேட்கிறோம்? அம்மா, அப்பாவும் நமக்குக் கடவுள் மாதிரிதானம்மா? நமக்கே உரிய தெய்வம்! அம்மா, தினமும் நான் என்ன செய்கி றேன் தெரியுமா? 'ஸ்டோரிலிருந்து வந்ததும் குளித்து விட்டு, பூஜை அறையில் அப்பா படத்தின் முன் போய் உட்கார்ந்து, அன்று நடந்ததில் முக்கியமானது, கணக்கு, வழக்கு எல்லாம் சொல்லுவேன். பிரச்சினைகளையும் கூறுவேன். எப்படியோ, பிரச்சினை தீர்க்கும் விதம் விரைவிலேயே எனக்குத் தெரிந்து விடும்.

''அம்மா, நீங்களும் அதைச் செய்து பாருங்க ளேன்? அப்பாவிடம் சொல்லும்போதே பாதிப் பாரம் இறங்கி மனம் லேசாகி விடுவதை நீங்களே உணர்வீர்கள், அம்மா. இன்று இரவு நான் பூஜையறைக்குப் போகும் போது நீங்களும் என்னோடு வாருங்கள்'' என்று கருணா கரியை வற்புறுத்தி அழைத்தான் மைந்தன்.

''படமாக அப்பாவைப் பார்க்க எனக்குத் தாங்கவில் லையே, கண்ணா...''

''முதலில் அப்படித்தான் அம்மா இருக்கும்... அங்கே இருப்பது அப்பாதான் என்று பிடிவாதமாக இருந்தால் ஒன்றிரண்டு நாட்களில் எல்லாம் சரியாகிப் போகும். விழுந்து விடுவோமோ என்று பயந்து கொண்டே இருந்தால் எழுந்து நடப்பது எப்போது, சொல்லுங்கள்? அத்தோடு, நானும், மனோரஞ்சிதமும் உங்கள் அருகிலேயே இருப்போம். தைரியமாய் இருங் கள். இப்போது ஸ்டோருக்கு நான் கிளம்பட்டுமா? தாத்தா - பாட்டியை வீட்டுக்கு அனுப்பி வைக்கவேண் டும்'' என்று கிளம்பினான்.

கதவருகே நின்று, ''தாத்தா - பாட்டி இல்லாத நேரமாவது கொஞ்சம் கீழே., தோட்டத்துக்குப் போவது, டி.வி. பார்ப்பது என்று இருக்கலாம் அல்லவா? இப்படி ஒரே அறைக்குள் அடைந்து கிடப்பது இருவருக்குமே நல்லது அல்ல. நாளையிலிருந்து அம்மாவைக் கீழே அழைத்துப் போய் வா, மனோரஞ்சிதம்'' என்று உத்தர விட்டு விட்டுச் சென்றான்.

இவர்கள் இருவரும் சற்று சுதந்திரமாக நடமாட வசதியாக இருக்கும் என்றுதான் தாத்தா - பாட்டியை ஸ்டோருக்கு அழைத்தானோ என்ற சந்தேகம் மனோரஞ் சிதத்திற்கு ஏற்பட்டது. மற்றபடி, சந்தானம் 'ஸ்ட்ரோக்' வந்து உணர்வற்று நாலு மாதம் படுத்திருந்தார் என்கிறார் கள், அவர் மறைந்தும் ஒரு மாதம் ஆகிவிட்டது. இந்த ஐந்து மாதம் சமாளித்தவனுக்கு இப்போது மட்டும் இவர்கள் உதவி எதற்கு?

ஆனால், அதற்காக வயதான இருவரைப் போட்டு இங்கும் அங்கும் அலைக்க வேண்டுமா என்று எண்ணும் போதே, இந்த ஏற்பாடு அவர்கள் மனம் மாறி ஆறுவதற் காகவும் தான் என்று குணாளன் சொன்னது மனோரஞ் சித்திற்கு நினைவு வந்தது. அதற்கேற்றார்போல, சிதம்பர மும் தங்கம்மாளும் முன்னைவிட உற்சாகமாகத்தான் இருக்கிறார்கள்!

எல்லோருக்காகவும் யோசித்து, குணாளன் செயல் படும் விதம் பற்றி மெச்சிக்கொள்ளத்தான் மனோரஞ்சி தத்திற்கு அப்போது தோன்றியது.

இந்த ஐந்து மாதங்களாக அவன் செய்த வேலை செய்ய யாரால் முடியும்? மலையை அல்லவா புரட்டியி



ருக்கிறான்! தொல்லைகளுக்கு அஞ்சவில்லை, பிரச்சி னைகளுக்குப் பயப்படவில்லை, பிடிவாதமாய் முயன்று சாதித்திருக்கிறான்.

இவனைப் போய், 'உன் உழைப்பால் என்ன சாதித் தாய் என்று கேட்க நினைத்தாளே! என்ன மடத்தனம்! இன்றைக்கு அவனது உழைப்பால்தானே குடும்பமே வாழ்கிறது!

குணாளன் பட்ட துன்பம் கருதி உருக்கத்தையும் செய்த வேலையை எண்ணி மலைப்பையும் வளர்த்துக் கொண்ட மனோரஞ்சிதத்திற்கு, குணாளனைப் பற்றிய குறைகள் எல்லாம் அடியோடு மறந்து போயின.

## 13

சொன்னதோடு அல்லாமல், அன்றிரவே குணாளன் தன் தாயாரைப் பூஜையறைக்கு அழைத்துச் சென்றான்.

''முதல் நாள் மாமா படத்தைப் பார்த்தபோது எனக்கு மயக்கமே வந்து விட்டது... இவனானால் கூப்பி டுகிறானே, மனும்மா!'' என்று பலமுறை மனோரஞ்சிதத் திடம் புலம்பியபோதும், மகனின் அழைப்பை மறுக்கவும் திராணியற்று, கருணாகரி மகனோடு கிளம்பினாள்.

தாயின் கால்கள் பின்னுவதைக் கண்டு, ஆதரவாய் அவளது கரத்தைப் பற்றிக் கொண்டான் குணாளன்.

அவனது பார்வையின் உட்குறிப்பை உணர்ந்து, மறுகரத்தை மனோரஞ்சிதம் பிடித்துக் கொள்ள இருவரு

மாய்ப் பூஜையறைக்குள் கருணாகரியை அழைத்துச் சென்றனர்.

அப்போதும், மகனின் தோளில் முகம் புதைத்து, தயங்கித் தயங்கி ஓரக்கண்ணால் பார்த்து, அவனது கைபலத்தில் நேராக நோக்கி, பிறகு படத்திலிருந்த சந்தானத்திடம் பார்வையைப் பதித்தபடி, படத்தின் எதிரே கருணாகரி உட்காரும் வரை அவளுக்கு ஒரு பெரும் துணையாக அவள் அருகிலேயே குணாளன் நின்று கொண்டிருந்தான்.

பின்னர், ஓசையின்றி ஒதுங்கி, பூஜையறையின் வாயில் தாண்டி அவன் நிற்க, மனோரஞ்சிதமும் அவனைப் பின்பற்றினாள்.

அன்னையின் மோனத்தைக் கலைக்காத மெல்லிய குரலில், ''நன்றி மனோரஞ்சிதம்'' என்றான் குணாளன்.

கருணாகரியிடம் ஒரு தரம் பார்வை சென்று மீள, ''எதற்காக? ஆன்டியிடம் வாதாடி, வற்புறுத்தி இங்கே அழைத்து வந்தது நீங்கள்தானே? எனக்கு எதற்காக நன்றி?'' என்றாள் மனோரஞ்சிதம் அவனைப் போலவே மெல்லிய குரலில்.

''ஒழுங்காக உண்ண வைத்ததற்கு; இயல்பாக உறங்க வைத்ததற்கு; நத்தை போல சுருட்டிக் கொண்டு, தனக்குள்ளேயே மறுகிக் கொண்டு இருந்தவர்களைப் பேச வைத்ததற்கு; அவர்கள் மனம் விட்டுப் பேசியதால் தானே நானும் அவர்களிடம் பேச முடிந்தது?''

உள்ளே அசைவு உணர்ந்து இருவரும் பூஜையறையுள் பார்வையைத் திருப்பினர்.



சந்தானத்தின் படத்தின் முன் மனோரஞ்சிதம் வைத்திருந்த மலர்களைக் கையில் திரட்டி, கருணாகரி தன் முகத்தை அந்த மலர்களின் மேல் பதித்திருந்தாள். சில கணங்கள் அப்படியே இருந்து விட்டு, மீண்டும் மலர்களைப் பழையபடி வைத்து விட்டு, எழுந்து வந்தாள்.

அருகே வாயிலில் நின்ற மகனின் தலையை ஒரு தரம் வருடிக் கொடுத்து விட்டு மாடி நோக்கிச் சென்றவளின் நடையில் தடுமாற்றம் பெரிதும் மறைந்திருந்தது.

நீர்த்திரையினூடே குணாளனைப் பார்த்த மனோரஞ்சிதம், அவனது கண்களும் கலங்கியிருந்தது கண்டு உருகிப் போனாள்.

தாத்தா - பாட்டியிடம் ஸ்டோரை ஒப்படைத்து விட்டு ஸ்டோர் சம்பந்தமான வெளி வேலையை முடித்துக் கொண்டு வீடு வந்து தாயுடன் சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்து போவது குணாளனுக்கு வழக்கம் ஆயிற்று.

தாய்க்கும் - மகனுக்கும் இடையே, முன் எப்போதும் ஏன், இதுவரை ஒரு காலத்திலும் இல்லாத நெருக்கம் உண்டாகி வளர்ந்தது. பல காரணங்களினால் இதுவரை இலை மறை காயாக இருந்த பாசம் இப்போது முழுமையாக வெளிப்பட்டு இருவருக்கும் இடையே ஆரோக்கியமானதோர் உறவு மலர்ந்தது. இருவரும் இயல்பாக, ஒளிவு மறைவின்றிப் பேசிப் பழகலாயினர்.

வரவர மகனின் இந்த வரவுகளைக் கருணாகரி ஆவலோடு எதிர்பார்க்கத் தொடங்கினாள். வழக்கமான நேரத்துக்கு ஓர் ஐந்து நிமிடம் தாமதம் ஆனாலும்

'இன்னமும் காணோமே' என்று அடிக்கொரு முறை வாயிலை எட்டிப் பார்த்தாள், அதே ஆவலைத் தன் மனமும் எதிர்பார்த்ததை மனோரஞ்சிதம் ஆச்சரியத்தோடு உணர்ந்தாள்.

இந்த வேளைகளில் எல்லாம், தாயும் மகனும் தனியே உரையாட வசதியாக மனோரஞ்சிதம் ஏதாவது சாக்குச் சொல்லி ஒதுங்கிக் கொள்வாள். கோவைக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று செல்வாள். டி.வி.யில் கேட்ட பதார்த்தம் செய்யப் போவதாகச் சொல்லிப் போவாள்.

''நீயும் கூட இருந்தால் நன்றாயிருக்கும்' என்று கருணாகரியும், 'உனக்குத் தெரியாமல் அப்படி என்ன ரகசியம் பேசிவிடப் போகிறோம்?' என்று குணாளனும் சொன்னாலும் கூட நிற்கமாட்டாள். பழச்சாறு, காபி என்று அன்றைய தட்பவெப்பத்துக்குச் சரியாக ஏதாவது கொண்டு வந்து கொடுத்து விட்டு விலகிச் சென்று விடுவாள்.

அன்று குணாளன் சற்றுத் தாமதமாக வந்ததோடு, நெற்றிப் பொட்டையும் லேசாக அழுத்தி விடுவதைப் பார்த்து விட்டு, கருணாகரிக்குப் பழச்சாறும், குணாளனுக்கு காஃபியும் கொண்டு வந்து கொடுத்தாள்.

''என்னம்மா, தலையை ரொம்ப வலிக்கிறதா?'' என்று கவலையுடன் கேட்ட தாயிடம், ''இது ஒன்றும் இல்லை அம்மா. ஒரு 'டீலர்' ரொம்பவும் அறுத்து விட்டான். அப்பாவுக்குப் பழக்கமானவனாம். அதிக விலை கொடு என்று நேரத்துக்கு இங்கே கிளம்பி வரவிடாமல் போரடித்து விட்டான். எல்லாம் இந்தக்



காஃபியிலேயே சரியாகி விடும்'' என்று காபியை ஒரு மிடறு குடித்து விட்டு, ''தாங்க்ஸ் மனோரஞ்சிதம்'' என்றான் குணாளன்.

''வெல்கம்'' சொல்லி முறுவலித்து விட்டு திரும்பிச் சென்ற மனோரஞ்சிதத்தை வாஞ்சையுடன் பார்த்தபடி, ''மிகவும் நல்ல பெண், கெட்டிக்காரியும் கூட'' என்றாள் கருணாகரி.

''அது நிஜம்'' என்றான் குணாளன். ''நல்லவள் என்று பெயரெடுக்கத் தெரிந்திருக்கிறதே!'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

''என்னடாம்மா சொல்கிறாய்?'' என்று கவலையும் குழப்பமுமாகத் தாயார் கேட்டதும், சட்டென முகம் தெளிந்து சிரித்தான் மகன். ''ஒன்றுமில்லை, அம்மா! இவ்வளவு ஐஸ் வைக்கிறீர்களே. மனோரஞ்சிதத்துக்குச் சளி பிடித்துக் கொண்டு விடுமோ என்று நினைத்தேன்'' என்றான்.

மகனுடன் கூடச் சேர்ந்து சிரித்த கருணாகரி, அமைதியாக மகன் முகத்தை யோசனையோடு நோக்கினாள்.

''என்னம்மா?''

''அப்பாவுக்குப் பிடித்தது செய்வது என்றாயே, குணா. அப்பாவுக்குப் பிரியம் என்று ஒன்று எழுதியிருந்தாரே...''

லேசாகத் தலையசைத்து, ''இருக்கட்டும் அம்மா. அந்தப் பேச்சு இப்போது வேண்டாம். அதெல்லாம் நிதானமாக யோசித்துச் செய்ய வேண்டிய விஷயம். விட்டு விடுங்கள்'' என்று முடித்து விட்டான் அவன்.

சிறு அமைதியின் பின், "என்னம்மா, என்னவோ உங்கள் அருமை 'ரஞ்சிம்மா'வின் பெருமைகளைப் பற்றிச் சொல்லத் தொடங்கினீர்கள், நானும் அவளுக்குக் குளிர்பிடித்து விடக் கூடாதே என்று பயந்தால், இவ்வளவுதானா அவளது சீல சிலாக்கியங்கள்?" என்று கிண்டல் போல அவன் கிண்டினான்.

"அவ்வளவுதானா? அவளைப் பற்றிச் சொல்வது என்றால் நாள் முழுவதும் சொல்லலாம், தெரியுமா?"

கைக்கடிகாரத்தைப் பார்த்து விட்டு, "நாள் முழுவதும் இருந்து கேட்க முடியாது. அவகாசம் இல்லை. ஆனால் ஒரு பத்து நிமிடம் அளந்து விடுங்களேன். கேட்டு விட்டுக் கிளம்புகிறேன்" என்று முறுவலித்தான் மகன்.

மகன் கேலி பேசுகிறான் என்று உணர்ந்த போதும், மனோரஞ்சிதத்தின் அருமை பெருமைகளை அவனுக்குப் புரிய வைத்து விடும் அளவில் கருணாகரி சொல்லலானாள்.

"ரஞ்சி இங்கிதம் அறிந்தவள் என்பது உனக்கே தெரியும். கெட்டிக்காரி என்பதும்தான். அவளது படிப்புக்கான செலவெல்லாம் உபகாரச் சம்பளம் மூலம் அவளே சம்பாதித்துக் கொண்டாள். ரோஷக்காரியும் கூட. ஓசிச் சாப்பாடு உண்ணக் கூடாது என்று வீட்டில் அவ்வளவு வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வாள். அவள் வீட்டை விட்டுப் போனதும் அன்னம்மா எவ்வளவு சிரமப்பட்டாள் தெரியுமா?



"அவ்வளவு வேலை செய்தும், அப்போதும் திருப்தியற்றுத் தன் காலிலேயே நிற்க வேண்டும் என்று வீட்டை விட்டுப் போனாள். நேரே கேட்டால் நான் விடமாட்டேன் என்று கடிதம் எழுதி வைத்து விட்டுப் போனாள். போகும் போது, அவளுக்கு நான் வாங்கிக் கொடுத்ததை எல்லாம் வாரிக் கொண்டு போனாளா? கிடையவே கிடையாது. உடுமாற்றுக்கு மிகவும் சாதாரண மூன்று செட் சுரிதார் மட்டும்தான்."

"இங்கேயும் அன்று கடையில் அப்படித்தான் வாங்கிக் கொண்டாள், அம்மா. நல்லதாக நாலு எடுத்துக் கொள்ளும்படி நான் சொன்னபிறகும் கூட..." என்று மனமற்றுச் சொன்னான் குணாளன்.

"அவள் அப்படித்தான்" என்றாள் கருணாகரி. "வேறு ஒருத்தி என்றால் எனக்கு நாமம் போட்டு எவ்வளவோ சுரண்டியிருக்கலாம். ஆனால், நானாக வாங்குவதைக் கூடப் பாதி தடுத்து விடுவாள். அன்று, பிறந்த நாள்; கல்லூரிக்கு வேறு போகப் போகிறாளே என்று மெல்லிசாக ஒன்றரை சவரனில் ஒரு நகை - முதல் முதலாக ஒரே ஒரு செட் வாங்கினேன். என்ன நடந்ததோ... அதைக் கூட வைத்து விட்டுத்தான் போனாள் அந்த ரோஷக்காரி..."

மாமியாரின் பெயர் குறிப்பிடாமல் கருணாகரி சொன்ன விதத்திலேயே குணாளனும் அவள் சொல்ல நினைத்ததைப் புரிந்து கொண்டான்.

"அந்த வயதில் தினுசு தினுசாக உடை, நகை என்று ஆசை இருக்கத்தான் செய்யும். எல்லாவற்றையும் இங்கே வைத்து விட்டுப் போனது ஆச்சரியம்தான்! கூடவே,

அவ்வளவு அன்புள்ளவள் உங்களை விட்டுப் போனதும் அதிசயம்தான்'' என்றான் குணாளன்.

''காரணம்தான் சொன்னேனே. ஆனால் அன்றைக்கு - பிறந்த நாள் என்று கோயிலுக்கெல்லாம் சந்தோஷமாகக் கூட வந்தவள் - ஏன் போனாள் என்று எனக்கும் குழப்பம்தான். ரஞ்சியிடம் பலமுறை கேட்டு விட்டேன். 'அதுதான் எழுதி வைத்திருந்தேனே' என்கிறாளே தவிர வேறு எதுவும் சொல்லமாட்டேன் என்கிறாள். ஆனால் வீட்டை விட்டுப் போனாலும் அவளுக்குப் பாசமும் அதிகம், கண்ணா. ஒவ்வோர் ஆண்டும் வந்து எங்களைப் பார்த்து விட்டுப் போவாள்'' என்றாள் கருணாகரி.

முகத்தில் திரை விழ மகன் ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். ஆண்டுதோறும் வந்து பார்த்து மனோரஞ்சிதம் என்ன சாதித்தாள் என்பதை ஊகித்து அறிந்து வைத்திருந்த குணாளனுக்கு மனோரஞ்சிதத்தின் புகழை மேலே கேட்கப் பிரியமில்லை. ஆனால், தடையகன்று பேசும் தாயை அடக்கவும் மனமற்று வாளா இருந்தான்.

''என்றைக்கு எப்படி வந்து பார்ப்பாள் தெரியுமா? மார்ச் முப்பத்தொன்றாம் தேதி ஆண்டுக் கணக்கு முடித்து மறுநாள், புதுக் கணக்கு தொடங்கும் போது முதல் சாமான் வாங்கி முதல் பில் போட அப்பா என்னை அழைத்துச் செல்வாரே, நினைவிருக்கிறதா? ரஞ்சி வீட்டை விட்டுப் போன பிறகு அடுத்து வந்த ஏப்ரல் ஒன்றாம் தேதி ஸ்டோருக்குப் போனால், காரை விட்டு இறங்கியபின், அப்பா தெருவிலேயே நின்று என்னோடு பேசிக் கொண்டே இருந்தார்.



''என்னடா, நடுத்தெருவில் நின்று கொண்டு அனாவசியமாய் ஏதோ பேசுகிறாரே என்று நான்கூட நினைத்தேன். ஒரு வழியாய் ஸ்டோருக்குள் போய், முதல் பில் போட்ட பிறகு, அப்பா என்னை முதல் மாடிக்கு அழைத்துச் சென்று, மறைவாய் நின்று காட்டினார். பார்த்தால் சுரிதார் தாவணியால் முக்காடு போட்டுக் கொண்டு, கறுப்புக் கண்ணாடி வேறு அணிந்து முகத்தை மறைத்துக் கொண்டு எதிரே நடைபாதைக் கடையில் ஏதோ வாங்குகிற பாவனையில் ரஞ்சிதான் நிற்கிறாள்! நேரில் வந்து பார்த்தால், திரும்பிப் போக விடமாட்டேன் என்று ஒளிந்து நின்று எங்களைப் பார்க்கிறாளாம்! எங்கள் இருவரையும் நிச்சயமாக ஒன்றாகப் பார்க்கக் கூடிய நாள் அது ஒன்றுதானே?'' என்றவளுக்கு, இனி அப்படி ஒரு நாள் வராதே என்கிற துயரத்தில் தொண்டை அடைத்தது.

ஒரு பெருமூச்சுடன், தொண்டையைச் செருமிக் கொண்டு மீண்டும் தொடர்ந்தாள். ''மனோரஞ்சிதத்தின் கெட்டிக்காரத்தனமும் தெரிந்து, இவள் இப்படி வரக் கூடும் என்று அப்பா ஊகித்திருக்கிறார். தெருவினுள் கார் வரும்போதே கண்டு விட்டாராம். கூப்பிட்டுப் பேசலாமா எனக் கேட்டதற்கு அப்பா கூடவே கூடாது என்று விட்டார். அவள் சுதந்திரமாய்ச் சிந்தித்து, சுயமாய் முடிவெடுத்து மன உறுதியோடு வளரவேண்டுமாம்... கொஞ்ச நேரம் மறைவிலிருந்து நாங்களும் 'ரஞ்சியை ஆசை தீரப் பார்த்தோம்' பிறகு திரும்பிவரும்போது, மீண்டும் காரில் ஏறுமுன் சில நிமிடங்கள் அனாவசியமாய்ப் பேசியபடி நின்று, அவளுக்குத் தரிசனம் கொடுத்து விட்டுக் கிளம்பினோம்....''

''மீண்டும் பார்ப்பது அடுத்த ஆண்டில் தானாம்மா?'' என்று கேட்டபோது குணாளனின் குரலும் கம்மியிருந்தது.

''ஆமாம்பா. அடுத்த ஆண்டில் அப்பாவிடம் கேட்டுப் பார்த்தேன். உன் மருமகள் எவ்வளவு கெட்டிக்காரத் தனமாய்த் திட்டம் போட்டு செயல்படுகிறாள்; அதைக் கெடுக்க நினைக்காதே! என்று சொல்லி விட்டார்'' என்று சோகமாக முடித்தவள், மாடிப்படியில் மெலிதாகக் காலடிச் சத்தம் கேட்கவும் ஆவலோடு வாயிலை நோக்கினாள்.

தட்டில் ஆவிபறக்க எதையோ மனோரஞ்சிதம் எடுத்து வந்து கொண்டிருந்தாள்.

கருணாகரி எட்டிப் பார்ப்பதைக் கண்டதும் புன்ன கையோடு ''இது வாயில் வைக்க சகிக்குமா என்று அன்னம்மாளுக்கு ஒரே சந்தேகம், ஆன்ட்டி. பாட்டியிடம் கொடுத்தால் முகத்திலேயே துப்பி விடுவார்களாம்'' என்றவள் மின்வெட்டாய்க் குணாளனிடம் ஒரு பார்வையைச் செலுத்தித் திருப்பிக் கொண்டு, ''யாரிடம் கொடுக்கவும் பயமாய் இருக்கிறதாம். உங்களிடம் என்றால் தைரியமாகக் கொடுக்கலாம்; திட்டவோ, துப்பவோ மாட்டீர்கள் என்று எடுத்து வந்தேன்'' என்று தட்டை நீட்டினாள்.

''பார்க்க அழகாக இருக்கிறது. நீ செய்தால் சுவையும் நன்றாகத்தான் இருக்கும்!'' என்று தட்டை வாங்கி அருகில் வைத்து விட்டு, அவளையும் தன் அருகே இருத்திக் கொண்டு, ''உன்னைப் பற்றித்தான் குணாவிடம் சொல்லிக் கொண்டு இருந்தேன்'' என்றாள் பெருமையோடு.



''நினைத்...தேன்!'' என்றாள் மனோரஞ்சிதம். ''குணா சார் முகம் அழுது வடிகிறதே என்று நினைத்தேன். காரணம் சொல்லி விட்டீர்கள்...'' என்று கிளுக்கிச் சிரித்தாள்.

''போக்கிரி'' என்று சொல்லாமல் வைதுவிட்டு, ''குணாவிடம் என்ன சொல்லிக் கொண்டு இருந்தேன் தெரியுமா? புதுக் கணக்கு நாள் தோறும், நீ எதிர்ப்புறம் முகம் மறைத்து நின்று எங்களைப் பார்ப்பாயே, அதைத் தான்!'' என்றாள் கருணாகரி.

''தெரியுமா, ஆன்ட்டி!'' என்று அதிர்ந்தாள் மனோ ரஞ்சிதம்.

''ம்...மாமா காட்டினார். உன் மருமகள் கெட்டிக் காரத் தனத்தைப் பார் என்று சொன்னார். நீ நன்றாய்ப் பார்க்கட்டும் என்றுதான், தெருவில் சற்று நேரம் நின்று பேசி விட்டுப் போவோம்!''

''ம்கூம்... கண்டுபிடிக்க விட்டு விட்டதாலேயே என் கெட்டிக்காரத்தனம் அடியோடு அடிபட்டுப் போய் விடுகிறதே! ஆனால் ஆன்ட்டி, அங்கிள் என் அம்மாவைத் தன் தங்கையாகவே மனதில் ஏற்றிருக்க வேண்டும். இல்லாவிட்டால் என்னை மருமகள் என்று குறிப்பிட்டிருக்கமாட்டார், இல்லையா?'' என்றவள் தட்டை எடுத்து, ''முதலில் இதை ருசி பார்த்துச் சொல்லுங்கள். நான் போய், அந்த அன்னம்மாளிடம் சொல்லி, இதை வெளியே காட்டுவதா, அடியோடு மறைப்பதா என்று முடிவு செய்ய வேண்டும்!'' என்று பேச்சை மாற்றினாள்.

அந்தப் பலகாரம் பற்றிய பேச்சும் சிரிப்புமாகச் சில நிமிடங்கள் கழிந்ததும், குணாளன் ஸ்டோருக்குச் செல்ல எழுந்தான். ''சற்று என்னோடு வா, மனோரஞ்சிதம். கொள்முதலுக்குப் போனபோது நல்ல மல்கோவா கிடைத்தது. காரில் கிடக்கிறது. எடுத்துத் தருகிறேன்'' என்று அழைத்துச் சென்றான்.

வினாடி நேரம் தயங்கி விட்டு மனோரஞ்சிதம் எழுந்து அவனுடன் சென்றாள். கருணாகரியின் காது கேளாத தூரம் சென்றதும் நின்று, ''என்ன விஷயம்?'' என்று கேட்டாள். ''பழம் மட்டும் என்றால் பையனிடம் கொடுத்து அனுப்புவீர்கள். அதற்கு நான் அவசியமில் லை''.

''ஆமாம். உன்னிடம் பேசத்தான் அழைத்தேன்'' என்றவன், தொடர்ந்து ''அப்பாவைப் பார்க்க மட்டுதான் செய்தாய்; சந்திக்கவில்லை என்று அன்று என்னிடம் நீ ஏன் சொல்லவில்லை?'' என்று இறங்கிய குரலில் வினவி னான்.

''கேட்க விரும்புகிறவர்களிடம் தானே சொல்ல வேண்டும்?'' என்றாள் அவள் விட்டேற்றியாக.

''நான் என்ன நினைத்தேன் என்று உனக்குத் தெரி யும் அல்லவா?''

''நன்றாகத் தெரியும்'' என்றாள் அவள் அலட்சிய மாகவே.

''நான் தப்பாக நினைக்கிறேன் என்று தெரிந்தும், அதைத் திருத்த நீ ஒரு வார்த்தை கூறவில்லை!'' என்ற போது குணாளனின் சுதி ஏறியிருந்தது.



''தப்பாகத்தான் நினைக்க வேண்டும் என்று முடிவு கட்டி விட்டுக் கேட்பவர்களிடம் என்ன சொல்லி என்ன பயன்? சந்து பொந்து தேடி இன்னொரு தப்புக் கண்டு பிடித்திருப்பீர்கள்; அவ்வளவுதானே? இப்போது இதைச் சொல்லத்தான் கூப்பிட்டீர்கள் என்றால் நான் போகிறேன்'' என்று திரும்பினாள் அவள்.

''இல்லை!'' என்று அவளது கையைப் பற்றி நிறுத்த, ''உன்னிடம் மன்னிப்புக் கேட்கத்தான் உன்னை அழைத்து வந்தேன், மனோரஞ்சிதம். உன்னைத் தவறாக நினைத்ததற்காக தயவு செய்து என்னை மன்னித்து விடு'' என்று தணிவான குரலில் கூறிவிட்டுச் சென்றான்.

சற்று நேரத்தில் திரும்பி வந்து, மாம்பழப் பையை அவள் அருகே வைத்து விட்டு, ''எடுத்துப் போய் அம்மாவுக்கு வெட்டிக் கொடுத்து விட்டு நீயும் சாப்பிடு'' என்றுரைத்துச் செல்லும் வரையிலும் கூட அவளது திகைப்பு நீங்கவில்லை.

தான் செய்தது தப்பாயிருந்தாலும் அதுதான் சரி என்று அடித்துப் பேசி, அடுத்தவர்களை ஒத்துக் கொள்ள வும் வைக்கும் தங்கம்மாளின் பேரன், திக்கற்ற ஓர் ஏழைப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்பதா?

உலகம் தலைமாறிச் சுற்றத் தொடங்கி விட்டதா?

என்னவோ, அன்றைக்குப் பிறகு குணாளனோடு அவளால் இலகுவாகப் பேசிப் பழக முடிந்தது. அவனும் பிடிவாதமாய் அவளை இழுத்து வைத்துப் பேசிச் சிரித் தான். அம்மாவும் பிள்ளையும் பேசட்டும் என்று அவள்

விலக முயன்றால் விடுவதாக இல்லை. கேலி, கிண்டல், காலை வருடுதல் என்று அந்தப் பேச்சுகளை நாள் முழுவதும் நினைத்து நினைத்து மனோரஞ்சிதம் ரசிப் பாள்.

ஆனால் இதற்கெல்லாம் விரைவிலேயே ஒரு முற் றுப்புள்ளி விழுந்தது.

அந்த முற்றுப் புள்ளி, மோகனுடைய உருவத்தில் வந்தது.

## 14

அன்று மனோரஞ்சிதத்துக்குத் துணையாக என்று அவளோடு கூட வந்து, குணாளனின் வீட்டில் அவளை விட்டுச் சென்று கிட்டத்தட்ட ஒரு மாதம் கழிந்து மோகன் தாஸ் மீண்டும் அவளைப் பார்க்கவென்று மீண்டும் அந்த வீட்டுக்கு வந்தான். அவனது அலுவலகத்தில் அவனை வேலை நிமித்தம் மத்தியப்பிரதேசத்துக்கு 'டூர்' அனுப்பி இருந்தார்கள்.

டூர் கிளம்புவதாக ஒரு வரி அலுவலகத்திலிருந்து எழுதிப் போட்டது தவிர மோகனிடமிருந்து எந்தத் தகவலும் மனோரஞ்சித்திற்கு வரவும் இல்லை. இங்கே அன்றாட நடப்புகளில் முழுமையாக மனம் ஈடுபட்டிருந் ததாலோ என்னவோ அவனைப் பற்றிய எண்ணம் அவளுக்கு வரவும் இல்லை.



தாத்தாவும் பாட்டியும் ஸ்டோருக்குச் சென்றாகி விட்டது; அடுத்து வெளி வேலைகளை முடித்துக் கொண்டு குணாளன் வருமுன் வீட்டையும், தன்னையும் பளிச்சென்றாக்கிக் கொள்ளும் ஆவலில், வேகமாக வேலை செய்து கொண்டு இருந்தாள் மனோரஞ்சிதம். பூஜையறையில் அன்று பறித்து வந்த மலர்களை அழகுற அடுக்கிக் கொண்டு இருந்தாள். ''உங்களைப் பார்க்கணு மாம்மா'' என்ற வேலையாளைத் தொடர்ந்து ஹாலினுள் வந்த மோகனைக் கண்டதும் முதலில் திகைத்து நின்று விட்டாள்.

இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்ததிலிருந்து இவனை மறந்துபோவதே வழக்கமாகி விட்டதே! அது வும், இவனோடு வாழ்க்கையையே பகிர்ந்து கொள்ளத் திட்டமிட்டு விட்டு! இது என்ன அநியாயம்?!

குற்றக் குறுகுறுப்புடன் முன் வந்து, ''வா...வா... மோகன்! திடீரென்று... திடீரென்று பார்த்ததும் ஆச்சரிய மாகிப் போயிற்று... உ...உட்கார்...'' என்று உபசரித்தாள்.

அமர்ந்து, ''நீ எப்படி இருக்கிறாய்? முக்கியமாக உன் 'ஆன்ட்டி' எப்படி இருக்கிறார்கள்?'' என்று விசாரித் தான் அவன்.

மீண்டும் குற்ற மனப்பான்மையுடனேயே, அவனது கேள்விகளுக்கு உரிய பதிலைக் கூறினாள் அவள்.

''அப்படியானால் விரைவில் நீ கிளம்பி விடலாம் என்று சொல்லு!'' என்றான் அவன் உற்சாகத்துடன்.

ஒரு சிறு மவுனத்தின் பின், ''நீ என்ன சாப்பிடுகி றாய்? காஃபியா? குளிர்பானமா? என்று மனோரஞ்சிதம் கேட்கவும் அங்கே மீண்டும் ஓர் அமைதி நிலவியது.

லேசாகத் தொண்டையைச் செறுமிக் கொண்டு, ''தவிர்க்க முடியாத சமயங்களில் தவிர, நான் காஃபி அருந்துவதில்லை என்பதே, உனக்கு மறந்து விட்டது போலத் தெரிகிறது!'' என்றான் மோகன் சிறு வருத்தத்து டன்.

''சா...சாரி மோகன்!'' என்று மனோரஞ்சிதம் தடுமா றவும், ''அட, இதில் நீ வருத்தப்பட என்ன இருக்கிறது மனோ? உனக்கு இங்கே எத்தனையோ அலுவல்கள்! சின்ன வயதுப் பழைய நினைவுகள் வேறு. இதில் நீ மற்றதை நினைவு வைத்திருந்தால் அதுதான் உலகமகா அதிசயம்!'' என்று கேலிக் குரலிலேயே அவளுக்குச் சமாதானம் சொன்னான்.

அப்போதும் அவளது முகம் தெளியாததைக் கண் டும் காணாதவன் போல, ''உனக்கு ஒரு முக்கியமான சேதி சொல்ல வேண்டும், மனோ. இங்கிருந்து நான் கோவை சென்று பார்த்தால், பெரியம்மாவுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது'' என்றான்.

சாரதா டீச்சருக்குக் கடிதம் வருவது என்ன உலக அதிசயமா? என்று எண்ணியபடி மனோரஞ்சிதம் பேசா மல் இருந்தாள்.

''கடிதம் பெரியம்மாவுக்கு அல்ல, மனோ. உனக்கு? எழுதியது யார் என்று தெரியும் போது நீ



மெய்யாகவே மயங்கிவிழப் போகிறாய்!'' என்று பலத்த முஸ்தீபுகளுடன் தொடங்கி, ''குணாளனுடைய குடும்ப வக்கீல்!'' என்று அறிவித்தான் அவன்.

மனோரஞ்சிதம் சற்றுத் திகைத்துத்தான் போனாள். சாரதா டீச்சரின் முகவரி குணாளனுக்கு எப்படித் தெரியும்?

''மிஸ்டர் குணாளனுக்குத் தெரியாது, மனோ. இந்த ஐந்து ஆண்டுகளாக உன் இருப்பிடத்தை அறிந்து உன் விவரங்கள் அத்தனையும் அறிந்து வைத்திருந்தது உன் சந்தானம் அங்கிள்தான்!'' என்றான். இப்போது மெய்யா கவே மனோரஞ்சிதம் பிரமித்துத்தான் போனாள். தன்னை 'அங்கிள்' தேடவில்லையோ, கைவிட்டு விட் டாரோ என்றெல்லாம் எண்ணியது எவ்வளவு பிசகு! தன் வேடத்தைக் கண்டு கொண்டார் என்று அறிந்த போதும், அதற்கு மேல் அவளது விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்து ஒதுங்கிக் கொண்டார் என்று நினைத்து அதற் காகவே அவரை உயர்வாக எண்ணியவள் அவள். இப்போது பார்த்தால் ஒரு வினாடி கூட அவர் அவளது பொறுப்பை அவர் கைவிடவே இல்லை போல இருக்கி றதே!

''ஐந்து ஆண்டுகளாகப் பெரியம்மா மூச்சுகூட விட வில்லை பாரேன்!'' என்று மோகன் கூறியபோது, விழி கள் நீரில் தத்தளிக்க அவள் ஒப்புதலாய்த் தலையாட்டி னாள்.

கூடவே, ''அப்படி நடந்து கொள்ளும்படி அங் கிளே டீச்சரிடம் வாக்கு வாங்கியிருப்பார் மோகன். எந்த

நேரத்திலும் என்னை அவர் விட்டு விடுவதாகவே இல்லை! பெற்றவர் என்னைக் கைவிட்டு விட்டாலும், எனக்கு எப்பேர்ப்பட்ட ஒரு தந்தை மறுபடியும் கிடைத்தி ருக்கிறார் பார்!'' என்று வியப்பும் பெருமையுமாக உரைத்தாள்.

சிறு யோசனையின் பின், ''ஒருவேளை உன்னு டைய அந்த ஊகமும் தவறுதானோ என்னவோ? உன் னைப் பெற்ற தந்தை உன்னைக் கைவிட்டு விட்டார் என்பதும் உன் ஊகம் தானே? அவரது பிரிவுக்கு வேறு காரணமும் இருக்கலாம் அல்லவா?'' என்றான் மோகன்.

நம்பிக்கையின்றி வெறுமனே தலையாட்டி வைத் தாள் அவள்.

சற்று நேரம் ஒரு சங்கடமான அமைதி நிலவியது.

அதன்பின், தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''எப்போது கோவைக்குக் கிளம்புகிறாய் மனோ? குணா ளன் அம்மாவுக்கு குணமாகி அவர்கள் தேறி விட்டார்கள் என்றாயே...'' என்று மோகன் தயக்கத்துடன் இழுத்தான்.

''ஆன்ட்டியைப் பிரிந்து வருவது... ஊகூம், அது சிரமம் மோகன்'' என்றாள் அவள் தணிவாக, ஆனால் தெளிவாக.

''ஆனால் நம் எதிர்காலம்? ஒரு காலத்தில் நாம் திருமணம் செய்து கொள்ளலாம் என்று இருந்தோம்...''

''அதைப் பற்றி நானும் யோசித்தேன், மோகன். ஆனால் அது சரியாக வரும் என்று எனக்குக் கொஞ்சம் கூடத் தோன்றவில்லையே!'' என்றாள் ஒரு மன்னிப்பை வேண்டும் சிறு முறுவலுடன்.



தரையைப் பார்த்தபடி பேசிக் கொண்டிருந்த மோகன், விழிகளை உயர்த்தி மனோரஞ்சிதத்தைப் பார்த் தான். ''பெரியம்மாவுக்குக் கூட அதே எண்ணம்தான், மனோ? அவளது எதிர்காலம் சென்னைதான் என்பார் கள்.''

''என்னிடமும் சாரதா டீச்சர் இதுபற்றிப் பேசியது உண்டு. திருமணத்தின் அடிப்படை வெறும் நட்போ, கணக்கீடுகளோ அல்ல என்பார்கள். 'அவசரத்தில் திரும ணம் செய்து அவகாசத்தில் அழு' என்று பழமொழியே இருக்கிறது. அதனால், சற்று நிதானித்து நல்லது, கெட்டது நாலுதரம் யோசித்து, அதன் பிறகு முடிவெடு என்பார் கள். இப்போது யோசிக்க... யோசிக்க என்னை மன் னித்து விடு மோகன்''.

''மன்னிப்பு எதற்கு? காலம் கடந்து விடுமுன் கண்டுபிடித்து விட்டதற்காக, உனக்கு நன்றிதான் கூற வேண்டும். ஆனால், பழைய நாட்களின் நினைவாக நாம் நண்பர்களாக இருக்கலாமில்லையா?'' என்று அவன் தனது கையை நீட்ட, நீட்டிய நேசக் கரத்தை இறுகப் பற்றி, ''நிச்சயமாய்!'' என்று மனோரஞ்சிதம் முறுவலித் தாள்.

''நட்பு நமக்கு என்றைக்கும் உரிய உறவு, மோகன்!'' என்றாள் உற்சாகத்தோடு.

சங்கடமான ஒரு சூழ்நிலையிலிருந்து எளிதாகவும், அழகாகவும் மீண்டெழுந்த மகிழ்ச்சி, மனோரஞ்சிதத்தின் முகத்தில் பிரதிபலித்தது.

கூட இருந்து, பண்பாடு குறையாமல் விருந்தோம்பி, மோகன்தாசை வழியனுப்பி விட்டுத் திரும்பிய குணாளன், ''மானம் மரியாதை உள்ளவர்கள் வாழ்கிற வீடு இது, மனோரஞ்சிதம். இங்கே இருப்பவர்கள் கொஞ்சமேனும் பண்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும்'' என்று கண்களில் கனல் வீசக் கூறியபோது மனோரஞ்சிதம் அவனது பேச்சின் தலைகால் புரியாமல் திகைத்தாள்.

ஒரு கணம் திகைத்தவள், உடனேயே முகம் சிவக்க, ''அப்படி பண்பாட்டுக் குறைவாக இங்கே என்ன நடந்து விட்டதாம்?'' என்று ஆத்திரத்துடன் வினவினாள்.

''வெளி வாயிலுக்கு நேர்ப் பார்வையில், நடு ஹாலில் வேலையாட்கள், மற்றவர்கள் பார்க்கக் கண்டவன் கையைப் பிடித்துக் கொண்டு நிற்பது பண்பாடுடைய செயல் என்று உனக்கு யாரம்மா கற்றுத் தந்தது?'' என்று குணாளன் கிண்டலாகக் கேட்கவும், மனோரஞ்சிதத்துக்கு விஷயம் விளங்கி விட்டது.

நண்பர்கள் என்று ஒருவர் கையை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டு நின்றாளல்லவா? அதே அயனான நேரத்தில்தான், குணாளன் வீடு திரும்பியது. வந்தவனின் கண்களில் இருவரும் கைப்பற்றி நின்றது பட்டு விட்டது. ஆண்பிள்ளை! அதிலும் தப்பு அபிப்பிராயம் இவனுக்குப் பிறப்புரிமை ஆயிற்றே!

தலையைச் சிலுப்பி, ''மோகன் ஒன்றும் 'கண்டவன்' இல்லை. கூடவே வளர்ந்த நண்பன்; என்னை மணக்கக் கேட்டவனும் கூட'' என்றாள் மிடுக்காக.



''இது சரியான காரணம் ஆகாது'' என்றான் குணாளன். ''இதோ நான் உன்னை மணக்கக் கேட்கிறேன்; உடனே உன் கையைப் பிடித்துக் கொள்ளலாமா?'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

''இது விதண்டாவாதம்!''

''பதில் சொல்லப் பிடிக்காவிட்டால் விதண்டாவாதமா? மோகன் என்றால் இடம், பொருள், ஏவல் ஒன்றும் பார்க்கத் தேவை இல்லைபோல! வெளிவாசல் வரை தெரிகிறது! எவன் எவன் பார்த்து என்ன என்ன நினைத்தானோ?''

குணாளன் சொல்லச் சொல்ல மனோரஞ்சிதத்திற்கும் சினம் ஏறிக் கொண்டே போயிற்று. இவன் வருகிறான் என்று தினம் தினம் என்னவெல்லாம் செய்கிறாள்? தன்னை அழகுபடுத்தி, வீட்டை அழகுபடுத்தி... சே... சுத்த மடத்தனம்! அவனானால், அவனது பழைய மட்டமான அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளவே இல்லை! மாற்றிக் கொள்வதாகவும் இல்லை!

எதிலோ பெரிதாக ஏமாந்துவிட்ட உணர்ச்சி மேலும் மேலும் பெரிதாகப் பொங்கி அவளை நிலையிழக்கச் செய்தது. ஆத்திரத்துடன், ''என்ன நினைப்பான்? அண்ணன் - தங்கையோ என்று நினைப்பான்! பரிவோ, பாசமோ என்று எண்ணுவான்! அப்படியே, கொஞ்சம் வேறு மாதிரி யோசித்தாலும் உங்களைப் போல மட்டமான முடிவுக்கு எவனும் வரமாட்டான். மானமாம்! மரியாதையாம்! நான் ஒருவன் கையைத் தொட்டால், பண்பாடு கரைந்து மறைந்து காணாமல் போய் விடுமாம்!

அதென்ன கற்பூரமா, அப்படிக் காற்றில் கரைந்து விட? அப்படி நான் என்னதான் செய்து விட்டேன், எப்போதும் என்னைப் பற்றி நீங்கள் இவ்வளவு கேவலமாகவே எடை போடுவதற்கு? அன்றைக்கும் இப்படித்தான் சொன்னீர்கள், என்னமோ உங்கள் படுக்கையிலேயே வந்து பூந்துகொள்வேனோ என்று பயந்து உங்கள் அறைக் கதவையே பூட்டி வைப்பதாக அளந்தீர்கள்...'' என்று படபடத்தவள் 'ஓ' என்று சட்டென வாயைப் பொத்திக் கொண்டு திரும்பிச் செல்ல முயன்றாள்.

''என்னது? என்னது? நான்... நான் எப்போது... என்றைக்கு அப்படிச் சொன்னேன்?'' என்று கேட்டவன் அவள் பதில் கூறாமலே செல்ல முயலவும் அவளது கைபற்றி அவளை நிறுத்தி மீண்டும் கேட்டான், ''நான் எப்போது அப்படிச் சொன்னேன்?''

அவனது பிடியை உதற முயன்றபடி, ''முதலில் கையை விடுங்கள்! ஏன், மற்றவர்கள் தொட்டால் காற்றில் கரைந்து போகிற மானம் மரியாதை எல்லாம், நீங்கள் தொட்டால் மட்டும் கட்டி கட்டியாக மாறி வந்து மீண்டும் முகத்தில் ஒட்டிக் கொள்ளுமோ?'' என்று ஏளனமும் எகத்தாளமுமாகக் கேட்டாள் அவள்.

''எனக்கு லைசன்ஸ் - நீ கொடுத்த அனுமதி இருக்கிறது!''

''என்ன பேத்தல்!?''

''மெய்தான். கட்டிக்கொள்ளக் கேட்டால் கையைப் பிடிக்கலாம் தப்பில்லை என்று நீதானே சொன்னாய்! நானும்தான் கேட்டேனே!''



''ச்சு!'' என்று அலுப்பும் ஆத்திரமுமாக திரும்பியவளை நிறுத்தி அவன் மீண்டும் கேட்டான்.

வேறு வழியின்றி அவள் விடையிறுத்ததும், ''மை காட்!'' என்றான் அவன். ''மனோரஞ்சிதம், ஐந்து ஆண்டுகளுக்கு முன் நான் எப்படியிருந்தேன்! ஏன், இப்போது ஐந்து மாதங்களுக்கு முன்பு வரை எனக்கு என்ன முதிர்ச்சி இருந்தது? சும்மா ஒரு பொறுப்பற்ற விளையாட்டுப் பிள்ளைத்தனத்தில் ஏதோ உளறினேன் என்று, அதற்காகவா நீ வீட்டை விட்டுப் போனாய்? அன்றைக்கு, அந்தப் பதினேழு வயதில் உனக்கிருந்த உலக அறிவில் பாதி எனக்குக் கிடையாதே!'' என்றான் குணாளன்.

ஒருவாறு விடுதலைபெற்ற மணிக்கட்டைத் தேய்த்து விட்டபடி, ''அந்தப் பதினேழு வயதில் எனக்கு இந்த விபரம் தெரியாதே? இருபத்தி இரண்டு வயதான குணாசார் உலக மகா மேதை என்று அல்லவோ மகா மகா மடத்தனமாக நினைத்து விட்டேன்!'' என்று உதட்டைப் பிதுக்கித் தோளைக் குலுக்கினாள் மனோரஞ்சிதம்.

அவளது பாவனையில் முறுவலித்தபடி, ''அதை ஒன்றும் பெரிய மடத்தனம் என்று சொல்ல முடியாது...'' என்று அமர்த்தலாக மொழிந்தவன், ''ஆனால், அம்மாவிடம், பெற்ற தாயைப் போல உனக்குப் பிரியம்; அப்பாவையும் தந்தையைப் போலத்தான் பாவித்தாய். இவர்கள் இருவரையும் என்னுடைய ஒரு பேச்சுக்காகப் பிரிந்து விடத் துணிந்தாய் என்றால்... என் வார்த்தைகளுக்கு

அவ்வளவு மதிப்புக் கொடுத்தாயா, மனோரஞ்சிதம்? ஏன்?'' என்று கூர்பார்வையுடன் வினவினான்.

உடல் விறைப்புற மனோரஞ்சிதம் நிமிரவும், ''அர்த் தம் புரிகிறதல்லவா, மனோரஞ்சிதம்? உன் மனதில் அப்போதிருந்தே பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது!'' என் றான் ஓர் அழுத்தத்துடன்.

கோபமாக முறைத்து விட்டுச் சட்டென்த் திரும்பி, மடமடவென்று அங்கிருந்து வெளியேறினாள் அவள்.

## 15

அன்றிலிருந்து, இயன்றவரையில் குணாளனுக்கு தனிமை நேராதிருக்குமாறு மனோரஞ்சிதம் கவனமாக நடந்து கொண்டாள்.

அனாவசியமாக வாங்கிக் கட்டிக் கொள்ளுவா னேன் என்று தங்கம்மாளையும், வாங்கிக் கட்டிக் கொள் ளும்படிச் செய்வானேன் என்று சிதம்பரத்தையும் தவிர்ப் பவள் அவள். சிதம்பரம் அவராகவே ஓடி ஒளிந்து கொள்பவரும் கூட.

எனவே, பெரும்பாலும், கருணாகரியுடனேயே மனோரஞ்சிதத்தின் நேரம் கழிந்தது.

ஆனால் அங்கும் குணாளன் சீண்டினான். வேண்டு மென்றே தாயின் முன்னிலையில் மனோரஞ்சிதத்தை ஏதாவது சொல்வான்; ஏவுவான். அவள் கவனியாதது



போல நின்றாலும் விடமாட்டான். தாயாரிடம், ''உன் மருமகளைப் பார்!'' என்று முறையிடுவான். அவள் முறைத்தாலோ, ''அப்பா சொன்ன உறவு, அதைச் சொன் னால் அடிக்க வருகிறாளே!'' என்பான். கை தொட்டு வாங்குவான்; கொடுப்பான்; அன்னைக்குப் புரியாதபடி 'லைசன்ஸ்' என்பான்.

கண்ணில் சிரிப்புடன் இலகுவான குரலில் மகன் பேசுவதையெல்லாம், அந்தக் 'கண்ண'னின் லீலைகளை ரசித்த யசோதை போல கருணாகரி ரசித்துச் சிரிப்பதைக் காண்கையில், அந்தக் கெடுக்கும் அளவு எதையும் சொல்லவும் மனோரஞ்சிதத்துக்கு மனம் வரவில்லை.

ஒரு தரம் குணாளனை மாடிப்படியில் கண்டபோது, ''இதுபோலச் சீண்டல்களைத் தன்னிடம் வைத்துக் கொள்ள வேண்டாம்'' என்று அவனிடம் எச்சரித்துப் பார்த்தாள்.

ஆனால், வருங்கால மனைவியைச் சீண்டாமல் வேறு யாரைச் சீண்டுவது என்று அவன், அப்போதும் கேலி பேசவே 'விசுக்'கெனத் திரும்பி நடந்து விட்டாள்.

குணாளனின் பேச்சை உண்மை என்று எடுத்துக் கொள்ளவோ, வெறும் கேலி என்று ஒதுக்கித் தள்ளவோ முடியாமல் மனோரஞ்சிதம் மிகவும் அல்லாடிப் போனாள்.

அன்று, ''உன்னைப் போல ஒரு மருமகள்தான் சின்னம்மாவுக்கு வேண்டப்பட்டது. அய்யா இருந்திருந் தால் அப்படியே முடித்திருப்பாரு. ஊ...ம்! அந்தக்

கடவுள் என்ன எழுதி வைச்சிருக்காரோ!'' என்று அன்னம்மாள் கூறியது, அவளது உறக்கத்தைப் பெரிதும் பாதித்தது. வெகு நேரம் முயன்று பார்த்து விட்டு, மெல்லப் படுக்கையை விட்டு எழுந்தாள்.

கருணாகரியின் தூக்கம் கலைந்து விடாமல், மெல்ல மொட்டை மாடிக் கதவைத் திறந்து சென்று, அங்கே அமைக்கப்பட்டிருந்த கல் பெஞ்சு ஒன்றின் மீது அமர்ந்தாள்.

சூழ இருந்த இருளும், வானத்து விண்மீன்கள் போல, இங்கும் அங்கும் ஒளி வீசியபடி பாய்ந்த மின்மினிப் பூச்சிகளும், மேலேறி வந்திருந்த நித்யமல்லிச் கொடியின் மலர்களின் நறுமணமும் ஏதோ வேறு உலகத்துக்கே சென்று விட்ட பிரமை அளித்தன.

மனோரஞ்சிதம் சற்று நேரம் கண்ணுற அந்த சுகத்தை அனுபவித்தாள்.

அவள் கண் திறந்து பார்த்தபோது, மேகமூட்டம் கலைந்து வெண்ணிலவு வெளிவந்து தன்னொளி வீசிக் கொண்டிருந்தது.

கதவு திறந்து மொட்டை மாடிக்கு வந்து கொண்டிருந்த குணாளன், மனோரஞ்சிதம் அமர்ந்திருந்த பெஞ்சின் ஒரு புறமாகவே அமரவும், அவள் எழலானாள்.

''உட்கார் மனோரஞ்சிதம். உன்னிடம் சற்றுப் பேச வேண்டும்''.

''எனக்கு உங்களிடம் பேச ஒன்றும் இல்லை''.



''எனக்கு இருக்கிறது என்றுதான் சொன்னேன். பார் ரஞ்சிதம், உன்னைப் பிடித்து இழுத்து உட்கார வைக்க என்னால் முடியும். உனக்கும் அதுவே விருப்பம் என்றால்...'' என்று அவன் எழவும் சட்டென மனோரஞ்சிதம் மீண்டும் அமர்ந்து விட்டாள்.

''என்ன சொல்லவேண்டும்?'' என்றாள் கடுப்பான குரலில்.

''இந்தக் குரலில் கேட்டால் எப்படிச் சொல்வது?''

''சொல்லித்தான் ஆகவேண்டும் என்று நான் ஒன்றும் உங்களை வற்புறுத்தவில்லையே!''

''ரொம்பவும் கோபம் போலத் தெரிகிறது! ஏன் ரஞ்சிதம்? ஏன் இந்தக் கோபம்? நான் உன்னைச் சும்மா கிண்டலடிக்கிறேன் என்று நினைத்தாயா? இல்லை, ரஞ்சிதம். மெய்யாகவேதான் நான் உன்னை மணந்து கொள்ள விரும்புகிறேன். அதை சொல்ல வேண்டும் என்றுதான்...'' என்று கூறிக் கொண்டு இருந்தவன், மனோரஞ்சிதம் திடுமென உச்சுக் கொட்டவும், பேச்சை நிறுத்தி விட்டு அவள் முகத்தைப் பார்த்து ''என்ன?'' என்றான்.

''இல்லை... சூரியன் மேற்கே உதிக்கத் தொடங்கி விட்டதா என்று பார்க்கக் காலை வரை காத்திருக்க வேண்டியிருக்கிறதே!''

''சூரியன்...?'' என்று குணாளன் புரியாமல் விழித்தது சில வினாடி நேரமே. உடனேயே, ''ஒட்டுக் கேட்டாயாக்கும்? 'ஒட்டுக் கேட்பவர்கள் நல்லதைக் கேட்பது இல்லை' என்று ஆங்கிலத்தில் பழமொழியே இருக்கிறது,

தெரியுமல்லவா?'' என்றபோது மீண்டும் அவனது குர லில் கேலி இழையோடியது.

கேலி போலக் குட்டுகிறானாக்கும்! நிமிர்ந்து, ''ஆ னால், சொல்கிறவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று தெரிந்து கொள்ள முடிந்ததே!'' என்றாள் அவள் பதி லுக்கு.

சட்டெனக் குரல் மாற, ''அதனால்தான் கோபமா, ரஞ்சிதம்? அன்றைக்கு உன்னைப் பற்றி எனக்கு நல்ல அபிப்பிராயம் இல்லையல்லவா? அதனால் பேசிய பேச்சு அது. ஆனால், அப்போதும் உன்னை இங்கே தங்க வைப்பதில் நான் உறுதியாகத்தானே இருந்தேன்? பிறகு, உன்னைப் பார்க்கப் பார்க்க... பழைய எண்ணங் கள் எல்லாம் அடியோடு மாறி விட்டன'' என்றான் அவன்.

''எப்படி நம்புவது? ஸ்டோரில் அங்கிள் என் பெயருக்கு எழுதி வைத்திருக்கும் பங்கு வெளியே போய் விடாமல் இருப்பதற்காக நீங்கள் இப்படி ஒரு வழி கண்டுபிடித்தீர்களோ என்னவோ?''

''அந்த மாதிரி நினைப்பே கிடையாது என்றால்?''

''எப்படி நம்புவது?'' என்றாள் அவள் மீண்டும்.

''அதற்காகக் கோவைக்குச் சென்று அந்த மோக னைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயா?''

''ஏன் கூடாது?''

''பைத்தியக்காரத்தனம்!'' என்றான் குணாளன் அழுத்தம் திருத்தமாக.



''ஏனோ? மோகன் எவ்வளவு நல்லவர் தெரி யுமா?'' என்றாள் அவள் வேண்டுமென்றே.

''என்ன நல்லவன்? உன் வேலை மூலம் வரும் வருமானத்திற்காகக் கூட அவன் உன்னை மணக்க முன் வந்திருக்கலாம்''

''தான் திருடி, பிறரை நம்பாள்'' என்பார்கள். உலகில் எல்லோருமே உங்கள் பரம்பரைபோல - அங் கிள் - ஆன்ட்டி மட்டும் விதி விலக்கு - பணத்துக்கு மதிப்புக் கொடுப்பவர்கள் இல்லை என்றாள் மனோரஞ் சிதம் துடுக்காகவே.

''அப்படியாம்மா? அதையும் பார்க்கலாம். இப் போது, நிஜத்தைச் சொல்லு. உங்கள் இருவர் சம்பளத்தை யும் சேர்த்து, அதன் மூலம் எப்படி எப்படி வாழலாம் என்று மோகன் பணத்துக்கு மதிப்பே கொடுக்காத உத்தம மோகன் திட்டமிட்டதே இல்லையா? ஒருதரம் கூட?''

''அதில் தப்பு ஒன்றும் கிடையாது!'' என்று மோக னுக்கு வக்காலத்து வாங்கினாள் மனோரஞ்சிதம். ''நாங்க ளெல்லாம் உழைத்துப் பிழைக்கிற கூட்டம். ஆண் - பெண் எல்லாருமே. எனவே இருவரின் வருமானங்க ளையும் வைத்துத் திட்டமிடுவது இயற்கையே தவிர அதில் தப்பாக நினைக்க எதுவுமே கிடையாது!''

''ஓகோ! நீங்கள் மட்டும் உழைத்துப் பிழைக்கிற கூட்டமா? அதில் ஒரு குட்டு வைக்கிறீர்களாக்கும்! ஏன், நானெல்லாம் உழைக்காமல் உட்கார்ந்தா உண்ணுகி றேன்? இந்த சோகம் நேருமுன் இருந்த அம்மா - பழைய

அம்மா உனக்கும் பரிச்சயம்தானே? - அவர்கள் ஒய்வாக உட்கார்ந்திருந்து பார்த்திருக்கிறாயா?'' என்று குணாளன் மடக்கவும் மனோரஞ்சிதத்திற்கு வாயடைத்துப் போயிற்று.

''இல்லை... சாரி!'' என்றாள் அவள் இறங்கிய குரலில்.

''விடு. இப்போது நம்முன் இருக்கும் பிரச்சினை அதுவல்ல. உன் மூலம் என்ன வரக்கூடும் என்று எதையும் எதிர்பார்த்து நான் உன்னை மணக்கக் கோர வில்லை... ஸ்டோரைப் பற்றி நினையாதே. அது அவ்வ ளவு எளிதாக உன் கைக்கு வர, பாட்டி விடமாட்டார்கள். என்னை நீ மணந்தாலும் கூட அப்படித்தான். ஸ்டோ ருக்கு வக்கீலை வரவழைத்துப் பேச்சு நடத்தியாகிறது. 'அன்ட் யூ இன்ஃப்ளுயன்ஸ்' என்று நிருபித்து உயிலில் உன் சம்பந்தப்பட்ட பகுதியைச் செல்லாது என்று ஆக்கப் போகிறார்களாம். வாய்ப்பு இருக்கிறது என்கிறார் வக் கீல். வேண்டாம் என்றால் என் பேச்சை அவர்கள் கேட்பதாகவும் இல்லை...''

''இதற்காக நான் பயந்து நடுங்கிக் கண்ணீர் விட்டுக் கலங்குவேன் என்று எதிர்பார்த்தீர்களா?''

''இல்லை. சில வாரங்களுக்கு முன்பு அதை எதிர் பார்த்திருக்கக் கூடும். இப்போது இல்லை. அத்தோடு, உன் கல்வித் தகுதிக்கு நீ அப்படி ஒன்றும் தெருவில் நிற்க நேர்ந்து விடாது என்பதையும் மோகனிடமிருந்து தெரிந்து வைத்திருக்கிறேன். நான் தெளிவுபடுத்த விரும் புவது, உன்னோடு வரக்கூடிய செல்வத்துக்காக உன்னை



நான் மணக்கக் கோரவில்லை என்பதுதான்'' என்று விடாமல் சொல்லி முடித்தான் குணாளன்.

பேசாமல் தோளைக் குலுக்கி விட்டு மனோரஞ்சிதம் பேச்சை முடித்து விட்டிருக்கலாம். ஆனால் அப்படி விட மனமின்றி, ''அதெப்படியாம்? என் பேரில் போடப்பட்ட டெப்பாசிட்? அது இப்போது பல வருடங்களாகியிருக்கு மே'' என்றாள் அவள்.

''அப்படி ஒரு பணக் கணக்கு இருப்பதாக நீதான் சொல்லிக் கொள்கிறாய். அதுவும் லட்சக்கணக்கில்! ஆனால் என்ன, எங்கே, சரியாக எவ்வளவு என்று எந்த விவரமும் சொல்லத் தெரியவில்லையே!''

''விவரத்துக்கு நான் எங்கே போவது? அங்கிளின் கணக்கு வழக்குகளை எல்லாம் நானா பார்த்தேன்?''

''பார்த்தவன் நான் சொல்கிறேன், அப்படி எதுவுமே கிடையாது. அதுவும், நீ சொல்வது போல லட்சக்கணக் கான பணம் என்றால், ஒரு சிறு தடம் கூட இல்லாமல் அது மறையவும் வாய்ப்பில்லை!

''அப்படியானால் நான் பொய் சொல்கிறேன் என்கி றீர்களா?'' என்றாள் அவள் ஆத்திரத்துடன். ''இப்படிப் பட்ட பொய் சொல்லி நீங்கள் மணக்க விரும்புவதும் ஆச்சரியம்தான்!''

''பார் மனோரஞ்சிதம், இது ஒன்றும் பெரிய பிழை அல்ல. நீ ரோஷக்காரி. நீ எதிலும் குறைந்தவள் அல்ல என்று காட்டுகிற வேகத்தில் சும்மா ஒன்று சொன்னாய். அவ்வளவுதான்! இதைப் பொருட்படுத்தத் தேவையே

இல்லை நான் பொருட்படுத்தப் போவதும் இல்லை. இதற்கு மேலும் மனம் உறுத்தினால் சொல்லு; என் முழு மனதோடு மன்னித்தும் விடுகிறேன்'' என்றான் குணா ளன் பெருந்தன்மையும் சரசமுமாக.

கோபமாக முறைத்து விட்டு, ''உங்களிடம் மன் னிப்பை வேண்டுகிறவர்களைப் போய் மன்னியுங்கள்! எனக்கு அது தேவையில்லை'' என்று எடுத்தெறிந்து பேசிவிட்டு மனோரஞ்சிதம் எழுந்தாள்.

''ரோஷம்! ரோஷம்!'' என்றான் குணாளன் செல்லக் கண்டிப்புடன். ''இந்த ரோஷத்தைக் கொஞ்சம் மூட்டைக் கட்டி வைத்து விட்டு யோசித்துப் பார். எல்லாம் சரியா கவே தோன்றும்'' என்று உரைத்தபடி குணாளனும் எழுந்தான். ''ஆனால் ஒன்று மட்டும் உறுதியாக மனதில் வை, மனோரஞ்சிதம். உன் வாழ்வு இனி இங்கே தான். அதில் மாற்றமே கிடையாது!''

அவள் தலையைச் சிலுப்பிக் கொண்டு செல்ல முயற்சிக்கவும், அவளைப் பற்றி நிறுத்தி, ''சுற்றிலும் பார், மனோரஞ்சிதம். இந்த மரம், செடி, கொடிகள் எல்லாம் நிலவின் தன்னொளியை மறுக்காமல் ஏற்று எவ்வளவு அழகு பெற்றுப் பொலிகின்றன! எத்தனையோ பருவங் கள், ரஞ்சிதம். தென்றல் வீசும் காலமும் உண்டு; புயல் அடிக்கும் பொழுதும் உண்டு! நிலாக்காயும் நேரமும் உண்டு; வெய்ய கதிரோன் சுட்டெரிக்கும் வேளையும் உண்டு. இது நம் வாழ்வில் நிலாக்காயும் நேரம். இதை ரோஷம், பிடிவாதம் என்று தேவையற்ற உணர்ச்சிகளால் வீணாக்கி விடக் கூடாது, கண்மணி!'' என்று தன்



அமர்ந்த குரலில், மென்மையாகக் குணாளன் கூறிய போது, மற்றதெல்லாம் மறந்து, அவன் மார்பில் மாலை யாகத் தொங்கி விடத்தான் மனோரஞ்சிதத்திற்குத் தோன் றியது. ஆனால்... அந்தப் பண விவகாரம் அவளை உறுத்தியது. மற்ற வகையில் அவளைப் பற்றிய தவறான எண்ணங்களைக் குணாளன் திருத்திக் கொண்டபோதும், இதில் அவள் பொய் சொன்னதாகத்தானே எண்ணுகி றான்? அதை மன்னிக்கத் தயார் என்ற தானே சொல்கி றான்?

குணாளனை மணப்பது பெரும் பேறுதான். தன் மனம் அவனை நோக்கிப் படர்ந்து விட்டதையும் கூட மனோரஞ்சிதம் உணர்ந்துதான் இருந்தாள்.

இந்த வினாடியில், மயக்கத்தின் உந்துதலில் அவனி டம் சம்மதம் தெரிவித்து விடலாம்தான்.

ஆனால், மூட்டிக் கொடுக்கும் பாட்டி அருகிலேயே இருந்து எதையாவது கிளறிக் கொண்டே இருக்கையில், ஒரு சமயமில்லாவிட்டால் இன்னொரு வேளையில், இவள் ஒரு பொய் சொன்னவள்தானே; இப்போது இந்தப் பிழையையும் ஏன் செய்திருக்க மாட்டாள் என்று குணாளனுக்குத் தோன்றாமலா போகும்? அப்படித் தோன்றத் தொடங்கி விட்டால், அப்புறம் அதற்கு முடி வேது?

குணாளனின் குரலும், நிலவும் இரவும் தந்த மயக் கத்திலிருந்து தலையை உலுக்கி மனோரஞ்சிதம் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

அவனது பிடியிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டவள், ''இப்போது என்னை வற்புறுத்தாதீர்கள். குணா சார், ப்ளீஸ்...'' என்று கெஞ்சலாகக் கேட்க, அவன் சற்றுத் தயங்கி விட்டு 'சரி' என்பது போலத் தலையசைத்தான்.

இந்தப் பண விவகாரம் மனோரஞ்சிதத்தின் மண்டையை வெகுவாகக் குடைந்தது.

எட்டு ஆண்டுகளுக்கு முன், சந்தானம் அந்தப் பணக் கணக்கு பதிந்த 'பாஸ்' புத்தகத்தைக் காட்டிய நிகழ்ச்சியைத் திரும்பத் திரும்ப மனதில் கொணர்ந்து படிப்படியாகப் பலமுறை ஆராய்ந்தாள்.

அந்த நிகழ்ச்சியில் எந்த ஓர் இடத்தையும் அவள் கற்பனை செய்திருக்க சாத்தியமே இல்லை.

மேஜை மேல் ஏறி, மின் விசிறியைத் துடைத்ததிலிருந்து, சந்தானம் அழைத்தது, பேசியது, பாஸ் புத்தகத்தைக் காட்டியது... எதிலும் இப்போது அவளுக்குச் சந்தேகமே இல்லை!

அந்தப் பாஸ் புத்தகம் எந்த பாங்க், என்னவிதமான கணக்கு, எதுவும் புரிந்தால் அல்லவா குணாளனிடம் அதுபற்றிப் பேசமுடியும்!

வெகுவாக யோசித்து அவள் கண்டுபிடித்த ஒரே விவரம், அது பாங்கில் பணம் செலுத்தும் 'டெப்பாசிட்' புத்தகம். அவளுக்கு நினைவு வந்த வரை, அந்தப் புத்தகத்தின் அமைப்பு அப்படித்தான் சொல்லியது! பண வரவு குறிக்கப்பட்டிருந்த விதமும் கூட.



அடுத்து, எந்த பாங்க் என்று தீவிரமாக யோசித்தாள். ஒவ்வொரு பாங்கிலும் போய் விசாரித்து விட வேண்டியதுதான் என்று எழும்போதே மிகவும் சோர்ந்தும் போனாள்.

சென்னையில் எத்தனை பாங்குகள்! அவற்றில் எத்தனை எத்தனை கிளைகள்! எப்படிக் கண்டுபிடிப்பது?

இது செல்லாத ஊருக்கு வழி என்று சோர்ந்து போகும்போதே, இந்தப் பண விவகாரம் நிரூபிக்கும் வரை, குணாளனோடான வாழ்வுக்கும் வழி கிடையாது என்ற எண்ணம் மீண்டும் அவளுக்கு ஊக்கத்தையும் முக்கியமாக வேலை செய்யும் உரத்தையும் கொடுத்தது.

இன்னுமோர் தடயம் அவளுக்குத் தானாகக் கிடைத்தது. அன்று, அடுத்த தெருவில் இருந்த பழக்கடையில கொஞ்சம் பழங்கள் வாங்கி வந்த போது, எதிரே இரு சைக்கிள்கள் மோதிக் கொண்டன. சவாரி செய்தவர்கள் கீழே சாய்ந்தார்கள்.

சிதறிக் கிடந்த பொருட்களைத் திரட்டிக் கொடுத்தவர்களுள் மனோரஞ்சிதமும் ஒருத்தி. சிதறிய பொருட்களுள் ஒன்று அந்தச் சிறுவனின் பாங்க் டெப்பாசிட் புத்தகம்.

சற்றுச் சிறிய அளவில் மற்ற பாங்க் புத்தகங்களிலிருந்து மாறுபட்டு இருந்த அந்தப் புத்தகத்தைக் கண்டதும் மனோரஞ்சிதத்தின் நெஞ்சு சற்று நின்று வேகமாகத் துடித்தது.

அதேபோலப் புத்தகம் ஒன்றைத்தான் மனோரஞ்சிதத்திடம் முன்பு சந்தானம் காட்டியிருந்தார். அதே பாங்கில்தான் அவளது பணமும் போடப்பட்டிருக்க வேண்டும்!

இப்போது பாங்க் தெரிந்து விட்டதால், அதன் பலப்பல கிளைகளில், எந்தக் கிளையில் இந்தப் பணம் போடப்பட்டது என்று அறிய முயன்றாள்.

அதுவும் அப்படி ஒன்றும் எளிய வேலையல்ல. பல தடைகள். ஒன்று அக்கவுண்ட் நம்பர் தெரியாது; இரண்டாவது எந்த பாங்கிலும், யாரோ வந்து கேட்கும் போதெல்லாம் அடுத்தவர் கணக்கைக் கேட்போரிடம் ஒப்படைக்க மாட்டார்கள்.

இந்த வங்கிக் கிளைகளில் ஓரளவு அருகில் இருந்தவற்றை முதலிலேயே மனோரஞ்சிதம் கழித்து விட்டாள். ஏனெனில் அருகில் இருந்தவற்றுக்குச் சந்தானம் மறைந்த சேதி கிடைத்திருக்கும். தொடர்ந்து பணம் கட்டவில்லையே என்று கேட்டிருப்பார்கள். அப்படிக் கேட்டிருந்தால் அது குணாளனையும் எட்டியிருக்கும். தகவல் கிடைத்தபின் இல்லை எனக் கூடியவன் அவன் அல்ல.

ஆனால், மனோரஞ்சிதத்தின் இந்த அனுமானத்திலும் ஒரு குறை இருந்தது. எப்படியும் பாங்க் விவகாரங்களில், கணக்கைக் கையாள்வோரின் முகவரி இருக்கும். எந்த ஒரு தகராறு என்றாலும் அந்த முகவரியோடு பாங்கிலிருந்து தொடர்பு கொண்டிருப்பார்கள். தன் குடும்பத்தாருக்குத் தெரியக் கூடாது என்று சந்தானம் ஏதேனும்



பொய் முகவரி கொடுத்திருந்தால் தவிர, அந்தப் பணம் இப்படித் தடமற்று மறைய வாய்ப்பே இல்லை!

மனம் சோர்வடையச் செய்யும் இந்த உண்மைகளை எல்லாம் பிடிவாதமாக ஒதுக்கி விட்ட, மனோரஞ்சிதம் தன் முயற்சியில் இறங்கினாள்.

முதல் நாலு இடங்களில் அவளுக்குக் கிடைத்தது தோல்வியே. பாங்க் கணக்குகள் ரகசியம் என்ற விதியை உடைக்கவே அவள் படாத பாடுபட வேண்டியிருந்தது. ‘என் பெயரிலேயே போடப்பட்டது, புத்தகம் தொலைந்து விட்டது; கணக்கைக் கையாண்ட மாமா இறந்து விட்டார்; இந்தப் பணம் இல்லாவிட்டால் என் எதிர்காலமே இருண்டு விடும்’ என்று பாங்க் நிர்வாகியிடம் பாதி உண்மையே உரைத்து, கண்ணைக் கசக்கி, நிர்வாகிகளின் மனதை உருக்கியும் ஒரு பயனும் கிடைக்கவில்லை.

பெரும்பாலும் நம்பிக்கையற்றுத்தான் அவள் ஐந்தாவது கிளைக்குச் சென்றது. எடுத்த முயற்சியை அரை குறையாக விடக்கூடாது என்ற அவளது உறுதிக்கு அங்கே பலன் கிடைத்தது. பெயர் மனோரஞ்சிதம், காப்பாளர் சந்தானம் என்று மனோரஞ்சிதம் கூறியது சரியாக இருக்கவே, மற்ற விவரங்களையும் அவளுக்குக் கொடுக்கும்படி நிர்வாகி அனுமதி கொடுக்க, அதன்படி அவளிடம் கொடுக்கப்பட்ட விவரங்களைப் படித்துப் பார்த்தவளுக்கு மயங்கி விழாத குறைதான். அவ்வளவு அதிர்ந்து போனாள்.

ஏனெனில் ஐந்து மாதங்களுக்கு முன்பு அந்த டெப்பாசிட் உடைக்கப்பட்டு, பணமும் முழுவதாக எடுக்கப்பட்டு, கணக்கு முடிக்கப்பட்டிருந்தது! சந்தானமே அதைச் செய்திருந்தார்.

இரக்கத்துடன் நோக்கிய நிர்வாகிக்கு நன்றி செலுத்தி விட்டு, பாங்கிலிருந்து வெளியேறிய மனோரஞ்சிதத்திற்குச் சுரீரென்று ஒன்று உறைத்தது.

அவள் சென்னை வந்து ஒரு மாதம் ஆகிறது. அதற்கு முன் சந்தானம் மறைந்து ஒரு மாதம் முடிந்திருந்தது. அவருக்கு 'ஸ்ட்ரோக்' வந்து சுய உணர்வற்று நோயாளியாகக் கிடந்தது நாலு மாத காலம். மொத்தம் ஆறு மாதம் ஆகிறது. இதில் ஐந்து மாதங்களுக்கு முன்பாக - சந்தானம் நோய்ப்பட்டு ஒரு மாதத்திற்குப் பிறகு, அவரால் எப்படி இந்தப் பணத்தை எடுத்திருக்க முடியும்?

இது யாருடைய சதிவேலை?

ஒரு கணம் குணாளன் மீதே சந்தேகம் தோன்றிவிட, மனோரஞ்சிதத்திற்குக் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது.

## 16

வினாடி நேரம்தான். அதற்கும் குறைவாகக்கூட இருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட நயவஞ்சகம் குணா



ளன் செய்திருக்கக் கூடும் என்று எண்ணியதற்காக மனோரஞ்சிதம் தன்னையே வெகுவாகக் கடிந்து கொண்டாள்.

இது வேறு யாரோ செய்த வேலை! சந்தானம் அங்கிள் சேர்த்து வைத்த செல்வங்களை இப்போது யார் யார் இப்படிச் சுருட்டிக் கொண்டு இருக்கிறார்களோ?

இந்த விவரத்தைக் குணாளனிடம் கொடுத்துவிட்டால், மனோரஞ்சிதத்தைப் பற்றிய தப்பு அபிப்பிராயம் விலகுவதோடு, மேற்கொண்டு இதுபோலக் களவு போகாமல் காக்கும் நடவடிக்கைகளையும் அவன் எடுப்பான்.

அந்த இரு காரணங்களினால் அன்றிரவே இந்தப் பணம் பற்றி மனோரஞ்சிதம் குணாளனிடம் பேச்செடுத்தாள்.

ஒரு முறுவலோடு, ''இந்தப் பணப்பேச்சை விடவே மாட்டாயா, ரஞ்சிதம்? நான்தான் உன்னைக் குறைவாக நினைக்கவில்லை என்றேனே!'' என்று கையிலிருந்த வேலையில் கவனமாய் இருந்தபடியே குணாளன் கேட்ட போது, அவனது பின்புறமாக ஜன்னலின் வெளியே தெரிந்த அசைவு மனோரஞ்சிதத்தின் கவனத்தை ஈர்த்தது.

தாத்தா சிதம்பரம்! ஒரு விரலால் ஜன்னல் திரையை ஒதுக்கி அவளை நோக்கிக் கரம் கூப்பியிருந்தார்! முகத்தில் யாசிப்பு!

திகைப்புடன் அவள் நோக்க, ஒரு கையால் வாயைப் பொத்திக் காட்டி மீண்டும் கைகூப்பினார் அவர்.

கையில் இருந்த வீட்டுச் செலவுக் கணக்கை மூடி வைத்துவிட்டு, அவளை நிமிர்ந்து நோக்கி, ''என்னம்மா? இனிச் சொல்லு கேட்கிறேன்'' என்றான் குணாளன்.

''ஒ... ஒன்றுமில்லை!'' என்று அவள் தடுமாற ''உனக்கு ஏன் இந்த ரோஷம், ரஞ்சி? நான் உன்னிடம் ஏதாவது பணம் கேட்டேனா? அல்லது பணமில்லை என்பதற்காக உன்னைக் குறைவாக மதித்தேனா? ஆனாலும் அசட்டு ரோஷம்!'' என்று குணாளன் செல்லமாகக் கூற, மனோரஞ்சிதம் அசடு வழியும்படி ஆயிற்று.

ஆனால், உடனேயே சிதம்பரத்தைத் தேடிச் சென்று அவள் விவரம் கேட்டபோது, ''இப்போது இங்கே வேண்டாம், மனோரஞ்சிதம். நாளை மதியம் மாடிக்கு வந்து சொல்கிறேன்.'' என்றார் அவர்.

விநாடி யோசித்து, ''மாடிப்படி ஏறவேண்டும் தாத்தா. அது உங்களுக்கு நல்லதில்லையே! நாளை மதியம் பாட்டி தூங்கும்போது நான் கீழே வருகிறேன். சொல்லுங்கள்'', என்று கூறிச் சென்றவளையே கண்கலங்கப் பார்த்துக் கொண்டிருந்தார் சிதம்பரம்.

மறுநாள், மறவாது வந்து கேட்டவளிடம் அவர் மறைக்காமல் முழு விவரங்களையும் கூறினார்.



பல ஆண்டுகளாக ஒதுங்கிக் கிடந்த போட்டிக் கடைக்காரன், கடந்த ஆண்டில் சந்தானத்துக்குப் பெரும் தொல்லை கொடுத்து விட்டானாம். மற்ற வகைகளில் அவனைச் சந்தானம் சமாளித்துக் காட்டி விட்டதால், புது உத்திகளைக் கையாண்டு இருக்கிறான். இலங்கையிலிருந்து வந்த அவனுடைய மைத்துனன்தான் குரு. ஸ்டோருக்குள் வந்து ஏதாவது கலாட்டா செய்வது, மருந்துப் பிரிவில் வந்து போலி மருந்து விற்பதாகக் கூச்சலிடுவது, துணிப்பகுதியில் தரமற்ற துணி என்று கிழித்துக் காட்டுவது, கண்ணாடி பீங்கான் பகுதியில் ஏதாவது அடுக்கை ஓசைப்படாமல் சரித்து விட்டுவிடுவது, ஏதாவது காரணம் காட்டிக் கைநீட்டுவது - ஸ்டோருக்கு வெளியேயும் ஏதாவது சண்டை சச்சரவை நடத்திக் கல்லெறிந்து ஸ்டோரின் கண்ணாடிகளை உடைப்பது, இதற்காக ஒரு கூலிப பட்டாளமே வேலை செய்தது.

என்னதான் விசுவாசமிக்க வாடிக்கைக்காரர்கள் என்றாலும், எந்நாளும் கலவரம் நடக்கும் இடத்துக்கு யார் வருவார்கள்?

''போலீசில் புகார் கொடுத்திருக்கலாமே, தாத்தா?'' என்றாள் மனோரஞ்சிதம்.

''கொடுக்காமல் இருப்பேனாம்மா? ஆனால் போலீஸ் வரும்போது இங்கே ஒரு பிரச்னையும் இராது. அங்கேயே, உள்ளே யாருக்கோ பணம் கொடுத்து வைத்திருந்திருக்கிறான். அத்தோடு, போலீஸ் அடிக்கடி வருவதும் வாடிக்கையாளர்களை விரட்டுகிற உத்தி தானம்மா... விற்பனையே இல்லாமல் இத்தனை பேருக்

குச் சம்பளம் கொடுத்து... இவ்வளவு பெரிய நிறுவனத்தை எவ்வளவு காலம் நடத்த முடியும்?''

''கடைசியாக, அன்று அடிமாட்டு விலைக்கு ஸ்டோரைத் தனக்கு விற்றுவிடும்படியும், விற்காவிட்டால் இது கூட மிஞ்சாது என்றும் கூறி, அந்தப் போட்டிக் கடைக்காரன் மிரட்டினானாம்... அப்போதே சதாவுக்கு ஒரு மாதிரி இருந்திருக்கிறது. முகத்தைப் பார்த்து விட்டு என்னவென்று கேட்டேன். 'மீள வழியே இல்லையேப்பா' என்றான். அன்றிரவே 'ஸ்ட்ரோக்' வந்துவிட்டது. அதன்பிறகு என் பிள்ளை ஒரு பேச்சுகூடப் பேசவில்லை!'' என்று கூறிக் கண்களைத் துடைத்துக் கொண்டார் அந்தக் கிழவர்.

அன்று அவன் பெற்றவளிடம் சொன்னது நினைவு வர? ''கு... குணாளன்...'' என்று தயங்கிக் கொண்டே கேட்டாள் மனோரஞ்சிதம்.

''உன் பாட்டி!'' என்றார் அவர் கசந்த குரலில். ''அவனை அவள் எப்போது உருப்பட விட்டாள்? ஏதோ மகாராஜ பரம்பரை மாதிரி, அப்போதும் ஏதோ சிங்கப்பூருக்கு உல்லாசப் பயணம் அனுப்பியிருந்தாள். ஆனால் ஒன்று. அவள் என்னதான் கெடுத்திருந்தாலும், அவன் கருணாகரியும் சந்தானமும் பெற்ற பிள்ளையல்லவா? நிலைமை அறிந்ததும் அவன் அதிர்ந்து நின்றது இரண்டே நாட்கள்தான். பிரச்னை பற்றி நான் அறிந்தவரையில் சொன்னேன். ஸ்டோரில் கிரகித்தது பாதி. பிள்ளை சமாளித்து விட்டான்!'' என்றார் அவர் பெருமையாக



''எப்படித் தாத்தா?''

''வைரத்தை வைரத்தால் தானே அம்மா அறுக்க வேண்டும்?. ஓய்வு பெற்ற மிலிட்டரிக்காரர்கள் சிலரைத் தளத்துக்கு இரண்டு பேர் வீதம் கையில் துப்பாக்கியோடு நிறுத்தி வைத்தான். போலீசிலும் பெரிய ஆபீசரைப் பிடித்து இந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு நன்றாக நாலு டோஸ் கொடுக்க வைத்தான். ஒரு பெரிய தள்ளுபடி விற்பனை என்று விளம்பரம் செய்து, வாடிக்கையாளர்களைத் திரும்ப வரச் செய்தான். வருமான வரி இலாகாவை உசுப்பிவிட்டு, முழுக்க முழுக்கக் கள்ளக் கணக்கிலேயே வாழ்ந்த அந்தப் போட்டிக் கடைக்காரனை நன்றாக மாட்டி வைத்தான். இந்தப் பக்கம் தலைகாட்டினால் தீவிரவாதி என்று புகார் செய்து உள்ளே தள்ளி விடப் போவதாக மிரட்டி அந்த மைத்துனனை ஓட வைத்தான்...''

''பரவாயில்லையே, தாத்தா!'' என்று பெருமிதமாய்ச் சிரித்தாள் மனோரஞ்சிதம். ''ஆனால்...?''

''இவ்வளவு செய்தும் கையில் பணம் இல்லாததால் எல்லாம் போய்விடக் கூடிய நிலைமை, மனோ. அப்போதுதான்... உனக்காகச் சேர்த்து வந்த பணத்தைச் சதா, கணக்கில் காட்டியது இல்லை. பாட்டியின் ஆதிக்கத்தில் இருந்த குணா அதை ஆட்சேபிக்கக் கூடுமோ என்று கவலையாக இருக்கும் என்று நினைக்கிறேன். அவனாக எதிர்க்காவிட்டாலும், தங்கம் சும்மா விடமாட்டாளே! இதையெல்லாம் எண்ணி, அவன் தன் கைச் செலவுக்காக

எடுக்கும் பணத்தில்தான் இதைக் கட்டி வந்தான்... என்னம்மா?''

''ஒன்றுமில்லை, சொல்லுங்கள்'' என்றபோதும் உள்ளூர அவள் மனம் நொந்து போயிற்று. மகள் என்று பெற்ற கடனுக்காக இந்தப் பணத்தையாவது தந்தை அனுப்புகிறார் என்று நினைத்திருந்தாள். அதுவும் இல்லை! அவளைப் பெற்றவருக்கு மகளைப் பற்றிய அக்கறை அணுவளவுகூட இருக்கவில்லையே!

''பாங்குகளில் 'ஓடி' கொடுக்க மறுத்ததோடு கொடுத்த கடனையும் கட்டச் சொல்லி ஒரே கெடுபிடி. அப்போதுதானம்மா இந்தப் பணத்தை எடுத்துக் கொடுத்தேன். ஐந்து லட்சம் சேர்ந்திருந்தது. என் கணக்கில் ஓர் இரண்டு லட்சம் இருந்தது. அதையும் இதையும் சேர்த்து, எல்லாமே என்னது என்று குணாவிடம் கொடுத்தேன்...''

''ஆனால்...''

''எப்படி முடியும் என்று கேட்கிறாயே? உன் மாமாவைப் போலக் கள்ளக் கையெழுத்திட்டு எடுத்தேன்! பெரிய குற்றம்தான் அம்மா. ஆனால்... அவன் சேர்த்துக் கொண்டே வந்தான் என்றாலும், நீ சென்ற இடம் தெரியவில்லை. திரும்பி வருவாய் என்ற நிச்சயமும் இல்லை! அத்தோடு, இது மொத்தப் பணமும் ஸ்டோரிலிருந்து வந்ததுதானே? அது அழிந்து விடாமல் காப்பாற்ற, இந்தப் பணத்தைப் பயன்படுத்துவது தப்பில்லை என்று தோன்றியது...''

''தப்பில்லை, தாத்தா'' என்றாள் அவளும்.



''பெரிய தொகை; கைவிட்டுப் போவது என்றால் வருத்தமாகத்தான் இருக்கும்...''

''கையில் என்றேனும் இருந்திருந்தால், அது போயிற்றே என்று வருத்தம் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால், இது அப்படியில்லையே! அங்கிளின் பணம் அங்கிளின் நிறுவனத்துக்கே பயன்பட்டது எனக்கு ஆறுதல்தான்.''

''பின்னே ஏனம்மா, வாடித் தெரிகிறாய்?'' என்று கவலையும் பரிவுமாக வினவினார் பெரியவர்.

மடியில் கோத்திருந்த கைகளைப் பார்த்துவிட்டு, ''இந்தப் பணம், வெளிநாட்டிலிருந்து என் அப்பா அனுப்புவது, அதுதான் சேர்ந்து கொண்டு வருகிறது என்று எட்டு ஆண்டுகளுக்கு முன்பு அங்கிள் என்னிடம் சொன்னார். ஆனால் என் அப்பா அப்படி எதுவும் பெண்ணுக்காகச் செய்து விடவில்லை என்பது கொஞ்சம்... கொஞ்சம் ஒரு மாதிரி இருக்கிறது'' என்றாள் மனோரஞ்சிதம் மெல்லிய குரலில்.

''உன் தகப்பன் நல்லவனம்மா... அவன்... அவன் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பியதாகவா சதா சொன்னான்? வந்து... அவன் ஏதாவது ஏற்பாடு செய்திருக்க வேண்டும். மனோரஞ்சிதம்... அவன் பொறுப்பில்லாதவன இல்லம்மா...''

ஒன்றும் சொல்லாமல், லேசாக முறுவலிக்க முயன்றபடி மனோரஞ்சிதம் எழுந்தாள்.

''குணாவிடம் சொல்லப் போகிறாயாம்மா? அவன் என்னிடம் கோபப்படுவானே?'' என்று அதற்கு வேறு சிதம்பரம் கவலைப்பட்டார்.

''சொல்வதற்கு அவசியமில்லையே தாத்தா!'' என்று மனோரஞ்சிதம் புன்னகை புரியவும் நிம்மதி யோடு பெருமூச்சு விட்டார் அவர்.

''வேறு வழியின்றிப் பணத்தை எடுத்துவிட்டு, உன்னை நிமிர்ந்து பார்க்க முடியாமல் ஒரே தவிப்பாக இருந்தது... என்னவோ, எல்லாம் சொல்லி விட்டது போல் ஒரு பாரம் இறங்கிய மாதிரி இருக்கிறது.'' என்றார் முதியவர் தொடர்ந்து.

வந்த அன்று, ஒரு புன்னகைக்குக் கூடப் பஞ்சமா என்று நினைத்தது மனோரஞ்சிதத்துக்கு நினைவு வந்தது. பாவம்! குற்றக் குறுகுறுப்பில் குன்றிப் போய் இருந்திருக் கிறார்.

அன்று வரையிலும், சிதம்பரத்திடம் மனோரஞ்சிதத் துக்கு அதிகமாகப் பாசம் என்று எதுவும் கிடையாது என்றாலும், மலை போன்ற மகனைப் பறிகொடுத்து விட்டு, உள்ளூர மருகிக் கொண்டிருந்த அவரிடம் அவ ளுக்குப் பச்சாதாபமே உண்டாயிற்று.

தப்பு செய்தது தன் தாத்தாவே என்பது தெரிந்தால் குணாளன் குன்றிப் போவான். அது பெரியவர் அஞ்சி யது போல பாட்டனின் மேல் கோபமாகவும் வெடிக்க லாம். இந்த முதிர்ந்த வயதில், அவருக்கு அதுபோன்ற



துன்பங்கள் நேர அவள் காரணமாகக் கூடாது என்று மனோரஞ்சிதம் முடிவு செய்தாள்.

ஆனால் குணாளனைப் பிரிவது - அவனை அடி யோடு பிரிந்து வாழ்வதும் இனி முடியாது என்று மனோரஞ்சிதத்துக்குத் தோன்றியது.

அவன்தான் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம், இல்லாத வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டேனும் அவ னது ஆசையையும் நேசத்தையும் சொல்லிச் சொல்லி அவளைப் பைத்தியமாக்கிக் கொண்டு இருக்கிறானே! இந்தப் பண விஷயத்தைப் பொருட்படுத்தவில்லை என் றும் சொல்கிறான்! பேசாமல் கண்ணை மூடிக் கொண்டு அவனுக்குக் கழுத்தை நீட்டி விட்டால் என்ன?

கண்களை மூடிக் கற்பனை செய்து பார்த்தால், மூடிய இமைகளுக்குள் தங்கம்மாள் வந்து நின்றாள். அதுவும் சும்மா அல்ல. தாலியுடன் நீண்ட குணாளனின் கரங்களைப் பின்புறமிருந்து இழுத்துப் பிடித்தபடி!

உடல் குலுங்கிப் போயிற்று மனோரஞ்சிதத்துக்கு.

சிறு வயதிலிருந்து, குணாளன் மீது தங்கம்மாளுக்கு இருந்த பாச வெறியும், ஆதிக்கமும் எல்லோரும் அறிந்த துதான். ஒரேயடியாகப் பணிந்து போகும் புத்தி குணாள னுக்குக் கிடையாது என்றாலும் பல விஷயங்களில், தங்கம்மாள் தன் கருத்துக்களைக் குணாளனுக்கு, ஏற்றி வைத்து, அதன்படி அவனை ஆடவும் வைத்திருக்கிறாள்.

உதாரணத்துக்கு, மனோரஞ்சிதத்தைப் பற்றிய அவனது முந்தைய அபிப்பிராயத்தையே சொல்லலாமே! தாய் மகனுக்கு இடையே இருக்க வேண்டிய இயல்பான நெருக்கத்தைக் கூடக் கெடுத்திருந்தாளே!

இந்தப் பாட்டியைத் தாண்டி அவர்களது திருமணம் பிறகு இல்லறம்... இதெல்லாம் நடக்கிற காரியமா? குணாளன் பிடிவாதமாக நடத்தினால்கூட, யாருக்கும் நிம்மதியில்லாமல் அடித்து விடுவாள்!

முன்பானால், தங்கம்மாளை நேரடியாக எதிர்கொள்ளாமல் ஒதுங்கிப் போய் விடுவது முடிந்தது. அது போதுமானதாகவும் இருந்தது. ஆனால் உறவென்று ஆகி, ஒரே வீட்டில் வாழும்போது அது சாத்தியப்படாதே! தங்கம்மாள் அதற்கு விடவும் மாட்டாள்! தேடிப் பிடித்து, மணலை மலையாக்கி, மலையை மகாதேவனாக்கி... ஸ்டோரிலிருந்து, அலுத்துக் களைத்து இரவில் வீடு திரும்பும் குணாளனுக்கு வீட்டில் நரகம்தான் காத்திருக்கும்.

சண்டைக்காரன் காலில் விழுவது பற்றிய பழமொழி மனோரஞ்சிதத்துக்கு நினைவு வந்தது. குணாளனுக்காக அவள் விழத் தயார்தான். ஆனால், கல் கனியுமா? முயற்சித்துப் பார்ப்பது என்று அவள் முடிவு செய்தாள்.

தங்கம்மாளுக்குப் பிடித்தமான பதார்த்தங்களை, அவளுக்கு ஏற்றபடி பக்குவமாகச் சமைத்து எடுத்து போய்க் கொடுத்தாள். நன்றாக உண்டு முடித்து விட்டு, உப்பு ஒரு கல் கூடுதல் என்றாள் பாட்டியம்மாள்.



தன் நேரடிப் பார்வையில் அவளது அறையைச் சுத்தம் செய்ய வைத்து, திரை மாற்றி, பூங்கொத்து வைத்து, பார்த்துப் பார்த்து மனோரஞ்சிதம் அழகு படுத்தினாள், தங்கம்மாள், அதைக் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. சிதம்பரம் மட்டும் மனைவி அறியாமல் வந்து, ''அறையே பளிச்சென்று இருக்கிறதம்மா.'' என்று பாராட்டி விட்டுப் போனார்.

தங்கம்மாளுக்குப் பிடித்தமான புத்தகம், ஆடியோ, வீடியோ கேசட்டுகள் எடுத்து வைத்தால் ஒரு வேலைக்காரியின் கடமையாய் அதைப் பாவித்து, படித்து, கேட்டு, பார்த்து ரசித்து விட்டு அடுத்து எடுத்து வைக்க வேண்டியது பற்றி ஏவிவிட்டுச் சென்றாள்.

எந்த விதத்திலும் அவளை அணுக முடியாமல் தவித்துவிட்டு, மனோரஞ்சிதம் இன்னுமொரு வழி கண்டு பிடித்தாள். அதன்படி, ''ஸ்டோரில் அங்கிள் எனக்கு எழுதி வைத்திருக்கும் பாகத்தைத் திருப்பித் தருவது சட்டப்படி முடியாததாக இருக்கலாம். ஆனால், அந்தப் பாகத்தின் மூலம் வரும் வருமானத்தை நான் அப்படியே திருப்பித் தருவதை யாரும் தடுக்க முடியாதே. அப்படித் தருவதாக எழுதி, ரெவின்யூ ஸ்டாம்பில் கையெழுத்திட்டு வைத்திருக்கிறேன். குணா சாரிடம் கொடுத்து விடுங்கள்''என்று சொல்லிப் பத்திரத்தை தங்கம்மாளிடம் கொடுத்தாள்.

''அந்தப் பங்கு உனக்கு வராவிட்டால் அல்லவோ இந்தப் பேச்சு!'' என்று மனோரஞ்சிதத்தை அயர வைத்து

விட்டு, மறவாமல் அவள் எழுதிய பத்திரத்தையும் எடுத்துக் கொண்டு போனாள் தங்கம்மாள்.

அவளது முயற்சிகளை எல்லாம் மவுனமாகப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு சோர்ந்து நின்றவளின் தோளில் ஆறுதலாகத் தட்டி, ''எழுபது வயது ஆகிறது! இதற்கு மேல் பாட்டி மாறுவார்கள் என்று எதிர்பார்ப்பது அசட்டுத்தனம், ரஞ்சிதம். அவர்களைப் பற்றிக் கவலைப் படாமல் நம் வேலையை நாம் பார்க்க வேண்டியது தான்.'' என்றான் குணாளன்.

''இன்னும் கொஞ்சம்... கொஞ்ச காலம் பொறுங்கள்.'' என்று மனோரஞ்சிதம் சொன்னதை அவன் ஒத்துக் கொள்ளவில்லை.

''காலமெல்லாம் காத்திருந்தாலும் இது போன்ற செய்கைகளால் பாட்டியின் மனம் உன்னிடம் இளகப் போவது இல்லை. நான், அப்படிக் காலமெல்லாம் காத்திருக்கப் போவதாகவும் இல்லை. அவர்களைச் சமாளிக்கும் விதம் எனக்குத் தெரியும். நீ பேசாமல் பார்த்துக் கொண்டு இரு. போதும்.'' என்ற குணாளன், ஞாயிறன்றே, தனது திருமணம் பற்றிய முடிவைத் தங்கம்மாளிடம் வெளியிட்டான்.

மனோரஞ்சிதம் அஞ்சியது போலவே வீட்டில் பூகம்பம் வெடித்தது!



## 17

காலை உணவு முடிந்ததும் ஹாலில் அமர்ந்து டி.வி. பார்ப்பது பெரியவர்கள் இருவருக்கும் எப்போதுமே வழக்கம். ஞாயிற்றுக் கிழமைகளில் குணாளனும் அவர்களோடு அமர்ந்து பேசிக் கொண்டு இருப்பான். இன்று கருணாகரியையும் கூட அங்கு வரச் சொல்லியிருந்தான்.

இப்படி எல்லோரும் குழுமியிருந்தபோது, குணாளன் தன் தாத்தா பாட்டியை அழைத்து, உயிலில் தந்தை எழுதி வைத்திருந்தபடி மனோரஞ்சிதத்தை மணக்கப் போவதாக அறிவித்தபோது, முதலில் சற்று நேரம் தங்கம்மாளால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

சூரியன் மேற்கே உதித்தால்தான் என்றானே? அவளை ஏமாற்றுவதற்காகவா அப்படிச் சொன்னான்?!

கொஞ்ச நாட்களாகவே, கருணாகரிக்கு இப்படி ஓர் ஐயம் உண்டுதான். இன்று மகன் வாய் திறந்து அதைச் சொல்லவும், அவள் முகம் மலர, ''மிகவும் மகிழ்ச்சி குணா. ரஞ்சிம்மா, எனக்கு எவ்வளவு சந்தோஷம், தெரியுமா?'' என்று குதூகலித்தாள்.

மருமகளின் குதூகலக் குரலில் உசுப்பி விட்டுவிட்டாற் போலத் தங்கம்மாள் அவள்மீது பாய்ந்தாள். ''நீதாண்டி நீதான் இதற்கெல்லாம் காரணம். படிக்காத முட்டாள், சொன்ன பேச்சுக் கேட்பாய் என்று உன்னை

இங்கே கொண்டு வந்தால், நீ என் கூடவே இருந்து குழிபறித்து விட்டாயே! ஒரு வேலைக்கார நாயைக் கொணர்ந்து சிம்மாசனத்தில் ஏற்ற ஏற்பாடு செய்துவிட்டாயே! விடுவேன் என்றா நினைத்தாய்? பஞ்சைப்பராரி நாய்! வேலைக்காரப் பரம்பரை! குடும்ப கவுரவமே கவிழ்ந்து விடுமே! கொஞ்சமாவது அக்கறை இருக்கிறதா?'' என்று நிறுத்த மாட்டாமல் பொருமித் தீர்த்தாள் அவள்.

தன் மெல்லிய குரலில், ''நான் ஒன்றுமே செய்யவில்லை அத்தை!'' என்றாள் கருணாகரி.

''யாருக்கடி காது குத்துகிறாய்? உன் துணை இல்லாமலா இந்த வேலைக்காரக் கழுதை இவ்வளவு தைரியமாய் இங்கே வந்து நிற்கிறது?'' என்று மீண்டும் தங்கம்மாள் உரக்கக் கத்தினாள்.

ஓர் எட்டு முன்னே வந்து, தங்கம்மாள் அமர்ந்திருந்த சோபாவின் கைப்பிடிகளில் கைவைத்துக் குனிந்து, ''போதும் பாட்டி. இவ்வளவு நேரத்துக்கு உங்கள் அதிர்ச்சி தீர்ந்திருக்கும். இனிமேல் நீங்கள் கட்டுப்பாடு இல்லாமல் பேசக் கூடாது.'' என்று குணாளன் தன் அமர்ந்த குரலில் நிதானமாக உரைத்தான்.

பெரும் சிரமத்துடன் தன்னை ஓரளவு அடக்கிக் கொண்டாள் தங்கம்மாளும். ''கண்ணு. நீ சின்னப்பிள்ளையடா. உனக்கு ஒன்றும் தெரியாதுப்பா.'' என்றாள் கெஞ்சுதலாக.



''இருபத்தேழு வயதிலா, பாட்டி?'' என்று வரிசைப் பல் தெரிய அழகாகச் சிரித்தான் பேரன்.

சிரித்துப் பேசியே தன் பாட்டியை வசியம் பண்ணக் குணாளன் முயற்சிப்பதை உணர்ந்து, மனோரஞ்சிதம் வியப்புடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். முடியுமா? ஐயம்தான்.

முடியாது என்று காட்டினாள் தங்கம்மாள். ''எத்தனை வயது ஆனால் என்ன? நீ என் கண்ணான பேரன்தானே?'' என்று தட்டைத் திருப்பிப் பேரனைத் தன்வயப்படுத்த முயற்சித்தாள்.

''வெற்றிகரமாய்த் தொழில் நடத்துகிறேன், பாட்டி. தொழிலில் இதுவரை என், ஓர் எட்டு கூடத் தவறாக இருந்தது இல்லை.

''தொழில் வேறு, வீடு வேறு, கண்ணா'' என்றாள் பாட்டியம்மாள். ''பார் கண்ணு. இவள் ரொம்பவும் மோசமானவள் ராஜா. உன்னை மணந்து கொண்டால் பெரிய பணக்காரியாகி விடலாம் என்று திட்டம் போட்டு உன்னை மயக்கியிருக்கிறாள், இந்தத் தினவெடுத்த தெரு நாய்!''

''போதும் பாட்டி!'' என்று நிமிர்ந்தான் குணாளன். ''உங்கள் வசனங்கள் எனக்கு நன்றாகவே நினைவிருக்கின்றன. ஆனால் அவைக்ளை நம்ப இனியும் நான் தயாரில்லை. இதற்கு மேல் இவளைப் பற்றிக் கேவலமாகப் பேசினால்... அப்புறம் நன்றாயிராது பாட்டி.

நானும் மனோரஞ்சிதமும் மணந்து கொள்ளத்தான் போகி றோம்.''

''அதற்கு நான் நிச்சயமாக அனுமதி தரமாட்டேன்!'' என்று 'கிறிச்'சிட்டாள் தங்கம்மாள்.

''உங்களிடம் இங்கு யாரும் அனுமதி கேட்க வில்லை!'' என்று திருப்பிக் கொடுத்தான் பேரன். ''எங்க ளுக்கு உங்கள் ஆசி மட்டும்தான் தேவை!''

''இந்த வேலைக்காரக் குட்டியை மணப்பதற்கு என் ஆசியா?'' ஒருநாளும் கிடைக்காது.''

''உங்கள் இஷ்டம்!'' என்றான் குணாளன் கடின முற்ற குரலில். ''பாருங்கள் பாட்டி, அப்பா இல்லை. தாத்தாவுக்கு மூப்பு. இந்தக் குடும்பத்தையும், தொழிலை யும் ஏற்று நடத்துகிறவன் நான்தான். உழைக்கும் கடமை மட்டுமல்லாமல், இங்கு எல்லா முடிவுகளையும் எடுக் கும் அதிகாரமும் என்னதே! இதற்கு உட்பட்டு, எல்லோ ருடனும் சுமுகமான உறவுடன் இருப்பதானால் இங்கே இருங்கள்; அல்லது நீங்கள் கிராமத்துக்குப் போய் விட லாம்?'' என்று உறுதியோடு உரைத்து எல்லோரையும் திகைக்க வைத்தான்.

நம் பேரன் நம்மிடம் இப்படிப் பேசுவானா என்ற அதிர்ச்சியில் தங்கம்மாளுக்கே வாயடைத்துப் போனது. மற்றவர்களும் அதிர்ந்துதான் போயினர்.

முதலில் சமாளித்துக் கொண்ட மனோரஞ்சிதம், ''பெரியவர்கள், குணாளன். அவர்களிடம் மரியாதை



இல்லாமல் இப்படிப் பேசாதீர்கள்'' என்றாள். குணாள னின் பேச்சு இன்னமும் வெறுப்பேற்றி விடுமோ என்ற பயம் வேறு அவளுக்கு.

''சொல்ல மாட்டாயா பின்னே?'' என்றாள் தங்கம் மாளும் கொதிப்புடன், ''பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறாயா? பாம்புக்குப் பால் வார்த் தால் கடிக்காமல் விடாதுடி, பாவி!''

''பாட்டி! ஜாக்கிரதை! அளவோடு பேசுங்கள்!'' என்று எச்சரித்தான் குணாளன்.

''உனக்கு ஒன்றுமே தெரியவில்லையே, ராஜப்பா! இவள், இந்தச் சிறுக்கி, நம் வீட்டு வேலைக்காரன் மகளடா. அவன் இருக்கும் இடம் தெரியுமா? ஜெயில்! கொலை செய்து விட்டு ஜெயிலில் களி தின்று கொண்டு இருக்கிறான்! அவன் மகளைப் போய் -''

''பொய்! என்று வீறிட்டாள், மனோரஞ்சிதம்.

''எது பொய்! வேலூர் ஜெயிலில், உன் அப்பன் கல்லுடைத்துக் கொண்டிருப்பான். நேரில் போய்ப் பார்த் துவிட்டு வந்து அதன்பிறகு பொய்யென்று சொல்லு பார்ப்போம்'' என்றாள் பெரியவள் உதாசீனமாக.

'தங்கம்... நீ செய்வது சரியல்ல...'' என்று தொடங் கிய சிதம்பரத்தை ஆத்திரத்துடன் நோக்கி, ''வாயை மூடுங்கள்!'' என்று அதட்டி அடக்கினாள்.

நாலாபுறமும் உணர்ச்சிகள் கொந்தளித்த இந்த நேரத்தில், வாயில் புறமிருந்து ஒரு பையன் ஓடி வந்

தான். ''அன்பரசு என்று ஒருவர் வாசலில் நிற்கிறார் அம்மா'' என்றான்.

''அவன்தான் உன் அப்பன். அவனையே கேளு. அவன் சிறையில் இருந்தானா இல்லையா என்று அவனிடமே கேட்டுப்பார்!'' என்று தங்கம்மாள் கொக்கரித்தாள்.

'அன்பரசு' என்ற பெயரில் மனோரஞ்சிதம் சிலிர்த்துப் போயிருந்தாள். அது அவளுடைய தந்தையின் பெயர். பதினோரு நீண்ட ஆண்டுகளாக ஒரு சிறு தொடர்புகூட இல்லாமல் மறைந்து விலகியிருந்தவர்.

ஆனாலும் ஓடிச் சென்று பார்க்க அவளுக்குத் துணிவில்லை. ஒருவேளை, வருகிறவர் வேறு யாரேனும் ஓர் 'அன்பரசாக இருந்துவிட்டால்?' அந்தப் பெயரை அவளுடைய தந்தைதான் வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் ஒன்றும் இல்லையே!

உடம்பின் ஒவ்வோர் அணுவும் ஆவலில் துடிக்க வாயிலையே பார்த்து நின்றவளின் கருத்தில் தங்கம்மாளின் கொக்கரிப்பு படவில்லை.

வாயிலுக்கு வந்துவிட்ட அன்பரசைப் பார்த்ததும் ''அப்பா!'' என்று கண்ணீரும் சிரிப்புமாகத் தந்தையிடம் ஓடிச் சென்றாள்.

பெற்றவனின் நிலைபற்றிச் சொல்ல வேண்டியது இல்லை. மகளின் தோளைப் பற்றி அவளை ஏற இறங்க நோக்கி, ''என் மனுக்குட்டியா? எப்படி வளர்ந்து விட்டாய், கண்ணம்மா! அப்படியே உன் அம்மாதாண்டா!''



என்று வாய் ஏதேதோ சொல்ல, அன்பரசின் கண்களும் நீரைப் பொழிந்தன.

சற்று நேரம் இந்தச் சங்கமத்தைப் பேசாமல் பார்த்திருந்து விட்டு, முன்னே வந்து, ''அப்பாவை உள்ளே கூட்டி வா, ரஞ்சி. வாருங்கள், அங்கிள். உள்ளே வந்து உட்காருங்கள்'' என்று குணாளன் விருந்தோம்பலில் முனைந்தான்.

''உட்கார்ந்து விடுவானோ?'' என்று கர்ணகடூரமாக ஒலித்தது தங்கம்மாளின் குரல். ''ஏண்டா அன்பரசு, கிராமத்தில், உன் அப்பனோடு வேலைக்கு வந்து என் கையால் பழையது வாங்கித் தின்றதெல்லாம் மறந்து என் முன்னால் எனக்குச் சமதையாக நீ உட்கார்ந்து விடுவாயாடா?''

''பாட்டி!'' என்ற பேரனை அவள் அப்போது பொருட்படுத்துவதாக இல்லை. எந்த வகையிலேனும் மனோரஞ்சிதத்தின் மனதைக் குத்திக் கிழித்து வெளியேற்றுவதிலேயே குறியாக இருந்தாள்.

மாமியாரின் பேச்சைப் பொருட்படுத்தாமல், வந்த விருந்தாளிக்கு உணவுக்கு ஏற்பாடு செய்யக் கருணாகரி உள்ளே சென்றாள். பாட்டியைத் தன் பிள்ளை சமாளித்து விடுவான் என்ற நம்பிக்கை அவளுக்கு.

சற்றுத் தயங்கிவிட்டு, ''வணக்கம், அம்மா'' என்று முன்னே வந்தான் அன்பரசு. ''சந்தானம் விஷயம் இப்போதுதான் தெரிந்தது. ரொம்பவும் வருந்துகிறேன். அம்

மா'' என்று உண்மையான வருத்தத்துடன் அவன் பேசியது அந்தப் பெரியவளைச் சற்றும் இளக்கவில்லை..

மாறாக, ''இன்னும் மூன்று ஆண்டு உனக்குத் தண்டனைக் காலம் இருக்கிறதே! எப்படி வெளியே வந்தாய்?'' என்று கேட்டு எல்லோரோடு, அன்பரசையும் அதிர வைத்தாள்.

மீண்டும் சற்றுத் தயங்கிவிட்டு, ''நன்னடத்தைக்காக மூன்றாண்டு தண்டனையைக் குறைத்து விட்டார்கள், அம்மா!'' என்று அன்பரசு உரைக்கவும் மனோரஞ்சிதத்தின் மனது சில்லிட்டது.

அதுவரையிலும் தங்கம்மாள் சொன்ன எதையும் அவள் நம்பவில்லை. அவளுடைய தந்தையைச் சந்தானம் நண்பர் என்றார். ஏழை என்றாலே பிடிக்காத பாட்டி, வேண்டுமென்றே ஏதேதோ கதை கட்டுகிறாள் என்று உறுதியாயிருந்தாள்.

ஆனால் தந்தையின் வாய் மொழியாகவே, தங்கம்மாளின் கூற்று - அவர்கள் வீட்டில் தந்தை காலத்திலிருந்து வேலை பார்த்ததையும் அன்பரசு மறுக்கவில்லை. ஆயுள் தண்டனையையும் ஒப்புக் கொண்டிருக்கிறார் - நிரூபிக்கப் பட்ட பிறகு. இந்த வீட்டில் தனக்கு எதிர்காலம் இல்லை என்பதை நிச்சயமாக உணர்ந்தாள்.

ஏன், குணாளனின், மனதே இந்த இரு விஷயங்களை அறிந்ததும் எப்படி மாறிவிட்டதோ? கொலைக் குற்றத்துக்காக ஆயுள் தண்டனை அனுபவித்தவர் தன்



மாமனார் என்று சொல்லிக் கொள்ள அவனுக்கு உவப்பாயிருக்கும் என்று எண்ணுவது மடத்தனம்.

ஆனால், கொலைகாரனோ, இல்லையோ, என்ன காரணத்தினால் அந்தப் பிழை நடந்திருந்தாலும் சரி, அவளால் அவளுடைய தந்தையை விடமுடியாது. சிறைப்பறவை என்று பெயர் வாங்கிவிட்ட அவருக்குப் பிழைக்க வழி இல்லாவிட்டாலும், மனோரஞ்சிதம் வளர்த்துக் கொண்ட தகுதிகளினால் ஒரு நல்ல வேலையை அவளால் தேடிக் கொள்ள முடியும். அந்த வேலை, அவளுடைய தந்தைக்கும், அவளுக்கும் நல்ல படியாகவே சோறு போடும்.

வேகமாகச் சிந்தித்து, ஒரு முடிவுக்கு வந்து, ''சற்று இருங்கள் அப்பா. என் சாமான்களை எடுத்துக் கொண்டு நான் இதோ வந்து விடுகிறேன். நாம் இங்கிருந்து போய் விடலாம்'' என்று மாடிப்படிப் பக்கம் திரும்பினாள் அவள்.

சட்டென அவளைக் கைப்பற்றி நிறுத்தி, ''என்ன உளறல் இது, மனோரஞ்சிதம்'' என்று குணாளன் அவளை அதட்டிக் கேட்கவும், தணிந்த குரலில் ''குறைப் படுவதாக நினைக்காதீர்கள். அப்பாவுக்கு உட்காரக் கூட உரிமையற்ற இடத்தில் நான் எப்படி இருக்க முடியும்? இப்போது விட்டுவிடுங்கள். சற்று அமைதியாக உட்கார்ந்து சிந்தித்தால் என் முடிவு சரி என்பது உங்களுக்குப் புரியும்'' என்றாள் மனோரஞ்சிதம்.

மெல்ல, ஆனால் ஓர் உறுதியோடு, அவ்வளவ நேரம் பேசாதிருந்த சிதம்பரம் எழுந்தார். தொண்டை யைக் கனைத்துக் கொண்டு, ''யாரும் எங்கும் செல்ல வேண்டியதுஇல்லை, மனோம்மா'' என்றவர் மனைவியி டம் திரும்பினார். ''வாழ்க்கையில் இந்த ஒரு தரம், ஒரே ஒருமுறை என்னைப் பேசவிடு தங்கம். என் பேச்சைக் கொஞ்சம் கேட்கவும் முயற்சி செய் தங்கம்'' என்று தொடங்கி மேலே பேசினார். ''என் வார்த்தைக்கு மதிப் புக் கொடுத்து உட்கார், அன்பரசு'' என்றவர் மனோரஞ்சி தத்தின் பக்கம் திரும்பினார். ''பாரம்மா, உன் தந்தை குற்றவாளி என்ற பட்டத்துடன் ஆயுள் தண்டனையே அனுபவித்தபோதும், அவன் கொலை ஏதும் செய்தவன் இல்லை. தற்செயலாக நடந்த ஒரு விபத்து அது...'' என்று தொடங்கி விவரம் சொன்னார்.

''என்ன பெரிதாக? மூன்று வேளை வயிறு வாடா மல் சாப்பிடுகிறானே, அது போதாதா என்றாயே, தங் கம்! எல்லோருக்கும் அதே மூன்று வேளைதானே? நம்பிள்ளை உள்ளே போயிருந்தாலும் அதே மூன்று வேளை உணவு அவனுக்கும் கிடைத்துத்தான் இருக்கும். ஆனால் நம் நிலைமை? அவன் உயிரைக் கொடுத்து உழைத்தும் இரண்டு முறை சரிவு நேர்ந்துவிட்டதே. அவன் பழியை ஏற்று அன்பரசு சிறை செல்லாமல் இருந்திருந்தால், இப்போது நாம் எல்லோரும் எந்த முச்சந்தியில் நின்று பிச்சை எடுத்துக் கொண்டு இருந்தி ருப்போமோ? இதைக் கொஞ்சமேனும், ஒரு தரமேனும் எண்ணிப் பார்த்தாயா? அப்படி நடந்திருந்தால், இந்தக்



கார், பங்களா, அதற்காக வருகிற கூட்டம். அவர்களெல் லாம் நம்மை எட்டிப் பார்த்திருப்பார்களா?''

''யாரும் என்னிடம் சொல்லவே இல்லையே தாத்தா?'' என்றான் குணாளன் தவிப்புடன்.

''இவர்கள் - உன் அப்பாவும் இவனும் செய்து கொண்ட ஏற்பாடுதான். விவரம் வெளியே வந்தால் அது திரிந்து மருவி கொலைகாரன் மகள் என்கிற பெயர் மனோரஞ்சிதத்துக்கு வந்துவிடக் கூடும் என்று நினைத் தார்களாம். மனோவை அழைத்து வந்ததற்கான காரண மாகத்தான் எங்களிடம் கூடச் சொன்னதே. சொன்னால் தான் அவளை நல்லபடியாக நடத்துவோம் என்றும் நினைத்திருக்கலாம்..''

''ரஞ்சிம்மா. உன் அப்பாவிடம் இந்தக் காஃபியைக் கொடு. அவருக்கு கீழ்ப்புறத்து அறையை...'' என்று வந்த கருணாகரியை இடைமறித்தான் குணாளன். ''ஏனம்மா? நீங்கள்கூட ஏனம்மா என்னிடம் சொல்ல வில்லை?''. என்று கேட்டான்.

மாமனாரின் கண்ணசைவில் விவரம் புரிந்து கொண்டு, ''எப்படியப்பா, நான் சொல்வது? பாட்டி யோடு தகராறு கூடாது என்று அப்பா முதலிலேயே சொல்லியிருக்கிறார். இது தெரிந்தால், நீ நிச்சயமாக அதை வெளிக்காட்டுவாய். பிறகு என்ன ஆகும்? அத் தோடு, நாம் இருவரும் நல்லபடியாகப் பேசிப் பழகுவ தும் கொஞ்ச நாளாகத்தானே?'' என்று அவள் நடப் பையே கூறியபோது மகனின் முகம் மேலும் வாடிப்போ யிற்று.

''என்னை ரொம்பவும் கடன்காரனாக்கி விட்டீர்களே, அம்மா. ஸ்டோரில் பாதியை மனோரஞ்சிதத்துக்கு அப்பா எழுதி வைத்த காரணம் இப்போதல்லவா புரிகிறது! என்னவெல்லாம் நினைத்தேன்!'' என்றான் அவன் வருத்தத்துடன்.

''மனோவை மட்டும் என்னவென்று நினைத்தாய், குணா? அவள் பெயரில் ஐந்து லட்சம் ரூபாய் சதா சேர்த்து வைத்திருந்தான். அதைக் கள்ளக் கையெழுத்திட்டு வழித்துத் துடைத்து, என் பணம் என்று சொல்லி உன்னிடம் கொடுத்தேன். தேடித் திரிந்து உண்மை அறிந்த பிறகும், வாய் திறந்து ஒரு வார்த்தை அவள் வெளியே சொல்லவில்லை. என்மேல் கோபப்படுவாய் என்று உன்னிடம் கூட மூச்சு விடவில்லையே!'' என்று அன்றுவரை இருந்த உறுத்தலைத் தானாகவே வெளியிட்டதோடு, மனோரஞ்சிதத்தின் புகழையும் பாடினார் சிதம்பரம்.

''ரஞ்சிதம்...?'' என்ற குணாளனின் பார்வையில் இருந்த கேள்விக்கு அவன் வேண்டிய பதிலைத் தரமுடியாமல் விழிகளைத் தாழ்த்திக் கொண்டு நின்றாள் அவள்.

வேறென்ன செய்வது? கல்லாக அமர்ந்திருந்த தங்கம்மாளின் மனம் இளகவே இல்லையே! வேலைக்காரன் என்ற எண்ணமோ, வெறுப்போ குறைந்த அறிகுறியும் காணோம். பிடிக்காதவர்களை அவள் எப்படிக் குத்தி மனம் வருந்தச் செய்வாள் என்பதை மனோரஞ்சிதம் முழு அளவில் அறிந்தவள் ஆயிற்றே! அதே வேதனைக்கு ஒரு பாவமும் அறியாத தந்தையை ஆளாக்க அவள் சற்றும் தயாரில்லை.



பெரியவர்களைக் கிராமத்துக்கு அனுப்புவதும் ஒத்துக் கொள்ள முடியாததுதான். எழுபது வயதுக்கு மேல் ஆன முதியவர்களை வேண்டாத பொருளாக மூட்டை கட்டி அனுப்புவதை அவளால் ஒருபோதும் ஒத்துக் கொள்ள முடியாது... ஒரு பேச்சுக்கு அப்படி மிரட்டினாலும், குணாளனாலும் அது இயலாத காரியம்தான்.

என்வே, என்றேனும் இந்தப் பாட்டியின் மனம் இளகட்டும் என்று வேண்டியபடி வெளியேறுவது ஒன்றுதான் ஒரே வழியாக மனோரஞ்சிதத்துக்குத் தோன்றியது. எப்படியும் இருவரின் உறுதியும் புரிந்து விட்டால், அதன் பிறகுமா தங்கம்மாள் பிடிவாதமாயிருப்பாள்?

இதையெல்லாம் பிறகுதான் குணாளனிடமும் கூடச் சொல்ல முடியும். எனவே எப்படியும் இப்போதைக்கு இங்கிருந்து வெளியேறி விடுவது என்பதில் மனோரஞ்சிதம் உறுதியாக இருந்தாள்.

சில வினாடி அவள் முகத்தை வெறித்து நோக்கிய குணாளன், ''இதோ வருகிறேன்'' என்று அவனது அலுவல் அறைக்குள் சென்றான்.

உடனேயே திரும்பி வந்தவனின் கையில், ஒரு பத்திரம் இருந்தது. ''அப்பாவின் உயிலை எதிர்த்து வழக்காடுவதில் பாட்டி உறுதியாக இருந்ததால், ஸ்டோரில் என் பங்கை உன் பெயருக்கு மாற்றி எழுதி வைத்தேன். உன்னிடம் பெரும் கடன்பட்ட நிலையில் உன்னைத் தடுக்க எனக்கு உரிமை இல்லை. உன் வாழ்க்கையில் எனக்குப் பங்குதர உன் வாழ்வை என்னோடு இணைத்துக் கொள்ள நீ பிரியப்படாததை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இவ்வளவு துன்பம்

தந்த குடும்பத்தோடு இணைய எப்படி மனம் வரும்? ஆனால் எனக்கும் கடன் அடைக்க வாய்ப்பு வேண்டும் அல்லவா? அதனால் இதை வாங்கிக் கொண்டு போ!'' என்றவன் அவள் மறுப்பாகத் தலையசைக்கவும், அன்பரசிடம் திரும்பி, ''அங்கிள், இவளிடம் இதை வாங்கிக் கொள்ளச் சொல்லுங்கள். இந்த இரண்டு தலைமுறைக் கடன் சுமையில் எனக்கு மூச்சுத் திணறுகிறது'' என்றான் வேதனையும் அலுப்புமாக.

சொல்வது அறியாமல் அன்பரசு திணறியபோது, வெகு நேரத்துக்குப் பிறகு முதல் முறையாக தங்கம்மாள் வாய் திறந்தாள். ''இப்படி வா மனோரஞ்சிதம்'' என்று அழைத்தாள்.

அவளது குரலிலிருந்து ஒன்றும் புரிந்து கொள்ள முடியாமல், சிறு தயக்கத்துடன் தங்கம்மாளின் முன்னே சென்று நின்றாள் மனோரஞ்சிதம்.

தானும் எழுந்து, சில கணங்கள் சின்னவள் முகத்தைக் கூர்ந்து நோக்கிவிட்டு, ''குணா எழுதித் தந்ததை ஏற்று, வழக்கிலும் வென்றால் ஸ்டோர் முழுவதுமே உன்னதாகி விடும். ஆனால் நீ வாங்கிக் கொள்ள மாட்டேன் என்கிறாயே! இந்தச் சொத்தின் முழு உடைமைக்காரியாய் ஆவதே உன் குறிக்கோள் என்று நினைத்தேன். நீயோ ஒன்றுமே வேண்டாம் என்கிறாயேம்மா நான் தேர்ந்தெடுத்த உயர்ந்த குலத்தைச் சேர்ந்த ப்ரீத்தி எங்களை ஊருக்கு விரட்ட வேண்டும் என்றாள். ஆனால் நீ? குணா ஒரு கோபத்தில் சொன்னபோது கூடத் தடுத்துப் பேசினாயே! உன்னை எவ்வளவு மனம் நோகப் பண்ணியிருப்பேன்! அதற்காகப் பழி வாங்கக் கூட



நினைக்கவில்லையே! அத்தோடு உன் தாத்தா சொன்னது போல, யோசித்துப் பார்த்தால்... மனோரஞ்சிதம், நீ என்னை முழுமனதோடு என்றேனும் மன்னிப்பாயா அம்மா?'' என்று தங்கம்மாள் கேட்டபோது, மற்றவர்களைப் போலவே மனோரஞ்சிதத்தாலும் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

''நீங்கள் எவ்வளவோ பெரியவர்கள் பாட்டி. என்னிடம் போய் மன்னிப்பு என்றெல்லாம் பேசலாமா? நடந்ததை மறந்து விடுங்கள்'' என்றாள் இனிமையாக.

''நீ என் பேரனை மணந்து கொண்டால், மறந்துவிட முடியும் என்று நினைக்கிறேன்'' என்று தங்கம்மாள் கூறவும் எல்லோர் முகமும் மலர்ந்தது.

புருவங்களை ஏற்றியிறக்கி, ''என்ன ரஞ்சி?'' என்று குணாளன் இலகுவாகக் கேட்கவும் மனோரஞ்சிதத்தின் முகம் கம்பீரமாயிற்று.

பேசாமல் அவள் வாயில் புறமாய்ச் செல்லவும் எல்லோரும் திகைத்தனர்.

குணாளனிடம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, ''உங்கள் தாத்தா, பாட்டி, அம்மா எல்லோரையும் இந்தப் பக்கம் வரச் சொல்லுங்கள்!'' என்றாள் அவள் சற்று அதட்டலாகவே.

''எதற்கு? விடைபெற்றுப் போவதற்கா? என்று குணாளன் ஆத்திரமாகக் கேட்கும்போதே, ''என்னம்மா, ...? இப்போது போய்...'' என்றபடி மூவரும் அவளைத் தடுக்க முன் வந்தனர்.

மின் வெட்டாய் மீண்டும் ஒரு பார்வையைக் குணா ளனிடம் செலுத்தியவள், ''வருங்கால மாமியார், மாமி யாருடைய மாமியார், மாமனார் எல்லோர் காலிலும் விழுந்து வணங்கிவிட்டு அவர்கள் ஆசியோடு உள்ளே போக நினைத்தால் விரட்டுவதிலேயே குறியாய் இருக்கி றீர்களே!'' என்று மனோரஞ்சிதம் கிண்டலடிக்கவும் எல் லோருக்குமே சிரிப்பு வந்தது.

முகத்தில் ஆனந்தம் தாண்டவமாட, ''ஏய்... உன்னை...'' என்று செல்லமாய் மிரட்டியபடி குணாளன் மனோரஞ்சிதத்தை கை ஓங்கினான்.

''பொறுப்பா பொறு. பெரியவர்கள், நாங்கள் இந்த இடத்தைக் காலி செய்யும் வரை, கொஞ்சம் பொறுமை யாய் இரு. வாப்பா, அன்பரசு, உன் அறை வசதியாய் இருக்கிறதா என்று பார்ப்போம்...'' என்றபடி மற்றவர் களை அழைத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறி னாள் தங்கம்மாள்.

இலகுவாக நகைத்தபடி, ஓர் உல்லாச நடையுடன் அருகில் வந்து நின்று ''மாநில, மத்திய லைசன்ஸ் எல்லாம் கிடைத்துவிட்டது. இனி...'' என்றவனின் பார் வையில் மனோரஞ்சிதம் செங்கொழுந்தாகிப் போனாள்.